# அரியக்குடி

(வரலாறு)

CONNEMARA PUBLIC LIBRARY
★
7-JAN 1977
MADRAS

**எல்லார்வி**

★

…த நிலையம் பிரைவேட் லிமிடெட்
…ம்பேட்டை :: சென்னை-18

அமுதம்—120
உரிமை பதிவு
முதற் பதிப்பு - செப்டம்பர், 1956

விலை ரூ. 3—0—0

நாஷனல் ஆர்ட் பிரஸ், தேனாம்பேட்டை, சென்னை - 18.

7 - JAN 1977

# முகவுரை

இசைக் கலைஞர் வரலாற்று வரிசையில் இது இரண்டாவது நூல். இதன் ஆக்க முயற்சியின் கால அளவு முன்னதைவிடச் சிறிது அதிகமே. எனினும் பிரயாசையின் கடினம் சற்றுக் குறைவு. ரசிகப் பிரமுகர்களும், இசை வல்லுனர்களும், ஏனைய அன்பர்களும் என் முயற்சியில் பூரண நம்பிக்கை கொண்டு விட்டதே அதற்குக் காரணம். திருவருள் துணை நின்று அடுத்துப் பல நூல்களை வெளியிடும் வாய்ப்பை அளிக்கும்போது கால அளவும் குறையலாம்; பிரயாசையும் எளிதாகலாம் என நம்புகிறேன்.

புல்லுக்குப் பாயும் நீரை மடைமாற்றி நெல்லுக்கு ஆகுமாறு செய்பவர்களை அருளாளர்கள் என்றுதான் சொல்லவேண்டும். கற்பனைக் கதைகளுக்கே காலத்தை அர்ப்பணம் ஆக்கிக் கொண்டிருந்த என்னை, காலத்தை எதிர்த்து நிற்கக்கூடிய இசைப்புலவர்களின் வரலாற்றுக் காவியங்களை ஆக்குமாறு திருப்பிவிட்ட பெரியோர்களை நான் என்றுமே மறக்க முடியாது. புதுத் துறையில் புகழ் தேடித் தந்த அவர்களுக்குக் கரங்குவித்து அஞ்சலி செய்கிறேன். அத்தகைய பெரியோர்களுள் முதன்மையானவர் நான் அலுவல் ஆற்றும் **அமுத நிலையத்தின் தலைவர் ஸ்ரீ ரா. ஸ்ரீ. ஸ்ரீகண்டன்** அவர்கள். உண்மையில் இந்த வரலாற்று வரிசையின் சிருஷ்டிகர்த்தா அவர்தாம்; நான் வெறும் கருவிதான்.

இந்த நூலின் ஆக்கத் துறையில் எனக்கு உறுதுணையாய் இருந்து செய்திகளை மிக ஆர்வத்தோடு வெளியிட்டும், அத்தாட்சிகளைத் தேடித் தந்தும், அபிப்பிராயங்

களை அழகாக எடுத்துக் கூறியும், கையெழுத்துப் பிரதியைப் பார்வையிட்டும், மேலும் பல இடங்களுக்குக் கூட்டிச்சென்று, மேலும் பல பெரியோர்களை அறிமுகம் செய்து வைத்தும், இடையருது என்னை ஊக்கி உற்சாகப் படுத்தியும் உதவியவர்கள் பலர். அவர்கள் முறையே; **சென்னை மயிலை விவேகானந்தர்க் கல்லூரியின் நிர்வாகி** ஸ்ரீ **ராமானுஜாசாரியார், வழக்கறிஞர் தஞ்சாவூர்** ஸ்ரீ **டி. எஸ். குப்புசாமி ஐயர், பேரறிஞர்** ஸ்ரீ. **கி. சந்திரசேகரன்,** ஆகிய ரசிகப் பிரமுகர்களும், **காரைக்குடி** ஸ்ரீ ஸ்ரீ**நிவாச ஐயங்கார், பாபநாசம்** ஸ்ரீ **சிவன், முடிகொண்டான்** ஸ்ரீ **வேங்கடராமையர், செம்மங்குடி** ஸ்ரீ ஸ்ரீ**நிவாசையர், பத்தமடை** ஸ்ரீ **சுந்தரமையர், உமையாள்புரம்** ஸ்ரீ **கல்யாணராமையர்,** ஸ்ரீ **ஜி. என். பாலசுப்பிரமணியம், மதுரை** ஸ்ரீ **மணி ஐயர்,** ஆகிய வாய்ப்பாட்டு வித்துவான்களும், **மதராஸ்** ஸ்ரீ **பாலகிருஷ்ணையர், மைசூர்** ஸ்ரீ **சௌடையா, மதுரை** ஸ்ரீ **சுப்பிரமணிய ஐயர், கும்பகோணம்** ஸ்ரீ **ராஜமாணிக்கம் பிள்ளை, பாப்பா** ஸ்ரீ **டி. எஸ். வேங்கடராமையா** ஆகிய வயலின் வித்துவான்களும், **பழனி** ஸ்ரீ **சுப்பிரமணிய பிள்ளை, பாலக்காடு** ஸ்ரீ **மணி ஐயர்** ஆகிய மிருதங்க வித்துவான்களும் ஆவர். அவர்கள் மேற் குறித்த முறையில் இந் நூல் உருவாகப் பெரும் உதவி செய்தனர். மற்றும் என் உடன் பிறவா சகோதரர் ஸ்ரீ **ஜி. நடராஜன்** அவர்களின் அரும் உதவி முன் நூலைப் போல இதற்கும் அமைந்தது. இவர்கள் அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். இதில் குறைகள் இருப்பின் பொறுத்தருளும்படி அன்பர்களை வேண்டிக் கொள்கிறேன்.

நமஸ்காரம்

**எல்லார்வி**

**விஜய விலாசம்,**
**மயிலாப்பூர்,**
4—9—56

# பொருள் அடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| வாழ்க்கை வரலாறு | | 1—160 |
| | இசையுலக பீஷ்மாசாரியர் | 1 |
| 1. | இளமைப் பருவம் | 4 |
| 2. | விளையும் பயிர் | 12 |
| 3. | வித்தியார்த்தி | 15 |
| 4. | குருவும் வழிகாட்டியும் | 21 |
| 5. | குருகுல வாசம் | 29 |
| 6. | திருமணம் | 37 |
| 7. | மீண்டும் குருகுலம் | 44 |
| 8. | முதற் கச்சேரி | 46 |
| 9. | செவியாரல் | 57 |
| 10. | சந்நிதி மகிமை | 60 |
| 11. | மாற்றுக் கச்சேரி | 71 |
| 12. | முன்னேற்றம் | 73 |
| 13. | கலைஞர் கூட்டுறவு | 74 |
| 14. | தென்னாட்டின் தலைநகரில் | 82 |
| 15. | தந்தையானார் | 83 |
| 16. | ஜமீன்களின் ஆதரவு | 85 |
| 17. | காலப் பிரமாணம் | 86 |
| 18. | ஓட்டமான பாட்டு | 92 |
| 19. | இன்பமும் துன்பமும் | 96 |
| 20. | வாழையடி வாழை | 97 |
| 21. | சஞ்சாரம் கீழே; புகழ் மேலே | 99 |
| 22. | கலைஞர் மெச்சிய கலைஞர் | 102 |
| 23. | விளையாட்டுக் கச்சேரி | 106 |
| 24. | "எவ்வளவு தூரம் கேட்கும்?" | 107 |
| 25. | கன்னிகா தானம் | 109 |
| 26. | அடிச் சுவடு | 111 |

27. ‘சங்கீத ரத்னகரம்’ 123
28. “இனி வேண்டாம்”! 124
29. தந்தையின் மறைவு 127
30. ‘சங்கீத கலாநிதி 127
31. வடநாட்டு விஜயம் 133
32. என்ன குறை? 134
33. உறவுப் பின்னல் 136
34. ‘காயக சிகாமணி’ 138
35. ‘சங்கீத கலா சிகாமணி’ 142
36. கலா ரசனை 142
37. கைங்கரியம் 146
38. சங்கீத யாத்திரை 147
39. அறுபதாம் ஆண்டு நிறை விழா 148
40. தீர்க்க தரிசனம் 150
41. திருப்பாவை 152
42. மனேதிடம் 153
43. இளைய தமையனர் 156
44. அரசாங்கப் பரிசு 158

**சங்கீதச் சிறப்பு** **161—202**

1. சுருதி 165
2. சாரீரம் 166
3. களை கட்டுதல் 170
4. காயக லட்சணங்கள் 172
5. சபை நிர்ணயம் 173
6. சம்பிரதாயம் 176
7. பாணி 180
8. பாடாந்தரம் 182
9. லட்சண-லட்சியம் 189
10. நடை 190
11. பல்லவி - ஸ்வரம் 191
12. சில்லறை 195
13. திருப்புகழ் 196
14. லயம் 197

15. சீசன் 200
16. "சங்கீத பூரணர்!" 200

குணச் சிறப்பு 203—214
1. ஆசிரயம் 205
2. அடக்கம் 207
3. மரியாதை 210
4. அன்பு 211
5. நட்பு 213

பேச்சுச் சிறப்பு 215—228
1. வெற்றிலை, பாக்கு, சுண்ணும்பு! 217
2. "பாடு பட்டம்மாள்!" 218
3. "இதுவா சிரமம்?" 218
4. ஆளுக்கு ஐந்நூறு! 219
5. "அறி(ரி)யக்கூ(கு)டியவன்" 220
6. வெற்றிக் குறி—V 221
7. "என்(N)ராமையர்" 222
8. பட்டம்! 222
9. "ஸா—பா" 223
10. காலேஜூ 224
11. "காலில் விருச்சிகம்!" 224
12. திண்டாட்டம்! 225
13. சந்தோஷம்! 226
14. "ராம் ராம்!" 226

ஏனைய சிறப்புகள் 229—234

# அரியக்குடி

## இசையுலக பீஷ்மாசாரியர்

" இன்று சபாவிலே யார் கச்சேரி?"

" ஐயங்கார் அவர்கள்."

" ஓகோ! அப்படியானால் தவறாமல் போக வேண்டுமே!"

சம்பாஷணை இப்படித்தான் செவியிலே விழுந்து கொண்டிருக்கிறதே தவிர, "ஐயங்காரா? எந்த ஐயங்கார்?" என்ற கேள்விகள் எழுவதே இல்லை.

இன்று அவருடைய வயசு அறுபத்தாறு. ஆனால் அவர் இன்றும் கச்சேரி செய்கிறார்; மணிக் கணக்கிலே கச்சேரி செய்கிறார்; ஆரம்ப முதல் இறுதி வரையில் சபையிலே அலுப்பு என்பதே சிறிதும் தோன்றாதவாறு கச்சேரி செய்கிறார்; பாமரர் முதல் பண்டிதர் வரையில் அனைவரின் உள்ளமும் நிறைவுறும் வகையிலே கச்சேரி செய்கிறார்!

மேடை ஏறின நாள் முதல் இன்றளவும் ஒரு சந்தர்ப்பத்திலாவது தரக் குறைவு என்ற பேச்சுக்கு இடமே இல்லாதது அவருடைய சங்கீதம். இன்னும் சொன்னால், முன்பெல்லாம்விட இப்போது—இந்த முதிர்ந்த வயசில்—அவர் சங்கீதம் மிக மிக மேன்மை பெற்றுப் பிரகாசிக்கிறது என்பதே பொருந்தும். வயசின் முதிர்ச்சியோடு

போட்டியிடும் அநுபவ முதிர்ச்சி காரணமாக அவருடைய கலை ஞானம் புடமிட்ட பொன்னாக மிளிர்கிறது. ஆனால்....

முதிர்ந்த அநுபவமும் சிறந்த ஞானமும் தெளிந்த நடையும் மட்டுமே இருந்தால் போதுமா? கேட்பவர் உள்ளத்திற்குச் செவி வழியே முதலிலே கிட்டுவது சாரீரத்தின் ஒலி அல்லவா? அது இனிமையாக இருந்தால் அல்லவோ இசை விருந்தைச் சுகமாக அநுபவிக்க முடியும்? அதன் பிறகன்றோ கலையிலே உள்ள நுட்பமான சிறந்த அம்சங்களைச் சுவைத்துணர இயலும்? என்னதான் ஞான பாவமும் விவகார லட்சணங்களும் பொருந்திய சங்கீதமானாலும் பாடுகிறவருடைய சாரீரம் நன்றாக இல்லையெனில் யாருக்குமே பொறுமையுடன் இருந்து கேட்கத் தோன்றாதன்றோ?

ஸ்ரீ ஐயங்காரிடம் அந்தச் சிறப்புக்கும் குறைவில்லை. அதனாலேதான் இன்றும் அவருடைய கச்சேரிகளில் இட நெருக்கடி!

இத்தகைய சிறந்த யோக்கியதை எல்லாருக்குமே எளிதில் கிட்டி விடுவதன்று. அறுபத்தாறு வயசிலே அபிப்பிராய பேதத்துக்கே இடமில்லாத முறையில் ஒருவர் இசைக் கச்சேரி செய்ய வேண்டும் என்றால் அதற்குப் போதிய காரணம் இல்லாமல் இருக்க முடியாது. முற்பிறவிகளின் நற்பயன், முன்னோர் செய்த புண்ணியம், கடவுளின் திருவருள்—என்று இப்படி எத்தனையோ காரணங்களைக் கூறலாம். ஆனால் அந்தக் காரண காரியங்களைக் கண்ணால் கண்டவர்கள் இல்லை. 'பிரத்தியட்சப் பிரமாணம்' என்கிற வகையில் சில காரணங்கள் உண்டு. அவை: பெற்றோரின் சிறப்பு, தாய் வழி உறவினரின் உயர்வு, வளர்ந்து உருவான சூழ்நிலையின் தகுதி, குருகுல வாசத்தின் மேன்மை, இடை

யருத—வகையறிந்த—உழைப்பின் தன்மை, கலையினிடம் மாருத பக்தி, நினைவிலே எப்போதும் நல்ல எண்ணங்கள் முதலிய பல. ஸ்ரீ ஐயங்காரின் வாழ்க்கையிலே மேலே கூறிய பிரத்தியட்சப் பிரமாணங்களுக்குக் குறைவே இல்லை.

சிறு போதிலே விதை ஊன்றி, வேலி கட்டி, நீர் வார்த்து, களை கொத்தி, உரமிட்டுப் பயிர் செய்தவர்கள் தாம் பின் நாட்களில் அந்த உழைப்பின் பயனுய தீஞ்சுவை நிறைந்த கனிகளைத் தாங்களும் சுவைத்துப் பிறருக்கும் வாரி வாரி வழங்க முடியும்.

ஸ்ரீ ஐயங்கார் அந்த நாளில் அப்படித்தான் பாடுபட்டிருக்கிருர். அதன் பலனை இன்று காண்கிருர்; அவர் பட்ட பாட்டை அறியாதவர்களையும் அந்தப் 'பாட்டின் பலனை' அநுபவிக்கச் செய்கிருர்.

கர்நாடக சங்கீத உலகிலே வாய்ப் பாட்டுத் துறையிலே இந்தத் தலைமுறையிலே இன்று எல்லாவகையிலும் முதன்மை ஸ்தானத்துக்கு முற்றும் உரியவர் எனக் கொண்டாடப் பெறுபவர் **அரியக்குடி ஸ்ரீ ராமாநுஜ ஐயங்கார்** அவர்கள். அவர், **சங்கீத ரத்னுகர, சங்கீத கலாநிதி, காயக சிகாமணி, சங்கீத கலா சிகாமணி, காயக கண்டீரவ** முதலிய சிறப்புப் பட்டங்கள் பெற்றவர். இந்திய அரசாங்கப் பரிசுத் திட்டத்தில் வாய்ப் பாட்டுத் துறைக்குரிய சம்மானத்தை முதலாவதாகப் பெற்றவர். இசைக் கலைஞர்களின் வரலாற்று நூல் வரிசையிலே இதற்குமுன் வெளியான **செம்பைச் செல்வம்** என்ற புத்தகத்தின் முகவுரையிலே **கனம் நீதிபதி ஏ. எஸ். பி. ஐயர்** அவர்களால் **கர்நாடக சங்கீத உலகின் பீஷ்மாசாரியர்** என்று பாராட்டப் பெற்றவர்.

# 1. இளமைப் பருவம்

**(1890—1900)**

காரைக்குடியிலிருந்து தேவகோட்டைக்குச் செல்லும் அழகிய பெரிய ரஸ்தாவிலே பிரியும் கிளைப் பாதை ஒன்றின் வழியே இரண்டரை மைல் தூரம் சென்றால் **அரியக்குடி** என்னும் ஊரை அடையலாம். அந்த ஊர் கிராமப் பாங்கானது. வளம் நிறைந்து லட்சுமீகரமாகத் தோற்றும் பல இல்லங்களை வரிசையாகக் கொண்ட அநேகம் தெருக்களை உடையது. ஊரின் நடுநாயகமாகக் காட்சி தருவது ஸ்ரீநிவாசப் பெருமாளின் ஆலயம். அதிலே தினசரி வழிபாடுகளுக்கும் விசேஷ உற்சவங்களுக்கும் குறைவு இல்லை.

கிராமத்தின் நடுவே அக்கிரஹாரம். அதிலே வைணவப் பிராம்மணர்கள் வசித்து வருகின்றனர். அந்தக் குடும்பங்களுள் சிறந்த ஒன்றிலே சுமார் ஒன்றரை நூற்றாண்டுக்கு முன்பு **ஸ்ரீ சீதாராம ஐயங்கார்** என்ற பெரியார் ஒருவர் வாழ்ந்து வந்தார்.

அவர் வேத சாஸ்திர விற்பன்னர். சோதிடக் கலையிலே மகத்தான பாண்டித்தியம் உடையவர். நியம நிஷ்டை, பூஜை புரஸ்காரங்களில் சற்றும் வழுவாத சீலர்.

உரிய காலத்திலே அவருக்குத் தோன்றிய குமாரர்கள் மூவர். முதல்வர் பெயர் **ஸ்ரீ அப்புஸ்வாமி ஐயங்கார்.** இரண்டாமவர் **ஸ்ரீ கிருஷ்ண ஐயங்கார்.** மூன்றாமவர் **ஸ்ரீ ரங்கஸ்வாமி ஐயங்கார்.**

ஸ்ரீ அப்புஸ்வாமி ஐயங்காருக்கு ஒரு பெண் சந்ததி மட்டும்தான். அவர் சோதிடக் கலையின் தேர்ச்சியினால் தம் நிர்யாண காலத்தை நிர்ணயித்துக்கொண்டு யாத்திரை சென்று முக்தி பெற்றார்.

ஸ்ரீ ரங்கஸ்வாமி ஐயங்கார் வேறு குடும்பத்திலே சுவீகாரமாகச் சென்றார்.

ஸ்ரீ கிருஷ்ணையங்கார் அவர்களின் தவப் புதல்வர் **ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார்** அவர்கள். அவரும் தம் பாட்டனார், தகப்பனார், பெரிய தகப்பனார், சிறிய தகப்பனார் ஆகியோரின் அடிச்சுவடுகளை முழுவதும் பின்பற்றி மிகக் கீர்த்தியுடன் பிரகாசித்தார்.

அவருக்கு வேதம், சாத்திரம், சோதிடம் முதலியவற்றோடு சங்கீதக் கலையிலும் அளவு கடந்த ரசனையும், தெளிவான ஞானமும் உண்டு. தவிர, 'லௌகிக ஞானம்' என வழங்கப் பெறும் உலக விவகாரங்களிலும் தீர்மானமான புத்தி உண்டு. அதன் ஆற்றலால் அவர் அனைவரின் உள்ளங்களையும் ஒருங்கே கவர்ந்து விடுவார்.

**ஸ்ரீமதி செல்லம்மாள்** என அனைவராலும் அழைக்கப்பெற்ற **ஸ்ரீமதி நாச்சியார் அம்மாள்** அவருடைய தர்ம பத்தினி. அவர், மனம், சொல், செயல் ஆகிய சகல அம்சங்களிலும் பதிக்கு ஏற்ற ஸதியாக விளங்கினார். அவர்களின் தாம்பத்தியப் பொருத்தத்தை வியந்து பாராட்டாதவர் அந்த வட்டாரங்களில் இல்லை.

இந்த உத்தம தம்பதிகளுக்கு நான்கு புதல்வர்களும் மூன்று புதல்வியரும் பிறந்தார்கள். மூத்த குமாரன் பெயர் **அப்புஸ்வாமி**. இரண்டாவது பிள்ளையின் பெயர் **கிருஷ்ணன்**. மூன்றாவது பிள்ளை **ராமாநுஜம்**. நான்காவது குமாரன் **ராகவன்**.

இவர்களில் ராமாநுஜத்தின் ஜனன காலம் தமிழில் விகிருதி௵, வைகாசி௴, ஆறாந் தேதி, வெள்ளிக்கிழமை, ரோகிணீ நட்சத்திரம், மகர லக்னம். ஆங்கிலம்: 1890-ஆம் ஆண்டு, மே ௴, 19-ஆம் நாள்.

பெண்களில் மூத்த குமாரியின் பெயர் **பத்மாஸனி.** இரண்டாவது **அலமேலு,** மூன்றாவது **திருமு.** (திருமா மகள்.)

தரித்திரங் காணுத குடும்பத்திலே தோன்றிய குழந்தைகள் அனைவரும் யாதொரு குறைவுமின்றிச் சுகமே வளர்ந்து வந்தார்கள்.

ஸ்ரீ திருவேங்கடத்தையங்காருக்குப் பூர்விகமான ஊர் அரியக்குடி என்று சொல்கிற அளவிலே இருந்ததே தவிர, அவருடைய காலமெல்லாம் பெரும்பாலும் தேவ கோட்டையிலேதான் சென்றது. அங்கே உள்ள தனிகர் பலரும் அவரிடம் மிகுந்த மரியாதையும் அன்புங்கொண்டு பெருமையோடு அவரை ஆதரித்து வந்தனர். அவருடைய சிறந்த யோக்கியதை சுற்று வட்டாரத்திலே எங்கும் பரவி யிருந்தது. அவரது சோதிடத்தில் மக்கள் தெய்வ நம்பிக்கை வைத்திருந்தார்கள். ஆகவே அவர் அங்கேயே வசதிகள் நிறைந்த அழகிய பெரிய இல்லம் ஒன்றைச் சொந்தமாகப் பெற்றுக் குடும்பத்துடன் அதில் வாழ்ந்து வந்தார்.

ராமானுஜத்திற்குப் பிறவி முதல் நல்ல ஆரோக்கியமான உடல்நிலை. பெற்ருேரும் மற்ருேரும் நன்கு கவனித்து வளர்த்தனர். குடும்பத்தின் வளமான நிலையும் உதவியது. சுமார் நாலு பிராயத்தை எட்டுகிறபோதே குழந்தை வீட்டிலும் தெருவிலும் தன் இச்சையில் ஓடி ஆடி விளையாடலாயிற்று.

விளையாட்டுக்களில் குறும்புத்தனத்தைப் புகுத்துவதில் ராமானுஜத்திற்கு அபார மோகம். அந்தக் குறும்புச் செயல்களைப் பிறர் கண்டு அதிசயிக்கிறபோது, செல்லமாகக் கடிகிறபோது கை கொட்டிச் சிரிப்பதில் ஒரு திருப்தி.

நாட்கள் செல்லச் செல்ல ராமாநுஜத்தினிடம் தகப்பனாரின் நல்லியல்புகள் மெல்ல மெல்லத் தலை நீட்டலாயின. பஜனை நடைபெறுகிற இடங்களில் எல்லாம் தவறாமல் ராமாநுஜத்தைக் காணலாம். ஒத்த குழந்தைகள் பலர் விளையாட்டுப் போக்கிலே அங்கே கூடுவார்கள். ஆனால் அவர்கள் நேரம் செல்லச் செல்லத் தூங்கிப் போய்விடுவார்கள். ராமாநுஜத்திற்குத் தூக்கமே வராது. பஜனை முடிகிற வரையில் அங்கிருந்தும் அகல்வதில்லை. சுருதிப் பெட்டியின் பக்கத்திலேயே அமர்ந்து, பெரியவர்களுக்குச் சமதையாக இசையை ரசித்து, கோஷ்டியிலே கலந்து நாமாவளி போடுவதிலே மிக மிக உற்சாகம். எல்லாம் முடிந்த பின் அந்த இன்ப நினைவோடு வீட்டுக்குச் சென்று படுத்தால்தான் உறக்கம் வரும்.

இதன் விளைவாக எப்பொழுதும் ஏதாவது இசைத்துக்கொண்டே இருக்கிற பழக்கம் ராமாநுஜத்தினிடம் ஏற்பட்டது. எந்த இடத்திற்குச் சென்றாலும், எந்தச் செயலில் ஈடுபட்டாலும், எவர் பக்கத்தில் இருந்தாலும் இசைப்பதை நிறுத்துவதே இல்லை.

ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார் தம் செல்வனின் போக்கையும் செயல்களையும் கண்காணித்து வந்தார். 'அநேகமாக இவனுடைய வாழ்நாள் இசையிலேதான் ஒன்றி இருக்கும்' என எண்ணினார். ஊருக்கெல்லாம் சோதிடம் சொல்கிற அவர் நல்ல நாளிலே சிறுவன் ராமாநுஜத்தின் ஜாதகத்தைக் கையில் எடுத்தார்; கடவுளைப் பிரார்த்தித்துக் கண்ணோட்டம் விட்டார்.

அவர் ஊகம் வீண் போகவில்லை. அதையே பளிங்கு போல் எடுத்துக் காட்டிற்று ஜாதகத்தின் அமைப்பு. 'இனி அதற்கான முயற்சிகளை மேற்கொள்வது நம் கடமை' என்று முடிவு செய்தார் அவர்.

ஸ்ரீ அப்புஸ்வாமி ஐயங்காருக்கு இயல்பாகவே குழந்தைகளிடம் அன்பு அதிகம். மணமாகிப் பல காலம் ஆகியும் அவருக்குச் சந்தான பாக்கியம் இல்லாதிருந்தது. அந்தக் குறை அந்த வாத்ஸல்யத்தை மேலும் அதிகரிக்கச் செய்தது.

அடி நாளிலிருந்தே அவருடைய அன்பின் பெரும் பகுதி ராமாநுஜத்தினிடந்தான். ஆகவே தகப்பனாரின் பரிபூரண ஆசியுடன் தமையனார் ஸ்ரீ அப்புஸ்வாமி ஐயங்கார் தம் தம்பி ராமாநுஜத்தைச் சுவீகாரம் செய்துகொண்டார். தெய்வ சங்கல்பம் அவ்வாறு இருந்தது போலும்; அந்தச் சகோதரர்களிடையே, தகப்பனார்—பிள்ளை பாவனைதான் முன்னதாகவே தோன்றி வளர்ந்து முதிர்ந்திருந்தது.

ராமாநுஜம் என்றுமே தமையனாரிடம் எதிர் நின்று பேசுவதில்லை. சுவீகாரத்துக்குப் பின் அந்த மரியாதை அதிகமாயிற்று. மறந்தும் எதிரே உட்காருவதில்லை. இரைந்து பேசுவதில்லை. மற்றும் உள்ள கடமைகளில் அணு வளவும் தவறுவதில்லை. 'சுவீகாரத் தகப்பனார்' என்று சொல்லிக்கொள்வதிலேதான் முழுத் திருப்தி. யாராவது 'தமையன்' என்று குறிப்பிட்டால்கூட, 'சுவீகாரத் தகப் பனார்' என்று திருத்துவதிலே விருப்பம்.

உரிய காலத்தில் ராமாநுஜத்திற்கு அட்சராப்பியாசம் நடைபெற்றது. சோதிடத்தின் மூலம் பிள்ளை சங்கீத விற்பன்னன் ஆவான் என்று தந்தை அறிந்திருந்தும், அதற்காக அவர் தம் குமாரனை மற்றக் கல்வித் துறைகளில் ஈடுபடுத்தாமல் இருக்கவில்லை. அடிப்படைக் கல்வியில் உலோபம் உதவாது என்பது அவர் கருத்து.

முறைப்படி அட்சராப்பியாசம் நடந்த நாள் முதல் ராமாநுஜம் குறித்த வேளையில் பள்ளிக்குச் செல்வதிலும்,

எண் எழுத்து முதலியவற்றைக் கற்பதிலும் ஒருபோதே னும் பின்வாங்கியதே இல்லை. இடையிலே துண்டும், தலை யிலே குடுமியும், நெற்றியில் நாமமும், கையிலே ஏடுமாய் ராமாநுஜம் பள்ளிக்குச் சென்று படித்து மீளும் கோலம் உறவினர்களுக்குக் கண்கொள்ளாத காட்சி.

அந்த நாளில் எல்லாருமே வேதமும் சாஸ்திரமும் பயின்று வந்தனர். ஸ்ரீ திருவேங்கடத்தையங்காரும் தம் முடைய செல்வனுக்குத் தமிழ் கற்பித்தார்; கூடவே தொடர்ந்து சம்ஸ்கிருதமும் கற்பிக்கலானார்.

இப்படிச் சந்தோஷமாக இருந்து வந்த திருவேங் கடத்தையங்கார் குடும்பத்திலே திடீரென்று ஒரு சுழிப்புத் தோன்றிற்று. நல்ல ஆரோக்கிய நிலையில் இருந்த ஸ்ரீ அப்பு ஸ்வாமி ஐயங்கார் நோய்வாய்ப்பட்டார்! நோய் அதிகரித் தது; வைத்தியர்கள் குழம்பினார்கள்; குடும்பம் கவலையில் மூழ்கியது; கடைசியில், 'இனிப் பிழைப்பது கடினம்' என்ற நிலை ஏற்பட்டுவிட்டது.

ஸ்ரீ அப்புஸ்வாமி ஐயங்கார் சிறந்த விவேகி. வாழ்க் கையில் ஒட்டியும் ஒட்டாமலும் இருந்தே அவர் தம் காலத்தை ஓட்டியவர். தகப்பனார், மற்ற முன்னோர்கள் அனைவரிடமும் வழிவழியாய் வந்த சோதிடக் கலையில் அவ ரும் நிபுணத்துவம் பெற்றிருந்தார். அதனால் தம்மைப்பற்றி வெகு நன்றாகத் தெரிந்து கொண்டிருந்தார். ஆகவே மனிதர்களுக்குச் சகஜமாக ஏற்படக்கூடிய அஞ்ஞானமோ, குடும்பப் பாசமோ அவரைப் பாதிக்கவில்லை. 'இதற்குள் நம் வாழ்வு முடிவடைகிறதே!' என்று அவர் ஏங்கவில்லை; அதற்கு மாறாக, 'முதியவர்களான தாயும் தந்தையும் துடிப் பார்களே; பதி வியோகத்தைப் பொறாது மனைவி கதறு வாளே; அண்ணாவே உலகம் என்றிருக்கும் தம்பி ராமா

நுஜம் விக்கிப் போய்விடுவானே' என்றெல்லாம் சிறிது கலங்கினர். பிறகு, மனத்தைத் தெய்வ நினைப்பிலே திருப்பினர். முடிந்தபோது வாய்விட்டும், முடியாதபோது மானசிகமாகவும் ஸ்ரீமந் நாராயணனைத் துதித்து வந்தார். உள்ளம் சாந்தி மயமாயிற்று. அத்தகைய உந்நத நிலையிலே தமது 30-ஆவது பிராயத்திலே அவர் இவ்வுலக பந்தத்தினின்றும விடுதலை பெற்றார்.

புத்திர சோகத்தைத் தாளமாட்டாமல் பெற்றோர் புழுவாய்த் துடித்தனர். பதியை இழந்த ஸதி கதறி மாய்ந்தாள். சகோதரனைப் பிரிந்த சகோதர சகோதரிகள் தங்கள் உடலின் ஒரு பகுதியை இழந்த நிலையில் பரிதபித்தனர். மற்றும் உறவினர் ஊரார் அனைவருமே துயர வெள்ளத்திலேதான் மூழ்கினர். அப்போது ஏழு வயதுள்ள ராமாநுஜத்தின் இளம் உள்ளம் இந்த நிகழ்ச்சியால் பெரிதும் பாதிக்கப் பெற்றது.

இந்தத் துயரத்தை ஒருவாறு மறப்பதற்காக ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார் எல்லோருடனும் கிளம்பிக் காசிக்குச் சென்றார்.

பிரயாண காலத்திலே இடைப்படும் காட்சிகள், நிகழ்ச்சிகள், சூழ்நிலை, சீதோஷ்ணத்தின் மாறுபாடுகள் எல்லாங்கூடி மனத் துயரைக் களையும்; யாத்திரை, சேவை முதலியவற்றால் பாவம் தொலையும்; புண்ணியம் சேரும் என்றெல்லாம் எதிர்பார்த்தார்கள். ஓரளவு அந்த ஊகத்திலே வெற்றியையும் கண்டார்கள். ஆனால் எங்கெங்கு சென்றாலும் என்ன என்ன செய்தாலும் ராமாநுஜத்தினிடம் மட்டும் மாறுதலையே காணமுடியவில்லை.

அந்த நாளில் ரெயில் வசதி இல்லை. நடை பாதைகளும் இப்போது போல் செப்பனிடப் பெற்றவையாக

இல்லை. அப்போதெல்லாம் காசிக்கு நடந்து சென்றுதான் திரும்புவார்கள். ஸ்ரீ திருவேங்கடத்தையங்காரும் குடும்ப சகிதம் கால் நடையாகத்தான் சென்றார். யாத்திரை முடிந்து திரும்புகிற போதும் கால் நடைதான். வீடு திரும்பிய பின்னரும் ராமாநுஜம் பழைய நிலையிலேயே இருப்பதைக் கண்டதும் தான் அனைவருக்குமே நடையின் சிரமம் மலையாய்த் தோன்றியது. அதுவரை அவ்வளவாகத் தோற்றவில்லை.

மகனின் நிலைகண்டு தகப்பனார் மிகக் கவலை கொண்டார். இன்னும் என்ன செய்தால் பிள்ளையின் நிலையை மாற்றலாம் என யோசித்தார். உடலுக்கும் உள்ளத்திற்கும் அதிக வேலை கொடுத்தால் நிலைமையிலே மாறுதலைக் காணலாமோ என நினைத்தார். உடனேயே திட்டம் வகுத்தார்—செல்வன் ராமாநுஜத்திற்கு உபநயனம் செய்ய.

அப்போது ராமாநுஜத்தின் வயசு எட்டு. குல முறைப்படி உபநயனத்திற்கு உரிய காலந்தான். திட்டம் இட்டு நாள் குறிப்பிட வேண்டியது ஒன்றுதான் அவர் பொறுப்பு. ஏனைப் பொறுப்புக்களை ஏற்றுக் காரியத்தைச் சிறப்புற நிகழ்த்தி வைக்கப் போட்டியிடும் அன்பர்கள் எவ்வளவோ பேர். எப்போதுமே அப்படித்தான் வழக்கம். இப்போது மட்டும் மாறுமா?

குறிப்பிட்ட சுபதினத்தில் குமாரன் ராமாநுஜத்திற்கு உபநயனம் வெகு சிறப்பாக நடந்தேறிற்று.

அடுத்துச் சில காலத்துக்குப் பிறகு, தாம் எண்ணியபடி ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார் ராமாநுஜத்திற்கு வேதாப்பியாசத்தைத் துவக்கி வைத்தார். தனிப்பட்ட முறையிலும் தேவகோட்டைத் தமிழ்ப் பாடசாலையிலுமாகத் தமிழ்ப் பயிற்சியும் தொடர்ந்தது.

# 2. விளையும் பயிர்

**(1901)**

உற்சவ சமயத்தில் சுவாமி தரிசனம் செய்து வரலாம் என்று ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார் ஸ்ரீ வில்லிபுத்தூர் சென்றார். கூடவே ராமாநுஜத்தையும் அழைத்துச் சென்றிருந்தார். ஸ்ரீ வில்லிபுத்தூருக்கு வெகு அருகே உள்ளது சேத்தூர் ஜமீன்.

அப்போது அந்த ஜமீன் அதிபதியாக வாழ்ந்து வந்த ஜமீன்தார் கலையார்வம் நிரம்பியவர். சிறந்த ரசிகர். பெரும் வள்ளல். அவரால் ஆதரிக்கப்பெற்ற இசைக் கலைஞர்கள் பலர். அவர்களுள் அவர் உள்ளத்தை அதிகம் கவர்ந்தவர் மடவார்குளம் ஸ்ரீ முத்தையா பாகவதர் என்ற சிறந்த மேதை.

'மடவார்குளம்' என்பது விருதுநகர்—தென்காசி மார்க்கத்தில் உள்ளது. ஸ்ரீ வில்லிபுத்தூர் ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து ஒன்றரை மைல் தூரத்தில் உள்ளது. மலைகளும் மரங்களும் நிறைந்து இயற்கை எழிலோடு விளங்குவது அந்தப் பிரதேசம்.

'மடவார்குளம்' என்பது காலப் போக்கில் 'மடவளாகம்' என்று திரிந்தது. ஆகவே பலர் அவரை 'மடவளாகம் ஸ்ரீ முத்தையா பாகவதர்' என்றே குறிப்பிடுவார்கள்.

அவரிடம் சங்கீதக் கலையின் சிறப்புமட்டுமே தனித்திருக்கவில்லை; ஏனைச் சிறப்புக்களும் மலிந்து பிரகாசித்தன. தம்மிடமும் தம் கலையினிடமும் சந்தேகத்திற்கு இடமில்லாத லட்சியபுத்தி உடையவர் அவர். பொருள் படைத்தவர்களைக் காட்டிலும் நேர்மை, பெருந்தன்மை, திறமை, ரசிகத் தன்மை, தெய்வ பக்தி முதலிய அம்சங்களில் சிறந்தவர்கள் எளியோராயினும் அவர்களிடம்

அபார மதிப்பு உடையவர். பொருள் படைத்தவர் கர்வ மும் படைத்தவராயின் சந்தர்ப்பமறிந்து அவர்கள் குறையை எடுத்துக் காட்டித் திருத்தும் ஆற்றல் உடையவர். இவ் வளவோடு அவருக்கு ஹாஸ்யத்திலே அளவு கடந்த மோகம் உண்டு.

உயர்வான சாரீரம், சிறந்த மனோ தர்மம், நிறைந்த தீர்மானம், இணையற்ற மனோ தைரியம். எந்த அம்சத்தை எடுத்துக் கொண்டாலும் மிகவும் பிரமாதமான முறையில் விந்நியாசம் செய்து, லட்சண லட்சியங்களோடு பாடி, கேட்பவரை மெய்ம்மறக்கச் செய்யும் ஆற்றல் நிரம்பப் படைத்தவர். முக்கியமான காரியத்தை உத்தேசித்துச் சென்று கொண்டிருப்பவர்கள் வழியில் ஸ்ரீ முத்தையா பாகவதரின் கானத்தைக் கேட்க நேர்ந்தால் அதில் லயித் துத் தம் காரியத்தை மறந்து விடுவதுண்டு.

**காயக சிகாமணி அரிகேச நல்லூர் ஸ்ரீ முத்தையா பாகவதர், சங்கீத கேசரி கல்லிடைக் குறிச்சி ஸ்ரீ வேதாந்த பாகவதர்** முதலியவர்களால் நன்கு பக்தியுடன் மதிக்கப் பெற்றவர். ஊர்க்காடு ஜமீன்தார், ராமநாதபுரம் மகாராஜா, எட்டையபுரம் மகாராஜா முதலிய பலரின் ஆதரவு அவருக்கு உண்டு. ஆதரவு என்றால் சாமான்யமாக அல்ல; எல்லை என்பது அதற்கு இல்லை எனலாம். அவர் களோடெல்லாம் சம நிலையில் பழகி மெய்யன்பில் திளைத்து உள்ளத்தோடு ஒட்டிய ஈடுபாடுகள் உடையவர். அந்நிலை யால் அவர் மூலம் மேற்குறித்த சம்ஸ்தானங்களில் நிரம்ப ஆதரவு பெற்ற இசைக் கலைஞர் மிகப் பலர்.

ஸ்ரீ திருவேங்கடத்தையங்காருக்கு ஸ்ரீ முத்தையா பாகவதரிடம் பரிசயம் உண்டு. ஸ்ரீவில்லிபுத்தூர்ப் பக்கம் செல்கிறபோது அவரைச் சந்திக்கத் தவறுவதில்லை. இப் போதும் சந்திக்க நினைத்தார். சுவாமி தரிசனம் நிறை

வேறியதும் பாகவதரைக் காணப் புறப்பட்டார். அவர் சேத்தூர் ஜமீன் மாளிகையில் இருப்பதாக அறிந்து அங்கேயே சென்றார்.

சந்திப்பும் சல்லாபமும் நிகழ்ந்தன. இடையே பாகவதர், "உங்கள் பையனா?" என்று ராமாநுஜத்தைச் சுட்டிக் காட்டிக் கேட்டார்.

ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார், "ஆம். அவனுக்குப் பாட்டிலே ஒரே பிரமை. ஒரு விநாடிகூட வாய் ஓய்ந்திருப்பதில்லை; ஏதாவது இசைத்தபடியேதான். அந்தத் துறையிலேதான் ஈடுபடுத்திவிடலாம் என்று இருக்கிறேன். உங்கள் பரிபூரண ஆசீர்வாதம் வேண்டும்" என்றார்.

உடனே பாகவதர் ராமாநுஜத்தை நோக்கி, "குழந்தாய், ஏதாவது பாடு!" என்றார். ராமாநுஜம் சற்றும் தயங்கவில்லை; ஏதோ ஒரு பாட்டைப் பாடவும் பாகவதர் முறுவலுடன் தலையசைத்து, "பேஷ்! உங்கள் யோசனை மிகவும் சரியே. பையன் புகழுடன் விளங்குவான்" என்று கூறிவிட்டுத் தகப்பனார், பிள்ளை இருவரையும் அழைத்துக் கொண்டு ஜமீன்தாரிடம் சென்றார்.

ஏற்கனவே பரிசயம் உடைய ஜமீன்தார், ஸ்ரீ திருவேங்கடத்தையங்காரை மலர்ந்த முகத்தோடு வரவேற்றார்; இன் மொழிகள் பேசினார்; கனி வர்க்கங்கொண்டு உபசரித்தார்.

பாகவதர் ராமாநுஜத்தைச் சுட்டி, "இவருடைய குமாரன். நன்றாகப் பாடுகிறான்" என்றார்.

ஜமீன்தார் மகிழ்ச்சி தோன்ற, "அப்படியா? எங்கே? நாமும் கேட்கலாம்" என்றார்.

ராமாநுஜம் தகப்பனார் முகத்தைப் பார்க்க, அவர் சமிக்ஞை செய்ய உடனே சிறுவனின் இன்னிசை ஜம்மென்று முழங்கத் தொடங்கிற்று.

ஜமீன்தார், "பேஷ் பேஷ்! இன்னும் ஒன்று; இன்னும் ஒன்று" என்று நாலைந்து பாட்டுக்களைப் பாட வைத்து ரசித்தார். பிறகு பாகவதரை நோக்கி, "மிகவும் நன்றாக இருக்கிறதே பாட்டு!" என்றார்.

"இது ஒரு புள்ளிதான்" என்று ஆள்காட்டி விரலை அசைத்தார் பாகவதர். அந்தச் சொல்லிலும் சங்கேதத்திலும் ஜமீன்தார் என்ன பொருளைக் கண்டாரோ, உடனே நூறு ரூபாயை எடுத்து ராமாநுஜத்தினிடம் கொடுத்து, "மிட்டாய் வாங்கிச் சாப்பிடு" என்றார்.

ராமாநுஜத்தின் உள்ளம் மகிழ்ந்தது; முகம் மலர்ந்தது. முதல் முதலாக இனிப்புமிக்க மிட்டாய்க்கென்று சேத்தூர் ஜமீன்தாரின் ஆகி வந்த கையால் பரிசு பெறும் பேறு ராமாநுஜத்திற்குக் கிட்டிற்று.

## 3. வித்தியார்த்தி

(1901—1905)

**மி**ளகனூர் ஸ்ரீ கிருஷ்ணசாஸ்திரிகள் என்ற பெரியார் அந்த நாளில் அந்தப் பிராந்தியங்களில் வேத சாஸ்திரங்களில் சிறந்த பாண்டித்தியம் உடையவராகப் பிரகாசித்து வந்தார். அவர் தம்மைக் கூண்டுக் கிளியாக ஆக்கிக் கொள்ள விரும்பவில்லை. சுயேச்சையாகப் பறந்து, பல இடங்களுக்கும் சென்று, பல இடங்களையும் பல மனிதர்களையும் பல்வேறு காட்சிகளையும் கண்டு, ரசித்து இன்புற்று, தன்னிடம் உள்ள சிறப்புக்களை மற்றவர்கள் கண்டு ரசிக்கச் செய்யும் சுதந்தரப் பறவையாக இருக்கவே விரும்பினார். ஆகவே பல இடங்களுக்குச் சென்று தம் புலமையை வெளிப்படுத்திப் புகழ் பெற்று வந்தார். அந்த ரீதியிலே தேவகோட்டைக்கும் ஒரு முறை விஜயம் செய்

தார். அப்போது அவருக்கும் ஸ்ரீ திருவேங்கடத்தையங் காருக்கும் பரிசயம் ஏற்பட்டது. ஒருவரைப்பற்றி மற்றவர் முன்னரே நன்கு கேள்விப்பட்டிருந்ததால் யோக்கியதாம் சங்களில் நிறைந்த அவர்கள் முதற் சந்திப்பிலேயே ஒரு வரை ஒருவர் நன்கு மதித்து அன்போடு உரையாட லாயினர்.

சாஸ்திரிகள் சில நாட்கள் அங்கே தங்கினர். அவ ருக்கு அந்த ஊர் மிகவும் பிடித்திருந்தது. ஊர்ப் பிரமுகர் களின் அன்போ எல்லையற்றதாக இருந்தது. ஆகவே சாஸ்திரிகள் அங்கே நீடித்துத் தங்க நினைத்தார்.

"இந்த ஊரும் இவ்வூர் வாசிகளின் அன்பும் என் உள்ளத்தை மகிழ்விக்கின்றன. அதனால் இங்கே சில காலம் தங்க உத்தேசம். தங்குவது என்றால் தனியே அல்ல; குடும்பத்தோடுதான். தங்களின் அன்பும் ஆதரவும் மிகத் தேவை. முக்கியமாக, முதற்காரியமாக, நான் குடும்பத்தோடு இங்கே நீடித்து வசிக்க வசதியுள்ள இல்லம் ஒன்றைத் தாங்கள் ஏற்பாடு செய்து தரவேண்டும்" என்று ஸ்ரீ திருவேங்கடத்தையங்காரிடம் கேட்டுக் கொண்டார் சாஸ்திரிகள்.

ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார் யோசனை செய்யவில்லை. "ஏற்பாடு செய்வதென்ன? அடியேனின் இல்லத்தைத் தங்கள் சொந்த வீடாகவே பாவித்துக் கொள்ளலாம். அதிலே வசதிக் குறைவு சிறிதும் இல்லை. தங்களுக்குச் சம்மதக் குறைவு ஒன்றும் இல்லையே?" எனப் பளிச் சென்று கேட்டார்.

சாஸ்திரிகள் மகிழ்ச்சி பெற்றார். மறு வாரத்திலேயே ஊருக்குச் சென்று தம் குடும்பத்தினரை அழைத்து வந்தார். நல்ல நாளிலே ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார் இல்லத்திலே குடும்பத்தோடு குடியேறினர்.

இந்தப் பொன்னான சந்தர்ப்பம் ராமாநுஜத்தின் காவியப் பயிற்சிக்கு மிகவும் நன்மை பயப்பதாக ஆயிற்று. முன்னமேயே சப்தம், அமரம் முதலிய அடிப்படைப் பயிற்சியில் நல்ல தேர்ச்சி இருந்தது. இப்போது ஸ்ரீ கிருஷ்ணசாஸ்திரிகளிடம் காவியப் பயிற்சி நடைபெற லாயிற்று.

ரகுவம்சம், நைடதம், குமார சம்பவம், மாகம், போஜ சரித்திரம் முதலிய பாடங்கள் ஒன்றன்பின் ஒன்றாய் மள மளவென்று நடந்தேறின. இதன் விளைவாக ராமாநுஜத்தி னிடம், விரிவான முறையிலே சாஸ்திர பாடங்களை ஏற்றுக் கொள்ளத் தக்க புத்தி விசாலம் மிக விரைவாகவே ஏற்பட்டு விட்டது.

ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகள் ஸ்ரீ திருவேங்கடத்தையங் கார் இல்லத்திலே சுமார் ஒன்றரை ஆண்டுகள்தாம் வசித்தார். பின்னர் இன்னும் அதிக வசதியுள்ள வேறொரு வீட்டிற்குக் குடிமாறினார். அப்படி மாறிய பிறகுங்கூட அவர் ராமாநுஜத்தின் விஷயத்திலே அதிகமான அன்பும் அக்கறையும் உடையவராகத்தான் விளங்கினார். ராமா நுஜத்தின் சாஸ்திரப் பயிற்சி வளர்பிறை போல் முன் னேறிச் சென்றது.

ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார் தம் குமாரனின் முன் னேற்றங்கண்டு உவகை கொண்டார். சுஸ்வரமாகக் கணீர் என்று வேதம் ஓதுதல், காவியங்களைத் தெளிவாகப் பட னஞ் செய்தல், தமிழை ஆர்வமுடன் பயிலுதல் ஆகிய இவ் வளவு பாடங்களுக்கும், வீட்டுப் பெரியோர்களின் கட்ட ளைப்படி கடைகண்ணிகளுக்குப் போய் வருதல் முதலிய அலுவல்களுக்கும், சக மாணவர்களுடன் கூடி அடிக்கும் கொட்டங்களுக்கும் நடுவேயும் தம் பிள்ளை வாய் ஓயாமல் பாட்டிசைத்தபடி இருப்பதைக் கண்டார். மகனின் ஜாதக

அமைப்பை மனத்திலே கொண்டார். இசைத் துறையிலே தம் செல்வனுக்குக் கண் திறந்துவிட என்ன வழி என்று யோசிக்கலானார். அவனை ஒப்படைக்கத் தக்க குருவைத் தேடி ஆராயலானார்.

மூன் தலைமுறையைச் சார்ந்த சங்கீத வித்துவான்களில் மிகக் கியாதியுடன் விளங்கிய அநேகருள் **புதுக்கோட்டை ஸ்ரீ மலையப்பையர்** அவர்களும் ஒருவர். நல்ல பரம்பரையிலே வந்தவர். சாந்தமான தோற்றத்தைக் கொண்டவர். அன்பு உள்ளம் படைத்தவர். அமைதியான போக்கு உடையவர். இசையிலே மேன்மையான ஞானம் பெற்றவர். கேட்போர் மனமுருகப் பாடும் ஆற்றல் நிறைந்தவர். சிறந்த லட்சண வித்துவானாகத் திகழ்ந்தவர்.

அவரைப்பற்றி ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார் கேள்விப்பட்டார். அவரைக் காணச் சென்றார். உரிய பருவம் வந்தும் பிரமசரிய ஆசிரமத்தில் இருந்த ஸ்ரீ மலையப்பையர் ஸ்ரீ திருவேங்கடத்தையங்காரை அன்புடனும் மரியாதையுடனும் வரவேற்று உபசரித்தார். இருவரும் அளவளாவினர்.

"கலைச் செல்வத்தை நிரம்பப் பெற்ற தாங்கள் இப்படி ஊரோடு இருந்து காலந்தள்ளுவது சரி அன்று. கலைஞர்களை ஆதரிப்பதற்கென்று ஸ்தாபனம் எதுவும் நம் நாட்டில் இல்லை. அவரவர்கள் திறமையை அவரவர்களே வெளிப்படுத்தப் பல இடங்களுக்குச் சென்றால்தான் திறமை வெளிப்படும்; புகழும் பொருளும் சேரும். மகாராஜாக்களும் ஜமீன்தார்களும் மற்றும் எத்தனையோ பிரபுக்களும் அங்கங்கே வாழ்ந்து வருகிறார்கள். அவர்கள் கலைஞர்களை ஆதரிக்கக் காத்திருக்கிறார்கள். இதெல்லாம் தங்களுக்கும் தெரியாமல் இருக்க முடியாது. தங்கள் நோக்கம் எதுவோ

நான் அறியேன். தங்கள் சிறப்பைக் கேள்விப்பட்டேன். என் பிள்ளையைத் தங்கள் மாணவனாக்க எண்ணினேன். அவனை இங்கே அனுப்ப நினைத்தேன். ஆனால் இப்போது எண்ணுகிறேன், தங்களை அங்கே அழைத்துச் செல்வது நலம் என்று. தங்களுக்கு ஆட்சேபணை எதுவும் இல்லை எனில் தாங்கள் என்னுடன் தேவகோட்டைக்கு வாருங்கள். அங்கே சில காலம் தங்குங்கள். அந்த ஊர்ப் பிரமுகர்கள் தங்களை ஆதரிப்பார்கள். அங்கிருந்தபடியே தாங்கள் மற்றும் பல பல இடங்களுக்கும் போய் வரலாம். இடையே என் பிள்ளைக்கும் இசை போதிக்கலாம். என் இல்லம் தங்கள் வருகையை எதிர்பார்த்துத் தவங் கிடக்கிறது.''

சுவை மிகுந்த கனிகளைப்போல் ஸ்ரீ திருவேங்கடத்தையங்காரின் வாயினின்றும் உதிர்ந்த அன்பு மொழிகளைக் கேட்டு அளவற்ற உவகை கொண்டார் ஸ்ரீ மலையப்பையர். மறுத்து ஒரு வார்த்தைகூடப் பேசாமல் புறப்பட்டு விட்டார்.

ஊருக்கு வந்த உடனேயே ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார் நல்ல நாள் ஒன்றைக் குறிப்பிட்டார். அந்த நன்னாளில் ஸ்ரீ மலையப்பையர் ராமாநுஜத்திற்கு முறையாக இசைப் பயிற்சியை ஆரம்பித்தார்.

வெறும் நாளிலேயே சதா இசைத்துக் கொண்டிருந்த ராமாநுஜத்திற்கு முறையான இசைப் பயிற்சி பெரிதும் கொண்டாட்டத்தையே அளித்தது. அன்போடு போதிக்கிற குரு; அக்கறையோடு பயில்கிற மாணவன் - வித்தையின் வளர்ச்சிக்குக் கேட்பானேன்?

ஸ்ரீ மலையப்பையர் புதுக்கோட்டையை விட்டுத் தேவகோட்டைக்கு வந்த வேளை மிக மிக நல்லவேளையாய் இருக்க வேண்டும். ஸ்ரீ திருவேங்கடத்தையங்

கார் முதலில் சுயநலங் கருதியே அவரைக் காணச் சென்ருர். பின்னர் அவர் நலத்திலே மிக அக்கறை உடையவராக ஆனுர். அவருடைய அன்பினுலும் முயற்சியினுலும் வெகு சீக்கிரத்திலேயே செட்டி நாட்டுப் பிரமுகர்கள் அவ்வளவு பேரின் அன்பும் ஆதரவும் ஸ்ரீ மலையப்பையருக்குக் கிட்டிவிட்டன. அவர் கலைத்திறமை எட்டின வரையிலே பிரகாசிக்கத் தொடங்கிவிட்டது. புகழும் பொருளும் அவரைத் தேடி அடையலாயின. அவை மட்டுமா? சகல அம்சங்களிலும் மேம்பாடுடைய மகாலக்ஷ்மி போன்ற பெண்ணைக் கைப்பற்றி இல்லறத்தை மேற்கொள்ளும் பாக்கியமும் விரைவிலேயே அவருக்குக் கிடைத்து விட்டது.

'குருகுல வாசம் என்ருல் என்ன?' என்று கேட்கிற நிலையில் இருக்கிறது இன்றைய உலகியல். அன்று அப்படி இல்லை. பெற்ருேர் தம் மக்களைக் குருவினிடம் ஒப்புக் கொடுப்பர். பிறகு பொறுப்பனைத்தும் குருவினுடையவையே. மாணுக்கர்கள், பெற்ருேர், உற்ருர், உறவினர் முதலியோரின் பாசநினைவுகளை அறவே மறந்து குருவையும் குரு பத்தினியையுமே எல்லாமாகப் பாவித்துப்பக்தியுடன் ஒழுகி வருவர். அதற்கேற்ப அவர்களும் மாணவர்களைத் தாங்கள் ஈன்ற செல்வங்களேபோல் பாவித்து மிக்க அன்பு பாராட்டி நடத்தி வருவர். பேதமற்ற இந்த ஐக்கிய பாவத்தின் அடிப்படை, சம்பந்தப்பட்டவர்களின் உடலில் உயிருள்ள அளவும் நீடித்து இருக்கும்; ஒவ்வொரு கணமும் ஒருவரை ஒருவர் நினைப்பர். இந்த ரீதியிலே குருகுல வாசம் செய்தவர்களை அவர்களின் கலைத் திறமையைக் கொண்டே ஒருவாறு கண்டு கொள்ளலாம்.

ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார் குருகுலவாச முறைகளை நன்கு அறிந்தவர். மக்கள் முன்னேற வேண்டுமானுல்

பெற்றோரின் குறுக்கீடு உதவாது என்பது அவர் கொள்கை. தகப்பனின் அன்பு, தாயின் செல்வம் முதலிய பாச உணர்ச்சிகள் மக்களின் உள்ளத்திலே சலுகையை வளர்க்கும்; கல்வியைக் குறைக்கும் என அடிக்கடி கூறுவார். தம் குமாரன் ராமாநுஜத்தின் விஷயத்திலே அவர் தம் கொள்கையைப் பூரணமாகக் கடைப்பிடித்தார், மனைவி யையும் குடும்பத்தில் உள்ள மற்றோரையும் அவ்வாறே நடந்துகொள்ளப் பணித்தார்.

ராமாநுஜத்தின் உள்ளத்திலும் அந்த வீடு தன் தகப்ப னுடையது; மலையப்பையர் அங்கே குடியிருக்கிறார் என் பன போன்ற நினைப்புகளே இல்லை. அது குருவின் இல்லமாக வும் குருவும் குரு பத்தினியுமே பெற்றோராகவுந்தான் அந்த உள்ளத்திலே பாவனை இருந்தது. அதனால் யாரும் எடுத்துச்சொல்லாமலே குருகுல வாசத்தின் வழிமுறைகளை அநுஷ்டிக்கும் பண்பு ராமாநுஜத்தினிடம் தோன்றி நிலைத் தது. அதற்கேற்ப ஸ்ரீ மலையப்பையரும் அவர் தர்ம பத் தினியாரும் ராமாநுஜத்தினிடம் மிக்க அன்பு கொண்டு செல்வமாக நடத்தினார்கள்.

இந்த ரீதியில் மூன்று வருஷ காலம் ஓடிற்று. அந்த மூன்று வருஷத்திற்குள் ராமாநுஜத்திற்குக் கர்நாடக சங்கீத வித்தையின் அடிப்படையான அஸ்திவார அம்சங் கள் அனைத்தும் நன்கு புலனாகிவிட்டன. ஓயாத உழைப் பினால் மளமளவென்று முன்னேறிவந்த மாணாக்கனின் மேன்மை கண்டு ஸ்ரீ மலையப்பையர் உவகை கொண்டார்.

## 4. குருவும் வழிகாட்டியும்

(1906)

'பல்லவி நரசிம்ம ஐயங்கார்' எனத் தனிப் புகழ் பெற்ற நாமக்கல் ஸ்ரீ நரசிம்ம ஐயங்கார் அவர்களைக்

கர்நாடக சங்கீத உலகில் அறியாதவர் எவரும் இல்லை. பெரிய பெரிய வித்துவான்கள் எல்லாராலும் ஒரு முகமாகப் புகழ்ந்து மரியாதை செலுத்தப்பெற்ற, நிறைந்த யோக்கியதையுடைய தீரர் அவர். இன்றும் அவரைப் பற்றி வியந்து புகழ்ந்து பேசாதவர் அபூர்வம்.

தஞ்சாவூர் ஜில்லாவிலே திருவாரூர் — திருத்துறைப் பூண்டிக்கு இடையே உள்ள **கச்சணம்** என்ற சிறு கிராமத்திலே தோன்றியவர் அவர். சிறு வயதிலேயே இசைக் கலையில் அளவு கடந்த ஆர்வம் கொண்டார். உள்ளூரில் வாழ்ந்த **ஸ்ரீ அப்புக்குட்டி நட்டுவனர்** என்பவரிடம் சங்கீத சிட்சையில் ஈடுபட்டார். சுய முயற்சியினால் பால சூரியனைப்போல் வெகு விரைவாக முன்னேறினர். 'முடிந்த வரையில் இங்கே பயிற்சி பெற்ருயிற்று. இனியும் மேற் பயிற்சி பெற வேருெரு குருவைத் தேடி அடையவேண்டும்' என எண்ணினர். ஊர் ஊராகச் சுற்றி அலைந்தார். அப்படி அலைகிறபோது அங்கங்கே தென்படுகிற இசைக் கலை மேதைகளிடமிருந்து பல உயர்ந்த விஷயங்களைக் கிரகித்துக்கொண்டார். எங்கே சென்ருலும் என்ன செய்தாலும் இடைவிடாது சங்கீத சாதகத்தைச் செய்தபடி இருந்தார். முடிவிலே **ஸ்ரீ வேங்கட சுப்பையா** என்ற பெரியாரைச் சந்தித்தார்.

**ஸ்வர்ணக்காடு** என்ற ஊரில் பிறந்து வளர்ந்து நாதோபாசனையே வாழ்க்கை லட்சியமாக வாழ்ந்த ஸ்ரீ வேங்கட சுப்பையா தீவிர பிரமசாரி. அவருடைய இசையைக் கேட்டு விட்டுத் தஞ்சாவூர் மகாராஜா அவர் கேட்பதை யெல்லாம் அளிக்கக் காத்து நின்ருர். ஆனல் ஸ்ரீ வேங்கட சுப்பையா நீடாமங்கலம் சத்திரத்திலே மூன்று வேளைச் சாப்பாட்டுக்கும் வருஷத்திற்கு இரண்டு ஜோடி வேட்டிக்கும் உத்தரவு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டு அப்படியே பட்டயம்

பெற்றார். நீடாமங்கலம் சத்திரத்திலே சாப்பாடு; மற்ற நேரங்களில் அருகே உள்ள ஜன சஞ்சாரமற்ற ஓரிடத்திலே நாதோபாசனை—இப்படி அவர் காலந் தள்ளி வந்தார்.

நாமக்கல் நரசிம்ம ஐயங்கார் அவரைப்பற்றிக் கேள்விப்பட்டார். அங்கே சென்றார். அவர் அறியாது அவரது இசையைக் கேட்டு உள்ளத்தைப் பறி கொடுத்தார். திடீரென்று அவர் முன் தோன்றி நெடுஞ்சாண் கிடையாக விழுந்து வணங்கித் தம் கோரிக்கையை வெளியிட்டார்.

" பந்தமே கூடாது என்று பிரமசாரியாக வாழ்கிறேன்; தொந்தமே கூடாது என்று தஞ்சை மகாராஜாவிடம் பட்டயம் பெற்றுச் சத்திரத்திலே பசிப் பிணியைப் போக்கிக் கொள்கிறேன். குருவாக அமர்ந்து பாடஞ் சொல்லும் செயலுக்கும் எனக்கும் வெகு தூரம் அப்பா" என்றார் ஸ்ரீ வேங்கடசுப்பையா.

ஸ்ரீ நரசிம்ம ஐயங்கார் அச்சொற்களை ஏற்கவில்லை. தம்மை மாணவனாக அங்கீகரித்தே தீரவேண்டும் என்று மன்றாடினார்.

" சரி, ஏதாவது பாடு" என்றார் ஸ்ரீ வேங்கடசுப்பையா.

யார் யாரிடம் எப்படி எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்பதை ஸ்ரீ நரசிம்ம ஐயங்கார் நன்கு அறிந்திருந்தார். ஏதோ ஒரு கீர்த்தனத்தை உடனே பாடவில்லை. திட்டமிட்டு, ஞானம் பரிமளிக்கிற வகையில் 'பஞ்ச ராக தானம்' பாடினார். படிப் படியாக அவரது இசைப் புலமை வெளிப்பட்டது. ஸ்ரீ வேங்கடசுப்பையாவின் முகம் முழு மதியைப் போல் மலர்ந்தது.

" குருகுல வாசம் செய்து நீ அறியவேண்டியது எதுவுமே இல்லை அப்பா! என் அபிப்பிராயம் இது. உனக்கு மங்களம்! நீ போய் வரலாம்."

பெரியாரின் அபிப்பிராயத்திலும் ஆசியிலும் மகிழ்ச்சி தான்; ஆயினும் சிறிது காலமேனும் அவரிடம் குருகுல வாசம் செய்யும் பேறு இல்லையே என்று ஸ்ரீ நரசிம்ம ஐயங்கார் வருந்தினர்.

இதன் பின்னர் அவர் வேறு எவரிடமும் சென்று மாணுக்கராக அமரவில்லை. கேள்வி, சாதகம் இவற்றினுலேயே இசையில் வளர்ந்தார்.

அவருக்குத் திருமணம் நாமக்கல்லில். அங்கேயே வாசம் செய்தபடியால் அவரை நாமக்கல் ஸ்ரீ நரசிம்ம ஐயங்கார் என்றே இசையுலகம் வழங்கிற்று. பின் நாட்களில் அவர் ஸ்ரீரங்கத்திலே வசிக்கலானர். அங்கே தேசியத் தலைவர் டாக்டர் தி. சே. சௌ. ராஜன் அவர்கள் இல்லத்திற்கு அடுத்த வடவண்டை வீட்டிலே இருந்தார்.

ஸ்ரீ நரசிம்ம ஐயங்கார் கம்பீர புருஷர். பத்தாறு வேட்டியும் துவாதச புண்ட்ரமும் (பன்னிரு திருநாமங்கள்) ஆகக் காட்சி அளிப்பார். அவருடைய பிரபாவம் கேட்டு அவரை அண்டின மாணவர்கள் மிகப் பலர். பாடசாலை போல் எப்பொழுது பார்த்தாலும் அவர் வீட்டில் மாணுக்கர்களின் நடமாட்டமும் கணகணவென்ற இசையின் முழக்கமுந்தான்.

அவர் எண்பத்தாறு ஆண்டுகள் வாழ்ந்தார். எல்லோருடைய சங்கீதத்தையுமே அவர் ஏற்றுக் கொண்டுவிட மாட்டார். உடம்பின் மேல் தோல் பளபளப்பிலே அவருக்குப் பிரமிப்புக் கிடையாது. உடம்பின் உள்ளே இருக்கும் ரத்தம் சுத்தமானதா, சரியான ஓட்டம் உடையதா என்பவற்றிலேதான் அவருக்குக் குறி. அதைத்தான் அவர் சோதிப்பார். குரல் இனிமையைக் கொண்டு அவரை மகிழ்விக்க முடியாது. 'சங்கீத பலம் நிரம்பவேண்டும். சரீரத்தில் வலு உள்ளவரைக்குந்தான் சாரீரம் காப்பாற்

றும்; அதன் பின்னரும் நிரந்தரமாகக் கை கொடுக்கக் கூடியது உழைப்பினாலும் ஞானத்தினாலும் மெருகு பெற்ற உண்மையான உயர்ந்த சங்கீதந்தான்' என்பது அவருடைய கொள்கை.

மதுரைச் சகோதரர்கள், நாமக்கல் ஸ்ரீ சேஷையங்கார், சாத்தூர் ஸ்ரீ கிருஷ்ண ஐயங்கார், உமையாள் புரம் ஸ்ரீ கல்யாணராமையர், கல்கத்தா ஸ்ரீ ராகவாசாரியார்—இப்படி இன்னும் பலர் அவரிடம் குருகுல வாசம் செய்தவர்கள். (ஸ்ரீ ராகவாசாரியார் பிற்காலத்தில் உத்தியோகத்துக்காகக் கல்கத்தா சென்றவர்; சொந்த ஊர் கும்பகோணம்.)

இத்தகைய சிறந்த சங்கீத மேதையிடம் மாணுக்கனாக அமர்ந்து இசை பயிலும் பேறு ராமாநுஜத்திற்கு இருந்தது. ராமாநுஜத்தோடு இசை பயின்றவர்களில் கல்கத்தா ஸ்ரீ ராகவாசாரியார் குறிப்பிடத்தக்கவர். மற்றவர்கள் அவருக்கு முன்னும் பின்னுமாக அங்கே குருகுல வாசம் செய்தவர்கள்.

அப்போது ஸ்ரீ நரசிம்ம ஐயங்கார் ஸ்ரீரங்கத்தில் வாழ்ந்து வந்தார். பதினாறு வயதுடைய ராமாநுஜம் அவரிடம் இசை பயிலச் சென்றார். ஸ்ரீ நரசிம்ம ஐயங்கார் ராமாநுஜத்தைப் பாடச் சொன்னார்.

அடிப்படை உழைப்பின் பயனாக ராமாநுஜத்திற்கு நல்ல மனோதிடம் ஏற்பட்டிருந்தது. இயற்கையாக, பெரியவர்களிடம் மரியாதையும் பக்தியும் உண்டே தவிர அச்சம் இல்லை. எந்த இடத்தில் எத்தகைய பெரியோர் கேட்பினும் கீர்த்தனங்களைக் கட்டுக்கோப்புடன் சுவை ததும்பப் பாடும் ஆற்றல் அவருக்கு ஏற்பட்டிருந்தது. சுயேச்சையாகக் கற்பனாஸ்வரங்களைப் பாடும் சக்தியும் சிறிது தோன்றியிருந்தது.

ராமாநுஜத்தின் பாட்டைக் கேட்டு ஸ்ரீ நரசிம்ம ஐயங்கார் மகிழ்ச்சி கொண்டார். இனிய குரலமைப்பை மெச்சிக் கொண்டார். பரபரக்கும் ஆர்வத்தை எண்ணிச் சந்தோஷித்தார். அவரை மாணவனுக ஏற்றுக்கொண்டார்.

ராமாநுஜத்திற்கு இசை தவிர வேறு எதிலும் நினைப்பே இருப்பதில்லை. நாள் ஆக ஆக விரைவாக முன்னேறவேண்டும் என்கிற மனத்துடிப்பு அதிகரித்துக் கொண்டு இருந்தது. எப்பொழுது பார்த்தாலும் பயிற்சி செய்து கொண்டே இருந்தார். ஆனல் அதற்கான இடம், வேளை, சூழ்நிலை—இவை சரியான முறையில் அமையவில்லை.

புத்தி சக்திகளில் மிகுந்த ராமாநுஜம் அந்தக் குறையைத் தவிர்த்துக்கொள்ள மிகவும் பாடுபட்டார். முதலில் பாட்டுக் கேற்ற பயன் இல்லை. ஆனல் அவருடைய அதிருஷ்டம், அதற்கு விரைவிலேயே ஒரு வழி ஏற்பட்டு விட்டது.

அப்போது ஸ்ரீ நரசிம்ம ஐயங்காரிடம் நாமக்கல் ஸ்ரீ சேஷையங்கார் முதல் மாணவராக இருந்தார். ராமாநுஜத்தின் குருகுல வாசகாலத்தில் அவரும் அங்கே இருந்தார். அவருக்கு ராமாநுஜத்தினிடம் அளவுகடந்த அன்பு. இனிய குரல், இயற்கையாகவே அமைந்த ஞானம், ஏற்கும் திறன், முன்னேற்றத்திலே பரபரப்பு ஆகிய நல்லம்சங்களை ராமாநுஜத்தினிடம் கண்டு ஸ்ரீ சேஷையங்கார் அவரைத் தம்முடைய இளைய சகோதரன் போலவே அதிக அன்புடன் அரவணைத்து வந்தார்.

ஒருநாள் ராமாநுஜத்தை அவர் அவ்வூர் ஆலயத்திலே அமைந்துள்ள ஆயிரக்கால் மண்டபத்திற்கு அழைத்துச் சென்ருர்.

" 'நாலு வேதமும் ஆறு சாத்திரமும் அறுபத்து நான்கு கலைகளும் தெரியும்; ஆனல் வாய் மட்டும் ஊமை'

என்பது போல, வாய்ப் பாட்டுத் துறைக்குத் தயாராகிறவர்கள், விஷயத்தை மனத்திலே வாங்கிக் கொண்டால் மட்டும் போதாது; ஏற்றுக் கொண்டவற்றைச் செயல்படுத்திச் செப்பனிட்டுக்கொள்ள வேண்டும். உடனுக்குடன் வாய்விட்டுப் பாடிப் பயிற்சி செய்து வசப்படுத்திக் கொள்ளாவிடில் கிடைத்த நன்மைகள் நம்மிடம் சொல்லிக் கொள்ளாமலே நம்மைவிட்டுப் போய்விடும். சாதக பலம் மிகமிக இன்றியமையாதது. உனக்கு அதற்குத் தக்க வாய்ப்பு இல்லை. அதை நினைத்து நீ ஏங்குகிறாய் என்பதை உன் முகம் சொல்கிறது. அதனால் தான் உன்னை இங்கே அழைத்து வந்தேன்.

"இந்த ஆயிரக்கால் மண்டபம் இருக்கிறதே, இதில் யாராலும் நமக்குத் தொந்தரவு ஏற்படாது; நம்மாலும் பிறருக்குத் தொந்தரவு இல்லை. நான் முன்னெல்லாம் இங்கே வந்துதான் பயிற்சி செய்வேன். சிறு வயதினருக்கு விடியற் கால வேளையில் தனியாக இங்கே வரவும், தனித்திருந்து பயிற்சி செய்யவும் பயமாக இருக்கலாம். சில நாள் பழகி விட்டால் அச்சம் தெளிந்துவிடும். பயிற்சிக்கு ஏற்றது விடியற் காலந்தான். விடிந்த பின் வருவதில் எவ்விதப் பயனும் இல்லை; மனித சஞ்சாரம் ஏற்பட்டுவிடும். முதலில் சில நாள் நான் உனக்குத் துணை வருகிறேன்; பிறகு நீயே வந்து இங்கே அமர்ந்து பயிற்சி செய்யலாம்" என்றார்.

இதைக் கேட்டு ராமாநுஜத்திற்கு அளவற்ற குதூகலம் ஏற்பட்டது.

"பயம் இல்லை; துணை வேண்டாம்" என்று ராமாநுஜம் எவ்வளவோ சொல்லிப் பார்த்தார்; ஸ்ரீ சேஷையங்கார் கேட்கவில்லை. உடன் பிறந்த அண்ணனைப் போல் அளவு கடந்த அன்போடு பிரதி தினமும் அதிகாலையிலேயே எழுந்து, ராமாநுஜத்தையும் தட்டி எழுப்புவார். ஆயிரக்கால்

மண்டபத்திற்கு அழைத்துச் சென்று பயிற்சி செய்ய வைப்பார். சில நாட்களுக்குப் பின் அவர் துணை வருவது நின்றது.

விடியற்காலம் மூன்று மணிக்கே ராமாநுஜத்திற்கு விழிப்பு ஏற்பட்டுவிடும். சுறுசுறுப்புடன் ஆயிரக்கால் மண்டபத்தை நோக்கி விரைகிற போதே கண்டம் இசைத்தபடி இருக்கும். சில நாள் விடி நிலா துணை வரும்; சில நாள் இருள்தான் துணை. இசையிலே உள்ள ஆர்வத்தினால் ராமாநுஜத்தின் உள்ளத்திலே பயமே தோற்றுவதில்லை. 'பசி நோக்கார், கண் துஞ்சார், கருமமே கண் ஆயினர்' என்ற மூதுரைக்கு ஓர் உதாரணமாயிற்று ராமாநுஜத்தின் செயல். மண்டபத்தை அடைந்ததும் மனம் இசையிலே லயித்துவிடும்; உலகமே மறந்துவிடும். ஸ்ரீ ரங்கநாதர் கோயிலின் ஆயிரக்கால் மண்டபம் ராமாநுஜத்தின் கலைக் கூடம் ஆயிற்று.

பொழுது புலர்ந்து வெயில் ஏறுகிற வரையில், மண்டபத்தின் பக்கம் ஜன நடமாட்டம் ஏற்படுகிறவரையில் பயிற்சி. பிறகு பல் துலக்கி, குளித்து, காலைக் கடன்களை முடித்துக் குருவின் இல்லம் திரும்புவார். பழைய அமுது உண்ட பிறகு மீண்டும் இசைப் பயிற்சி, அல்லது ஏதாவது ஆசிரியரின் இல்லத்துப் பணிவிடைகள்.

இப்படிச் சுமார் இரண்டு ஆண்டுகள் ஓடின. ராமாநுஜம் அடிப்படைப் பயிற்சியில் வலுப் பெற்றிருந்ததால் மேல் பயிற்சியை அளிப்பதில் ஸ்ரீ நரசிம்ம ஐயங்காருக்குச் சிரமம் சிறிதும் ஏற்படவில்லை. 'மேல் பயிற்சி'யில் ராமாநுஜம் லட்சியமாகக் கொண்டிருந்தது ராகம் பாடும் முறைகளைப் பயில்வதைத்தான். விரைவில் அவருக்குப் பிரமிக்கத் தக்க வகையில் ராக ஞானம் ஏற்பட்டுவிட்டது.

அங்கே ஆலயத்திலும் சிலர் இல்லங்களிலும் ஏகாதசி, சனிக்கிழமை முதலிய நாட்களில் அடிக்கடி சிறப்பான

முறையில் பஜனைகள் நடைபெறுவதுண்டு. ஆசிரியர் அநுமதியுடன் ராமாநுஜம் அந்த வைபவங்களில் கலந்து கொள்ளப் போவார். தெரிந்த பாடல்களை முறை பிசகாமல் பாடுவார். கேட்பவர்கள் பாராட்டி உற்சாகத்தை ஊட்டுவார்கள்.

நாமக்கல் ஸ்ரீ நரசிம்ம ஐயங்காரிடம் குருகுலவாசம் செய்த இரண்டு வருஷ காலத்தில் ராமாநுஜத்தின் குரல் நல்ல பக்குவ நிலை பெற்றது. இசை ஞானம் வளர்ந்தது. சுருதி ஞானம், ராக ஞானம், ஸ்வர ஞானம் முதலிய அனைத்தையும் அவர் பெற்றார். மேடைக் கச்சேரிக்குத் தகுதியான கலைஞர் ஒருவரிடம் இருக்க வேண்டிய எல்லா அம்சங்களும் அவரிடம் அமைந்துவிட்டன.

## 5. குருகுல வாசம்

**(1908)**

கலைகளை ஆதரித்து வளர்த்த சம்ஸ்தானங்களுள் **ராமநாதபுரம் சம்ஸ்தானத்துக்கு** மிக முக்கியமான பங்கு உண்டு. அதன் அரச பரம்பரையிலே வந்த **ஸ்ரீ பாஸ்கர சேதுபதி** அவர்கள் ஆஸ்திக சிரோன்மணியாகவும், பரம தர்மிஷ்டராகவும், மகா ரசிகராகவும் விளங்கி வந்தார். அவருடைய திருக்குமாரர் **ஸ்ரீ முத்துராமலிங்க சேதுபதி** அவர்கள். அவருடைய செல்வர் தற்போது பதவியில் உள்ள **ஸ்ரீ ஷண்முக நாகநாத சேதுபதி** அவர்கள்.

ராஜ குடும்பத்தின் மற்றொரு கிளையிலே தோன்றியவர் **ஸ்ரீ பாண்டித்துரைத் தேவர்** அவர்கள். அவரைப் **பாலவநத்தம் ஜமீன்தார்** என்றும் குறிப்பிடுவதுண்டு. அவர் பிற்காலத்தில் மதுரைத் தமிழ்ச் சங்கத்துக்கு நிரம்ப உழைத்தவர்.

பாஸ்கர சேதுபதி, பாண்டித்துரைத் தேவர் இவர்களைப் பற்றிக் குறிப்பிடுகிறபோது, ராமநாதபுரம் சமஸ்தானத்தின் கீர்த்திக்குக் காரணமான மற்றொருவரையும் சேர்த்துக் கொள்வது வழக்கம். அவர் தாம் **ஸ்ரீ பூச்சி ஐயங்கார்** என்கிற **ஸ்ரீ ஸ்ரீநிவாச ஐயங்கார்** அவர்கள்.

இவருடைய தகப்பனார் **ஸ்ரீ அனந்த நாராயண ஐயங்கார்** என்ற பெரியார். சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு முதலிய மொழிகளிலே இவர் மிகுந்த பாண்டித்தியம் அடைந்திருந்தார். ராமநாதபுரம் அரண்மனைக் குழந்தைகளுக்குக் கல்வி போதகராக, மிகக் கௌரவமாக இவர் காலங் கழித்து வந்தார்.

இவருடைய தர்ம பத்தினி **ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி அம்மாள்.** நற்குணங்களின் இருப்பிடமாகிய அந்த அம்மாளின் தாயகம் ராமநாதபுரம் ஜில்லாவில் உள்ள **பாப்பாங்குளம்** என்ற ஊர்.

இந்தத் தம்பதிகளுக்கு ஒரு பெண்ணும் நான்கு பிள்ளைகளும். பிள்ளைகளில் மூன்றாமவரே ஸ்ரீ ஸ்ரீநிவாச ஐயங்கார்.

குழந்தைப் பிராயத்திலே அவர் மிக்க சுறுசுறுப்போடு, நின்ற இடத்திலே நில்லாமல், தட்டாரப் பூச்சி போல எப்பொழுது பார்த்தாலும் பறந்து செயலாற்றியபடி இருப்பார். அதைக் கண்டு அவருடைய பாட்டி, தாத்தா முதலிய பெரியோர்கள், "ஏனடா இப்படிப் பூச்சியாய்ப் பறக்கிறாய்?" என்று கேட்பார்களாம். அதனால் அவருக்குப் 'பூச்சி' என்ற செல்வப் பெயர் தோன்றி நிலைத்து விட்டது என்பர்.

ஸ்ரீ பாண்டித்துரைத் தேவரும் ஸ்ரீ பூச்சி ஐயங்காரும் இரண்டு உடலும் ஓர் உயிருமாக இருந்தனர். ஒரு முழு

நாளில் அவர்கள் தனித்திருக்கும் நேரம் மிகமிகச் சொற்ப மாகவே இருக்கும். 'மெட்ரிகுலேஷன்' வரை இருவரும் சேர்ந்து படித்தனர். கல்வி, இசை, களியாட்டம் முதலிய வற்றிலே இருவருக்குமே ஒரே விதமான சுவை. இரு வருமே நன்முகப் பாடுவார்கள். இருவரும் சேர்ந்து கோச்சு வண்டியிலே பள்ளிக்குச் செல்வார்கள். வழியிலே ஒரு தேவாரம் பாடும்படி கேட்பார் ஸ்ரீ பாண்டித்துரை. ஸ்ரீ பூச்சி ஐயங்கார் பாடுவார். பாட்டு முடியவும் கோச்சு பள்ளியை அடையவும் சரியாக இருக்கும்.

**திருவையாற்றைப்** பிறப்பிடமாகவும் பின் நாளில் பட்டணத்தை இருப்பிடமாகவும் கொண்ட **மகா வித்து வான் பட்டணம் ஸ்ரீ சுப்பிரமணிய ஐயர்** அவர்களை மேற் கூறிய நண்பர்கள் சங்கீத குருவாகக் கொண்டார்கள். ஸ்ரீ பாண்டித்துரைத் தேவரின் முழு நோக்கம் ஸ்ரீ பூச்சி ஐயங்கார் சிறந்த இசைக் கலைஞர் ஆக வேண்டும் என்பதே. அவ்வாறே குருவினிடம் விண்ணப்பித்துக் கொண்டார். தம் கோரிக்கை நிறைவேறினதும் ஸ்ரீ பட்டணம் சுப்பிர மணிய ஐயருக்குத் திருவையாற்றிலே இல்லம் முதலிய பல சௌகரியங்களை ஏற்படுத்திக் கொடுத்துத் தம் நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

குருகுல வாச காலத்தில் ஸ்ரீ பூச்சி ஐயங்காரின் சகாக் களாக இருந்தவர்கள், **திருப்பாலைக்குடி ஸ்ரீ சுப்பிரமணிய ஐயர், காஞ்சீபுரம் ஸ்ரீ சேஷையங்கார், மைசூர் ஸ்ரீ வாசு தேவாசார்** முதலியவர்கள்.

முற்பிறப்பின் நற்பயனாலும், பெற்றோர், குரு, மற்றும் உள்ள பெரியோர், அன்பர்கள் அனைவரின் ஆசியாலும் ஸ்ரீ பூச்சி ஐயங்கார் விரைவிலேயே இசைக் கலையில் தேர்ந்த புலமையைப் பெற்முர். நல்ல நாள் ஒன்றிலே **திருப்புல் லாணி** (வடமொழியில் **'தர்ப்ப சயனம்'** என்பர்.)

ஸ்ரீ பத்மாஸனித் தாயார் சந்நிதியிலே அவருடைய இசை அதி விமரிசையாக அரங்கேறிற்று.

அவர் விடியற்காலம் நான்கு மணிக்கே எழுந்து விடுவார். பகலில் ஓய்வு கொள்ளவே மாட்டார். அவருடைய தகப்பனார் அவருக்குப் பெரிதும் ஊக்கம் அளித்து வந்தார்:

"முறையோடு நாதோபாசனை செய். நிரம்பச் சம்பாதனை செய். நன்றாக வாழ்க்கையை அநுபவி. நெறியிலே நின்றொழுகு. தேடி வந்து இரப்பவர் யாராயினும் கலையை இரந்தால் கலையைப் புகட்டு, பொருளை இரந்தால் பொருளைக் கொடு."

இந்த உபதேசங்களை ஸ்ரீ பூச்சி ஐயங்கார் தம் குறிக்கோளாகக் கொண்டு வாழ்க்கையை நடத்தி வந்தார்.

அன்பு உள்ளம் படைத்த அவருக்கு மாணவர்கள் மிகப் பலர். பொறுப்போடு அவர்களுக்குப் போதிப்பார். பாடங்களைத் தாமே, தம் கைப்பட எழுதித் தருவார்.

கறந்த பாலை அவர் அப்படியே சாப்பிடுவார். பச்சைக் காய்கறிகளைத் தாமே நேரில் பரிசீலனை செய்து தேர்ந்தெடுப்பார். தம் விருப்பம்போல் பக்குவம் செய்யச் சொல்லிச் சுவைத்து உண்பார்.

அவர் மிகுந்த நெறி உடையவர். பரநாரீ சகோதரர். பெண்களோடு ஒட்டியும் ஒட்டாமலும் பழகும் சமர்த்தர். மதங்களின் உயர்வு—தாழ்வு பாராட்டாத சம நோக்கு உடையவர். ஊரில் அவருக்கு 'எஜமான சப்தம்' உண்டு. குடிபடைகள் 'எஜமான்' என்றும், மற்றவர்கள் பெயரைக் குறிப்பிடாமல் 'ஐயங்கார் அவர்கள்' என்றும் மிக்க மரியாதையோடு அவரைக் குறிப்பிடுவார்கள். வெளியூர்களில் உள்ள அன்பர்கள், 'ராமநாதபுரம் ஐயங்கார் அவர்கள்' என்றால், 'பூச்சி ஐயங்கார் என்கிற ஸ்ரீ ஸ்ரீநிவாச ஐயங்கார்

'அவர்கள்' என்று பொருள். அன்பு உள்ளத்தாலும் நேரிய நடத்தையாலும் கலையின் திறத்தாலும் அன்பர்களின் உள்ளங்களை ஆண்டு வந்த கோமான் அவர்.

வெளியூர்க் கச்சேரிகளில் சந்திக்க நேரும் பக்க வாத்திய வித்துவான்களில் சிறந்த யோக்கியதை உடையவர்களைப்பற்றி ஊர் திரும்பினதும் மகாராஜாவிடம் விசேஷமாகச் சிலாகித்துப் பேசுவார். அவருடைய ஒவ்வொரு சொல்லுக்கும் ஒவ்வொரு செயலுக்கும் பெரு மதிப்பு அளிக்கும் இயல்புடைய மகாராஜா அந்த வித்துவான்களைத் தம் மனத்திலே பதிய வைத்துக் கொள்வார். அடுத்து நேரும் வைபவத்திற்கு அந்தப் பக்க வாத்திய வித்துவான்களைத் தருவிக்குமாறு ஸ்ரீ பூச்சி ஐயங்காரிடம் கேட்டுக் கொள்வார். இப்படி அந்தச் சம்ஸ்தானத்திற்கு அறிமுகமான வித்துவான்கள் மிகப் பலர்.

எளிய நிலையிலே உள்ளவர்கள் தம் மக்களுக்குத் திருமணம் முதலிய வைபவங்களை நிகழ்த்த ஸ்ரீ பூச்சி ஐயங்காரிடம் உதவி கோரி வருவர். உடனே ஸ்ரீ ஐயங்கார் மகாராஜாவிடம் சென்று உரையாடுவார். அப்போதைச் சம்பாஷணை முறையே தனிக் கவர்ச்சிகரமாக இருக்கும்.

"எனக்கு இப்போது மிகுந்த உற்சாகம். பாட வேண்டும்போல் இருக்கிறது" என்பார் ஸ்ரீ பூச்சி ஐயங்கார்.

மகாராஜா, 'எங்கே, எங்கே' என்று காத்துக் கொண்டிருக்கும் ரசிக சிரோன்மணி. வேண்டாம் என்று சொல்லப் போகிறார்?

ஸ்ரீ ஐயங்கார் தேவார்ப்பணம் என்று சொல்லக் கூடிய முறையிலே பிரமாதமாகப் பாடுவார்.

"இந்தப் பாட்டு வையம் பெறும்" என்று புகழ்வார் மகாராஜா.

"வைய்ம் வேண்டாம்; சிறு உதவி போதும்" எனப் பீடிகை இடுவார் ஸ்ரீ ஐயங்கார்.

"எதுவானாலும் நிறைவேற்றி வைக்கிறேன்" என்று மகாராஜா கூறினதும் ஸ்ரீ ஐயங்கார் விஷயத்தை வெளியிடுவார்.

"அப்போதே நினைத்தேன்" எனப் புன்முறுவல் புரிந்த பின் மகாராஜா கட்டளை பிறப்பிப்பார்; உதவி கோரி வந்த ஏழையின் உள்ளம் குளிரக் காரியம் நிறைவேறும்.

இப்படி ஒருமுறை இருமுறை அல்ல; அவர் பிறர் நலங் கருதிப் பாடிப் பரிசில் வாங்கித் தந்த செயல்கள் எத்தனையோ!

என்றாவது ஸ்ரீ ஐயங்கார் மலர்ந்த முகத்துடன் வந்து வெகு உற்சாகமாகப் பேசத் தொடங்கினால், உடனே மகாராஜா, 'யாரோ இவரிடம் உதவி நாடி வந்திருக்கிறாற்போல் இருக்கிறது' என்று ஊகித்துக்கொண்டு விடுவார்.

ஸ்ரீ பூச்சி ஐயங்கார் தமிழ், தெலுங்கு, சம்ஸ்கிருதம், ஆங்கிலம் முதலிய மொழிகளில் நல்ல பாண்டித்தியம் உடையவர். சம்ஸ்கிருதத்திலும் தெலுங்கிலும் அநேகம் கிருதிகளை இயற்றியுள்ளார். அவர் கவனம் செய்த கீர்த்தனைகளும் வர்ணம், ஜாவளி, பதம், தில்லானா முதலியவைகளும் அனைவரும் விரும்பிப் பாடத் தக்கவை; அன்று முதல் இன்றுவரை அநேகம் வித்துவான்கள் பாடி வருபவை.

ராகங்களுள் அவருக்கு மிகப் பிடித்த சிலவற்றில் 'காப்பி' ஒன்று. அந்த ராகத்திலே அவர் பல பாடல்களை இயற்றியுள்ளார். கச்சேரி முடிவிலே காப்பி பாடுவது என்ற சம்பிரதாயமே அவரால் ஏற்பட்டதுதான் என்பர். அவரால் பிரசித்தமாக்கப் பெற்ற பிறர் கிருதிகள் பல. அவற்றில் காப்பியில் உள்ள 'வந்த நின்னே நுண்டி நிகா

**வாணி'** என்ற உருப்படியும் ஒன்று. அது அவரால் கவனம் செய்யப் பெற்றதென்றே எண்ணிக் கொண்டிருப்பவர் பலர்.

தெய்வ பக்தி மிகுந்த அவர் ஊர் எல்லையிலே கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ கோதண்டராம மூர்த்தியைத் தரிசிக்காமல் வெளியூர்ப் பிரயாணம் செல்லவே மாட்டார். திரும்பி வருகிறபோதும் அப்படியேதான்—கோதண்டராமனைத் தரிசித்து விட்டுத்தான் வீட்டை அடைவார். அதற்கு வசதியாக அந்த ஆலயமும் ரஸ்தா அருகே அமைந்திருந்தது. கோதண்டராமனிடம் அவருக்கு உள்ள அதிகமான ஈடுபாட்டின் அறிகுறியாக அவருடைய செல்வனுக்கு அந்த மூர்த்தியின் பெயரையே சூட்டி மகிழ்ந்தார்.

இப்படி எல்லா வகையாலும் சிறப்புடைய அந்தப் பெரியாரைப் பற்றிக் கலையார்வம் மிகுந்த ராமானுஜம் வெகுவாகக் கேட்டறிந்தார். அவரைக் குருவாக அடைய வேண்டும் என்ற ஆர்வம் நாளுக்கு நாள் அதிகரித்தது. சிறிது காலமாவது அவரிடம் குருகுல வாசம் செய்து அவர் ஆசியையும் அன்பையும் கலை நுணுக்கங்களையும் பெறவேண்டும் என்ற ஆசையை அவரால் அடக்க முடியவே இல்லை. நல்ல நாள் ஒன்றில் அவரைத் தேடிச் சென்று வணங்கினார்; மனத்தில் உள்ள அவாவை வெளியிட்டார். அவரும் பரிபூரண உள்ளத்துடன் ராமானுஜத்தைத் தம் சிஷ்யனாக ஏற்றுக் கொண்டார். குரு—சிஷ்யர்களுக்குள் விரைவிலேயே ஐக்கிய பாவம் ஏற்பட்டுவிட்டது.

அப்போது ஸ்ரீ பூச்சி ஐயங்காரிடம் (1) காரைக்குடி ஸ்ரீ ஸ்ரீநிவாச ஐயங்கார், (2) சேலம் ஸ்ரீ துரைசாமி ஐயங்கார், (3) மேலையூர் ஸ்ரீ ஸ்ரீநிவாச ஐயர், (4) ஸ்ரீ ஜகந்நாதன் — (இவர் ஸ்ரீ பூச்சி ஐயங்காரின்

தமையனூர் மாப்பிள்ளை.) (5) **ஸ்ரீ ராஜாமணி** — (இவர் ஸ்ரீ பூச்சி ஐயங்காரின் தமக்கை பிள்ளை.) ஆகியோர் குரு குல வாசத்தில் ஈடுபட்டிருந்தார்கள்.

பின் நாளில் பிரபல ஜலதரங்க வித்துவானாக விளங்கிய **காளையார் கோயில் ஸ்ரீ சுப்பையர்** இந்தச் சிஷ்யர்களுக் குக் காலத்தால் முந்தியவர்.

அப்போது ராமாநுஜத்தின் வயசு பதினெட்டு. அதற்குமுன் மூன்று வருஷகாலம் புதுக்கோட்டை ஸ்ரீ மலையப்பையரிடமும், இரண்டு வருஷகாலம் நாமக்கல் ஸ்ரீ நர சிம்ம ஐயங்காரிடமும் குருகுல வாசம் செய்திருந்த அவ ருக்கு ஸ்ரீ பூச்சி ஐயங்காரிடம் மிகவும் நீடித்த குருகுல வாசம் வாய்த்தது.

ஆனால் இங்கே பாடம் சொல்வது-கேட்பது என்கிற அம்சம் அதிகம் இல்லை. ஆசிரியர் மாணாக்கனைப் பாடச் சொல்வார். அங்கங்கே அவசியமான திருத்தங்களைக் கொடுப்பார். கலையின் நுட்பமான அம்சங்களைப் பசுமரத் தாணிபோல் மனத்தில் பதியும்படி விவரித்துப் போதிப் பார். இந்த ரீதியிலேதான் பாடம். தவிர, குரு பாடுகிற போது சிஷ்யன் மிகுந்த பக்தி சிரத்தையுடன் கேட்டுக் கிரகிப்பதும் ஒரு முக்கியமான அம்சம்.

ஸ்ரீ பூச்சி ஐயங்கார் அப்போது ஏராளமான கச்சேரி கள் செய்து வந்தார். தாம் செல்கிற இடங்களுக்கெல்லாம் அவர் ராமாநுஜத்தையும் தவறாமல் கூட்டிச் செல்வார்; மேடையிலே தம் பின்னே அமர்ந்து தம்பூரா மீட்டச் சொல்வார்; தம்மோடு சேர்ந்து பாடவும் சொல்வார்.

புத்திசாலியான ஒரு மாணாக்கன் ஒரு வருஷ காலம் குருமுகமாகப் பாடங்கேட்டு இடையறாது சாதகம் செய்து பெறக்கூடிய பலனை மிகச் சாமான்ய நிலையிலே உள்ள ஒரு சிஷ்யன் குருவோடு சேர்ந்து ஒரு சில கச்சேரிகளில் பாடு

வதனிலேயே பெற்றுவிடலாம். செப்பனிட்ட கட்டுக் கோப்பான அழகிய ரஸ்தாவிலே பல முறை ஓடிப் பழகிய காளைகள் பூட்டிய வண்டியின் புன்னே புதிய இளங்காளை களை வண்டியிலே பூட்டி வண்டியை அதே அடிச்சுவட்டைப் பின்பற்றி ஓட்டிச் செல்வது சுலபம். குருவோடு சேர்ந்து சிஷ்யன் மேடைக் கச்சேரிகளில் பாடுவதில் மிகப் பெரிய நன்மை எளிதிலே கைகூடுகிறது. சாமான்ய சிஷ்யனுக்கே நலம் பயக்கும் இச் செயலில், புத்தி சக்திகளும் ஆர்வமும் நிறைந்த சிஷ்யன் எவ்வளவு விரைவாகவும் எத்தனை அதிக மாகவும் நலம் பெறக்கூடும்!

ராமாநுஜத்தினிடம் கிரஹ்ய சக்தியும், கலையார்வமும் பரபரப்பும் அதிகம். குருவோடு சேர்ந்து பாடும் வாய்ப்பு அடிக்கடி கிட்டி வந்தது. சந்தர்ப்பம் எங்கே எங்கே என்று துடித்துப் பசித்திருந்த உள்ளம், கிடைத்தற்கரிய அந்த நல்ல சந்தர்ப்பத்தைப் புதையலைக் கண்ணுற்ற ஏழையைப் போல் பரபரப்புடன் பயன்படுத்திக் கொண்டது.

## 6. திருமணம்

**(1909)**

ஒரு நாள் பிற்பகலில் ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார் தம் உறவினர் ஒருவர் வீட்டுத் திண்ணையிலே அமர்ந்து ஒரு நூலை வைத்துப் படித்துக்கொண்டிருந்தார். அப் போது அங்கே ஒரு சிறுமி ஏதோ அலுவலாக வாசலுக் கும் உள்ளுக்கும் நடமாடிக்கொண்டே இருந்தாள். அவள் மீது ஸ்ரீ திருவேங்கடத்தையங்காரின் பார்வை விழுந்தது; பெண்ணின் தோற்றம் கவனத்தை ஈர்த்தது. 'மகாலக்ஷ்மி போல் இங்கே வளைய வந்து கொண்டிருக்கும் இந்தப்

பெண் யார்? இதுவரை இங்கே இவளை நாம் பார்த்ததில்லையே!' என எண்ணமிடலானார். யார் என்பது தெளிவாகவில்லை. கடைசியில் அந்த வீட்டு அம்மாளையே கேட்டுவிட்டார்.

உறவினரான அந்த அம்மாள் மூப்பெய்தியவர்கள்; ஸ்ரீ திருவேங்கடத்தையங்காரிடம் அன்பு உடையவர்கள்; அவருடைய் குடும்ப நலனில் மிகக் கருத்து உள்ளவர்கள். அவசியமான போதெல்லாம் அன்போடு கடிந்துகொள்ளும் உரிமை உடையவர்கள். 'யார் இந்தப் பெண்?' என்று ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார் கேட்கவும், எப்போது சந்தர்ப்பம் வாய்க்கும் என எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர்கள் போல அந்த அம்மாள் உள்ளடக்கிய வேகத்துடன், "ஏன்?" என்றார்கள்.

"பெண் பார்வைக்கு மிகவும் லட்சணமாகவும் மிகப் பதவிசாகவும் இருக்கிறாளே, இதற்கு முன் இங்கே பார்த்ததில்லையே என்றுதான் கேட்டேன்" என்றார் ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார்.

"ஹூம்! இவ்வளவு லட்சணத்திலே இருக்கிறது நீங்கள் எல்லாரும் உறவு முறைகளைப் பாதுகாப்பது! போகிறது; யார் என்று தெரியாவிட்டாலும் பெண்ணின் சிறப்பம்சங்களாவது மனத்திலே பட்டவரைக்கும் பெண் பாக்கியசாலிதான்!" என்று பூடகமாகவும் அழுத்தமாகவும் பேசினார்கள் அந்த அம்மாள்.

ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார் திடுக்கிட்டுப் போனார்.

"என்ன என்ன? உறவு முறையா? இந்தப் பெண் எனக்கு உறவு உள்ள பெண்ணா? யார்? என்ன உறவு?"

"ஒன்றுவிட்ட சகோதரி பெண்; **பார்த்திபனூர் சுந்தரராஜ ஐயங்கார் பெண்**........புரிந்ததா?"

"என்ன!..........என் தங்கை பெண்ணு இந்தக் குழந்தை! அடாடாடாடா! 'உறவு போகாமல் விட்டது; கடன் கேளாமல் விட்டது' என்பது சரியாகிவிட்டதே!"

ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார் சற்று மலைத்து உட்கார்ந்துவிட்டார்.

"கடந்து போனதை நினைந்து வருந்திக் கொண்டிருப்பதைவிட, இனி நடக்க வேண்டியதைக் கவனிப்பது உத்தமம் என்று பெரியவர்கள் சொல்வார்கள்...." என்று அந்த அம்மாள் ஆரம்பிக்கையிலேயே ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார் குறுக்கிட்டார்.

"இந்தப் பெண்ணின் தோற்றம் சாட்சாத் மகாலக்ஷ்மியை நினைப்பூட்டுகிறது. இவள் காலடி வைக்கிற இடம் பரம க்ஷேமத்தை அடையும் என்று எனக்குத் தோன்றுகிறது. இதுவரையில் எந்தக் காரியத்திலும் என் ஊகம் சோடை போனதே இல்லை ஜாதக அமைப்பின் பிரதிபலிப்பே தான் தோற்றம் என்பது என் கொள்கை. அதனால்...."

இப்போது அந்த அம்மாள் குறுக்கிட்டுப் பேசினார்கள்.

"அப்படியானால் மருமகள் ஆக்கிக் கொண்டு விடலாமே!"

"அதையே தான் நானும் எண்ணுகிறேன்."

"அப்படியானால் நானே 'கடன கர்த்தா'வாக இருந்து ஏற்பாடு செய்யவா?"

"எனக்குப் பூரண சம்மதம். பகவதநுக்கிரகம் வேண்டும்."

இப்படி ஆரம்பித்த பேச்சு வெகு விரைவில் வெகு தூரம் முன்னேறிவிட்டது.

மானாமதுரையின் சமீபம் உள்ள பார்த்திபனூர் ஒரு சிறு கிராமம். அங்கே வாழ்ந்த நல்ல குடும்பம் ஒன்றிலே தோன்றியவர் ஸ்ரீ சுந்தரராஜ ஐயங்கார். அவர் அரியக்குடி ஸ்ரீ திருவேங்கடத்தையங்காருக்கு ஒன்றுவிட்ட தங்கை புருஷர். அவருக்கு **ஸ்ரீ சேஷ ஐயங்கார், ஸ்ரீ ஸ்ரீநிவாச ஐயங்கார்** என இரு புதல்வர்கள்; நான்கு பெண்கள்.

அவர்களில் பிரஸ்தாபப் பெண்ணின் பெயர் **பொன்னம்மாள்.** அவள் இப்போது மணப் பருவம் எய்தியிருந்தாள்.

ஸ்ரீ சுந்தரராஜ ஐயங்கார் தமது பூர்விகக் கிராமத்தை விட்டுப் பின் நாட்களில் ஜீவனோபாயத்தை முன்னிட்டுக் காரைக்குடிக்கு வந்தார். அங்கே கல்விக்கூடம் ஒன்றிலே தமிழ் ஆசிரியராகப் பணி ஆற்றி வந்தார். அச் சமயத்திலே தான் மேற்கூறிய நிகழ்ச்சி நடைபெற்றது.

ஸ்ரீ சுந்தரராஜ ஐயங்காரின் தகப்பனார் **ஸ்ரீ சேஷ ஐயங்கார்** அவர்களும் ஸ்ரீ பூச்சி ஐயங்காரின் தகப்பனார் ஸ்ரீ அனந்தநாராயண ஐயங்கார் அவர்களும் அத்தான்—அம்மான் சேய் உறவு முறையினர். ஆகவே ஸ்ரீ திருவேங்கடத்தையங்காரின் மேற்குறித்த அபிப்பிராயம் செயல்படுவது வெகு எளிதாயிற்று.

ராமாநுஜத்திற்குப் பொன்னம்மாளை மணமுடிப்பது என்ற தீர்மானத்தில் அவர்கள் ஜாதகங்களை ஆராய்ந்து பொருத்தம் பார்த்தார்கள்; மிக மிகத் திருப்திகரமாக இருந்தது. ஆனால், 'வித்தியார்த்தியை இல்லறத்தில் இணைத்தால் வித்தையின் வளர்ச்சிக்குப் பங்கம் வரக் கூடுமே! இல்லறம் போன்ற ஈடுபாடுகள் வித்தைக்குச் சத்துருக்கள் அல்லவா?' எனச் சிலர் தியக்கமுற்றுப் பேசினர்.

இதை ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார் ஏற்றுக்கொள்ள வில்லை. "ராமாநுஜம் இதுவரை அடைந்த முன்னேற்றத்தைவிட இன்னும் அதிகமான முன்னேற்றத்தை அடையக்கூடும், இந்தப் பெண்ணைக் கைப்பிடிப்பதனால். பெண்ணின் ஜாதக அமைப்பு அத்தனை சிறப்புடையதாக இருக்கிறது" என்று எல்லோருக்கும் எடுத்துக் கூறினார். மேல் ஆகவேண்டியவற்றில் கவனஞ் செலுத்தலானார்.

"எல்லாம் சரிதான்; ஆனால் மிக முக்கியமான ஒரு விஷயத்தை யோசிக்க வேண்டியிருக்கிறதே" என்று ஒரு பிரச்னையைக் கிளப்பினார் உறவினருள் ஒரு முதியவர்.

ஸ்ரீ சுந்தரராஜ ஐயங்கார் குடும்பத்திற்கும் ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார் குடும்பத்திற்கும் இடையே போக்குவரத்து, பேச்சு வார்த்தை முதலியன நின்றுபோய் வெகு காலம் ஆகியிருந்தது. உறவினருள் ஒரு குறிப்பிட்ட காலவரைக்குமேல் தொடர்பு நின்று போயிருந்தால் மீளவும் தொடர்பு கொள்கிறபோது சில பரிகாரங்களை இருதரப்பாரும் மனமொப்பிச் செய்ய வேண்டும் என்கிற ஒரு கொள்கை இருந்து வந்தது. இன்றுகூடச் சில பிரதேசங்களில் இத்தகைய கொள்கைகளைப் புறக்கணிக்காமல் போற்றி வருகிறார்கள்.

'பெரியவர் கிளப்பிய பிரச்னை மிகவும் நியாயமானது; அவசியமானது' என்றே எல்லோரும் ஒப்புக் கொண்டார்கள். பரிகாரங்களில் மிக முக்கியமானவை, தொடர்பு நின்று போன இரு குடும்பங்களின் தலைவர்களும் குடும்பங்களில் உள்ள மற்றவர்களும் உள்ளத் தூய்மையோடு ஆலயஞ் சென்று ஆண்டவனைத் தொழுவது; சந்நிதியில் சந்தித்துக் குசலம் விசாரிப்பது; மங்கலப் பொருள்களைப் பரிமாறிக்கொள்வது

என்பவை. இரு குடும்பத் தலைவர்களும் குடும்பங்களில் உள்ள மற்றவர்களும் இந்த முறைகளை மனப்பூர்வமாக வரவேற்றனர்.

விட்டுப் போயிருந்த உறவு மறுமலர்ச்சி பெற்றது. பெரியோர்கள் முன்வந்து அந்தப் புனிதமான வேளையிலே, ஆண்டவனின் சந்நிதியிலே திருமணப்பேச்சைத் தொடங்கினர்.

அப்போது ஸ்ரீ சுந்தரராஜ ஐயங்கார் இன்னும் ஒரு செய்தியைப் பிரஸ்தாபித்தார்.

"ஸ்ரீ திருவேங்கடத்தையங்காரின் இரண்டாவது பிள்ளை கிருஷ்ணய்யங்காரின் பெண் செல்லம்மாளை என்னுடைய இரண்டாவது பிள்ளை ஸ்ரீநிவாசனுக்கு மணம் முடிக்க விரும்புகிறேன். இதில் யாருக்கும் ஆட்சேபணை இராது என்று எண்ணுகிறேன்" என்றார்.

உடனே அங்கிருந்த அனைவரின் முகமும் ஆனந்தத்தால் மலர்ச்சி பெற்றது. பெரியவர் ஒருவர் கெட்டியான குரலில், "பேஷ், பேஷ்! நல்ல ஏற்பாடு. கட்டு நன்றாக இறுகுவதற்கு மேலும் ஒரு முடிச்சுப் போடுவது நல்லது தான்" என்றார். எல்லாரும் மகிழ்ச்சிச் சிரிப்புடன் ஆரவாரஞ் செய்து பெரியவரின் அபிப்பிராயத்தை ஆமோதித்தார்கள்.

அங்கேயே ஜாதகங்கள் பரிசீலனை செய்யப் பெற்றன. மனப் பொருத்தம் உள்ள இந்த விஷயத்திலும் மற்றப் பொருத்தங்களும் திருப்தியாகவே இருந்தன.

'இரண்டு கல்யாணங்களையும் தனித்தனியே நடத்துவதா, எங்கே நடத்துவது, எப்படி நடத்துவது?' என்பன பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடைபெற்றன. இரண்டையும் தேவகோட்டையில் சேர்த்தே நடத்தி விடுவது என்று

முடிவு செய்தார்கள். பகவானைப் பிரார்த்தித்து உறுதித் தாம்பூலமும் மாற்றிக் கொண்டனர்.

அப்போது ராமாநுஜத்தின் வயது பத்தொன்பது; பொன்னம்மாளின் வயது பதினைன்கு. ஸ்ரீநிவாசனின் வயது பத்தொன்பது; செல்லம்மாளின் வயது பன்னிரண்டு. உத்தமமான பொருத்தம்.

திருமணத்திற்கு உரிய நாளை விரைவிலேயே தீர்மானித்தனர். மண ஓலை தயாராயிற்று. எல்லோருக்கும் அனுப்பப் பெற்றது. இரு குடும்பங்களிலும் கல்யாணக் காரியங்கள் வெகு துரிதமாக நடைபெற்றன. சம்பந்தப் பட்ட குடும்பங்களில் உள்ளவர்களேயன்றி மற்றும் உள்ள உற்ருர் உறவினர் ஊரார் அனைவரும் குதூகலமாக விளங்கிஞர்கள்.

திருமண நாள் நெருங்க நெருங்க உற்ருர் உறவினரெல்லோரும் தேவகோட்டையிலே வந்து கூடலாயினர். வீடும் ஊரும் நிர்த்தூளிப்பட்டன. ஆம், தேவகோட்டையிலே உள்ள செல்வர்களும் மற்றவர்களும் தத்தம் குடும்பத்திலே வைபவம் என்ற உணர்வோடுதான் செயல்களில் ஈடுபாடு கொண்டிருந்தனர். அவர்களுக்கு ஸ்ரீ திருவேங்கடத்தையங்காரிடம் அத்தனை அன்பும் பக்திபூர்மவான ஈடுபாடுகளும்.

திருமணத் திருநாள். உறவினர்களும் நண்பர்களும் செல்வர்களும் பிரமுகர்களும் வித்துவான்களும் பெரியோர்களும் மணவறையைச் சூழ்ந்து நிறைந்திருக்க மங்கல வாத்தியங்கள் நகநகவென்று முழங்க, பெண்கள் மங்கல கீதம் இசைக்க, பெரியோர் ஆசி மொழிகள் கூற, அன்பர்கள் பூமாரி பொழிய, சுபயோக சுபமுகூர்த்த வேளையிலே அரியக்குடி ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார் குமாரன் சிரஞ்சீவி ராமாநுஜத்திற்கும், பார்த்திபனூர் ஸ்ரீ சுந்தரராஜ

ஐயங்கார் குமாரி சௌபாக்கியவதி பொன்னம்மாளுக்கும், பார்த்திபனூர் ஸ்ரீ சுந்தரராஜ ஐயங்கார் புதல்வன் சிரஞ்சீவி ஸ்ரீநிவாசனுக்கும் அரியக்குடி ஸ்ரீ கிருஷ்ணையங்கார் புதல்வி சௌபாக்கியவதி செல்லம்மாளுக்கும் திருமண வைபவம் அதிவிமரிசையாய் நடந்தேறியது.

## 7. மீண்டும் குருகுலம்

### (1909—1911)

'பிராப்த காலம் வந்துவிட்டது; காரியம் நடந்து விட்டது' என்று சில பெரியோர்கள் சொல்வதுபோல ஸ்ரீ ராமாநுஜ ஐயங்காருக்கு மங்களக் கிரகம் உச்ச நிலைக்கு வந்தது; அவர் திருமணம் நடந்தேறிற்று. அதே தவிர அவர் அதன் பிறகும் 'கல்யாணம் ஆன பிரமசாரி'யாகத் தான் இருந்தார்.

அவர் நோக்கமெல்லாம் சங்கீதத்தில். பெரியோருக்கு அடங்கி நடக்கிற முறையில் அவர்கள் பார்த்து ஏற்பாடு செய்த நல்ல காரியத்தில் கட்டுப்பட்டு ஈடுபாடு கொண்டிருந்தாரே தவிர, வைபவச் சடங்குகள் யாவும் நிறைவேறின உடனேயே குருகுல வாசத்தை நீடிக்க அவர் மீண்டும் ராமநாதபுரம் சென்றுவிட்டார்.

அவருடைய விடா முயற்சியும் ஆர்வமும் பரபரத்த சுபாவமும் சங்கீத சம்பந்தமாக அவரிடம் பளிச்சிட்ட நல்ல அம்சங்களும் ஸ்ரீ பூச்சி ஐயங்காரின் உள்ளத்தை வெகுவாகக் கவர்ந்தன. இப்போது அவர் உறவினர் வீட்டு மாப்பிள்ளை என்கிற அபிமானம் வேறு சேர்ந்து கொண்டது. அதனால் ஏற்கனவே வெகு நன்றாகப் பயிற்சி அளித்து வந்த அவர் இப்போது அதிக அக்கறையோடும்

பிரத்தியேக அபிமானத்தோடும் அருள் மனத்தோடும் பயிற்சியளிக்கலானார்.

இன்று ஸ்ரீ ராமானுஜ ஐயங்கார் கர்நாடக சங்கீத உலகில் முடிசூடா மன்னராகத் திகழ்கிறார் என்றால், அதற்குப் பல காரணங்கள் இருந்தாலும், ஸ்ரீ பூச்சி ஐயங்காரிடம் அவர் செய்த குருகுல வாசந்தான் மிக முக்கியமான காரணம் ஆகும். குருநாதரின் பரிபூரண கடாட்சத்தை அவர் பெற்றதே மிக முக்கியமான காரணம் ஆகும். அன்றுமுதல் இன்றுவரையில் தம் குருநாதரை அவர் ஒவ்வொரு கணமும் நினைத்து வணங்கும் செயலே மிக முக்கியமான காரணம் ஆகும்.

ஸ்ரீ ராமானுஜ ஐயங்காருக்குச் சோம்பித் திரிதல் பிடிக்காது. அதை இன்றும் அவரிடம் காணலாம். அந்த இயல்பினாலும் குருவிடம் உள்ள விசேஷ பக்தியினாலும் குருவின் இல்லத்தில் ஏதாவது பணிவிடைகள் புரிந்தவண்ணம் இருப்பார். யார் என்ன தடுத்தாலும் கேட்கமாட்டார். எவர் என்ன கோபித்தாலும் செயலை நிறுத்தமாட்டார். சாதகம் அல்லது பணிவிடை—இரண்டே அவருடைய குறிக்கோள்.

ஒரு சமயம் அவர் குதிரில் தானியத்தை அள்ளிக் கொட்டிக் கொண்டிருந்தார். அப்போது ஸ்ரீ பூச்சி ஐயங்கார் ஏதோ காரியமாக அந்தப் பக்கம் வந்தார். ராமானுஜ ஐயங்கார் சிறிதும் வேற்றுமை மனப்பான்மை இன்றி, தம் வீட்டு அலுவலைப்போல் எண்ணி முகத்திலோ உடலிலோ சோர்வின் சாயலே இல்லாமல், கண்டத்தால் ஏதோ இசைத்தபடி பரபரப்புடன் காரியத்தில் ஈடுபட்டிருப்பதைக் கண்டார். நெஞ்சத்தில் அருள் பொங்கிற்று; முகத்தில் புன்னகை அரும்பிற்று. "அடேடே! இவன் நம் உறவினர் வீட்டு மாப்பிள்ளை ஆயிற்றே! இவனைப்போய் இம்

மாதிரி வேலைகளில் ஏவலாமா?" என்று சிரித்தபடி கூறிக் கொண்டே அப்பால் போய்விட்டார்.

இப்படியாகத் தொடர்ந்து பல வருஷ காலம் மனம், வாக்கு, காயம் மூன்று காரணங்களினாலும் குரு பக்தி செய்து அவர் அருளைப் பெற்றார் ஸ்ரீ ராமாநுஜ ஐயங்கார். அதன் பயனாய் வெகு விரைவிலேயே சங்கீத உலகில் புகழ் ஏணியின் முதற்படியை எட்டும் பாக்கியம் அவருக்குக் கிட்டிற்று.

## 8. முதற் கச்சேரி

(1912)

**ஸ்ரீ**மான் ஏ. ஆர். ஏ. ஆர். எஸ். எம். சோமசுந்தரம் செட்டியார் அவர்கள் தேவகோட்டையில் பிரபல லேவா தேவிப் பிரமுகர். அவர் குடும்பத்துக் கல்யாணம் ஒன்று 1912-இல் கண்டனூரில் அதிவிமரிசையாக நடைபெற்றது. ஏற்பாடுகள் வெகு பிரமாதம்.

வைபவத்தில் கலந்து கொள்வதற்கென்று அழைப்புப் பெற்ற அநேகம் பெரிய வித்துவான்கள் அங்கே விஜயம் செய்திருந்தனர். கோனேரிராஜபுரம் ஸ்ரீ வைத்திய நாதையர் அவர்கள், திருக்கோடிகாவல் ஸ்ரீ கிருஷ்ணையர் அவர்கள், கும்பகோணம் ஸ்ரீ அழகனம்பி பிள்ளை அவர்கள், புதுக்கோட்டை ஸ்ரீ தட்சிணாமூர்த்தி பிள்ளை அவர்கள், உமையாள்புரம் கடம் ஸ்ரீ சுந்தரமையர் அவர்கள்—இப் படிப் பலர்.

ஸ்ரீ சோமசுந்தரம் செட்டியாருக்கு அரியக்குடி ஸ்ரீ திருவேங்கடத்தையங்காரிடம் விசேஷ அன்பும் மரியாதை யும் பக்தியும் உண்டு. எந்தக் காரியமானாலும் அவரை முன்னிட்டுக் கொண்டே செய்யும் பழக்கத்தை உடையவர்.

ஆகவே இந்தக் கல்யாணத்திலும் அவருக்கு 'அக்கிர தாம் பூலம்' உண்டு. அவரும் வந்திருந்தார்.

காதுங்காதும் வைத்தாற்போல் அரை நாள் கல்யாணம், ஒரு நாள் கல்யாணம் செய்யும் வழக்கம் அந்த நாளில் இல்லை. ஏழைமையில் உள்ளவர்களானாலும் முன்னும் பின்னும் சேர்த்து மொத்தம் ஆறு நாள் வைபவமாகத் தான் நடத்துவார்கள். பிரமுகர்கள் வீட்டுக் கல்யாணங் களோ முன்னால் ஒரு வாரம், நடுவே ஒரு வாரம், பின்னால் ஒரு வாரம் என்று மூன்று வார காலம் ஓரேயடியாகக் கோலாகலப்படும். மணமக்கள், அவர்கள் பெற்றோர், மற்றும் உள்ள சுற்றத்தார், நட்பினர் அனைவரும் இந்த மூன்று வார காலத்துக்கு வேறு ஒரு நூதனமான, ஆனந்த மயமான உலகில் புகுந்து சஞ்சரித்துக்கொண்டிருப்பது போன்ற உணர்விலே கட்டுண்டு மயங்கியிருப்பர். ஏற்பாடு களும், சூழ்நிலையும், சம்பிரதாயச் சடங்கங்களும் உள்ளத்தை அப்படி மாற்றிவிடும். கல்யாணம் முடிந்து பல நாட்கள் ஆன பிறகே சிறுகச் சிறுக அந்தப் பிரமை தெளியும்.

இப்படி விபவமாக நடைபெறுங் கல்யாணங்களிலே ஏனைய ஏற்பாடுகளின் சிறப்பு ஒருபுறம் இருக்க, உணவு விருந்து, இசை விருந்து இவற்றின் சிறப்பை எவ்வளவு புகழ்ந்தாலும் தகும். இரு விருந்துகளும் காலம் பாராமல் நடைபெற்றுக் கொண்டே இருக்கும்.

'ரேட்டு' என்கிற பேச்சோ, இன்னார்தான் கச்சேரி என்ற வரையறையோ கிடையாது. கலைவல்லுநர்கள் அனை வரையும் பொருள் வல்லுநர்கள் அனைவருமே மதித்து முதல் மரியாதை செய்த காலமானதால் எல்லோரும் வருவர்; யார் வேண்டுமானாலும் கலை விருந்தளிப்பர்; எப் பொழுது வேண்டுமானாலும் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

தனிகர்கள் எடை போடாமல் சம்மான மளித்து மரியாதை செய்வர்.

கண்டனூர்க் கல்யாணத்திலே முதல் நாள் மாலே ஸ்ரீ பூச்சி ஐயங்காரின் கச்சேரிக்கு ஏற்பாடாகியிருந்தது. பக்க வாத்தியங்கள்: திருக்கோடிகாவல் ஸ்ரீ கிருஷ்ணையர் வயலின், கும்பகோணம் ஸ்ரீ அழகனம்பி பிள்ளை மிருதங்கம், புதுக் கோட்டை ஸ்ரீ தட்சிணாமூர்த்தி பிள்ளை கஞ்ஜரா, ஸ்ரீ சுந்தரமையர் கடம்.

ஸ்ரீ பூச்சி ஐயங்கார் உரிய காலத்தில் அங்கு விஜயம் செய்தார். வழக்கம்போல் ஸ்ரீ ராமானுஜ ஐயங்காரும் அவரோடு கூடவே சென்றிருந்தார். குருவோடு சேர்ந்து பாடினார். சபையோர் மெய்ம் மறந்த நிலேயில் கேட்டு அநுபவிக்கும்படி கச்சேரி வெகு சிறப்பாக அமைந்தது.

மறுநாள் காலேயில் இதே பக்க வாத்தியங்களுடன் கோனேரிராஜபுரம் ஸ்ரீ வைத்தியநாதையரின் கச்சேரி. காலே எட்டு மணிக்கு ஆரம்பம். பகல் பன்னிரண்டு மணி வரையில் நடைபெற்றது. ஸ்ரீ பூச்சி ஐயங்கார், ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார், ஸ்ரீ ராமானுஜ ஐயங்கார் முதலியோரும் மற்றுமுள்ள வித்துவான்களும் பிரமுகர்களும் சபையில் இருந்து கச்சேரியை ரசித்தார்கள்.

இப்போது ஸ்ரீ சோமசுந்தரம் செட்டியார் உள்ளத்திலே ஓர் ஆவல் எழுந்தது. ஸ்ரீ ராமானுஜ ஐயங்கார் ஸ்ரீ பூச்சி ஐயங்காரிடம் குருகுல வாசம் செய்வதை அவர் அறிவார். ஸ்ரீ திருவேங்கடத்தையங்காரிடம் மிக்க அன்பும் பக்தியும் உடைய தேவகோட்டை வாசிகளுக்கு, 'எப்போது நம் ஐயா அவர்களின் குழந்தையை மேடையிலே கச்சேரி செய்கிற முறையிலே காணப் போகிறோம்?' என்ற பேரவா இருந்ததையும் அவர் அறிந்திருந்தார். எனவே

மெல்ல ஸ்ரீ திருவேங்கடத்தையங்காரை அணுகினார்; தம் உள்ளத்து அவாவை வெளியிட்டார்.

ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார் புன்முறுவல் பூத்தார்: "உங்கள் அபிமானம் இன்று புதிதல்ல; உங்கள் ஆர்வத்தை அறிந்து நான் மிகவும் சந்தோஷப்படுகிறேன். ராமாநுஜம் என் பிள்ளை தான். என்றாலும் இப்போதைக்கு அவன்மீது எனக்கு எவ்வித உரிமையும் கிடையாது. அதிலும் முக்கியமாக அவன் சங்கீத சம்பந்தமாகத் துளியும் உரிமை இல்லை. எனக்கு மட்டும் அல்ல; அவனுக்கே அதில் உரிமை இல்லை. அந்த உரிமை முழுவதற்கும் பூரண அதிகாரி அதோ உட்கார்ந்திருக்கிறாரே, அவர் தாம்" என்று தொலைவிலே அமர்ந்திருந்த ஸ்ரீ பூச்சி ஐயங்காரைச் சுட்டிக் காட்டினார்.

ஸ்ரீ செட்டியார் அந்தத் திசையிலே நோக்கி விட்டுச் சற்று மௌனமாக இருந்தார்.

"ஏன்? நான் சொல்லுவது சரி என்று தோன்றுகிறதா உங்களுக்கு?....இல்லை...." என்று கேட்டு இழுத்தாற்போல் நிறுத்தினார் ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார்.

"சரி இல்லை என்று எப்படிக் கூறமுடியும்? நிறைகுடம் துளும்பாது என்பதை நிரூபிக்கிறது உங்கள் பேச்சு. அதுதான் முறை. நான் ராமநாதபுரம் ஐயங்கார் அவர்களை அணுகி என் விருப்பத்தைத் தெரிவிக்கட்டுமா?" என்று மிக விநயத்தோடு கேட்டார் ஸ்ரீ செட்டியார்.

"அது உங்கள் அபிப்பிராயம்; நான் அதற்கு யோசனை சொல்வதும் உசிதப் பிசகுதான்" என்று சிரித்துக் கொண்டே மழுப்பினாற்போல் ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார் பதில் சொல்லிவிட்டார்.

ஸ்ரீ செட்டியார் சற்றுநேரம் யோசித்தார். கோனேரிராஜபுரம் ஸ்ரீ வைத்தியநாதையர் கச்சேரி முடியும் தருணம் சமீபித்துக் கொண்டிருந்தது. அது முடிந்ததும் அவை

கலையாமல், தொடர்ச்சி கெடாமல் ஸ்ரீ ராமாநுஜ ஐயங்காரை மேடையிலே அமர்த்திவிட வேண்டும் என்று ஸ்ரீ செட்டியார் விரும்பினார். ஸ்ரீ பூச்சி ஐயங்காரைச் சமீபித்தார். சுருக்கமாகவும் பவ்வியமாகவும் தம் கருத்தை எடுத்துரைத்தார்.

ஸ்ரீ பூச்சி ஐயங்காரின் அகமும் முகமும் மலர்ந்தன. பின்னே அமர்ந்திருக்கும் சிஷ்யனை, லேசாகத் திரும்பிக் கடைக் கண்ணால் பார்த்தார். ஸ்ரீ செட்டியார் குருவினிடம் சொன்ன விஷயத்தைச் செவியேற்றிருந்த சிஷ்யர், குருவின் பார்வைக்கெதிரே தலைகுனிந்தார்.

"பேஷாகச் செய்கிறது. உங்களைப் போன்ற அபிமானிகளின் விருப்பத்தை நிறைவேற்றுவதற்கு இல்லாத கலை வேறு எதற்கு இருக்கிறது? சரியான இடம். சிறந்த சபை. தகப்பனார்தாம் பொறுப்பை என்னிடம் விட்டுவிட்டார் என்கிறீர்கள். நான் தடை சொல்ல என்ன இருக்கிறது? பையன் பேஷாகப் பாடட்டும்" என்றார் ஸ்ரீ பூச்சி ஐயங்கார்.

ஸ்ரீ செட்டியாருக்குப் பேரானந்தம். ஆனால்....'பக்க வாத்தியங்களுக்கு என்ன செய்வது?' என்ற கவலை உடனே அவரைப் பற்றிக் கொண்டது.

ஸ்ரீ ராமாநுஜ ஐயங்காருக்குச் சமதையாக இருந்து வாசிக்கத்தக்க இளம்பிராயமுடைய பக்க வாத்திய வித்துவான்கள் அப்போது அங்கே யாரும் இல்லை. முதிய பிராயம் உடைய வேறு வாத்திய வித்துவான்களும் இல்லைதான். திருக்கோடிகாவல் ஸ்ரீ கிருஷ்ணையரையோ, கும்பகோணம் ஸ்ரீ அழகனம்பி பிள்ளை, புதுக்கோட்டை ஸ்ரீ தட்சிணாமூர்த்தி பிள்ளை, உமையாள்புரம் ஸ்ரீ சுந்தரமையர் முதலியவர்களையோ ஸ்ரீ ராமாநுஜ ஐயங்காருக்கு வாசிக்

கும்படி கேட்பது முறையும் மரியாதையும் ஆகாது. மேலும் அவர்கள் அப்போதுதான் சுமார் நான்கு மணிநேரம் ஒரு பெரிய வித்துவானுக்கு வாசித்துக் களைத்திருந்தார்கள். என்ன செய்வது என்று புரியாமல் தவித்தார் செட்டியார். ஆனால் அடுத்த விநாடியிலேயே அந்தக் கவலை நீங்கி விட்டது.

மிக ரகசியமாகவே திட்டமான இந்தச் செய்தி எப்படியோ மேடை வரையில் எட்டிவிட்டது போலும்; ஸ்ரீ வைத்தியநாதையர் கச்சேரியை முடித்து எழுந்ததுமே பக்க வாத்தியம் வாசித்த பெரியோர்க்ள் ஸ்ரீ ராமாநுஜ ஐயங்கார் இருந்த திசையை நோக்கினர். தலையை அசைத்து, 'வா' என்று அழைத்தார்கள். மேடையிலே, அருகிலே கையால் தட்டி, 'இங்கே வந்து உட்கார்' என்று ஜாடை செய்தனர். ஸ்ரீ வைத்தியநாதையரும் மேடையிலிருந்து இறங்கிக்கொண்டே, "உம். எழுந்து வா அப்பா" என்றார். முன்னணியில் இருந்த மற்ற வித்துவான்களும் தொடர்ந்து ஊக்கமான சொற்களை உதிர்த்தனர். பந்தலில் சூழ்ந்திருந்த பெருந் திரளான ரசிகர்களும் இந்தப் புது நிலைமையைச் சுவைத்தனர். கச்சேரி செய்யவென்று முதல் முதலாக அப்போதுதான் மேடை ஏறும் ஓர் இளம் வித்துவானுடைய கச்சேரி அவ்வளவு பெரிய சபையில் அப்போது நடைபெறப் போகிறது என்பதில் அவர்கள் குதூகல முற்றனர்.

ஸ்ரீ ராமாநுஜ ஐயங்கார் குருவின் ஆக்ஞையை எதிர் பார்த்து அடக்கமாக அமர்ந்திருந்தார்; எழுந்திருக்கவில்லை. குரு அவரைப் புன்முறுவலுடன் ஏறிட்டுப் பார்த்தார். அந்தப் பார்வையிலே இருந்த குளிர்ச்சியும் அருட்சக்தியும் ஸ்ரீ ராமாநுஜ ஐயங்காரின் உள்ளத்தைத் தொட்டன.

"உம். போய் உட்கார்ந்து தைரியமாகப் பாடு. பயப்படாதே! மனசைத் தெளிவாக வைத்துக்கொள்" என்று ஸ்ரீ பூச்சி ஐயங்கார் உற்சாகப்படுத்தினர்.

ஸ்ரீ ராமாநுஜ ஐயங்கார் எழுந்து அப்படியே சாஷ்டாங்கமாகக் குருவை நமஸ்கரித்தார்.

" மகாராஜனாக இரு. சங்கீத தேவதை பக்கபலமாக இருந்து உனக்கு ஜயத்தை அளிக்கட்டும்" என்று குரு ஆசீர்வதித்தார்.

கண்களில் பெருகிய பாஷ்பத்தைத் துடைத்துக் கொண்டு ஸ்ரீ ராமாநுஜ ஐயங்கார். மேடையை நோக்கி மெல்ல நடந்தார். குருவோடு கூட எத்தனையோ தடவை ஏறி இறங்கிய மேடை, மணிக்கணக்கில் அமர்ந்து தம்பூரா மீட்டியபடி குருவோடு சேர்ந்து பாடிய மேடை அப்போது அவர் மனத்தில் சிறிது அச்சத்தையே விளைத்தது. மேடையிலே இருபுறமும் சிம்மமும் வியாக்கிரமும்போல ஸ்ரீ கிருஷ்ணையர், ஸ்ரீ அழகனம்பிபிள்ளை, ஸ்ரீ தட்சிணாமூர்த்தி பிள்ளை, ஸ்ரீ சுந்தரமையர் முதலியோர் கம்பீரமாக வீற்றிருந்தனர். அவர்கள் கனிந்த பார்வையுடன்தான் அவரை நோக்கித் தலையசைத்து வரவேற்றனர். ஆயினும் அவர்களைப் பார்த்த மாத்திரத்தில் அவர் உள்ளத்திலே தோன்றிய அச்சம் மேலும் வளர்ந்தது. சட்டென்று தலை கவிழ்ந்தார். மேடையை இரு கரங்களினாலும் தொட்டுக் கண்ணிலே ஒற்றிக் கொண்டார். உட்காருமுன் சபையை நோக்கி அஞ்சலி செய்தார். அந்தக் கூட்டம்! முன்னணியில் அமர்ந்திருந்த அந்தப் பெரிய வித்துவான்கள்!

அவர் உள்ளமும் உடலும் ஒருங்கே சிலிர்த்தன. மனநிலையை ஒருவாறு சமாளித்துக் கொண்டு மேடையின் மத்திய பாகத்திற்குச் சற்று உள்ளடங்கியே உட்கார்ந்தார். அதைக் கண்ட ஸ்ரீ கிருஷ்ணையர் வில்லைக் கீழே

வைத்தார். வலக்கரத்தால் ஸ்ரீ ராமானுஜ ஐயங்காரின் கையைப்பற்றி, "முன்னுக்கு வா" என்று இழுத்தார். உடனே சபையில் ஓர் ஆரவாரம் எழுந்தது. அது அடங்குவதற்குள் ஸ்ரீ ராமானுஜ ஐயங்காரின் மனத்திலே பாறையாய் உறைந்திருந்த பளுவில் பாதிக்குமேல் கரைந்து போயிற்று.

குரு செய்த நல்லாசியும் இதமாக அளித்த தைரிய மொழிகளும் அவர் நினைவில் எழுந்தன.

'குருமகானின் ஆசீர்வாத பலம் இருக்கிறபோது நமக்கென்ன பயம்? அவருடைய சந்நிதியிலேயே முதல் முதலாக மேடை ஏறிக் கச்சேரி செய்கிற பாக்கியம் கிடைத்திருக்கிறபோது நாம் ஏன் இந்தச் சபையைக் கண்டு கலங்க வேண்டும்? அப்படிப்பட்ட கலக்கத்தினால் அபஸ்வரமாக ஏதாவது உளறிக்கொட்டி அசடு வழிந்து குருவின் கியாதிக்கு இழுக்குத் தேடிவைக்கக் கூடாது. நாம் அளிக்கும் குருதட்சிணை அபகீர்த்தியாக இருக்கக் கூடாது. இங்கிருக்கும் பெரியோர் அனைவரும் நமக்கு மிகவும் வேண்டியவர்கள் தாமே? நம்மிடம் வற்றாத அன்பு உடையவர்கள் தாமே? இவர்கள் முன் பாட அச்சம் என்ன, தியக்கம் என்ன? இத்தனை காலமும் குருகுலவாசம் செய்து முறையாய் இசை பயின்றது சபைக் கோழையாகி அவப்பெயர் எடுக்கத்தானா? நன்றாகப் பாடி நல்ல பெயர் எடுக்கவே வேண்டும்'—

இப்படி யெல்லாம் மனத்தை உறுதிப் படுத்திக்கொண்டு ஸ்ரீ ராமானுஜ ஐயங்கார் மற்றும் ஒரு முறை மானசிகமாகக் குருநாதரை வணங்கினார். மெல்லத் தம் சாரீரத்தை ஒலிக்கச் செய்து சுருதியோடு ஒன்றினார்.

என்ன பாடுவது என்ற பிரச்னை எழுந்தது. குருவை ஸ்மரித்தபோது அவர் அடிக்கடி பக்தி பூர்வமாகப் பாடும்

ஸ்ரீ தியாகராஜ கிருதியான 'விடலநு கோதண்டபாணி' என்ற கீர்த்தனை நினைவில் வந்தது. அதைப் பாட எண்ணி அதன் ராகமான தோடியை இசைக்கலானார்.

உடனே ஸ்ரீ கிருஷ்ணையர், "பலே! பலே! அப்படி! பிடி, பிடி; 'ரிகாரிஸ' என்று பிடி" என்று ஊக்கியபடி அதிக உற்சாகத்துடன் தம் வாத்தியத்தை இயக்கி இழை யோட்டம் கொடுத்தார். அவ்வளவுதான்; அதற்குமேல் ஸ்ரீ ராமானுஜ ஐயங்கார் தம்மை மறந்தார்; இசையிலே கலந்தார்!

கச்சேரி ஆரம்பமாகிறபோது பன்னிரண்டு மணி. மிக விறுவிறுப்பாகவே நடைபெற்றுக் கொண்டிருந்தது. எல்லோரும் மிகக் குதூகலத்துடன், 'ஆகா' காரம் செய்து ரசித்துக் கொண்டிருந்தனர். ஸ்ரீ பூச்சி ஐயங்காருக்கு மட்டற்ற மகிழ்ச்சி. ஸ்ரீ திருவேங்கடத்தையங்காருக்கோ?

நேரம் ஆகிவிட்டது. பக்க வாத்திய வித்துவான்கள் நீண்ட நேரமாகவே வாசித்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரே முழுக்கிலே மண் எடுப்பதுபோல இளைஞர் ஸ்ரீ ராமானுஜ ஐயங்காரை அதிகச் சிரமத்திற்கு உள்ளாக்குவதும் சரியன்று; தயாராகியிருக்கும் விருந்து ஆறிவிடக்கூடாது. ஆகையால் பெரியவர்கள் முன்வந்து கச்சேரியை அத்துடன் நிறுத்தி வைத்தார்கள்.

ஸ்ரீ சோமசுந்தரம் செட்டியாருக்கு மட்டற்ற மனக் களிப்பு. தட்டிலே புத்தாடை, பழம், புஷ்பம், தாம்பூலம் முதலியவற்றுடன் ஐந்து சவரன்களை வைத்து ஸ்ரீ ராமானுஜ ஐயங்காருக்கு மரியாதை செய்தார். இளம் வித்துவான் அவற்றைப் பணிவோடு பெற்றுக் கொண்டார். சபைக்கு வணக்கஞ் செலுத்தினார். மேடையினின்று இறங்கினார். நேரே குருவினிடம் சென்றார். தாம் பெற்ற சம்மானத்தைத் தம் குருநாதரின் பாதகமலங்களில் அர்ப்பணித்தார்.

சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி எழுந்தார். பிறகு தந்தை, தமையன், மற்றும் உள்ள பெரியோர்கள் எல்லாரையும் வணங்கினர்.

சிஷ்யனின் திறமையை முதல் முதலாக நேரில் கண்ட குருவுக்குப் பெருமையும் மகிழ்ச்சியும் தாங்கவில்லை. ரசிகர்கள் பலர் அவரைச் சூழ்ந்துகொண்டு அவரது போதனு சக்தியையும் சிஷ்யனின் கிராஹ்ய சக்தியையும் புகழ்ந்தார்கள்.

அதே சமயத்தில் ஸ்ரீ திருவேங்கடத்தையங்காரையும் பலர் பாராட்டிப் பேசினர்கள். "நீங்கள் பிள்ளையைப் பெற்ற பேற்றை இன்று அடைந்தீர்கள்" என்றார்கள். "எல்லாம் தெய்வத்தின் அருளும், அவனுடைய குருநாதரின் ஆசியும், பெரியோர் அநுக்கிரகமுந்தான்" என்று மகிழ்ச்சியுடனும் அடக்கத்துடனும் பதிலிறுத்தார் அப் பெரியார்.

தோழமையும் சம வயசும் உடைய வாலிபர்கள் பலர் ஸ்ரீ ராமாநுஜ ஐயங்காரைச் சூழ்ந்து கொண்டார்கள். அவர் திறமையைப் பாராட்டிப் பேசிக் கை குலுக்கியும் முதுகில் தட்டியும் ஆலிங்கனம் செய்தும் ஆரவாரம் செய்தார்கள்.

கச்சேரி முடிவடைந்து ஒரு மணி நேரம் வரையில் பந்தலில் கூட்டம் கலையவில்லை; யாரும் உணவிலே கருத்துக் கொண்டு உட்புறம் செல்லவும் இல்லை; திரும்பத் திரும்ப, கூடிக்கூடி இதைப்பற்றியே பேசி மகிழ்ந்தார்கள். அத்தனை பெரிய திருமண வைபவத்திலே ஸ்ரீ ராமாநுஜ ஐயங்காரின் அரங்கேற்றம் ஒரு பெரிய விழாவாக அமைந்துவிட்டது. யாரும் முன்கூட்டித் திட்டமிட்டுச் செய்யாத காரியம்; ஆனல் முன் கூட்டித் திட்டமிட்டுச் செய்வதைவிடச் சிறப்பாக அமைந்துவிட்டது.

உணவு முடிந்து எல்லாரும் சிரமபரிகாரம் செய்து கொண்டிருந்தபோது ஸ்ரீ பூச்சி ஐயங்கார் சிஷ்யனைக் கூப்பிட்டு அனுப்பினார்.

"அப்பா, ராமாநுஜம், இன்று நீ மிகவும் நன்றாகவே பாடினாய்; நான் எதிர்பார்த்த அளவுக்கு மேலாகவே பாடினாய். ஆரம்ப முதல் முடிவு வரையில் இருந்து கேட்டேன். எனக்குப் பரம திருப்தி. இன்னமும் நீ குருகுல வாசத்திலே ஈடுபட்டிருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை. இனிமேல் நீ சுதந்தரத்தோடு கச்சேரி செய்யத் தொடங்கலாம். இதைத் தெரிவிக்கத்தான் உன்னை அழைத்தேன்.

"கர்வம் என்பது தன்னாலே வந்து சேரும் ஒரு பீடை. முக்கியமாகக் கலைஞர்களிடந்தான் அது அதிகமாக உறவு பூணும். சிறிது காலத்திற்குப் பின் உன்னையும் அது அண்டலாம். எத்தகைய உயர்ந்த நிலையை எய்தினாலும் நீ கர்வத்திற்கு இடம் கொடாதே. பெரியோர்களிடம் பவ்வியமாக நடந்துகொள்வது சிரேயஸை வளர்க்கும். பெரியோர் மனங்குளிர்ந்தால் அது நம்மை மட்டும் அல்ல; நம் சந்ததிகளையும் காக்கும்.

"விவாதம் ஒரு வீண் வேலை. அதிலே புத்தியைச் செலுத்தினால் நேரான பாதை தவறிவிடும். சங்கீத தேவதையைத் திரிகரண சுத்தியாய் உபாசிப்பவன், சுருதி, லயம் பிசகாமல், சாகித்தியத்தில் சோரம் இல்லாமல் பாடுபவன், காலமெல்லாம் குன்றின் மேல் இட்ட தீபமாகப் பிரகாசிப்பான். நீ நல்ல முறையிலே கலையை உபாசித்து மேன்மையுடன் வாழ்வாயாக! கடவுள் பக்கத்துணையிருந்து உனக்கு எல்லா நலங்களையும் அருள்வாராக!"

இப்படி ஆசீர்வதித்த குருவின் நயனங்களிலும் அதைச் செவியேற்றபடி தலைவணங்கி நின்றிருந்த சிஷ்ய

னின் கண்களிலும் பாஷ்பம் பெருகிற்று; இருவர் உடலிலும் புளகம் போர்த்தது; உள்ளங்கள் சிலிர்த்துச் சிறகடித்தன. உணர்ச்சி வசமான சிஷ்யர் நெடுஞ்சாண் கிடையாகக் குருவின் பாதங்களில் பணிந்து அவற்றைத் தொட்டுக் கண்களில் ஒற்றிக்கொண்டார்.

# 9. செவியாரல்

**(1913—1918)**

குருகுல வாசத்தை முடித்துக் கொண்டு ஊர் திரும்பிய ஸ்ரீ ராமாநுஜ ஐயங்கார் பெற்றோர், உடன் பிறந்தோர் முதலியவர்களோடு வசித்துவந்தார். இல்லற வாழ்க்கையை மேற்கொண்டாலும் அவர் மனம் கலையை அபிவிருத்தி செய்யும் வழிகளிலேயே பெரும்பாலும் ஈடுபட்டிருந்தது.

ஸ்ரீ அப்புஸ்வாமி ஐயங்காரின் மறைவுக்குப் பின் வேறு எவ்விதக் குறைபாடும் நேராதிருந்த அந்தக் குடும்பத்தில் அப்பொழுது மீளவும் துயரம் நிழலாட்டம் காட்டத் தொடங்கிற்று. ஸ்ரீ ஐயங்காரின் சுவீகாரத் தாய்க்குச் சுகவீனம் ஏற்பட்டது; வரவர அதிகரித்தது.

ஸ்ரீ ஐயங்காருக்குத் தம் பெற்றோரிடமும் மற்றோரிடமும்கூட இல்லாத ஒரு சலுகை சுவீகாரத் தாயிடம் உண்டு. அந்த அம்மாளும் அதற்கு ஏற்ற முறையிலே அவரை மைத்துனர் என்று எண்ணுமல் தாம் ஈன்ற செல்வமாகவே பாவித்து அளவுகடந்த அன்பைப் பொழிந்து வந்தார். அத்தகைய அபிமானத் தாயின் உடல் நிலை ஸ்ரீ ஐயங்காரின் உள்ளத்தை அமைதி இழந்து தவிக்கச் செய்தது.

அந்த அம்மாள் பல நாள் நோயுற்றுப் படுக்கையில் கிடந்து சிரமப்படவில்லை. விரைவிலேயே தம்முடைய பதி

சென்ற வழியைப் பின்தொடர்ந்தார். ஸ்ரீ ஐயங்கார் தம் கடமைகளில் மிக முக்கியமான மற்ருெரு பகுதியையும் நிறைவேற்றினுர்.

சிறிது காலத்திற்குப் பின் மனம் தேறிய ஸ்ரீ ஐயங்கார் தம் கலை வளர்ச்சிக்காக, 'செவியாரல்' என்ற அம்சத்தில் முழுக் கவனத்தையும் செலுத்தலானுர்.

ஒருவர் இசைக் கலையிலே நன்கு தேர்ச்சி பெற்றுப் பலராலும் கொண்டாடப் பெறும் நிலையிலே பிரகாசிக்க, குருவை நாடி அவரிடம் பாடம் பெற்றுவிடுவது மட்டுமே போதாது. முறையான சாதகமும் ஓயாத உழைப்பும் வேண்டும். அவற்றுடன் முன்னேர்களின் இசையை நிரம்பக்கேட்க வேண்டும். அப்படிக் கேட்டுத் தெளியும் செயலையே 'செவியாரல்' என்பர்.

ஸ்ரீ ஐயங்காருக்கு மேற்குறித்த எந்த அம்சத்திலும் குறைவே இல்லை. ஸ்ரீ மலையப்பையரிடமும் ஸ்ரீ நரசிம்ம ஐயங்காரிடமும் இருந்த காலத்தில் முறை வழுவாது அபார சாதகம் செய்திருக்கிறுர். அவர் சாதகம் செய்கிற நேரம் என்று தனியாக அமைத்துக் கொண்டு மற்ற வேளைகளில் பொழுதை வீணடிப்பதில்லை. எந்நேரமும் இசைதான். அன்றுமட்டும் என்ன? இன்றும் அவர் அதே நிலையிலே தான் இருக்கிறுர்.

ஸ்ரீ பூச்சி ஐயங்காரிடம் சென்றபின் பாடம், சாதகம் இவற்ருேடு குருவைப் பின்பற்றி அடிக்கடி மேடைக் கச்சேரிகளில் பாடும் வாய்ப்பும் கிட்டிற்று. குருவோடு சென்று பல பெரிய வித்துவான்களின் சங்கீதத்தைக் கேட்கும் சந்தர்ப்பங்களும் கிட்டி வந்தன.

எடுத்த எடுப்பிலேயே, முன் அறிவிப்பு ஏதும் இன்றித் திடீர் என்று பெரிய சபையிலே பாடி, பெரிய பெரிய மேதைகளின் பாராட்டுக்களையும் ஆசிமொழிகளையும், குரு

நாதரின் அருளாசியையும் பெற்ற ஸ்ரீ ஐயங்கார் அதன் பின்னர் மேற்கொண்ட பெரும் முயற்சியினால் பல இடங்களுக்குச் சென்று பல பெரிய வித்துவான்களின் இசையைக் கேட்டுக் கேள்வி ஞானத்தை நன்கு வளர்த்துக் கொள்ளத் தலைப்பட்டார். அதன் மூலம் நல்ல பரிபக்குவம் பெற்றார்.

கர்நாடக சங்கீத உலகில், தெய்வத் தன்மை பொருந்திய சங்கீதக் கலையில் பலர் மகாமேதைகளாகத் திகழ்ந்த காலம் அது. அவர்களில் ஒவ்வொருவரும் இசைக்கலையின் ஒவ்வோர் அம்சத்திலும், ஒரு சிலர் ஒரு சில அம்சங்களிலும் தனித்தனியே விசேஷத் தகுதி பெற்றிருந்தார்கள். ஸ்ரீ ஐயங்கார் யார் யாரிடம் எந்த எந்த அம்சம் சிறப்பு என்று கண்டாரோ அவற்றையெல்லாம் மிக ஜாக்கிரதையாகக் கிரகித்துக் கொண்டார். பின்னர் அந்த உயர்வம்சங்களைப்பற்றி மிகத் தெளிவாகப் பரிசீலனை செய்யலானார். ஒவ்வொரு சிறப்பம்சத்தின் பேரிலும் தம் சொந்த மனோதர்மத்தை இணைத்தார். தீவிரமாகச் சிந்தித்துச் சிந்தித்து அதைச் செய்யலானார். இயற்கை ஞானத்தோடு கேள்வி ஞானமும் நிரம்பப் பெற்ற அவர் தமது கூர்மையான புத்தி விசேஷத்தால் எவருடைய தனி வழியையும் முழுவதும் அப்படியே பின்பற்றவில்லை. அரும்பாடுபட்டுத் தமக்கென ஒரு பாணியை மெல்ல மெல்ல உருவப்படுத்தலானார். அந்த வழியிலே பெரிய வித்துவான்கள் ஒவ்வொருவரின் சிறப்பம்சங்களும் கலந்து வரும்; ஆனால், 'இன்னார் நடை' என்று திட்டமிட்டுச் சொல்லமுடியாது. 'ஒரிஜினலிடி' என்பது ஒவ்வொரு கலைக்கும் இன்றியமையாதது. ஸ்ரீ ஐயங்காரின் அரும் பிரயாசையினால் அவருடைய இசையிலே அத்தகைய உன்னதமான 'ஒரிஜினலிடி' சிறுகச் சிறுக உருவாகிக்கொண்டே வந்தது.

அந் நிலையிலே அங்கங்கே உள்ள அறிந்தவர்கள் மூலம் அவருக்குக் கச்சேரிகள் வரத் தொடங்கின. 'இம்மட்டும் சந்தர்ப்பம் கிடைத்ததே' என்று அவர் உள்ளம் பரபரக்க வில்லை. வருவாய் இல்லாத கச்சேரி என்றால் அதை உதாசீனம் செய்யவும் இல்லை. கிடைக்கிற சந்தர்ப்பங்களை நன்கு பயன்படுத்திக் கொண்டு, பரிமளிக்கிற வகையிலே மிகத் திறம்படப் பாடி, நல்ல பெயர் எடுப்பதிலேயே குறிக் கோள் உடையவராக இருந்தார். அத்துடன் மேலும் மேலும் மேதைகளின் இசையைக் கேட்பதிலே அதிக ஆர்வம் உடையவராகவும் இருந்தார். இசையில் முன்னேற, 'செவியாரல்' எவ்வளவு முக்கியமான அம்சம் என்பதை அநுபவ பூர்வம் அறிந்தவர் ஸ்ரீ ஐயங்கார்.

## 10. சந்நிதி மகிமை

(1918)

திருவையாறு என்ற புண்ணியத் தலத்திலே ஆண்டு தோறும் அதிவிமரிசையாய் நடைபெற்று வருவது ஸ்ரீ தியாகப் பிரம்ம உற்சவம். ஸ்ரீ ஐயங்கார் 1918-இல் அங்கு சென்றிருந்தார். அப்போது வயலின் வித்துவான் **மலைக் கோட்டை ஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளை** அவர்கள் தலைமை யிலே அந்த உற்சவம் நடைபெற்று வந்தது. ஸ்ரீ ஐயங் காருக்கு அங்கே பாடவேண்டும் என்ற ஆசை. ஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளைக்கும் அவரைப் பாடச் செய்ய வேண்டும் என்கிற ஆசை.

ஸ்ரீ ஐயங்கார் முன்னுக்கு வரவேண்டிய இளம் வித்து வானாக அப்போது இருந்தார். அதனால் அவருடைய ஆசைக்குப் பொருள் உண்டு. ஆனால் அவரை அங்கே பாடச் செய்யவேண்டும் என்ற ஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளை யின் ஆசைக்குப் பொருள் என்ன?

அதிலேயும் முக்கியமான ஒரு பொருள் இருக்கத்தான் செய்தது. அடிநாள் முதல் அவரை நன்ருக அறிந்தவர் களுக்கு அதுவும் நன்ருகத் தெரியும்.

அன்பிலும் பண்பிலும், அறிவிலும் ஆற்றலிலும், அநுபவத்திலும் கலையம்சங்களிலும் சிறந்த பெரியோர் களிடம் மலிந்துகிடக்கும் உந்நதமான இயல்புகள் பல. அவற்றில், எங்கேனும் ஒரு சிறு பொறி கண்ணிலே பட்டாலும் உடனே அதை விசிறிகொண்டு வீசி வளர்த்துப் பெரிதாக்கிப் பிரகாசிக்கச் செய்து நல்ல முறையிலே பயன்படுத்துவதும் ஒன்ருகும்.

முந்தின தலை முறைக்கும் இன்றைத் தலைமுறைக்கும் இடையே வாழ்ந்து வந்த புண்ணிய புருஷர்களான மலைக் கோட்டை ஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளை, மிருதங்க வித்துவான் கள் புதுக்கோட்டை **ஸ்ரீ மான்பூண்டியா பிள்ளை,** புதுக் கோட்டை ஸ்ரீ தட்சிணுமூர்த்தி பிள்ளை, கும்பகோணம் ஸ்ரீ அழகனம்பி பிள்ளை ஆகியோர் அந்த அருஞ்செயலைத் தொடர்ந்து ஆற்றி வந்திருக்கிருர்கள். அவர்கள் முந்தின தலைமுறையிலே பிரகாசித்த அநேகம் வித்துவான்களுக்கு வாசித்துப் புகழ் பெற்றவர்கள்.

வாழையடி வாழையாகச் செழுமையுடன் வளர்ந்துவர வேண்டிய கர்நாடக சங்கீதக் கலையினுடைய அடுத்த தலை முறையின் நிலை என்ன என்பதைப்பற்றி ஒவ்வொரு கண மும் அவர்கள் சிந்தித்தபடி இருந்தனர். அதனுல் எங்காவது யாராவது ஓர் இளம் வித்துவான் நல்ல சாரீரத் தோடும் தெளிந்த ஞானத்தோடும் சுருதி லய சுத்தமாகவும் வெகு நன்ருகப் பாடுகிருர் என்று கேள்விப்பட்டால் உடனே அவர்கள் உள்ளமும் அந்த இளம் வித்துவானை நாடும். சந்தர்ப்பம் கிடைத்தபோது நேரிலே இசை யைக்கேட்டு ரசித்து, 'முன்னுக்கு வந்து பிரகாசிக்கக்கூடிய

புள்ளிதான்' என்பது உறுதியானால் தங்கள் மேம்பாடுகளைச் சிறிதும் பொருட்படுத்தாமல், அவசியமானால் வலுவிலே கூட அறிமுகங் கொண்டு இன் முகங் காட்டி இனிய மொழி பேசி உற்சாகமூட்டி ஊக்கித் தக்க ஆதரவைத் தேடி அளிக்கத் தவறவே மாட்டார்கள். அந்த முறையிலே அவர்களால் முன்னுக்கு வந்தவர்கள் அநேகர்.

ஸ்ரீ ஐயங்கார் நல்ல சாரீரத்தையும் சிறந்த ஞானத்தையும் முன்னுக்கு வருவதில் அளவற்ற ஆர்வத்தையும் அதற்கு ஏற்ற உழைப்பையும் உடையவர் என்றும் மிக நன்றாகப் பாடிவருகிறார் என்றும் அவர்கள் கேள்விப்பட்டிருந்தார்கள். வழக்கப்படி தங்கள் பங்குக்குரிய பணியைச் செய்யக் காத்திருந்தார்கள். திருவையாற்று உற்சவம் அதற்குரிய நல்ல சந்தர்ப்பத்தை வெகு அழகாகக் கூட்டி வைத்தது. அதன் விளைவுதான் ஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளையின் ஆசை.

எத்தனையோ இளம் வித்துவான்கள் பல வருஷ காலமாக இடம் கிடைக்கவில்லையே என்று ஏங்கிக் கொண்டிருக்கிற நிலையில் ஸ்ரீ ஐயங்காரின் பெயர் நிகழ்ச்சி நிரலில் இடம் பெற்றது. அவருக்கு அளவற்ற குதூகலம்.

உரிய நேரத்தில் ஸ்ரீ ஐயங்கார் பயபக்தி விநயத்துடன் மேடைமீது வந்து அமர்ந்தார். மலைக்கோட்டை ஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளை வயலின், கும்பகோணம் ஸ்ரீ அழகநம்பி பிள்ளை மிருதங்கம், புதுக்கோட்டை ஸ்ரீ தட்சிணமூர்த்தி பிள்ளை கஞ்சிரா. பெரிய பக்க வாத்திய கோஷ்டி!

ஜம்மென்று கச்சேரி ஆரம்பம் ஆயிற்று. தம் குருநாதரை மனத்திலே நினைத்து வணங்கிப் பக்தியுடன் பாடத் தொடங்கினார் ஸ்ரீ ஐயங்கார். எல்லோரும் ஒரு முகமாகப் புகழ்ந்து கொண்டாடத் தக்க முறையிலே, கலையம்சம் துலங்க, கேட்க மிக இனிமையாகப் பாடிக்

கொண்டே போனர்· பக்கவாத்திய வித்துவான்கள் பாடகரின் ஆற்றலை அங்கங்கே பளிச் பளிச்சென்று சோபிக்கச் செய்தபடி மிகவும் இங்கிதமாக வாசித்துக் கச்சேரியைப் போஷித்துச் சிறக்கச் செய்தார்கள்.

ஸ்ரீ தியாகோற்சவத்தில் பாடச் சந்தர்ப்பம் கிடைப்பதே அரிது; இளம் பாடகர்களுக்கு அச்சந்தர்ப்பம் அரிதிலும் அரிது. ஸ்ரீ ஐயங்கார் அதிருஷ்டசாலி. அவருக்கு நீண்ட நேரமே கிடைத்தது. முதல் தடவையிலேயே மிக நல்ல பெயர் எடுத்தார். அன்று முதலே அவருக்கு யோக காலம் தொடங்கிவிட்டது. அது அந்தச் சந்நிதியின் மகிமைதான் என்பது ஸ்ரீ ஐயங்காரின் அசைக்க முடியாத நம்பிக்கை!

'சந்நிதி மகிமை!'

ஆம். அந்தச் சந்நிதிக்கு ஒரு மகிமை இருக்கத்தான் செய்தது. நாதோபாசகர்கள் அங்கே இசைக் கைங்கரியம் செய்வதன் மூலம் அருளைப் பெற்றுத்தான் வந்தார்கள். ஆகவே ஸ்ரீ ஐயங்காரின் அபிப்பிராயத்தில் தவறு இல்லை. அந்தச் சந்நிதிக்கு அத்தகைய மகிமை எப்படி வந்தது?

குழந்தையும் தெய்வமும் கொண்டாடும் இடத்திலே தான் சிறப்புடன் விளங்க முடியும். மூர்த்தியின் சக்தியை அதன் கீர்த்திதான் பிரகாசிக்கச் செய்கிறது. அந்தக் கீர்த்தி, பலர் கொண்டாடுவதன் மூலம் ஏற்படுகிறது. திருவையாற்றிலே ஸ்ரீ தியாகப் பிரம்மத்தின் சந்நிதி மகிமையும் அந்த முறையிலே தோன்றி வளர்ந்ததுதான்.

நாதோபாசனையின் மூலம் பக்தி வழிபாட்டை உலகில் பரவச் செய்யவென்றே தோன்றி வாழ்ந்து மறைந்த மகான் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் அவர்கள். பக்தியே வாழ்க்கை லட்சியமாக வாழ்ந்த அவர் இயற்றி அருளிய கிருதிகள் எண்ணில் அடங்காதவை; அவற்றின் சுவை

சொல்லில் அடங்காதது. கர்நாடக சங்கீதக் கலையில் ஈடு பாடு கொண்டவர்களுக்கு அவை அரிய வரப்பிரசாதம்!

இத்தகைய அவதார புருஷரை எவராலாவது மறக்க இயலுமா? ஆகவே அவர் சமாதி பெற்ற புண்ணியத் தல மாகிய திருவையாற்றிலே ஸ்ரீ தியாகப் பிரம்மத்தின் சிஷ்ய பரம்பரையினர் பக்தி சிரத்தையுடன் சற்றும் ஆடம்பர மின்றி ஆராதனைகளை நடத்தி வந்தது மிகவும் போற்றத் தக்கது. அந்த வரிசையில், ஸ்ரீமான்கள் கிருஷ்ண பாக வதர், சுந்தர பாகவதர், தில்லைஸ்தானம் (திருநெய்த் தானம்) நரசிம்ம பாகவதர், பஞ்சு பாகவதர், சூலமங்க லம் வைத்தியநாத பாகவதர், லக்ஷ்மணாச்சாரியார், வீணை (மாயூரம்) வைத்தியநாதையர், சபேசையர், மைலாட்டூர்க் கிருஷ்ணையர், தஞ்சாவூர்ப் பஞ்சாபகேச பாகவதர், மாங்குடி சிதம்பர பாகவதர், அரிகேச நல்லூர் முத்தையா பாகவதர், சூலமங்கலம் சௌந்தர ராஜ பாகவதர்—இப்படிப் பலர்.

இதே போல மற்றொரு வரிசையும் உண்டு. அந்த வரிசையின் மூல புருஷர் ஸ்ரீ தியாகராஜ சுவாமிகளின் தௌஹித்திரர் (பெண்வழிப் பெயரர்) திருவையாறு ஸ்ரீ ராமுடு பாகவதர். அடுத்து, ஸ்ரீமான்கள் திருப்பழனம் பஞ்சாபகேச சாஸ்திரிகள், கோனேரிராஜபுரம் வைத்தியநாதையர், மதுரை பஷ்பவனம் ஐயர், மலைக் கோட்டை கோவிந்தசாமி பிள்ளை, காரைக்குடி வீணை சகோதரர்கள், கும்பகோணம் அழகநம்பி பிள்ளை, பங்களூர் ஸ்ரீமதி நாகரத்தினம்மாள், ஸ்ரீமதி பணி பாய் முதலிய பலர்.

நாளடைவிலே பக்தர்களின் பெரு முயற்சியினால் சமாதி ஸ்தலத்திலே மண்டபம் ஒன்று எழும்பிற்று. சுருக்கமான முறையிலே பக்தி பூர்வமாக வழிபாடுகளைச்

செய்து வந்தார்கள். சிறிது காலத்திற்குப் பின் இன்னும் சிலரும் சேர்ந்து சிறிது பொருள் சேர்த்துச் செலவிட்டு ஆண்டுதோறும் ஸ்ரீமத் ஐயர் அவர்கள் சித்தி அடைந்த நாளிலே தக்க முறையிலே ஆராதனை வழிபாடுகளை உற்சவ உருவத்தில் மிக்க பக்தி சிரத்தையுடன் நடத்தி வரலானார்கள். கைங்கரியம் சிறுகச் சிறுக வலுவான முறையிலே மேம்பாடு அடைந்து வந்தது.

அப்போது பிரபல சத்கதா காலட்சேப விற்பன்னராகப் புகழ்வானில் திகழ்ந்து கொண்டிருந்த திருப்பழனம் ஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகள் அந்த உற்சவத்திலே அதிகமான ஈடுபாடு கொள்ளலானார். அவர் கும்பகோணத்திலே வாசம் செய்து வந்தபடியால் பலர் அவரைக் கும்பகோணம் ஸ்ரீ பஞ்சாபகேச பாகவதர் என்றும் குறிப்பிடுவதுண்டு. அவருடைய ஈடுபாட்டினால் ஸ்ரீ தியாகப் பிரம்ம ஆராதனை வழிபாடு நாட்டின் மிக முக்கியமான ஒரு விழாவாக அனைவரும் கருதக்கூடிய அளவுக்குப் புநித வைபவமாக ஆயிற்று. அவருடைய செயல் புரியும் திறன் அத்தனை விதரணையானது.

சிறிது காலத்திற்குப் பின் சாஸ்திரிகள் அந்த உற்சவப் பொறுப்பிலிருந்து விலகிக்கொண்டார். உடனே மகா வித்துவான் கோனேரிராஜபுரம் ஸ்ரீ வைத்தியநாதையர் அந்தப் பொறுப்பை மேற்கொண்டார். ஆனால் அவரும் நீண்டகாலம் அதில் ஈடுபட்டிருக்கவில்லை. சௌகரியக் குறைவினால் இரண்டு வருஷத்திற்குப் பின் விலகிக் கொண்டார். பின்னர்ப் பிரபல வயலின் வித்துவான் மலைக்கோட்டை ஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளை அச்செயலை மேற்கொண்டார்.

அவர் பொறுப்பேற்ற நாள் முதல் உற்சவத்தின் தரம் மேலும் உயர்ந்துகொண்டே வந்தது. அந்த முறையில்

திட்டங்களை அமைத்து அதி விதரணையாகச் செயலாற்றி வந்தார் அவர். அதற்கேற்ப இசைக் கலைஞர்கள், பிரமுகர்கள் முதலியோரின் ஒத்துழைப்பும் அவருக்கு நிரம்பக் கிடைத்து வந்தது.

கர்நாடக சங்கீதக் கலையிலே தொடர்புடைய எவரும்—தவிர்க்க முடியாத சந்தர்ப்பம் ஏற்பட்டாலன்றி—ஸ்ரீ தியாகப் பிரம்ம விழாவிலே கலந்துகொள்வதற்காகத் திருவையாறு செல்லத் தவறவே மாட்டார்கள். பெரிய பெரிய வித்துவான்கள் முதல் நேற்று இசை பயில ஆரம்பித்தவர் உள்பட எல்லாரும் அங்கே கூடுவார்கள். பக்தி நிறைந்த உள்ளத்தினராய் விழா நிகழ்ச்சிகளிலே பங்கு கொள்வார்கள்.

வித்துவான்கள், ரசிகர்கள் அனைவரும் ஒரே சந்தர்ப்பத்திலே, ஓர் இடத்திலே ஒருங்கு கூடவும், வேறு நினைவுகளை மறந்து நாதப் பிரம்மத்தையே வழிபடவும், ஒருவரை ஒருவர் அறிமுகம் கொள்ளவும் அறியதொரு வாய்ப்பை அளிப்பது அந்த உற்சவம். அதுமட்டுமா?

கலை உலகில் தொன்று தொட்டு இருந்து வரும் அநேகம் சிறப்புக்களுக்கிடையே சில குறைபாடுகளும் உண்டு. எழுத்துலகில் ஒருவர் சிருஷ்டிகளை மற்றவர் படிக்கும் வழக்கம் குறைவு. ஆடரங்கிலே ஒருவரின் ஆட்டத்தை மற்றோர் ஆட்டக் கலைஞர் காண்பது குறைவு. அதே போலப் பாடரங்கிலுங்கூட அக்குறை சிறிது உண்டு. ஸ்ரீ தியாகோற்சவம் அந்தக் குறையையும் தவிர்த்து வைக்கும் ஒரு பெரும் வாய்ப்பு.

எங்காவது ஏதாவது வைபவம் நடைபெற்றாலே அதில் இசையரங்கு இடம் பெறுகிறது என்கிற நிலையில் இசையே மூச்சாக, நாதோபாசனையே வாழ்க்கையாக வாழ்ந்து மறைந்த மகா புருஷரின் திருநாளிலே—சங்கீத

வித்துவான்களே கூடிக் கொண்டாடுகிற வைபவத்திலே— இசைக்குப் பஞ்சம் ஏது? விழாவுக்காக வந்திருக்கிற பக்த கோடிகளுக்கு உணவு, சிற்றுண்டி முதலிய ஏனைய நிகழ்ச்சிகள் பாட்டுக்கு அந்த அந்த இடத்திலே, அந்த அந்தக் காலத்திலே நிகழ்ந்துகொண்டே இருக்கும்; சந்நிதியிலே காலை மாலை, இரவு பகல் எந்த நேரமும் இசை முழக்கம் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

அங்கே பாடி அருள் பெறுவது மிகவும் சிரேயஸ்கரம் என்ற கொள்கை எல்லோர் உள்ளத்திலும் ஊறிப்போயிருந்தது. அதனால் சமாதியின் சந்நிதியிலே ஒரு பாட்டாவது பாடவேண்டும் என்று ஒவ்வொருவரும் முந்துவர். பெரிய பெரிய வித்துவான்களுக்கே இடமும் காலமும் கிடைப்பது அரிது. இளம் வித்துவான்களுக்கு?

அப்படி இடம் கிடைத்தாலும் சிறந்த முறையிலே பாடி அனைவரின் பாராட்டையும் பெற்று விடுவதென்பது எளிதான செயல் அன்று. குறித்த கால அளவு முழுவதும் பாடாமல் சந்தர்ப்பத்தை இழந்து விடுகிற துர்ப்பாக்கிய நிலை பலருக்கு ஏற்படுவதும் உண்டு; வேறு சிலருக்குக் குறித்த கால அளவுக்குமேல் காலவரை நீடிக்கும் பாக்கியம் கிட்டுவதும் உண்டு. இரண்டும் அங்கே பல இடங்களிலிருந்தும் வந்து குழுமியிருக்கிற ரசிக மேதைகளின் 'கையிலே' தான் இருக்கின்றன.

ஆம். 'கையிலே' என்பதற்கு இங்கே நேரான பொருளே உண்டு. திருவையாற்றுத் தியாகப் பிரம்மோற்சவத்திலே கூடும் ரசிகர்கள் மிக மிகப் 'பொல்லாதவர்கள்.' இசைக் கலை சம்பந்தப்பட்ட வரையில் அவர்கள் உள்ளத்திலே தயை, தாட்சிண்ணியம் என்பன மருந்துக்கும் கிடையா. அதாவது அவர்கள் ரசிகத் தன்மையில் மிகத் தேர்ந்தவர்கள். உயர்ந்த சங்கீதத்தையே அடிக்கடி நிரம்பக்

கேட்டு அதிலேயே ஊறித் திளைத்தவர்கள். மட்டமான சங்கீதத்தைக் கேட்டுக் கொண்டிருக்கும் சகிப்புத் தன்மை சிறிதும் இல்லாதவர்கள்.

சபைகளில் கரகோஷம் ஒரு முக்கிய அம்சம். ரசனையின் உச்ச நிலையிலே தன்னையும் மறந்து பிறக்கும் செயல் அது. பேச்சாளரோ, பாடகரோ, மற்றக் கலைஞர்களோ கரகோஷம் அதிகரிக்க அதிகரிக்க மேலும் மேலும் புங்கானுபுங்கமாய்ச் செயலாற்றிச் சபையினரின் பாராட்டைப் பெறுவர். இது எங்கும் காணப்பெறும் பொது நியதி.

திருவையாற்றிலே இந்த நியதியும் உண்டு; இதற்கு நேர் எதிரிடையான மற்றொரு நியதியும் உண்டு. அதாவது விஷயம் ரசனைக் குறைவுடையதாயிருந்தாலும் அங்கே குழுமியுள்ள ரசிகர்கள் கை தட்டி ஆரவாரம் செய்வார்கள். இரண்டும் கரகோஷந்தான்; ஆனால் இரண்டையும் வேறு பிரித்து உணர்வது எப்படி ?

சிறந்த ரசிகர்கள் உயர்ந்த விஷயத்தை ரசித்துக் கொண்டிருக்கிறபோது கை தட்டி அமளி செய்து விஷயத்தை ரசிக்கும் செயலில் பங்கம் விளைத்துக்கொள்ள விரும்பமாட்டார்கள். முடிந்த வரையில் தங்கள் சந்தோஷத்தை அடக்கியே ஆள்வார்கள். விஷயத்தின் சிறப்பு இருதயத்தின் கேந்திர ஸ்தானத்தைத் தொட்டு விடுகிறபோது அதுவரை அவர்கள் ஆளுகைக்கு உட்பட்டிருந்த ஆனந்த அநுபவம் அவர்கள் ஆளுகையை மீறிவிடும். பீறி எழும் உணர்ச்சி கரகோஷமாகும். ஆனால் உடனேயே அவர்கள் அந்த உணர்ச்சியைக் கட்டுப்படுத்தி மீளவும் அந்த நல் விஷயத்தை ரசிப்பதில் ஈடுபடுவர். அதனால் அப்போது எழும் கரகோஷம் மிக அழுத்தமானதாகவும் மிகச் சுருக்கமானதாகவும் இருக்கும்.

வெறுப்பை வெளியிடும் கை தட்டல் அப்படி இராது. 'இது மட்ட ரகம்' என்ற அபிப்பிராயம் எடுப்பிலே தோன்றி விடுமாகையால் மனம் அதில் ஒன்றுது. 'செயலை நிறுத்து' என்று அறிவிக்கக் கை தட்ட ஆரம்பிப்பார்கள். அந்தத் தட்டல் 'சப்பட சடபட' என்று விரசமாக ஒலிக்கும்; நீண்ட நேரம் ஒலிக்கும்; மேடையிலே செயலாற்றுபவர் செயலை நிறுத்துகிற வரையில் ஒலிக்கும்!

இந்த இரண்டு கரகோஷங்களின் தன்மையையும் அநுபவஸ்தர்கள் நன்கு புரிந்து கொள்வார்கள்; அநுபவம் இல்லாதவர்கள் ஒன்றும் புரியாமல் விழிப்பார்கள். அநுபவம் இல்லாதவர்கள் விஷய ஞானம் உள்ளவர்களானுல், 'இந்த மட்டச் செயலுக்கு இந்த ரசிகர் கூட்டம் ஏன் கரகோஷம் செய்கிறது?' என்று வியப்பை அடைவர்.

'இது நியாயந்தானு? முன்னுக்கு வரவேண்டியவர்களைத் தயை காட்டி ஆதரிப்பதன்ருே முறை? இப்படி 'டிஸ்கரேஜ்' செய்யலாமா?' என்று இங்கே ஒரு கேள்விக்கு இடம் உண்டு. அதற்கு உயர்ந்த ரசிகர்களின் பதில் இதுதான் :

"செயலில் ஓரளவேனும் பரிமளத்தை உண்டுபண்ண முடியாதவர்கள் பரிபக்குவ காலத்திற்குமுன் பெரிய சபைகளின் எதிரே மேடை ஏறுவது சரியல்ல. அதிலும் நாதோபாசனை செய்த ஸ்ரீ தியாகப் பிரம்மத்தின் சமாதி சந்நிதியில் அபஸ்வரங்களைக் கோஷம் செய்தல் அபசாரம். இத்தகைய இடத்திலே எத்தனையோ மேன்மையான விஷயங்களை எதிர்பார்த்து எங்கெங்கிருந்தோ வந்து கூடியுள்ள ரசிகர்களின் பொன்னுன நேரத்தை மண்ணுக்குவது தகாது. செயலில் பக்குவம் பெருதவர்கள் ஆரம்ப காலத்தில் எங்காவது சின்னச் சின்ன சபைகளிலே மேடை ஏறிச் செயலாற்றி, குறைகளைக் களைந்து தேர்ச்சி பெறுவதுதான்

முறை. அத்தகையவர்களின் முன்னேற்றத்தை நோக்க மாகக்கொண்டு நிகழ்த்தப்படுவதல்ல ஸ்ரீ தியாகோற்சவம். இது மிகப் புனிதமான ஆராதனை வழிபாடு. இங்கே சுஸ்வரத் திற்குத்தான் இடம்; சுநாதத்திற்குத்தான் இடம். இதிலே தயையோ தாட்சிண்ணியமோ அணுவும் இல்லை.”

இது தனிப்பட்ட ஒருவர் அல்லது ஒரு சிலர் அபிப் பிராயம் என்றால் வாதத்திற்கும் மாற்றுக்கும் இடம் உண்டு. ரசிக உலகம் ஒருங்கு திரண்டு உறுதியாகக் கூறும் அபிப்பிராயத்திற்கு மாற்று ஏது, உரை ஏது? ஒரே சமயத் திலே, மயிரிழை வித்தியாசம் இன்றி எழும் கரகோஷமே ரசிக உள்ளங்களின் ஒற்றுமையைக் காட்டவில்லையா? மனத் தத்துவ ரீதியில் சொன்னால் தெய்விகக் கலா ரசனையைப் பொறுத்த வரையில் உள்ளங்கள் அனைத்தும் ஒரே காலத் தில் ஒரே நிலையில் இயங்குகின்றன என்றுதான் கூற வேண்டும்.

இப்போது இன்னும் பல இடங்களில் பல சபைகளில் மேற்கூறிய இருவகைக் கரகோஷ முறையை நாம் காணமுடி கிறது. இந்த முறை திருவையாற்றிலிருந்து பரவினது தான் என்று அநுபவ முதிர்ச்சியுடைய பெரியோர்கள் கூறு கிறார்கள். அது எப்படியானாலும் முன்னேறும் இளம் கலை ஞர்களுக்கு இந்த முறை ஒரு சரியான தீர்ப்புத்தான். கலை யின் சக்தியால் மட்டுமன்றி மற்றும் பலவகையாலும் பரவக் கூடிய சாமான்யச் சரக்கு இந்தத் தீர்ப்பினால் கட்டுண்டு நல்ல சரக்கே உலவ முடியும் அல்லவா? அப்போதுதானே கலை நன்றாகத் தழைத்து வளர முடியும் ?

மேதைகளான ரசிகர்கள் சுஸ்வரமான, கலையம்சம் நிறைந்த சங்கீதத்தை மட்டுமே ரசிப்பர் ; கரகோஷமிட்டு ஆமோதிப்பர். அத்தகைய சங்கீதம் ஸ்ரீ தியாகப் பிரம்மத் திற்குப் பிரீதி; அந்தப் பிரீதியினாலே அருள்; அந்த அருளி

ஞல் இசையுலகில் கீர்த்தி. அத்தகைய கீர்த்திக்குப் பாத்திரமானவர் அதை அந்தச் சந்நிதி மகிமை என்பது சரிதானே ?

ஐயங்கார் அவர்கள் தம்முடைய இன்றைக் கீர்த்தியின் தலைப்பை அன்றைத் தியாகோற்சவக் கரகோஷத்திலேயே கண்டு கொண்டார். அந்த முதல் 'சர்டிபிகேட்' மற்றும் பல பல சர்டிபிகேட்டுக்களுக்கு வித்தாக ஆயிற்று.

## 11. மாற்றுக் கச்சேரி

(1918)

புதுக்கோட்டை ஸ்ரீ தட்சிணுமூர்த்தி பிள்ளை தீவிர முருக பக்தர். முருகனின் படைவீடுகள் ஆறிலும் நடைபெறும் உற்சவங்களில் மனப்பூர்வமான பக்தியோடு ஈடுபடுவார். உற்சவ காலத்திற்கு ஒரு மண்டல காலம் முன்ஞல் தொடங்கி மௌன விரதம் இருந்து அடியார்களுக்கு அமுது படைத்து விரதத்தை நிறைவேற்றுவார். அன்று கடவுளுக்கு அர்ப்பணமாகச் சங்கீதக் கைங்கரியமும் செய்வார்.

1918-ஆம் ஆண்டில் திருப்பரங்குன்றத்திலே மேற்குறித்தபடி உற்சவம், அமுது படையல் முதலியன வழக்கம்போல் நிகழ்ந்தன. இசைக் கச்சேரிக்கு **மதுரை ஸ்ரீ புஷ்பவனம்** அவர்களை ஏற்பாடு செய்திருந்தார்.

கர்நாடக சங்கீத உலகின் புனிதமான சரித்திரத்திலே ஸ்ரீ புஷ்பவனம் அவர்களுக்கு மிக முக்கியமான இடம் உண்டு. ரசிகர் உலகத்தின் பாக்கியக் குறைவிஞல் அவர் வெகு சீக்கிரமாக மறைந்து விட்டாலும் ஜீவித்த சொற்ப காலத்திலும் இணையற்ற ஜோதியாய்ப் பிரகாசித்தார். அதஞற்ருன் ரசிகப் பரம்பரை இன்றும் அவர் சங்கீதத்தைக்

கொண்டாடிப் பேசுகிறது; என்றென்றும் பேசும் என்பதில் ஐயம் இல்லை.

அந்த நாளில் அவருடைய இசைக் கச்சேரி இல்லாத பெரிய மனிதர் வீட்டுக் கல்யாணம் அபூர்வம். அபிமானிகளில் பலர் அவர் கச்சேரி செய்ய வரமுடியவில்லை என்ருல் அதற்காகக் கல்யாணத் தேதியை மாற்றினாலும் மாற்றுவார்களேயன்றி அவர் கச்சேரி இல்லாமல் வைபவத்தை நடத்த மனம் ஒப்பமாட்டார்கள்; செய்த ஏற்பாடுகள் வீணாவதை—அதனால் ஏற்படக்கூடிய நஷ்டத்தை—மதிக்கவே மாட்டார்கள். ஸ்ரீ புஷ்பவனத்தின் கச்சேரிக்கு முன் மற்றவை பொருட்டே இல்லை அவர்களுக்கு. அவருடைய இசை எங்கே நிகழ்ந்தாலும் ரசிகர் கூட்டம் தேன் அடையிலே ஈக்களைப்போலக் கூடுவது வழக்கம். அன்றும் அப்படித்தான். ஆனால்...

உடல் அசௌகரியம் காரணமாக ஸ்ரீ புஷ்பவனம் அன்று கச்சேரிக்கு வர இயலவில்லை. செய்தி பரவியதும் ரசிகர்களின் முகம் வாடிப் போயிற்று. ஸ்ரீ தட்சிணாமூர்த்தி பிள்ளைக்கு அந்நிலை பொறுக்கவில்லை. முருகன் கைங்கரியத்திலும் ரசிகர் உள்ளத்திலும் குறை தோன்ருதபடி செய்ய என்ன வழி என்று வெகுவாக யோசித்தார்.

ஸ்ரீ புஷ்பவனத்தின் கச்சேரியைக் கேட்பதற்கு என்று ஸ்ரீ ஐயங்கார் அங்கே வந்திருந்தார். ஸ்ரீ புஷ்பவனம் வரவில்லை என்ற செய்தி அறிந்ததும் அவரும் மற்ற ரசிகர்களைப் போலவே, 'அடடா! அருமையான சங்கீதத்தைக் கேட்கும் வாய்ப்புத் தவறிவிட்டதே!' என வருந்தினர்.

அந்நிலையில் ஸ்ரீ பிள்ளையின் கருத்து ஸ்ரீ ஐயங்காரின் பாற் சென்றது. ஸ்ரீ புஷ்பவனம் அவர்களுக்குப் பதிலாக ஸ்ரீ ஐயங்காரைக் கச்சேரி செய்யும்படி வேண்டினர்.

"அது எப்படி? ஸ்ரீ புஷ்பவனம் வந்து கச்சேரி செய்யாத குறையை இவரால் நிறை கட்ட முடியுமா?"

இப்படிக் கேட்டவர்கள் பலர். ஆனால் ஸ்ரீ பிள்ளைக்கு ஸ்ரீ ஐயங்காரின் சங்கீதம்பற்றி நன்கு தெரியுமாகையால் நினைத்தபடியே திட்டம் செய்துவிட்டார். ஸ்ரீ ஐயங்காரும் முதலில் தயங்கினாலும் பின்னர் ஸ்ரீ பிள்ளையின் கோரிக்கைக்கு இணங்கினார்.

கச்சேரி ஆரம்பம் ஆயிற்று. மலைக்கோட்டை ஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளை வயலின்; புதுக்கோட்டை ஸ்ரீ தட்சிணாமூர்த்தி பிள்ளை மிருதங்கம்.

கச்சேரி தொடங்கிச் சிறிது நேரத்திற்கெல்லாமே சந்தேகமுற்ற ரசிகர்களின் ஐயப்பாடு அறவே நீங்கிவிட்டது. கச்சேரி முடிந்தபோது அனைவர் உள்ளத்திலும் மிகுந்த சந்தோஷமே ஏற்பட்டது.

## 12. முன்னேற்றம்

**(1918)**

**த**ஞ்சாவூரில் பெரிய பிரபு ஒருவர் வீட்டில் திருமணம். அதில் மூன்று சிறந்த கச்சேரிகளுக்கு ஏற்பாடாகியிருந்தது. முதற் கச்சேரி ஸ்ரீ பூச்சி ஐயங்காருடையது. இரண்டாவது **வேணுகான விற்பன்னர் கும்பகோணம் ஸ்ரீ நாகராஜராவ்** அவர்கள் கச்சேரி. மூன்றாவது கச்சேரி ஸ்ரீ ராமானுஜ ஐயங்காருடையது. மூன்று கச்சேரிகளுக்கும் **மதராஸ் ஸ்ரீ பாலகிருஷ்ணையர்** வயலின், கும்பகோணம் ஸ்ரீ அழகநம்பி பிள்ளை மிருதங்கம்.

மூன்று சிறந்த கச்சேரிகள் என்ற வரிசையில் முதலாவதாக ஸ்ரீ பூச்சி ஐயங்கார், மூன்றாவதாக ஸ்ரீ ராமானுஜ ஐயங்கார். குரு—சிஷ்யர் இருவரையும் ஒரே வரிசையில்

வைத்து, 'சிறந்த கச்சேரிகள்' என்பது பொருத்தந்தானு என்பது ஒரு கேள்விதான்.

1912-இல் இதே ஊரில் தேவகோட்டைப் பிரமுகர் நிகழ்த்திய திருமண வைபவத்திலே கோனேரிராஜபுரம் ஸ்ரீ வைத்தியநாதையர், ஸ்ரீ பூச்சி ஐயங்கார் இவர்களுக்குப் பின் அதே மேடையிலே அமர்ந்து பாடிய ஸ்ரீ ராமாநுஜ ஐயங்காரின் இசை இடையே உள்ள ஆறு ஆண்டுகளுள் பிரமிக்கத்தக்க வளர்ச்சியைப் பெற்றிருந்தது. அன்று அவர் காம்போஜி ராகத்தை வெகு சிறப்பாகப் பாடி மத்திம கால தானத்திற்குப் பிறகு 'கிருஷ்ண முராரே' என்ற பல்லவியைப் பிரமாதமாகப் பாடியதை எல்லோருமே பாராட்டினர்.

## 13. கலைஞர் கூட்டுறவு

(1920)

பிரபல மாத்திமக் கிராமமாகிய **முடிகொண்டான்** என்ற ஊரில் பெரிய மிராசுதாரான **ஸ்ரீ மாடி நாராயண சாமி ஐயர்** அவர்கள் இல்லத்தில் திருமண வைபவம் ஒன்று வெகு சிறப்பாக நடைபெற்றது. மாத்திமர்கள் வாழும் ஊர்கள் அனைத்தும் செழிப்புடைய பெரிய ஊர்கள். அநேகமாக அவர்கள் எல்லாரும் குறிப்பிட்டுக் கூறக்கூடிய செல்வர்களே. அவர்கள் கல்யாணம் முதலிய வைபவங்களை நிகழ்த்தினுல் அவை தரத்திலே மிக உயர்ந்தவையாகத் தான் இருக்கும். மேளக் கச்சேரி, பாட்டுக் கச்சேரி முதலியவற்றுக்குக் குறைவு இராது.

ஸ்ரீ மாடி நாராயணசாமி ஐயர் வீட்டுக் கல்யாணத்திலே ஸ்ரீ ராமாநுஜ ஐயங்காரின் கச்சேரிக்கு ஏற்பாடாகியிருந்தது. அப்போது தஞ்சை ஜில்லாவில் உள்ள மாத்திமக்

கிராமங்களில் நடைபெறுகிற வைபவங்களில் எல்லாம் பெரும்பாலும் அவருடைய கச்சேரி நடைபெறும். அத்தகைய ஒரு நிலையை ஏற்படுத்தியவர் திருப்பழனம் ஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகள் அவர்கள்தாம்.

ஸ்ரீ சாஸ்திரிகள் வேதம், வேதாங்கம், சாத்திரம், சங்கீதம் முதலிய அரும் பெரும் கலைகளைப் பயின்ற பெரியார். பரதம், ஓவியம் முதலிய கலைகளில் தேர்ந்த ரசிகத்தன்மை உடையவர். மிகவும் ஆசார சீலர். நியம நிஷ்டைகளில் பிறழாத உத்தமர். பிரமிக்கத்தக்க தேஜோவான். மலர்ந்த முகமும் இன்சொல்லும் தயை உள்ளமும் பரிவுச் செயலும் அவர் உடன் பிறந்தவை. நிறைந்த வாக் சாதுரியம். எடுத்துக்கொண்ட விஷயத்தைச் சுற்றி வளைக்காமல் பளிச் சென்று விசிறிவிடும் ஆற்றல் பெற்ற லட்சியக் கலைஞர். சொல் அலங்காரம் அவர் நாவிலே வெகு சரளம். அவரே சரஸி; அவரே கலை—இப்படி என்ன சொன்னாலும் தகும்.

சங்கீதச் கச்சேரி வேறு; சத்கதா காலட்சேபம் வேறு. 'காலட்சேபத்திற்குப் போனால் கதை கேட்கலாம்; சங்கீதக் கச்சேரி நடைபெறுகிற இடத்திற்குச் சென்றால் தான் 'நல்ல சங்கீத'த்தைக் கேட்க முடியும்' என்கிற அபிப்பிராயத்தைத் தவிர்த்த லட்சண வித்துவான் அவர். ஆகவே அவர் காலட்சேபங்களில் கதையம்சமும் இசையம்சமும் சம எடையிலே இருக்கும். பின் நாட்களில் மகா வித்துவான்களாகத் திகழ்ந்த பலர் அவருக்குப் பின் பாட்டுப் பாடியிருக்கிறார்கள். 'அந்தப் பேறு நமக்குக் கிடைக்காதா' என்று ஏங்கிய இளம் வித்துவான்கள் பலர்; வெற்றி பெற்றவர் சிலர்.

ஞானமும் சக்தியும் உடையவர்களைப் பின் பாட்டுக் காரர்களாக அமைத்துக்கொண்டு அவர்களை நேரான வழியிலே அடக்கி ஆள்வதென்பது சாமானியமான காரியமா?

ஆள்பவர் நிறைந்த யோக்கியதை உடையவராக இருந்தால் தான் முடியும். ஸ்ரீ சாஸ்திரிகள் யோக்கியதைகளின் களஞ்சியம்; கலைகளின் பொக்கிஷம்.

**நல்லூர் ஸ்ரீ விசுவநாதையர்** என்ற வித்துவான் சாஸ்திரிகளிடம் நீண்ட காலம் இருந்து பின் இசை பாடும் பணியாற்றிப் பேறு பெற்றவர். கோனேரிராஜபுரம் ஸ்ரீ வைத்தியநாதையர் அவர்களைப் போன்ற வாய்ப் பாட்டு மேதைகளும் பெரிய பெரிய வாத்திய வித்துவான்களும் அவருடைய நற்பணியிலே ஈடுபாடு உடையவர்கள். காலட்சேப விற்பன்னர் எவரிடமும் இல்லாத தனிச் சிறப்புகள் பலவற்றைத் தம்மிடத்தே கொண்ட மகனீயர் ஸ்ரீ சாஸ் திரிகள்.

அவர் கும்பகோணத்தில் வசித்து வந்த காலத்தில் ஆண்டுதோறும் ஸ்ரீராம நவமி உற்சவத்தை அதி விதரணை யாக நடத்தி வந்தார். ராமபிரானிடம் பக்தியும் ஸ்ரீ சாஸ் திரிகளிடம் அன்பும் உடைய செல்வர்களின் பொருளும், கலைஞர்களின் கலை நிகழ்ச்சிகளும், மற்றவர்களின் உடல் உழைப்பும் ஒருங்குகூடி அந்த உற்சவத்தின் சிறப்பை அதிகரிக்கும்.

ஸ்ரீ ஐயங்காருக்கு ஸ்ரீ சாஸ்திரிகளிடம் அளவு கடந்த அன்பும் மதிப்பும் மரியாதையும் உண்டு. உற்சவ காலத் திலும் வெறும் நாட்களிலும் அவர் ஸ்ரீ சாஸ்திரிகளிடம் வந்து தங்குவார். ஸ்ரீ சாஸ்திரிகளுக்கும் ஸ்ரீ ஐயங்காரின் இசை, முன்னேற்ற ஆர்வம், பழகும்தன்மை ஆகிய அம்சங் களிலே மிகவும் பிடித்தம். ஸ்ரீ ஐயங்கார் நிரூபணம் முதலி யன பாடுவார். ஸ்ரீ சாஸ்திரிகள் மகிழ்ச்சி அடைவார். ஸ்ரீ ஐயங்காரிடம் உள்ள விசேஷப் பிரீதியினால் அவர் முன் னுக்கு வரும் வழிகளில் தம்மால் இயன்றதையெல்லாம்

செய்வார். அவர்களிடையே தோன்றிய அன்பு நாளுக்கு நாள் வளர்பிறைபோல் வளர்ந்து முதிர்ந்து வந்தது.

சாஸ்திரிகளுக்குத் தஞ்சை ஜில்லாவிலே—அதிலும் குறிப்பாக மாத்திமக் கிராமங்களிலே—நல்ல செல்வாக்கு உண்டு. அவரால் அறிமுகப்படுத்தப் பெற்ற ஸ்ரீ ஐயங்காரின் கச்சேரி மாத்திமக் கிராமங்களில் நடைபெறும் வைபவங்களில் சிறப்பாக இடம் பெறலாயிற்று.

முடிகொண்டான் ஸ்ரீ மாடி நாராயணசாமி ஐயர் வீட்டு வைபவத்தில் ஸ்ரீ ஐயங்காரின் கச்சேரி தவிர மற்றொரு கச்சேரியும் ஏற்பாடாகியிருந்தது. முன் தலைமுறையைச் சார்ந்த மகா வித்துவான் கோனேரிராஜபுரம் ஸ்ரீ வைத்தியநாதையர் அவர்கள் கச்சேரிதான் அது. திருப்பழனம் சாஸ்திரிகள் அவர்களைப் போலவே பிற்காலத்தில் மாத்திமக் கிராமங்களில் சிறந்த செல்வாக்கைப் பெற்றவர் ஸ்ரீ வைத்தியநாதையர். அநேகமாக அந்த நாட்களில் அந்தக் கிராமங்களில் நடைபெறுகிற வைபவங்களில் எல்லாம் அவருடைய கச்சேரி உண்டு.

அவர் எங்கே சென்றாலும் அன்பர்களை மகிழ்விப்பதற்காகச் சில நாட்கள் அங்கங்கே தங்கி இருப்பது வழக்கம். முடிகொண்டான் பக்கம் செல்கிற போதெல்லாம் சங்கீத வித்துவான் **முடிகொண்டான் ஸ்ரீ வேங்கடராமையர்** அவர்கள் இல்லத்திலே தங்கியிருப்பார். இம்முறையிலும் அதேபோல் ஒரு நாள் முன்னதாகவே வந்து அங்கே தங்கியிருந்தார்.

ஸ்ரீ வைத்தியநாதையரை அடிநாள் முதல் அறிந்தவர்கள் அவரை நினைக்கும்பொழுது அவர்கள் மனக்கண்ணெதிரே முதலில் கரடுமுரடான மலைப்பாறுங்கல் தோற்றும்; பின்னர்க் கண்ணைக் கூசச் செய்யும் டால் வீசுகிற, வர்ண ஜாலங்கள் நிறைந்த, பட்டை தீர்த்த, மிக உயர்ந்த

ஜாதி வைரம் காட்சி தரும். அவர் சாரீரத்தின் மாறு பட்ட நிலையே அந்தத் தோற்றங்கள்.

'இந்தச் சாரீரத்திற்கும் சங்கீதத்திற்கும் சம்பந்தமே இல்லை; இது வீண் பிரயாசை' என்று சொல்லாதவர் அபூர்வம். திருப்பழனம் ஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகள், கீர்த்தனுசார்ய ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாச ஐயங்கார் அவர்கள் முதல் அநேகம் பெரியவர்கள் கொண்ட இந்த அபிப்பிராயத்தை, அசைக்க முடியாத மனோ திடத்துடன் எதிர்த்து நின்று போராடி வெற்றி பெற்று நாடெங்கும் திக்விஜயம் செய்த தீரர் ஸ்ரீ வைத்திய நாதையர். குறை சொன்ன வாயாலேயே துதிகூறச் செய்தவர்.

போராட்டம் என்றால் என்ன? சாதகந்தான். அசுர சாதகம் என்று சாமான்ய காயகர்களின் உதட்டு நுனியின் அசைவையும் கொண்டாடுகிற நிலை இக்காலத்தது. ரத்தங் கக்குகிற அளவுக்கு நாபீகமலத்திலிருந்து ஓசையைப் பூரணமாக எழுப்பிக் கதறித் தீர்ப்பது அக்காலத்துச் சாதகம். 'சாதகம் என்பதன் உட்பொருள் அநுகூலம். வசப் படாததை வசப்படுத்தி அநுகூல மாக்கிக் கொள்வது சாதகம். சாதகம், சாதனை, சாதிப்பது எல்லாச் சொற்களின் பொருளும் ஒன்றேதான். ரிஷிகளும் முனி புங்கவர்களும் தபஸ் செய்தார்கள்; இந்திரிய நிக்கிரகம் செய்து, காயக் கிலேசம் செய்து, ஏகாக்கிர சித்தத்துடன் ஒன்றையே கருதுவதுதான் தபஸ். நானும் அப்படியே அந்த ஒன்றைச் செய்வேன். ஒன்று எனக்கு வசப்படாதது வசப்பட்டு வரவேண்டும்; அல்லது அந்த முயற்சியிலே என் ஜீவன் அழிய வேண்டும்' என்று முடிவு செய்து கொண்டு, வழிகளை வகுத்துக் கொண்டு பாடுபட்ட புண்ணிய புருஷர் அவர். வெற்றியடைந்து நாடெங்கும் ஜயக்கொடி நாட்டிய மேதை.

முதல் நாள் ஸ்ரீ வைத்தியநாதையரின் கச்சேரி நடை பெற்றது. **செம்மங்குடி ஸ்ரீ நாராயணசாமி ஐயர்** அவர்கள் வயலின்; கும்பகோணம் ஸ்ரீ அழகநம்பி பிள்ளை அவர்கள் மிருதங்கம். மறுநாள் இதே பக்க வாத்தியங்களுடன் ஸ்ரீ ஐயங்காரின் கச்சேரி. ஸ்ரீ ஐயங்கார் ஸ்ரீவைத்தியநாதையரைத் தம் கச்சேரிக்கு விஜயம் செய்யுமாறு அழைக்கவேண்டி அவர் தங்கியிருந்த இடமாகிய ஸ்ரீ வேங்கடராமையரின் இல்லத்திற்குச் சென்றார்.

ஸ்ரீ வேங்கடராமையரும் ஸ்ரீ ஐயங்காரும் திருவையாறு ஸ்ரீ தியாகப் பிரம்மோற்சவத்திலே அறிமுகமானவர்கள். அதைப்பற்றி இன்றும் மிகத் தெளிவாகவும் அதி உற்சாகத்துடனும் பேசுகிறார் ஸ்ரீ வேங்கடராமையர்:

"....மல் ஜிப்பாவும் தலை நிறைந்த சிகையுமாக, புரு புருவென்ற தோற்றத்துடன் ஸ்ரீ தியாகோற்சவ விழாவின் இசை அரங்கிலே ஸ்ரீ ஐயங்கார் அமர்ந்திருந்த காட்சி இன்றும் என் மனத்திலே பசுமையாக நினைவு இருக்கிறது.

" அன்று அவருக்குச் செம்மங்குடி ஸ்ரீ நாராயணசாமி ஐயர் வயலினும், புதுக்கோட்டை ஸ்ரீ தட்சிணாமூர்த்திபிள்ளை மிருதங்கமும், ஸ்ரீ மான்பூண்டியா பிள்ளை கஞ்சிராவும் வாசித்தார்கள். கச்சேரி கன கச்சிதமாயும் வெகு சிறப்பாயும் அமைந்தது. அன்று அவர் **'ஸுஜன ஜீவன'** என்ற உருப்படியை வெகு அழகாகப் பாடினதும் காம்போஜி ராகத்தை மிக அற்புதமாக ஆலாபனம் செய்து திசிர திரிபுடை த்ருதம் அரை இடத்தில் **'பரிமள ரங்கபதே'** பல்லவி பாடினதும் இன்னமும் என் செவியிலே ஒலித்துக் கொண்டிருக்கின்றன. அவரையும் அவர் சங்கீதத்தையும் கண்டும் கேட்டும் என் உள்ளம் வியப்பும் மகிழ்ச்சியும் எய்தியது. சாரீரத்திலே உள்ள காத்திரம் மனதைக் கவர்ந்தது. அதிலே பிசிர் என்பது துளியும்

இல்லை. செய்கிற வரையில் கன கச்சிதம்; சுருதி லய சுத்தம்; சுக புஞ்சமாயும் அழகாயும் இருந்தது அவர் சங்கீதம்.

" அன்றிலிருந்தே அவருக்கு யோக காலம் ஆரம்பம் தான். அதற்கு அறிகுறியே போல, ஸ்ரீ தியாகப் பிரம் மத்தின் அருளே போல உடனேயே நெல்லூர்ச் சபைக் கச்சேரி ஏற்பாடாகி முன் பணமும் வந்து விட்டது. எல்லோரும் புகழ்ந்து பேசிக் கொண்டார்கள்...."

இவ்வளவையும் மறவாமல் இன்றும் நினைவு வைத் திருக்கிற ஸ்ரீ வேங்கடராமையர், அன்று தம் இல்லத்தை நாடிவந்த ஸ்ரீ ஐயங்காரைப் புது நட்பின் புது மணத்திலே திளைக்கும் நிலையிலே இன் முகத்தோடு வரவேற்றுப் பேசினார்.

முன்னாள் இரவு கச்சேரி முடிந்த பின்னர் ஸ்ரீவைத்திய நாதையருக்குச் சுகவீனம் ஏற்பட்டது. அதன் விளைவால் காலை நேரத்திலும் அவர் கண் மூடிப் படுத்திருந்தார். தூக்கமா அசதியா தெரியவில்லை

அவருக்குச் சில சமயங்களில் வயிற்றுப் போக்குப் போன்ற உடல் உபாதைகள் ஏற்படுவதுண்டு. அதன் நிமித்தமாகப் பத்திய உணவு முதலிய வசதிகள் தேவை. அப்போதும் அத்தகைய உடல் கோளாறுதான். அவருக் குத் தேவையான வசதிகளைக் குடும்ப சகிதம் சிரத்தை யோடு செய்து கவனிக்கும் பேறு ஸ்ரீ வேங்கடராமையருக் குக் கிட்டிற்று.

அயர்ந்து படுத்திருந்த ஸ்ரீ வைத்தியநாதையரை எழுப்ப இருவருக்குமே மனம் இல்லை. ஸ்ரீ ஐயங்கார் திரும்பி விட்டார்.

பிறகு மற்றொரு முறையும் சென்று முயன்றார். அப் பொழுதும் பழைய நிலைதான். "சரி. இப்போது அவரைத்

தொந்தரவு செய்யவேண்டாம். நான் சென்று வருகிறேன். போதுமான ஓய்வு இருந்தாலே உடம்புக்கு நல்லது. தாமாக எழுந்தபின் நான் இருமுறை வந்து சென்றதைச் சொல்லுங்கள். தயை கூர்ந்து கச்சேரிக்கு வந்திருந்து கேட்டு என்னை ஆசீர்வதிக்க வேண்டும் என்று நான் பலமுறை விஞ்ஞாபித்துக் கொண்டதாகத் தெரிவியுங்கள். அவசியம் அவரை அழைத்துக்கொண்டு கச்சேரிக்கு வாருங்கள்" என்று ஸ்ரீ வேங்கடராமையரிடம் கூறி விடை பெற்றுச் சென்றார் ஸ்ரீ ஐயங்கார்.

மாலையில் ஸ்ரீ ஐயங்காரின் கச்சேரி ஜாம் ஜாம் என்று தொடங்கிற்று. ஸ்ரீ வேங்கடராமையர் வாய் வழி, தம்மைக் காண ஸ்ரீ ஐயங்கார் இருமுறை வந்து சென்றார் என்பதை அறிந்த ஸ்ரீ வைத்தியநாதையர் தமது உடல் நிலையையும் பொருட்படுத்தாது கச்சேரி நடைபெறும் இடத்திற்குச் சென்று முன்னணியில் அமர்ந்து கேட்டார்.

அவரைக் கண்டதும் ஸ்ரீ ஐயங்காருக்குப் பக்தி உணர்ச்சியோடு பூரிப்பு உணர்ச்சியும் பொங்கலாயிற்று. அவர் உள்ளம் திருப்தியுறும் வண்ணம் உழைத்துப் பாட வேண்டும் என்ற ஆர்வம் உந்தக் கல்யாணி ராகத்தை எடுத்து ஆலாபனம் செய்யத் தொடங்கினார்.

மனோதர்மம் விரிய விரிய மிக விஸ்தாரமாகப் பாடி ராகத்தைப் பூரண உருவில் சபையோர் முன் காண்பித்தார். பிறகு, கண்ட ஜாதி த்ருபுடையில், **"உன் தரிசனம் கிடைக்குமோ"** என்ற பல்லவியை லட்சண லட்சியத்தோடு பாடத் தொடங்கினார்.

"பேஷ் பேஷ்!" என்று பாராட்டிச் சிரக்கம்பம் செய்து ரசித்த ஸ்ரீ வைத்தியநாதையர் மிகுந்த சந்தோஷம் அடைந்தார். ஸ்ரீ ஐயங்காரை மனப் பூர்வமாக ஆசீர்வதித்தார்.

அந்தத் தடவையில் ஸ்ரீ வைத்தியநாதையர் முடிகொண்டான் ஸ்ரீ வேங்கடராமையர் இல்லத்திலே பத்து நாட்கள் தங்கியிருந்தார். ஸ்ரீ வேங்கடராமையர் குடும்ப சமேதராய் அந்தச் சங்கீத மேதைக்கு இதமாகச் சுசுரூஷைகள் செய்யும் பெரும் பேற்றைப் பெற்றார்.

அதன் பின்னர் ஸ்ரீ வைத்தியநாதையர் அதிகக் காலம் ஜீவித்திருக்கவில்லை. அடுத்த ஆண்டின் (1921-இன்) துவக்கத்திலேயே காலமாகிவிட்டார்!

★

**அ**ப்போதெல்லாம் தஞ்சாவூர் ஜில்லாவிலே நடைபெறுகிற கல்யாணங்கள் சிலவற்றில் ஸ்ரீ ஐயங்கார், ஸ்ரீ வேங்கடராமையர் இருவரின் கச்சேரிகளும் நடைபெறுவதுண்டு. அதனால் இருவரிடையே அடிக்கடி சந்திப்புகள் நேரும். காக்கினடா போன்ற வெளி ஊர்களிலும்கூட அதேமாதிரி 'கச்சேரிச் சந்திப்பு' நேருவதுண்டு. முடிகொண்டானில் ஸ்ரீ ஐயங்காருக்கு வேண்டியவர்கள் பலர். அதனால் அவர் அடிக்கடி அங்கே செல்வார். இம்மாதிரியான சந்திப்புக்களினால் அவர்கள் நட்பு மேலும் மேலும் வளர்ந்து தழைத்தது.

## 14. தென்னாட்டின் தலைநகரில்

**(1920)**

'**ரா**மநாதபுரம் ஐயங்கார் அவர்களின் சிஷ்யரான அரியக்குடி ஸ்ரீ ராமாநுஜ ஐயங்கார் மிக நன்றாகப் பாடுகிறார்' என்ற செய்தி தென்னாட்டின் தலைநகரான சென்னைக்கு எட்டியது. சென்னை ரசிகர்கள் அவர் சங்கீதத்தைக் கேட்க அவாவினர். திருவல்லிக்கேணி சரசுவதி சங்கீத சாலை நிர்வாகிகள் சந்தர்ப்பத்தை உண்டுபண்ணினர்.

குறித்த நாளில் கச்சேரி நடைபெற்றது. மலைக் கோட்டை ஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளை, புதுக்கோட்டை ஸ்ரீ தட்சிணாமூர்த்தி பிள்ளை இருவரும் பக்கவாத்தியங்கள் வாசித்துக் கச்சேரிக்குச் சிறப்பை அதிகரித்தனர். ஸ்ரீ ஐயங்கார் வெகுவாக உழைத்துப் பாடினார். முதல் முறையிலேயே சென்னை ரசிகப் பிரமுகர்களின் பாராட்டைப் பெற்றார்.

அதன் பிறகு அடிக்கடி அவருக்குச் சென்னையிலே உற்சவம், கல்யாணம், மற்ற விழாக்கள், சபைகள் முதலியவற்றிலே அடுத்தடுத்துக் கச்சேரிகள் ஏற்படத் தொடங்கின. கச்சேரிக்குக் கச்சேரி அவர் புகழ் அதிகரித்துக்கொண்டே போகலாயிற்று.

## 15. தந்தையானார்

**(1921)**

கச்சேரி செய்யவென்று **1913**-இல் முதல் முதலாக மேடை ஏறிய ஸ்ரீ ராமாநுஜ ஐயங்கார் அதன் பின்னர் அடுத்தடுத்துப் பல இடங்களில் தொடர்ந்து பல கச்சேரிகள் செய்து வெகு சீக்கிரத்திலேயே பிரசித்தர் ஆகிவிட்டார். பெற்றோர், குரு, தமையன் முதலிய பெரியோர் ஆசியும், தியாகப் பிரம்மத்தின் அருளும், சங்கீத தேவதையின் கடாட்சமும் அவருக்குப் பக்கபலங்களாக இருந்து உதவின. ஆயினும் ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார் போன்ற பெரியோர் சிலர் மற்றும் ஒரு காரணத்தையும் ஸ்ரீ ஐயங்காரின் முன்னேற்றத்திற்கு உரியது எனத் தீர்மானமாகக் கூறி வந்தனர்.

ஸ்ரீ ஐயங்காருடைய தருமபத்தினியின் அதிருஷ்டத்தைத்தான் அவர்கள் குறிப்பிட்டார்கள். யாரும் அதை

மறுக்கவில்லை. ஆம், ஸ்ரீ ஐயங்கார் உள்படத்தான். தோற்றம், குணம், செயல் ஆகியவற்றிலே உள்ள மேம்பாடுகளோடு இப்படி ஒரு தனிச் சிறப்பும் உடைய ஸதியைக் கொண்டாடாத பதியும் உண்டா? ஆகவே ஸ்ரீ ராமாநுஜ ஐயங்கார் தம்பதிகள் பரஸ்பரப் பிரீதியுடன் இல்லறத்தில் ஈடுபாடு கொண்டு கிருகஸ்தாசிரமத்திற்குரிய தருமங்களினின்று சிறிதும் வழுவாது வாழ்க்கையைக் குதூகலத்தோடு அநுபவித்து வந்தனர். அந்த உயர்நிலையை மேலும் ஒருபிடி சிறப்பித்துக் காட்டுவது போல, இல் வாழ்க்கைக்குப் பொற்சிகரம் அமைத்தாற்போல 1921-இல் அவர்கள் 'பெற்றோர்' என்ற சிறப்புக்கு உரியவர்கள் ஆயினர்.

பிறந்தது பெண் குழந்தை. சர்வ லட்சணங்களுடனும் கூடிய அதற்குப் பெரியோர்கள் **ஜானகி** எனப் பெயரிட்டனர். அருமையுடன் அதைச் சீராட்டி வளர்க்கலாயினர்.

'பெண் பிறந்தால் செலவு, பிள்ளை பிறந்தால் வரவு,' என்ற ஒரு மரபு சிற்சில வகுப்பினரிடையே இருந்து வருகிறது. ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார் குடும்பத்திலே யார் என்ன நினைத்தார்களோ தெரியாது; ஆனால் வெளி உலகம் அந்த மரபை எண்ணிச் செய்தது போலச் செயலாற்றத் தொடங்கிவிட்டது. பெண்ணுக்குத் தந்தையான நாள் முதல் ஸ்ரீ ஐயங்காருக்கு ஓய்ச்சல் ஒழிவு இல்லை. எப்பொழுது பார்த்தாலும் கச்சேரி, கச்சேரி, கச்சேரிதான்! அதிலும் சாமானிய இடங்களிலா? நிகரற்ற பிரமுகர்கள், பெரிய பெரிய ஜமீன்தார்கள் ஆகியோர் ஆதரவிலேதான். எல்லாரும், 'பெண் பிறந்த வேளையின் அதிருஷ்டம்' என்றார்கள்.

# 16. ஜமீன்களின் ஆதரவு

**(1924)**

சேத்தூரின் தற்போதைய ஜமீன்தார் வெறும் வள்ளல் மட்டும் அல்லர்; பெருங் கலைஞருங்கூட. அவருக்கு இசைக் கலையில் தெளிவான ஞானம் உண்டு; அதிலும் லயத்துறையில் எல்லையற்ற ஆர்வம். அவர் விரும்பிப் பயின்ற தாள வாத்தியம் கஞ்சிரா. பெரிய பெரிய வித்துவான்களுக் கெல்லாம் மிக அழகாக வாசித்துத் தாமும் ஆனந்தத்தை அடைந்து பிறருக்கும் இன்பத்தை அளித்து வரும் அவர் பரம ரசிக சிரோன்மணி; சிறந்த கலை வல்லுனர்.

அவர் ஸ்ரீ ராமாநுஜ ஐயங்காரின் பிரதாபத்தைக் கேள்விப் பட்டார். தம் பாட்டனார் காலத்தில் நிகழ்ந்த சம்பவத்தை முன்னமேயே கேள்விப் பட்டிருந்தார். தம்முடைய பாட்டனாரால் மகாவித்துவான் மடவார்குளம் ஸ்ரீ முத்தையா பாகவதர் முன்னிலையில் சின்னஞ் சிறு பிராயத்தில் சம்மானித்துக் கொண்டாடப் பெற்ற ஸ்ரீ ஐயங்காரைத் தாமும் சம்மானித்துக் கொண்டாட நினைத்தார். உடனேயே ஒரு வைபவத்தைத் திட்டமிட்டார். அதில் ஸ்ரீ ஐயங்காரின் கச்சேரிக்கு ஏற்பாடு செய்தார்.

சந்திப்பும், வரவேற்பு உபசாரம், சல்லாபம் முதலியனவும் நிறைவேறிய பின் கச்சேரி நடைபெற்றது. அன்றைக்கு ஸ்ரீ ஐயங்காருக்கு அளவு கடந்த குதூகலம். பிரமாதமாகப் பாடிவிட்டார்!

கற்றாரைக் கற்றாரே காமுறுவர். அதிலும் காமுறும் கற்றார் கலைச் செல்வத்தோடு பொருட் செல்வமும் நிரம்பப் பெற்றவரானால் என்ன நடக்கும்? சேத்தூர் ஜமீன்தார் ஸ்ரீ ஐயங்காருக்கு ஏராளமான சம்மானத்தை அளித்து மிகச் சிறப்பான முறையிலே அவரைக் கௌரவித்தார்.

இந்தச் செய்தி எங்கும் உடனேயே பரவி விட்டது. மற்ற ஜமீன்தார்களும் சேத்தூர் ஜமீன்தாரைப் பின்பற்றலானார்கள். அவர்களில் சிவகங்கை ஜமீன்தார் குறிப்பிடத் தக்கவர். உடனடியாகவே முந்திக்கொண்டு ஸ்ரீ ஐயங்காரை வரவழைத்து இசை நிகழ்ச்சி நடத்திச் சம்மான மளித்துச் சிறப்பித்தார்.

1924-இல் சேர்ந்தாற்போல் அடுத்தடுத்து ஜமீன் தார்களால் போற்றிக் கொண்டாடப் பெற்ற ஸ்ரீ ஐயங் காரின் சங்கீதம் அதன் பின்னர் மற்றும் அநேகம் ஜமீன் தார்கள், மகாராஜாக்கள் ஆகியோரின் போற்றுதலுக்கு உரியதாயிற்று.

## 17. காலப் பிரமாணம்

**(1925)**

சென்னை திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி சங்கீத சபையில் ஸ்ரீ ஐயங்காரின் கச்சேரி. பக்க வாத்தி யங்கள்: மதராஸ் ஸ்ரீ பாலகிருஷ்ணையர் வயலின்; புதுக்கோட்டை ஸ்ரீ தட்சிணாமூர்த்தி பிள்ளை மிருதங்கம்.

ஸ்ரீ பாலகிருஷ்ணையர் சிறந்த லட்சண வித்துவான். திருக்கோடி காவல் ஸ்ரீ கிருஷ்ணையர் கால முதல் மலைக் கோட்டை ஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளை, கரூர் ஸ்ரீ சின்ன சாமி ஐயர், மருங்காபுரி ஸ்ரீ கோபால கிருஷ்ணையர் உள்பட சிறந்த மேதைகள் பலரின் காலத்தவர். ஸ்ரீ பூச்சி ஐயங்கார் முதலிய பல மேதைகளுக்கு வாசித்தவர். ஸோலோ கச்சேரிகள் பல செய்து ரசிகப் பெரு மக்களின் பேராதரவைப் பெற்றவர். மூன்று தலைமுறை வித்துவான் களுக்கும் வாசிக்கும் பேறு பெற்றவர். ஸ்ரீ ஐயங்காருக்குப் பல கச்சேரிகளுக்கு வாசித்துச் சிறப்பித்தவர். அவரிடம்

ஸ்ரீ ஐயங்காருக்குச் சிறந்த மதிப்பும் அளவற்ற அன்பும் உண்டு.

குறித்த நேரத்தில் ஸ்ரீ ஐயங்காரும் ஸ்ரீ பாலகிருஷ்ணையரும் சபையை அடைந்துவிட்டார்கள். ஸ்ரீ தட்சிணாமூர்த்தி பிள்ளை மட்டும் வந்து சேரவில்லை. அதனால் உரிய நேரத்தில் கச்சேரியை ஆரம்பிக்க முடியவில்லை. ஜனக் கூட்டம் சபை கொள்ளவில்லை. நேரம் செல்லச் செல்ல ஜனங்கள் பொறுமையை இழந்து தவிக்கலானார்கள். சபை நிர்வாகிகளின் முகத்திலே 'ஈ ஆடவில்லை'

கலைஞர்களிடம் மிக்க மரியாதை பாராட்டும் இயல்பு குன்றாத காலம். ஆகவே எந்த வித்துவானாவது உரிய நேரத்தில் வரவில்லை என்றால் அதற்காகக் கச்சேரி நிர்வாகிகளோ, ரசிகர்களோ அவசரப்பட்டுக் கலைஞரைக் குறைத்து நினைக்கமாட்டார்கள்; இழித்துப் பேச மாட்டார்கள்; செயலில் சட்டென்று மாறுதல் செய்துவிட மாட்டார்கள்.

இது பொதுவான நிலை. அதிலும் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி பிள்ளை விஷயத்தில் இந்நிலை மிகத் தீவிரம். அந்த நாளில் இம்மாதிரி அவர் உரிய காலத்தில் கச்சேரியில் ஆஜராகாமல் இருக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் நேருவதுண்டு. கலைஞர்கள், ரசிகர்கள் அனைவரும் அறிந்த விஷயம் அது. ஆனால் அதைப்பற்றிக் குறை கூற இனிமேல் யாராவது தோன்றினால்தான் உண்டு. எதனால் அப்படி? அனைவருக்கும் அவரிடம் அத்தனை அன்பும் மதிப்பும். அவரிடம் என்றால் அவருடைய கலைக்காகவா, பண்புக்காகவா? இரண்டிலுமே அவர் இணையற்றவர் என்பதனால்தான்.

அவர் புதுக்கோட்டையிலே பிறந்தார். தகப்பனார் **ஸ்ரீ ராமசாமிபிள்ளை**; தாய் **ஸ்ரீமதி அமராவதி அம்மையார்.** தாயில்லாப் பிள்ளையாக வளர்ந்தார். மனம் படிப்பிலே செல்லவில்லை; உடல் நல விளையாட்டுக்களிலும்

ப்யிற்சியிலுமே லயித்தது. அதன் பயனும் குடும்பத்து நிலையும் குமரப் பருவத்தின் எல்லையில் அவரை அரண்மனைக் காவலனாக ஆக்கின. ஆனால் அவருக்கு அந்த உத்தியோகம் பிடிக்கவில்லை. மனத்திலே லயத்தின் நாட்டம்; விரல்களில் தாளத்தின் ஓட்டம். பானைபற்றிப் பரபரப்பாக வாசித்து இன்பங்கண்ட வண்ணம் இருந்தார். முடிவில் அந்நாளில் லயத்துறையில் இணையற்ற மேதையாகத் திகழ்ந்த ஸ்ரீ மான்பூண்டியா பிள்ளை அவர்களை அடைந்தார். அவர் கண் திறந்து விட்டார். கலை ஓரளவு கைவரப் பெற்றதும் ராமநாதபுரம் சென்றார். சேதுபதி அவர்கள் ஆதரவில் சிறிதுகாலம் இருந்தார்.

ஒரு சமயம் மிருதங்க வாத்திய மேதை தஞ்சை **ஸ்ரீ நாராயணசாமி அப்பா** அவர்களைச் சந்தித்தார். அவர் உபதேசப்படி கடம் வாசிப்பதை விடுத்து, அவர் ஆசியோடு அளித்த மிருதங்கத்தை ஏற்று வாசிக்கலானார். அதுமுதல் ஸ்ரீ தட்சிணாமூர்த்தி பிள்ளை இசையுலகில் எல்லாரும் விரும்பும் கலை மணியாகத் திகழலானார்.

அந்த நாளில் பிரகாசித்த பெரிய பெரிய மேதைகளில் எவரும் அவரைத் தமக்குப் பக்கவாத்தியம் வாசிக்குமாறு ஆவலோடு அழைப்பதுண்டு. காலம் செல்லச் செல்ல, கச்சேரிகளில் அவர் வாத்தியத்தை ரசிப்பதற்கென்று கூடும் ரசிகர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாயிற்று. லயத் துறையில் அவர் பெற்றிருந்த ஆற்றல் அளவிட்டுக் கூற இயலாதது. எனினும் தம் திறமைக்கே அவர் முழுப் பெருமையையும் தேட முயல்வதில்லை, பாடுபவரையும் முன்னே அமர்ந்து கேட்பவர்களையும் மறந்து செயலில் ஈடுபடமாட்டார்.

'பக்க வாத்தியம் பக்குவ் வாத்தியமாக இருந்தால்தான் பாட்டு எடுபடும்; அப்போதுதான் ரசிகர்

களின் உள்ளம் பூரண மகிழ்ச்சி பெறும்; அந்த மகிழ்ச்சி யிலே தம் சேவைக்குரிய பங்கு எப்போதும் உண்டு; அப் படிக் கிடைக்கும் பாராட்டுத்தான் உயர்ந்த பாராட்டு; ஜாலம் புரிந்து வாசித்துப் பெறுகிற தனிப்புகழ் உயர்ந்த தாக ஆகாது' என்ற பெரும்புத்தி உடையவர். அதனுல் அவர் வாசிப்புத் தனி வாசிப்பாக இராது. பாட்டுடன் இழையும் கமகக் கோவையாகவே மிளிரும். கலை நுட்பங் களை ஆராய்ந்து சிந்தனையை விரயமாக்க மாட்டார். தம் தரத்திற்குக் குறைந்தவர்கள் பாடினுலும் அவர்களையும் தம் அநுசரிப்பான உயர்ந்த வாசிப்பின் மூலம் சிறந்த இசை மணியாக ரசிகர் எதிரில் சோபிக்கச் செய்வார். மிருதங்கத் திற்கே இயல்பான சுநாதம் சிறிதும் கெடாத முறையில் சொற்களைப் பாகுபாடு செய்து இனிமை ததும்ப வாசிப்பார்.

தெளிவான ஞானம் உடைய தேர்ந்த வித்துவான் களின் கச்சேரிகளில் பாட்டின் போக்குக்கு, 'சொன்னது சொன்னபடி' வாசியாமல் எதிர் நடையிலே கணகண வென்று முழக்கஞ் செய்வார். விவரம் அறிந்தவர்கள் விஷயந் தெரிந்து ஆனந்தமடைவர்; மற்றவர்களும் உணர்ச்சி வசமாகி மகிழ்ச்சி பெறுவர். பாடகர் கல்பனு ஸ்வரம் பாடுகிறபோது பின்பற்றி வாசித்துக்கொண்டே வந்து பல்லவி எடுப்பின்போது ஒவ்வொரு முறையினும் புதுப் புதுக் கற்பனைக் கோலங்களைப் புனைந்து கேட்பவ ரைப் பரவசமுறச் செய்வார். அச் சந்தர்ப்பங்களில் இடத் திற்கேற்றவாறு வல்லின மெல்லின ஓசை நயங்களைப் புகுத்தி அவர் அழகுபடுத்துவது அதி அற்புதம்!

மிருதங்கத்தை விட்டு அவர் கஞ்சிரா வாசித்த காலங் களில் ரசிகர்கள், 'ஓ! இவர் மிருதங்க வாசிப்பை விட, கஞ்சிரா வாசிப்பில் அபாரத் திறமை உடையவர்' என ஒரு முகமாகப் போற்றினுர்கள். அவர் திறமையில், எடுத்த

வாத்தியங்கள் எல்லாமே சிறப்பைப் பெற்றன. தனி ஆவர்த்தனத்தில் மிருதங்கத்தின் நாதப் பெருமைக்கு எதிரில் கஞ்சிரா சோபை இழந்துவிடுவது இயல்பு. ஆனால் அவர் கஞ்சிராவைக் கையாண்ட முறையில், அவர் வாசித்து நிறுத்திய பின்பு எவ்வளவு உயர்வாக மற்ற வாத்தியங்கள் ஒலித்தாலும் எடுபடுவதில்லை.

கலையில் மிகத் தேர்ந்த ஸ்ரீ தட்சிணாமூர்த்தி பிள்ளை பண்பில் மிக மிக உயர்ந்தவர். அவர் பண்புகளில் முக்கியமாக எடுத்துக் கூறவேண்டியவை; தெய்வ பக்தி, குரு பக்தி, கலை பக்தி, உயிர்களிடத்து அன்பு, பற்றற்ற தன்மை—ஆகியன. அவர் இடையறாது பஜித்து வந்த கடவுள் முருகப் பெருமான். ஆறுபடை வீடுகளில் உற்சவம் நடைபெறும்போது அவர் தீவிர மௌன விரதம் இருந்து, அடியார்க்கு அமுது படைத்து, கலைத் தொண்டாற்றி இறைவனை வழிபடும் மேன்மையை நாளெல்லாம் கூறலாம்.

கச்சேரி மேடைகளில் குருவோடு அமர்ந்து வாசித்த சந்தர்ப்பங்கள் பல. குருவுக்கு இணையாக அவர் வியாபகம் பெற்றுவிட்ட காலத்தும் குரு கச்சேரி நடுவே, மேடைமீது, பகிரங்கமாகக் கடிந்துகொள்வார்; இவர் வாய் புதைத்துச் சிரம் தாழ்த்துவார். அவருடைய கலை பக்தி நாடறிந்தது. உயிர்களிடத்து அவர் அன்பு செலுத்துகிற முறை, 'எல்லா உயிர்களும் ஈசனே' என்ற தத்துவங் கொண்டது. 'ஆண்டவனே' என்றுதான் அனைவரையும் அழைப்பார். வயசுக் கிரமம் பார்ப்பதில்லை. சின்னவர் பெரியவர் எல்லாருமே அவருக்கு ஆண்டவ சொரூபந்தான்!

அந்தப் போக்கிலே சாதுக்களுக்கு அவர் செய்திருக்கிற சேவை சொல்லி மாளாதது. தம் வசம் உள்ள அனைத்தையும் ஏழைகள் பொருட்டுச் செலவிடுவார். தம்மிடம் ஏதும் இல்லாதபோது இருப்பவரைக் கொண்டு ஏழை

களுக்கு உதவச் செய்வார். எப்பொழுது பார்த்தாலும் ஏழெட்டுப் பேராவது அவரைச் சூழ்ந்து இருப்பார்கள். சில சமயம் சூழ இருப்பவர்களின் எண்ணிக்கை கணக்கில் அடங்காது. அவ்வளவு பேருடனும் தனவந்தர் ஒருவர் இல்லத்தில் முகாம் இடுவார். தனவந்தர் இவர் பேரை மட்டுமே கேள்விப்பட்டவராயிருப்பார். ஆனால் அவர் செய்கிற உபசாரமோ! ஸ்ரீ தட்சிணாமூர்த்தி பிள்ளை தம் இல்லத்திற்கு விஜயம் செய்ததைத் தேவகணங்கள் சூழச் சிவபெருமானே விஜயம் செய்ததாகத்தான் தனவந்தர் கருதுவார்.

இப்படியாகப் பலவகையாலும் உயர்ந்த அவரிடம் ஜனங்களுக்கு விவரித்துக் கூறத் தெரியாத ஒரு பக்தி, மதிப்பு, அன்பு. அவர் வாசிக்கும் கச்சேரிகளில் செல்வாக் கெல்லாம் அவருக்குத்தான். அவர் வாசிக்கிறார் என்பத னாலேயே கூட்டம் விழி பிதுங்கும். ஞானமுடையவர்கள், மற்றவர்கள் எல்லாருமே அவரை நேசித்தனர். தயாள குணமுடைய அவர் குறித்த நேரத்தில் மேடைக்கு வர வில்லை என்றால் அதற்கு அவர் தயாளமேதான் காரணமாக இருக்கும். 'வழியிலே எங்காவது ஆண்டவன் பக்தியில் ஈடுபட்டிருப்பார், அல்லது ஆண்டவனின் பிரதிநிதிகளாகிய உயிர்களுக்கு அன்பு செய்வதில் ஈடுபாடு கொண்டிருப்பார்' என்று எல்லாருக்கும் ஒரு நம்பிக்கை. அதனால் கால தாம தத்தை யாருமே பொருட்படுத்துவதில்லை. அதற்கேற்ப அவர் மலர்ந்த முகத்தோடு, குவித்த கரத்தோடு, தாழ்த்திய சிரத்தோடு மேடையை அடைந்து மிருதங்கம் அல்லது கஞ்சிராவை எடுத்து ஒரு 'சாப்பு'க் கொடுத்தால் போதும்; சபை ஆனந்த ஆரவாரத்தால் கலகலக்கும். ஐந்தே நிமிஷத் துள் கணகண வென்ற நாத முழக்கத்தால் அனைவரையும் ஆனந்த சாகரத்தில் ஆழ்த்திவிடுவார்.

அன்றும் அப்படித்தான். திருவல்லிக்கேணி பார்த்த சாரதி சபையில் அவ்வளவு பேரும் வாடிய முகத்துடன் காத்துக்கொண்டிருக்க ஸ்ரீ தட்சிணாமூர்த்தி பிள்ளை பாக்கப் பாக்க அவையினுள் பிரவேசித்தார். மக்களின் சந்தோஷம் எல்லையைக் கடந்தது. கரகோஷம் வான் முகட்டை எட்டிற்று. நிர்வாகிகளின் உள்ளம் பளு நீங்கப் பெற்று நிம்மதியும் ஆனந்தமும் அடைந்தது. அவர் மேடையை அடைந்து அமர்ந்ததும் கச்சேரி துவக்கமாயிற்று.

வர்ணம் முடிந்ததும் **ஸ்ரீ டபிள்யூ. துரைசாமி ஐயங்கார்** அவர்கள் இசைக் கலைஞர்கள் அனைவருக்கும் மாலை சூட்டி மரியாதை செய்து சில வார்த்தைகள் பேசினார்:

"இவ்வளவு நேரமும் நாம் அனைவரும் பொம்மைகளாகக் காட்சி அளித்தோம். உள்ளம் நிம்மதியற்றுத் தவித்துக் கொண்டிருந்தது. ஸ்ரீ தட்சிணாமூர்த்தி பிள்ளை அவர்களைக் கண்டதுமோ? உள்ளம் குதூகலத்தால் துள்ளுகிறது; இருதயம் ஜீவன் பெற்று இயங்குகிறது. அவர் காலப் பிரமாணத்தை நன்கறிந்த தாளவாத்திய விற்பன்னர். ஆகவே தவிர்க்க முடியாத அசந்தர்ப்பம் ஏதாவது இருந்தாலன்றி அவர் இவ்வாறு செய்ய நியாயம் இல்லை; செய்ததனாலும் பாதகம் இல்லை. அத்தனைக்கத்தனை மத்தள வாத்தியத்திலே, காலப் பிரமாணத்திலே லயித்து ஜாலங்கள் புரிவார். நாம் கேட்டு இன்புறலாம்."

வானதிரும் கரகோஷம். மறுபடி கச்சேரி தொடர்ந்தது.

## 18. ஓட்டமான பாட்டு

**(1926)**

சென்னை திருவல்லிக்கேணியில் ஸ்ரீ வேங்கடேசுவரா அச்சகத்தின் உரிமையாளர் **ஸ்ரீ ரங்கநாதம் செட்டியார்**

அவர்கள் இல்லத்திலே திருமண வைபவம். அதில் ஸ்ரீ ஐயங்காரின் கச்சேரி. மதுரை ஸ்ரீ சுப்பிரமணிய ஐயர் அவர்கள் வயலின்; மதராஸ் ஸ்ரீ வேணு நாயக்கர் அவர்கள் மிருதங்கம்.

வயலின் வித்துவான் மதுரை ஸ்ரீ சுப்பிரமணிய ஐயர், பிரபல வயலின் வித்துவான் கரூர் ஸ்ரீ சின்னசாமி ஐயர் அவர்களின் சிஷ்யர்; பிரபல சங்கீத வித்துவான் ஸ்ரீ ஜி. என். பாலசுப்பிரமணியம் (பி. ஏ., ஆனர்ஸ்) அவர்களின் குரு. தற்போது அவர் சென்னை யுனிவர்ஸிடியில் வயலின் வாத்தியப் பகுதியின் விரிவுரையாளராகப் பணியாற்றி வருகிறார்.

மேற்குறித்த கச்சேரிக்கு ஸ்ரீ ஜி. என். பி. சென்றிருந்தார். முதல் முதலாக ஸ்ரீ ஐயங்காரின் கச்சேரியைக் கேட்டார். அப்போது அவருடைய வயசு பதினாறு. சென்னை வெஸ்லி கல்லூரி மாணவர்; சங்கீத வித்தியார்த்தி. ஒரே சமயத்தில் இரண்டு வித்தைகளில் ஈடுபட்டு இரு துறைகளிலும் மேம்பாடடைந்தவர் அவர்.

இவருடைய தகப்பனார் ஸ்ரீ ஜி. வி. நாராயணசாமி ஐயர் பி. ஏ., எல். டி. சொந்த ஊர் தஞ்சை ஜில்லாவில் உள்ள கூடலூர். சிறந்த குணசாலி. மதுரை ஸ்ரீ சுப்பிரமணிய ஐயரோடு கரூர் ஸ்ரீ சின்னசாமி ஐயரிடம் சங்கீத அப்பியாசம் பெற்றவர். தெளிவான ஞானமும் தேர்ந்த ரசிகத் தன்மையும் உடையவர். சென்னை திருவல்லிக்கேணி ஹிந்து ஹைஸ்கூலில் ஆசிரியராகப் பணியாற்றித் தலைமை ஆசிரியர்ப் பதவிக்கு உயர்ந்தவர். ஸ்ரீ ஜி. என். பி. யின் முதல் குரு அவரே தான். பிறகுதான் மதுரை ஸ்ரீ சுப்பிரமணிய ஐயர்.

ஸ்ரீ ஜி. என். பி. 1929-இல் ஆனர்ஸ பட்டம் பெற்றார். பிறகு தம் முழு உழைப்பையும் கவனத்தையும் இசைத்

துறையிலேயே திருப்பி மேன்மை பெற்ருர். 1939-இல் திருவனந்தபுரம் ஆஸ்தான வித்துவாஞகவும் 1941-இல் எட்டையபுரம் ஆஸ்தான வித்துவாஞகவும் பதவிகள் ஏற்ருர். இன்று பிரபல பாடக பாடகிகளாக உள்ளவர் பலரின் குருவாக விளங்குகிருர். தற்போது சென்னை ரேடியோ நிலையத்தில் இசைத்துறை அதிகாரியாகப் பணியாற்றி வருகிருர். இவருடைய அற்புதமான, பாமர-பண்டித ரஞ்சகமான இசையில் ரசிகர்களுக்கு அளவு கடந்த மோகம் உண்டு. அவர் ஸ்ரீ ஐயங்காரின் சங்கீதம் பற்றிக் கூறுகிருர் :

"....ஸ்ரீ ஐயங்கார் அவர்களை அதற்கு முன் பல முறை பார்த்திருக்கிறேன். ஆனல் அவருடைய கச்சேரியை முதல் முறையாகக் கேட்டது 1926-இல்தான். அப்போது எனக்குப் பதிஞறு வயசு இருக்கும். அதன் பின்னர், அவருடைய பல கச்சேரிகளைக் கேட்ட பின்புங்கூட அன்று பதிந்த முதற் கச்சேரி இன்றும் என் உள்ளத்தினின்றும் அழியவே இல்லை.

"........'ஸ்ரீ ஐயங்கார் அவர்கள்' என்று சொல்கிற மாத்திரத்திலேயே உள்ளூற உணர்வு பொங்குகிற அளவில் அவருடைய சங்கீதத்தில் எனக்குப் பக்தி உண்டு. கடந்த முப்பது ஆண்டுகளாக நான் அவர் சங்கீதத்தை விடாமல் அநுபவித்து வருகிறேன். அவர் வழிகளை அளவற்ற ஆர்வத்துடன் பின்பற்ற முயன்று பயனும் அடைந்து வருகிறேன். இன்று என் இசையிலே ஏதாவது சிறப்பான அம்சங்கள் இருக்குமாஞல் அவற்றிற்கு உரிய பாராட்டு அவரைச் சார்ந்ததாகும். என் வரையில், 'கர்நாடக சங்கீதம் என்ருல் அரியக்குடி ஐயங்கார் அவர்கள்' என்பது அசைக்க முடியாத சித்தாந்தம்.

"அப்போது என் தகப்பனார் சென்னை திருவல்லிக்கேணி ஸ்ரீ பார்த்தசாரதி சங்கீத சபையின் காரியதரிசியாகப் பணியாற்றிவந்தார். அந்தத் தொடர்பினாலும் நெருங்கிய நட்பினாலும் ஸ்ரீ ஐயங்கார் அவர்கள் அடிக்கடி எங்கள் இல்லத்திற்கு வருவதுண்டு.

"சின்னப் பிராயத்திலே நான் படுவேகமாகப் பாடுவேன். என் தகப்பனார், 'ஓடாதே, ஓடாதே' என்று கடிந்துகொள்வார். தம் நண்பர்களிடமும் இதைப்பற்றிக் குறைந்துகொள்வார்.

"ஒருநாள் ஐயங்கார் அவர்கள் வந்தபோது நான் பாடிக்கொண்டிருந்தேன். சற்றுநேரம் இருந்து பாட்டைக் கேட்டார். பிறகு என் தகப்பனாரிடம் சொன்னார்:

" 'இந்தப் பாட்டையா நீங்கள் ஓயாமல் குறைகூறிக் கொண்டிருக்கிறீர்கள்? வேகமாகப் பாடுவது இளமையின் துடிப்பினால் ஏற்படுகிற செயல். காலம் செல்லச் செல்லத் தன்னாலே நிதானப்பட்டுவிடும். அவனுக்கு நல்ல எதிர் காலம் இருப்பதை அவன் பாட்டு எடுத்துச் சொல்கிறது. நீங்கள் உற்சாகமாகவே இருக்கவேண்டும். அவனுக்கும் உற்சாகத்தையே ஊட்டவேண்டும். ஓயாமல் குறை சொல்லிக்கொண்டிருப்பதைக் கேட்டு இளம் உள்ளம் சாம்பிவிட்டால் அப்புறம் அங்கே மலர்ச்சியைக் காணமுடியாது.'

"ஐயங்கார் அவர்களின் பேச்சினால் என் தகப்பனாரின் மனக்கவலை உடனே நீங்கிவிட்டது. ஆனால் என்னுடைய ஓட்டமான பாட்டுமட்டும் மேலும் சிறிது காலம் வரையில் கட்டுப்பாட்டிலே வராமல்தான் இருந்தது. ஐயங்கார் அவர்களின் கச்சேரிகளைக் கேட்டுக் கேட்டு என் சங்கீதம் பக்குவம் பெறலாயிற்று. ஆகவே அன்றுமுதல் இன்று வரையில் ஸ்ரீ ஐயங்கார் அவர்களை என் ஆதரிச குருவாகப்

பாவித்து வருகிறேன்"—என்று அதி விநயத்தோடு கூறுகிறார் ஸ்ரீ ஜி. என். பி. அவர்கள்.

ஏகலைவன் துரோணாசாரியாரிடம் நேரில் வில் வித்தை கற்கவில்லை. ஆனால் துரோணரே ஏகலைவனின் குரு. இங்கேயும் அப்படித்தான்.

## 19. இன்பமும் துன்பமும்

**(1927—1928)**

ஸ்ரீ ராமானுஜ ஐயங்கார் பெண் சௌபாக்கியவதி ஜானகிக்கு ஆறாவது பிராயம் நடைபெறுகையில் ஸ்ரீ ஐயங்கார் மற்றொரு பெண் குழந்தைக்கும் தந்தை ஆனார். அந்தக் குழந்தையும் சர்வ லட்சணங்களும் பொருந்தியதாகவே இருந்தது. அதன் முகத்திலே வீசிய லட்சுமீகரத்தைக் கண்ட பெரியோர்கள் அதற்கு லக்ஷ்மி என்றே பெயரிட்டனர்.

கொள்ளு என்றால் வாயைத் திறப்பதும் கடிவாளம் என்றால் வாயைக் கெட்டியாக மூடிக்கொள்வதுமான முறையை வாழ்க்கையிலே கடைப்பிடித்தல் சாத்தியமா? இன்பமும் துன்பமும் கலந்ததுதானே மனித வாழ்க்கை? எது வரினும் ஏற்கவேண்டியதே.

ஸ்ரீ ஐயங்காரின் குடும்பத்திலே 1927-ஆம் ஆண்டிலே அவருக்கு இரண்டாவது பெண் குழந்தை பிறந்த வைபவம் எல்லோருக்கும் மிகுந்த சந்தோஷத்தை உண்டு பண்ணத்தான் செய்தது. ஆனால் அடுத்ததான 1928-ஆம் ஆண்டிலே நடைபெற்ற மற்றொரு நிகழ்ச்சி அதற்கு நேர் மாறான நிலையைத்தான் அனைவரிடத்தும் உண்டுபண்ணி விட்டது.

ஸ்ரீ ஐயங்காரின் அன்னை ஸ்ரீமதி செல்லம்மாள் நோய் வாய்ப்பட்டுப் படுக்கையிலே விழுந்தார். வைத்தியங்கள் பலன் அளிக்கவில்லை; விரைவில் இறைவனடி சேர்ந்தார்.

சீமந்த புத்திரன் இருந்து கர்மாக்களை நடத்தும் பேறு இல்லாதபடி, தமக்கு முன்னதாகவே தம் கண்பார்க்க அவர் கால கதியடைந்தாலும் மற்ற அனைவரும் க்ஷேமமாக இருக்கிற நிலையில் பர்த்தாவின் சந்நிதியில் ஜீவனை நீத்த அவரைப் புண்ணியவதி என்றே எல்லோரும் கொண்டாடினார்கள்.

கைப்பிடித்த நாளாய்த் தம் நிழல் போல உடன் இருந்து வாழ்க்கையில் நேரக்கூடிய இன்ப துன்பங்களில் எல்லாம் வாடாத முகத்துடனும் சோராத உள்ளத்துடனும் ஈடுகொடுத்த தர்மபத்தினியைப் பிரிந்த ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார் மிக்க வியாகூலத்திற்கு உள்ளானார். விவேகியானதால் தாம் தேறி, பிறரையும் தேற்றி மக்களைக்கொண்டு ஈமச் சடங்குகளை முறைப்படி மிக்க விமரிசையாக நடத்தச் செய்தார்.

பிள்ளைகளில் இளையவர்களான ஸ்ரீ ராமாநுஜ ஐயங்கார், ஸ்ரீ ராகவ ஐயங்கார் இருவரும் தாயின் சாயல். அதற்கு ஏற்ப, தாயின் வியோகத்தில் அவர்கள் கரைகாணாத துயரத்திற்கு உள்ளாகித் தவிக்கத்தான் செய்தார்கள்.

# 20. வாழையடி வாழை

(1929)

ராமநாதபுரம் சம்ஸ்தானத்தில் இன்று பட்டத்தில் இருந்துவரும் மகாராஜா ஸ்ரீ ஷண்முக நாகநாத சேதுபதி அவர்களுக்கு 1929-இல் திருமண வைபவம் அதிவிமரிசை

யாக நடைபெற்றது. என்றுமே இசைக் கலையைப் போஷித்து வரும் சம்ஸ்தானம் அது. மகாராஜாவின் திருமண வைபவத்தை முன்னிட்டுப் பிரபல வித்துவான்கள் பலரின் கச்சேரிகள் நடைபெற்றன. அநேகம் வித்துவான்கள் வைபவத்திற்கு வந்திருந்தனர்.

தற்போது சென்னையில் சிறப்புடன் நடைபெற்று வரும் **கர்நாடக சங்கீத மத்தியக் கல்லூரி** (ஸெண்ட்ரல் காலேஜ் ஆப் கர்நாடிக் மியூஸிக்) யின் பிரின்ஸிபாலாகப் பதவி வகித்துவரும் சங்கீத வித்துவான் **முசிரி ஸ்ரீ சுப்பிரமணிய ஐயர்** அவர்களின் கச்சேரி சிறப்பாக நடைபெற்றது. மதராஸ் ஸ்ரீ பாலகிருஷ்ணையர் வயலின், மதராஸ் ஸ்ரீ வேணு நாயக்கர் அவர்கள் மிருதங்கம், புதுக்கோட்டை ஸ்ரீ தட்சிணாமூர்த்தி பிள்ளை கஞ்சிரா.

குறிப்பிடத்தக்க மற்றொரு கச்சேரி ஸ்ரீ ஐயங்காருடையது. 'ஸ்ரீ ராமாநுஜ ஐயங்கார் சிறப்பாகக் கச்சேரி செய்து வருகிறார்; சென்ற இடங்களிலெல்லாம் புகழ்பெற்று வருகிறார்' என்ற செய்தி ராமநாதபுரம் அரண்மனைக்கு எட்டிக்கொண்டே இருந்தது. மகாராஜா அனைவரையும்விட அதிகமான சந்தோஷத்தை அடைந்துவந்தார். விரைவில் ஸ்ரீ ஐயங்காரின் இசையைக் கேட்கவேண்டும் என்று ஆவல் கொண்டிருந்தார். அவருடைய திருமண வைபவமே அதற்கு உரிய சந்தர்ப்பமாக அமைந்தது. மலைக் கோட்டை ஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளை வயலின், கும்பகோணம் ஸ்ரீ அழகனம்பி பிள்ளை மிருதங்கம், புதுக் கோட்டை ஸ்ரீ தட்சிணாமூர்த்தி பிள்ளை கஞ்சிரா—இந்த உயர்ந்த பக்க வாத்திய ஜமாவோடு ஸ்ரீ ஐயங்கார் கச்சேரி ஜம்மென்று அமைந்தது.

ஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளைக்கு அந்த வைபவத்தில் ஸோலோ கச்சேரி திட்டமிடப் பெற்றிருந்தது. அவருக்கு அப்போது உடல் நலம் பாதிக்கப் பெற்றிருந்ததால் வைப

வத்தில் கலந்து கொண்டு இருந்து விட்டுப் போவது என்ற நோக்கத்தோடு வந்தவர் தாமாக விரும்பி ஸ்ரீ ஐயங்காருக்கு வாசித்துச் சிறப்பித்தார்.

"ஸ்ரீ பூச்சி ஐயங்காரால் இந்தச் சம்ஸ்தானம் பெருங் கீர்த்தியைப் பெற்றது. பொருளைத் தேடுவது கஷ்டம்; அதைக் காப்பாற்றுவது அதனிலும் கஷ்டம். ஸ்ரீ பூச்சி ஐயங்காரால் ராமநாதபுரம் பெற்றபுகழ் ஸ்ரீ ராமாநுஜ ஐயங் காரால் நன்கு காப்பாற்றப் பெறும்" என்று அவர் கச்சேரியைக் கேட்ட மகாராஜாவும் மற்றவர்களும் பேசிக் கொண்டார்கள்.

அன்று முதல் ஸ்ரீ ஐயங்காருக்கு அடிக்கடி ராமநாத புரம் சென்று இன்னிசைக் கச்சேரி செய்யும் வாய்ப்பு ஏற்பட்ட வண்ணம் இருந்தது.

## 21. சஞ்சாரம் கீழே; புகழ் மேலே!

**(1929)**

'சங்கீதம் தங்கத்தைப் போன்றது. அதைக் கையாள் பவரின் திறமையிலேதான் இருக்கின்றன, உயர்வும் தாழ் வும்' என்கிற உண்மையை வெகு சீக்கிரத்திலேயே உணர்ந்து கொண்டவர் ஸ்ரீ ஐயங்கார். சாரீரத்தை வகை யறிந்து ஆள்வது சங்கீதத்தின் சிறப்புக்கு மிகமிக இன்றி யமையாத சாதனம் என்பதையும் தீர்மானித்துக் கொண் டார். அவர் உயர்ந்த குருமார்களிடம் சிறந்த முறையிலே குருகுல வாசஞ் செய்தும், பல பெரிய வித்துவான்களின் இசையைக் கேட்டும், குருவோடு பல முறை சேர்ந்து பாடி யும் சிறந்த கலையம்சத்தைப் பெற்றிருந்தார். தீவிர சாதக மூலம் அதை நன்கு செப்பனிட்டுக் கொண்டார். தமக்

கெனத் தனிப் பாணி ஒன்றை வகுத்துக் கொண்டார். கச்சேரிகளில் நன்கு பாடி வந்தார். அவருடைய புகழ் காட்டுத் தீப்போல் எங்கும் பரவி முழங்கலாயிற்று.

பாடிப் பாடி ரீங்காரம் பெற்றுவந்த அவருடைய சாரீரத்திலே மற்ற எவரிடமும் காணமுடியாத ஒரு தனி மெருகு ஏறலாயிற்று. தவிர்க்க முடியாதபடி எப்பொழு தாவது உடல் சுகக் குறைவோடு அவர் கச்சேரி செய்ய நேர்ந்தால் அதிலே குறை பிறருக்குத் தெரியாதபடி சாமர்த்தியமாகச் சமாளிப்பார்; அவருடைய மெருகேறிய சாரீரம் இதற்கெல்லாம் நன்கு உதவும்.

1928—ஆம் ஆண்டில் அவர் பிறந்து வளர்ந்து பழகிய தேவ கோட்டையில் பிரமுகர் ஒருவர் இல்லத்தில் வைப வம் ஒன்று நிகழ்ந்தது. அதில் ஸ்ரீ ஐயங்காரின் கச்சேரி. மைசூர் ஸ்ரீ டி. சௌடையா அவர்கள் வயலின்; புதுக் கோட்டை ஸ்ரீ தட்சிணாமூர்த்தி பிள்ளை மிருதங்கம்.

அப்போது ஸ்ரீ ஐயங்கார் பெரும்பாலும் அரியக்குடி, காரைக்குடி முதலிய ஊர்களிலும் மற்றும் வெளி இடங் களிலுமாக இருந்து வந்தார். ஆகவே பக்கவாத்திய வித்து வான்களைப் போலவே அவரும் கச்சேரியன்றே தேவ கோட்டைக்கு வந்து சேர்ந்தார்.

எல்லோரும் அவர் வருகை கண்டு ஆனந்தங் கொண்டனர். அன்பு ததும்ப இன்ப மொழிகள் பேசி அளவளாவினர். மற்றவர்கள் தாம் அன்பு மேலீட்டால் வாய் ஓயாது பேசினார்களே தவிர ஸ்ரீ ஐயங்கார் வாயே திறக்கவில்லை. அனைவர் பேச்சுக்கும் ஒரே புன்னகைதான். ஆனால் நீண்ட நேரம் அப்படியே இருந்துவிட முடிகிறதா? யாரோ ஓர் அன்பர் ஏதோ ஒரு கேள்வியைக் கேட்டு வைத்தார். அதற்கும் ஸ்ரீ ஐயங்கார் ஜாடை மூலமே பதில்

இறுத்தார். அடுத்தடுத்துப் பல கேள்விகள் தொடர்ந்தன. வாய் திறந்து பேசும் நிர்ப்பந்தம் ஏற்பட்டு விட்டது!

சூழ இருந்தவர்கள் திடுக்கிட்டனர். ஸ்ரீ ஐயங்காரின் வாயிலிருந்து காற்றும், தொண்டையிலிருந்து உருப்புரியாத சப்த ஜாலங்களுந்தான் வெளியாயினவே அன்றி வார்த்தையே புரியவில்லை. தொண்டை அப்படிப் பாறையாய்க் கட்டியிருந்தது.

"இந்த நிலையில் இன்று எப்படிக் கச்சேரி செய்ய முடியும் ?"

இப்படி அங்கிருந்த நண்பர்கள் கவலையோடும் ஏக்கத்தோடும் கேட்டனர். செய்தி வெளியே பரவிவிடும் போல் இருந்தது. ஸ்ரீ ஐயங்கார் உதட்டில் விரல் வைத்து, "உஷ் !" என்று ஜாடை செய்தார். பிறகு கஷ்டப்பட்டுப் பேசினார்:

"பெரிய இடம். சிறந்த ஏற்பாடுகள். -ஏராளக் கூட்டம். கல்யாணக்காரரோ மிகவும் வேண்டியவர். ஏற்பாடாகி இருக்கிற பக்கவாத்தியக் காரர்களோ பெரிய வித்துவான்கள். கச்சேரி என்று ஒரு மாசமாய்த் தமுக்கு அடித்துவிட்டு இப்போது நிறுத்தினால் நன்றாய் இருக்குமா? தயவு செய்து நீங்கள் என் சாரீர நிலையை அம்பலப் படுத்தாதிருங்கள். கச்சேரி சமயத்திற்கு என் குருநாதரின் ஆசியும் நாதப் பிரம்மத்தின் அருளும் எனக்குப் பக்கத்துணை இருந்து கை கொடுத்துக் காப்பாற்றும்."

உரிய நேரத்தில் கச்சேரி ஆரம்பமாயிற்று. சஞ்சாரம் முழுவதும் கீழேயேதான். மேல் ஸ்தாயி ஷட்ஜம் என்ற பேச்சே இல்லை. ஆனால் அது ஒரு குறை என்று யார் உள்ளத்திலாவது பட்டால்தானே? சுமார் மூன்றரை மணி நேரம் கச்சேரி நடைபெற்றது. தம்மை மறந்த நிலை

யிலேதான் எல்லாரும் கேட்டு ரசித்தனர். பிரமாதம் என்று புகழ்ந்தனர். ஸ்ரீ ஐயங்கார் வெற்றி பெற்றார்!

சாரீரம் மோசமாக இருக்கிற நிலையிலும் கச்சேரியைப் பிரமாதமாகச் சோபிக்கச் செய்யும் ஆற்றலில் அவருக்கு இணை அவர்தாம். அன்று மட்டும் அல்ல; இன்றும்—அறுபத்தாறுவது பிராயத்திலும்கூட—அந்த அம்சத்திற்கு அவரே சக்கரவர்த்தி!

## 22. கலைஞர் மெச்சிய கலைஞர்

**(1930)**

**ரா**மநாதபுரம் அரண்மனையில் ஒரு வைபவம். கலைஞர்களுக்கெல்லாம் அழைப்பு உண்டு. ஸ்ரீ ஐயங்காரும் சென்றிருந்தார்.

விழாவை முன்னிட்டுக் **காஞ்சீபுரம் ஸ்ரீ நயினா பிள்ளை** அவர்களின் கச்சேரி நடந்தது. பக்கவாத்தியங்கள்: மலைக்கோட்டை ஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளை வயலின், கும்பகோணம் ஸ்ரீ அழகநம்பி பிள்ளை மிருதங்கம், புதுக்கோட்டை ஸ்ரீ தட்சிணாமூர்த்தி பிள்ளை கஞ்சிரா, உமையாள்புரம் ஸ்ரீ சுந்தரமையர் கடம். சரியான ஜமா!

மறுநாள் ஸ்ரீ ஐயங்காரை அங்கே கச்சேரி செய்யும்படி மகாராஜா கேட்டுக் கொண்டார். ஸ்ரீ ஐயங்கார் மறுக்க வகை இல்லை. அவர்களிடையே அத்தகைய அன்புப் பிணைப்பு. ஆனால்....பக்க வாத்தியங்கள்?

ஸ்ரீ ஐயங்கார் இந்தப் பிரச்னையைக் கிளப்பியபோது மகாராஜா, "ஏன்? ஸ்ரீ நயினா பிள்ளை அவர்களுக்கு வாசித்தவர்களேதான். உங்களுக்கு அதிலே ஆட்சேபம் ஒன்றும் இல்லையே?" என்றார்.

"கரும்பு தின்னக் குமட்டுமா? எனக்கு ஆட்சேபம் இல்லை; அவர்கள் சௌகரியம் எப்படியோ ?" என்றார் ஸ்ரீ ஐயங்கார்.

"அவர்களுக்கும் சௌகரியந்தான்" என்றார் மகாராஜா.

பின்னர் அவர் ஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளையைத் தனிமையில் அழைத்துப் பேசினார்.

"நாளை அரியக்குடி ஐயங்கார் அவர்களை இங்கே கச்சேரி செய்யுமாறு கேட்டுக்கொண்டேன். அவருக்கு வாசிப்பதில் உங்கள் சௌகரியம் எப்படியோ?"

"கலைகளைப் புரக்கும் இந்த அரண்மனையிலே அசௌகரியம் என்ற சொல்லுக்கு என்றுமே இடம் கிடையாதே!"

ஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளையின் அழகான இந்தப் பதில் அடுத்த நாள் அங்கே ஸ்ரீ ஐயங்காரின் கச்சேரி வெகு பிரமாதமாக நடைபெறக் காரணமாயிற்று. அனைவருக்கும் பரமானந்தம்.

கச்சேரி முடிந்தபின் மகாராஜா சில வார்த்தைகள் பேசினார்: "இன்றையக் கச்சேரி சம்பந்தமாக முன்கூட்டி நான் பேசியது இரண்டே பேரிடந்தான்: ஒருவர் ஸ்ரீ ஐயங்கார் அவர்கள்; மற்றவர் ஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளை அவர்கள். ஏனைய கலைஞர்களுக்குப் பிறர் மூலமே குறிப்பு அறிவித்தேன். ஐயங்கார் அவர்களின் பாட்டும், பிள்ளை அவர்களின் வயலினும் இணையும்போது கந்தர்வ கானமாக இருக்கிறது. என்ன காரணத்தாலோ அத்தகைய கந்தர்வ கானம் அடிக்கடி பல இடங்களிலும் விரவி நடைபெறவில்லை. ரசிகர்களின் பாக்கியக் குறைவு என்றுதான் சொல்ல வேண்டும். ஆரம்ப காலத்தில் சில ஆண்டுகள் அப்படி நடைபெற்றது. மறுபடியும் நடைபெற வேண்டும் என்பது என் அவா. சந்தர்ப்பம் வெகு அழகாக வாய்த்துக்

கொண்டதால் அதற்கு இங்கேயே வித்து ஊன்றிவிட வேண்டும் என்ற நோக்கத்திலேதான் இந்தக் கச்சேரியை ஏற்பாடு செய்தேன். இது முதல் இவர்கள் இணைபிரியா திருந்து இசைக் கலைக்குத் தொண்டாற்ற வேண்டும் எனக் கோருகிறேன்.''

சபையில் மெல்லென நகையொலி எழுந்தது. எல்லோ ரும் குறிப்பாக ஐயங்கார் அவர்கள் முகத்தையும், பிள்ளை அவர்கள் முகத்தையும் நோக்கினர். அவர்கள் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்முறுவல் செய்துகொண்டனர். மற்ற வித்துவான்களுக்கு அந்நிலை அதிக மகிழ்ச்சியை அளித்தது. ஆனால்—மகாராஜா அவர்களின் அவா நிறை வேறவில்லை; அவர் ஊன்றிய வித்து முளைத்துத் தழைக்க வில்லை. அவர் கூறியபடி அது ரசிகர்களின் பாக்கியக் குறைவுதான் போலும்!

★

**ம**லைக்கோட்டையில் ஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளையின் இல்லம். இரவு நேரம். பிள்ளை அவர்கள் உணவு கொண்ட பின் சாய்வு நாற்காலியில் இருந்தபடி காற்று வாங்கிக் கொண்டிருந்தார். அருகே ஒரு சிறு மேசை. அதன்மீது கூஜாவில் தண்ணீர்; தட்டத்தில் தாம்பூலம். அருகே ஒரு புறமாகக் குருவின் அடுத்த கட்டளை என்ன என்று எதிர் பார்த்தபடி நின்றிருந்தார் சிஷ்யர். அவர் தற்போது பிரபல வயலின் வித்துவானாகத் திகழும் ஸ்ரீ **பாப்பா வேங்கட ராமையா அவர்கள்தாம்.** 1918-முதல் அவர் ஸ்ரீ பிள்ளை அவர்களிடம் குருகுல வாசத்தில் ஈடுபட்டிருந்தார்.

குரு பேசவில்லை. அவர் பார்வை எங்கோ லயித்திருந் தது; சிந்தனை எதிலோ ஈடுபட்டிருந்தது. ராமநாதபுரத்தி லிருந்து திரும்பியது முதலே அவர் இப்படி இருப்பதைக்

கவனித்த ஸ்ரீ பாப்பா, 'போன இடத்திலே ஏதோ விசேஷம் நிகழ்ந்திருக்க வேண்டும்' என எண்ணிக்கொண்டார்.

பிள்ளை அவர்கள் திடீரென்று பேசினார்; உள்ளத்தின் ஆழத்திலிருந்து உணர்ச்சிப் பிழம்புகளாகச் சில வார்த்தைகளை உதிர்த்தார்.

"......ஐயங்கார் மிக மிக நன்றாகத்தான் பாடுகிறார். நேற்று ராமநாதபுரம் அரண்மனையிலே ஆனந்த பைரவி பாடினார்; அடாடாடா! எவ்வளவு அழகாகப் பாடினார்!...." என்றார்.

மகாவித்துவான் திருக்கோடிகாவல் ஸ்ரீ கிருஷ்ணையர் காலத்திலேயே தலையெடுத்தவர் ஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளை. 'தோன்றிற் புகழொடு தோன்றுக' என்ற மூதுரைக் கிணங்க ஆரம்ப காலத்திலேயே வித்துவத் தன்மை நன்கு பரிமளிக்க அவைக்கு வந்தவர். ஸ்ரீ கிருஷ்ணையர் காலத்திலே வயலின் வாத்தியத்திலே ஸ்ரீ கிருஷ்ணையருக்குச் சமதையாக எவரும் இல்லை. அத்தகைய மேதை ஒரு சமயம் ஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளை சென்னைச் சபை ஒன்றில் வாசித்தபோது அங்கே விஜயம் செய்து வாசிப்பைக் கேட்டு அளவற்ற மகிழ்ச்சிகொண்டு, "அப்பனே! வாசிப்பு வெகு பிரமாதம்! எனக்குப் பின் இந்த வாத்தியத்தில் நீதான்" என்று பாராட்டி ஆசி கூறினார்.

அதன்படியே அவருக்குப் பின் நெடுங்காலம் வரையில் இணையற்ற வயலின் வித்துவானாகத் திகழ்ந்தவர் ஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளை. அது மட்டுமல்ல; அவர் விதரணை தெரிந்தவர். பண்பிலே சிறந்தவர். அண்டினவர்களை ஆதரிக்கும் அருள் மனம் கொண்டவர். பலராலும் பலகாலும் கொண்டாடப் பெற்ற உத்தம வித்துவ ரத்தினம்!

அத்தகைய மேதை ஸ்ரீ ஐயங்காரின் சங்கீதத்தை இப்படிப் புகழ்ந்தார். 'இவரே இவ்வளவு புகழ்வதானல் ராமநாதபுரத்தில் ஐயங்கார் அவர்களின் பாட்டு எப்படித் தான் இருந்திருக்க வேண்டும்!' என்று எண்ணிக்கொண்டார் ஸ்ரீ பாப்பா வேங்கடராமையா.

## 23. விளையாட்டுக் கச்சேரி

**(1930)**

பூடிகொண்டான் மிராசுதார் ஸ்ரீ **எம. ராமையர்** அவர்கள் இல்லத்திலே திருமண வைபவம் நிகழ்ந்தது. ஸ்ரீ ஐயங்காருக்குத்தான் அந்த ஊரில் உள்ளவர்கள் மிகவும் வேண்டியவர்கள் ஆயிற்றே; சிநேக முறையில் கல்யாணம் விசாரிக்க அவர் அங்கே சென்றிருந்தார். அதே முறையில் வயலின் வித்துவான் செம்மங்குடி ஸ்ரீ நாராயணசாமி ஐயரும் சென்றிருந்தார்.

எல்லாருங் கூடி உல்லாசமாகப் பேசிக்கொண்டிருந்தார்கள். ஸ்ரீ ஐயங்கார் பாடிக் கேட்க வேண்டும் என்று சிலர் ஆசைப்பட்டார்கள். அப்போது ஸ்ரீ ஐயங்கார் மிகப் பிரபல வித்துவானுகிப் பல காலம் கடந்திருந்தது. பல இடங்களுக்குச் சென்று மிகச் சிறப்பாகக் கச்சேரிகள் செய்து வருபவர். இருந்தும் தம் பெருமையை மறந்து அன்பர்களின் ஆசையை நிறைவேற்ற இசைந்தார். ஸ்ரீ நாராயணசாமி ஐயர் தம் வாத்தியத்தை அங்கே கொண்டு வந்திருந்ததால் ஸ்ரீ ஐயங்கார் பாட இசைந்ததும் அவர் தாமாகவே வயலின் வாசிக்க முன்வந்தார்.

ஒரு கச்சேரிக்கு வேண்டிய அம்சங்களில் இன்றியமையாதது, பாட்டின் பாதுகாப்பான தாள வாத்தியம். அங்கே தாள வாத்திய வித்துவான் யாரும் வந்திருக்கவில்லை.

அருகே அமர்ந்திருந்த சங்கீத வித்துவான் முடிகொண்டான் ஸ்ரீ வேங்கடராமையர் உடனே எழுந்து தம் இல்லம் நோக்கி விரைந்தார்; கஞ்சிரா வாத்தியத்துடன் திரும்பி வந்தார்; கச்சேரி ஆரம்பமாகிவிட்டது!

அரியக்குடி ஸ்ரீ ராமாநுஜ ஐயங்கார் பாட்டு; சேம்மங்குடி ஸ்ரீ நாராயணசாமி ஐயர் வயலின்; முடிகொண்டான் ஸ்ரீ வேங்கடராமையர் கஞ்சிரா.

விளையாட்டாகத் தொடங்கின செயல் இரண்டு மணி நேரப் பிரமாதக் கச்சேரியாக அமைந்து பரிமளித்தது.

## 24. "எவ்வளவு தூரம் கேட்கும்?"

**(1931)**

**அ**ந்த வேடிக்கையான சம்பவம் **1931**-இல் நிகழ்ந்தது. அப்பொழுது திருவையாறு ஸ்ரீ தியாகோற்சவத்தில் ஸ்ரீ ஐயங்கார் சின்னக் கட்சியின் பொறுப்பை ஏற்றுச் சிறப்புடன் நடத்தி வந்தார். அவ்விடத்தில் சின்னக் கட்சி, பெரிய கட்சி என இரண்டு கட்சிகள். சின்னக் கட்சியிலே பெரிய வித்துவான்கள் பாடுவார்கள்; இளம் வித்துவான்களுக்கு அங்கே இடம் கிடைப்பது அரிது. அங்கே இடம் கிடைக்காதவர்களுக்குப் பெரிய கட்சியிலே இடம் கிடைக்கும்.

"சிறிது என்று எண்ணலாகாது; 'சிறிது' என்ற சொல்லில் 'பெரிய றி' என்று வழங்கப் பெறும் வல்லினம் இருக்கிறது; அதேபோல, பெரிது என்று மலைக்கலாகாது; அதில் 'சின்ன ரி' என வழங்கப் பெறும் இடையினம் இருக்கிறது."

இப்படி ஸ்ரீ ஐயங்கார் விளையாட்டாகப் பேசுவதில் உள்ள இந்தக் கருத்தை மேற்குறித்த சின்னக் கட்சி-பெரிய கட்சிகளின் செயல்கள் நிரூபிக்கின்றன அல்லவா?

இளம் வித்துவான்களுக்குச் சின்னக் கட்சியிலே பாடுகிற வாய்ப்பு அரிதானாலும் பெரிய பெரிய வித்துவான்களின் சிறந்த சங்கீதத்தைக் கேட்கிற வாய்ப்புக்குப் பஞ்சமே இல்லை. ஆகவே, ஓயாமல் உயர்ந்த சங்கீதத்தை உளம் நிறையக் கேட்டு மகிழ்வதுதான் அவர்களின் வேலை.

அப்போதெல்லாம் ஸ்ரீ ஐயங்கார் பெரும்பாலும் ஆராதனை அன்றுதான் பாடுவார். அந்த வருஷத்திலும் அப்படியேதான் பாடினார். நிறைந்த பக்தியுடன் உளங் கசிந்து பாடினார். அனைவரும் மெய்ம் மறந்த நிலையிலே கேட்டுக்கொண்டிருந்தார்கள்.

இரவு பத்து மணிக்குக் கச்சேரி ஆரம்பம். ஏராளமான கூட்டம். அப்போதெல்லாம் ஒலிபெருக்கி இல்லை. எவரும் தம் சாரீர வன்மையைக் கொண்டுதான் சபையினரைத் திருப்தி செய்யவேண்டும். ஸ்ரீ ஐயங்கார் அந்த முறையிலே மிகச் சிறப்பு உடையவர். 'ரிச் வாய்ஸ்' அவருடையது. அவர் கீழே பாடுவது கூடச் சபையின் கடைசி எல்லை வரையில் கேட்கும்.

ஸ்ரீ ஐயங்கார் 'தக்'கிலே பாடிக்கொண்டிருந்தார். சங்கீத வித்துவான்கள் செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீநிவாச ஐயர், மதுரை ஸ்ரீ மணி ஐயர் இருவரும் சபையில் அருகருகே அமர்ந்து கேட்டு ரசித்துக் கொண்டிருந்தார்கள்.

'கும்' என்று பரவி நின்ற நாதக் கட்டு அவர்கள் இருவர் உள்ளங்களிலும் ஒரே சமயத்தில் வேடிக்கையான ஒரே விஷயத்தைத் தூண்டிவிட்டது. 'இந்த நாதம் எவ்வளவு தூரம் கேட்கும்? எல்லா இடங்களிலும் இந்த இடத்திலே கேட்பது போலவே கேட்குமா? இதை ஆராய்ந்து பார்க்கவேண்டும்' என்ற ஓர் ஆசை எழுந்தது. உடனே இருக்கை விட்டு எழுந்தார்கள். சபையைக் கடந்து ஒதுக்குப் புறமாக நடந்தார்கள். முன் புறத்திலே வெகு தூரம்

சென்றார்கள். அங்கும் ஸ்ரீ ஐயங்காரின் இசை ஒலி மிக அருகே கேட்பது போலவே கேட்டது.

அவர்கள் மனம் திருப்தியுறவில்லை. 'இப்படியே பின்புறத்திலும் கேட்குமா?' என்ற கேள்வி எழுந்தது. அதையும் ஆராய்ந்துவிட வேண்டும் என்ற அவாத் தோன்றியது. உடனே வந்த வழியே திரும்பி நடந்தார்கள். நடந்து கொண்டே இருந்தார்கள்; ஸ்ரீ ஐயங்காரின் சங்கீதம் நாதக் கட்டுக் குன்றாமல் கேட்டுக்கொண்டே இருந்தது. கடைசி எல்லை வரையில் சென்றார்கள். அங்கே உள்ள சுவர் எதிர்ப்பட்டு அவர்கள் நடையைத் தடுத்து நிறுத்திற்று; ஆனால் ஸ்ரீ ஐயங்காரின் நாத வெள்ளத்தை அதனால் தடுக்க முடியவில்லை.

## 25. கன்னிகா தானம்

(1931)

சங்கீத உலகில் ஸ்ரீ ஐயங்கார் மிகுந்த கீர்த்தியுடன் பால சூரியனைப் போல் பிரகாசித்துக் கொண்டிருந்தாலும் குடும்ப வாழ்க்கை சம்பந்தப்பட்ட வரையில் குழந்தை போலவே தான் இருந்து வந்தார். காரணம் குடும்பத்தின் சகல பொறுப்புகளையும் மேற்கொள்ளத் தகப்பனார், தமையனார் முதலிய பெரியோர்கள் இருந்து வந்ததே யாகும். ஆகவே அவர் குடும்பத்தைப்பற்றிய கவலை ஒரு சிறிதும் இன்றி நிர்விசாரமாகக் கலைக்குத் தொண்டாற்றி வந்தார். குடும்பத்திலே ஏற்பட்டுக்கொண்டே வருகிற மாறுதல் எதுவும் அவர் உள்ளத்திலே சிறிதும் உறைக்கவே யில்லை.

அத்தகையவரிடம் ஒருநாள் அவர் தந்தை ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார், "குழந்தை ஜானகிக்கு இந்த ஆண்டிலே திருமணம் நிகழ்த்திவிட வேண்டும்" என்று

சொன்னதும் அவருக்குத் தூக்கிவாரிப் போடாமல் என்ன செய்யும்?

"என்ன? ஜானகிக்கா? இதற்குள்ளா?" என்று வியப்புடன் வினவினர். பிறகே தம் செல்வியை ஊன்றிக் கவனித்தார்.

பிள்ளையின் பேச்சைக் கேட்டுத் தந்தை இளமுறுவல் பூத்தார். முறைமைக்கு விஷயத்தைக் காதிலே போட்டாரே தவிர அவர் தம் பேத்தியின் திருமண சம்பந்தமாக முன்பே நன்கு யோசித்து நல்ல முடிவு செய்து அதன்படித் திட்டங்களை அமைத்திருந்தார்.

**காஞடிகாத்தான்** என்ற ஊரில் ஸ்ரீ ராமாநுஜ ஐயங்காரின் ஒன்றுவிட்ட தமக்கை வாழ்ந்து வந்தார். அவர் கணவர் பெயர் **ஸ்ரீ நாராயண ஐயங்கார்**. அவர்களுடைய குமாரர் சிரஞ்சீவி **கிருஷ்ணமூர்த்தி**. ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார் அந்தக் கிருஷ்ணமூர்த்திக்கும் தம் பேத்தி சௌபாக்கியவதி ஜானகிக்கும் முடிபோட்டார்.

பெரியவர் பார்த்துச் செய்கிற காரியத்தில் ஆட்சேபணை சொல்ல யார் இருக்கிறார்கள்? ஆட்சேபணைதான் என்ன இருக்கும்?

கல்யாணம் காரைக்குடியிலே நடைபெற்றது. செல்வர்கள், சங்கீத வித்துவான்கள், மற்றுமுள்ள பந்துக்கள், நண்பர்கள் அனைவரும் விஜயம் செய்து திருமண விழாவைச் சிறப்புற நடத்தி வைத்தார்கள். செவி விருந்துக்கும், நா விருந்துக்கும் அங்கே குறைவே இல்லை.

காரைக்குடி சகோதரர்கள்—**ஸ்ரீ சுப்பராமையர், ஸ்ரீ சாம்பசிவ ஐயர்**—இருவரும் சேர்ந்து வீணைகானம் செய்தார்கள். கல்லும் கரையும் கானம் என்றால் அவர்களுடைய கானத்திற்கே தகும். இரட்டை வீணை; ஆனால் ஒன்றே போல் இழைந்து ஒலிக்கும். அவர்கள் கரங்

களிலே தோன்றும் குழைவுகளும் கமகங்களும் ஏனைய உயர்வம்சங்களும் அவர்களிடம் மட்டுமே எதிர்பார்க்கக் கூடியவை. கர்நாடக சங்கீத உலகம் செய்த பாக்கியத்தினால் இளைய சகோதரர் மட்டும் இன்றும் நம்மிடையே வாழ்ந்து வருகிறார். மூப்பை மறந்த நிலையில் அல்லும் பகலும் நாதோபாசனையே மூச்சுக் காற்றாக வாழ்ந்து வருகிறார். இந்திய அரசாங்கம் வகுத்த கலைப் பரிசுத் திட்டத்தில் வாத்திய சங்கீதத்திற்குரிய பரிசு முதல் முதலாக அவரைத் தேடி அடைந்தது.

ஸ்ரீ ஐயங்காரின் மைத்துனரும் குருகுல வாச சகாவுமான காரைக்குடி ஸ்ரீ ஸ்ரீநிவாச ஐயங்காரின் வாய்ப்பாட்டுக் கச்சேரியும் இந்த வைபவத்தில் நடை பெற்றது. வெகு சிறப்பாகப் பாடினார். மதராஸ் ஸ்ரீ பாலகிருஷ்ணையர் வயலினும், தேவகோட்டை **ஸ்ரீ சுந்தரராஜ ஐயங்கார்** அவர்கள் மிருதங்கமும் வாசித்துச் சிறப்பித்தார்கள்.

இப்படிப் பல வகையாலும் வெகு சிறப்பாக நடை பெற்றது அந்தத் திருமண வைபவம்.

## 26. அடிச்சுவடு

**(1932)**

குன்றின் மேலிட்ட தீபமென ஸ்ரீ ஐயங்காரின் சங்கீத மேன்மை எங்கும் பிரகாசிக்கத் தொடங்கியதைக் கண்ட பெற்றோர் பலர் தங்கள் மக்களை அவருடைய மாணாக்கராக்க அவாக் கொண்டனர். எண்ணியவர்கள் அனைவர் கருத்தும் எண்ணியபடியே நிறைவேறுவதாக இருந்தால் இன்று கர்நாடக சங்கீத உலகில் அனைவராலும் ஒரு முகமாகக் கொண்டாடப்பெறும் மதுரமான சங்கீதத்தைப் பொழிந்து வரும் சிறந்த சங்கீத வித்துவான் மதுரை ஸ்ரீ மணி ஐயர் தாம் ஸ்ரீ ஐயங்காரின் முதல் மாணவராக இருந்திருப்பார்.

ரசிகர்கள் இடத்திற்குப் போட்டியிடுகிற சங்கீதக் கச்சேரிகளில் இன்று குறிப்பிடத் தக்க ஒன்று மதுரை ஸ்ரீ மணி ஐயரின் கச்சேரி. எந்தக் காலத்திலும் அவர் கச்சேரி யில் இட நெருக்கடிதான். திறந்தவெளி அரங்குகளில் அவர் கச்சேரி நடைபெற்றால் சுற்றிலும் உள்ள மைதானம் முதலிய இடங்களில் பெரு வெள்ளம் போல் ஜனத் திரளைக் காணலாம். மழை, பனி முதலியவற்றைக்கூடப் பொருட்படுத்தாமல், சகிப்புத் தன்மையோடு இருந்து ரசிகர்கள் அவருடைய கச்சேரியை அநுபவிப்பது வழக்கம். அவ்வளவுக்குப் பொதுஜனங்களின் நன்மதிப்பைப் பெற்ற, சிறந்த யோக்கியதையை உடைய அவரிடம் வித்தியா கர்வம் அணுவும் இல்லை. அவர் உள்ளம் குழந்தைத் தன்மையது. கலை வல்லுனர்களிடம் அவருக்கு மிகுந்த மரியாதையும் பக்தியும் உண்டு. பெரியோர்களைப்பற்றிப் பேசுகையில் மிகவும் பக்தியோடும் ஜாக்கிரதையோடும் பேசும் இயல்பு உடையவர். ஸ்ரீ ஐயங்காரிடம் அவருக்கு உள்ள பக்தியும் மரியாதையும் அபாரம். அவர் சொல்கிறார்:

"சின்னப் போதிலிருந்து பெரிய பெரிய மேதைகளின் சங்கீதத்தைக் கேட்கும் பேறு எனக்கு வாய்த்தது. மதுரை யிலே இருந்த காலத்தில் சங்கீத மேதைகளான **மழவராய னேந்தல் ஸ்ரீ சுப்பராம பாகவதர், வீணை கான காரைக் குடி சகோதரர்கள், நாகஸ்வர வித்துவான் மதுரை ஸ்ரீ பொன்னுசாமி பிள்ளை** முதலிய அநேகரின் இசையிலே திளைத்திருக்கிறேன். இந்த வரிசையில் அதிகமாக நான் கேட்டதும், அதிகமாக என்னைக் கவர்ந்ததும் ஸ்ரீ ஐயங்கார் அவர்களின் சங்கீதந்தான்.

"மதுரை **சேதுபதி ஹைஸ்கூலில்** முதல் முதலாக அவருடைய கச்சேரியைக் கேட்டேன். **மருங்காபுரி ஸ்ரீ கோபால கிருஷ்ணையர்** அவர்கள் வயலின், புதுக்

கோட்டை ஸ்ரீ தட்சிணுமூர்த்தி பிள்ளை மிருதங்கம். சுமார் மூன்றரை மணி நேரம் என்னை மறந்து அந்த இசையை ரசித்தேன்.

"அதன் பின்னர் அடிக்கடி அவர் கச்சேரியைக் கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டி வந்தது. என் போன்றவர் சங்கீத ஞானம் பெறவும், கச்சேரிப் பாணியை நன்கு புரிந்து கொள்ளவும் அவருடைய சங்கீதம் சிறந்த வழி காட்டியாகி உதவிற்று என்ருல் அது சற்றும் மிகை ஆகாது.

"என்னுடைய இளமைப் பிராயத்தில் என் குருகுல வாசம்பற்றிப் பிரஸ்தாபம் எழுந்தபோது அனைவரையும் பிரச்னைக்கு உள்ளாக்கியது. என் தகப்பஞர் மட்டும் மிகத் தீவிரமான ஓர் அபிப்பிராயங் கொண்டிருந்தார். அதாவது என் வருங்காலத்தின் பொறுப்பை ஸ்ரீ ஐயங்கார் அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்பது அவருடைய விருப்பம். ஆனல்........

"பிராப்தம் வேறு விதமாக இருந்தது. ஆயினும் நான் அவரைக் குருவாக அடைந்து இசை பயில வில்லையே தவிர, ஒரு வகையில் அந்த ஸ்தானத்திற்கு உரியவராகவே அவர் விளங்கிவருகிருர். ஏட்டுப் படிப்பைவிட அநுபவப் படிப்பு மிகமிக உயர்ந்ததல்லவா? இந்த நாளில் அந்த அம்சம் அதிகமாக வற்புறுத்தப் பெறுகிறது. ஆனல் அந்த நாளிலிருந்தே அமலில் இருந்து வருவதுதான் அந்த அம்சம் என்பது ஸ்ரீ ஐயங்கார் அவர்களுக்கும் எனக்கும் இடையே உள்ள குரு—சிஷ்ய பாவனை மூலம் நிரூபணம் ஆகிறது."

மேற் கூறியபடி சில பெற்ருேர்களின் அவா பல காரணங்களால் நிறைவேறவில்லை; சிலருடைய அவா நிறைவேறிற்று. ஸ்ரீ ஐயங்காரிடம் மாணவர்கள் பலர் குருகுல

வாசம் மேற்கொள்ள வந்தனர். அவர்களில் முன் வரிசை யில் கூறத் தக்கவர்கள், **ஸ்ரீ கணேசன், ஸ்ரீ ராமன், ஸ்ரீ ராஜம், ஸ்ரீ கோபாலசாமி ஐயங்கார்** முதலியோர். பற்பல காரணங்கள் குறுக்கிட்டு இவர்களின் குருகுல வாசத்தை யும் வித்தையின் வளர்ச்சியையும் தடைப் படுத்திவிட்டன.

இவர்களுக்குப் பிறகு ஸ்ரீ ஐயங்காரிடம் மாணவராக அமர்ந்தவர் **ஸ்ரீ பி. ராஜமையர்.** இவருடைய பிறப்பிடம் ராமநாதபுரம் ஜில்லாவைச் சார்ந்த **பாதரக்குடி.** பிறந்த வருஷம் **1923.** தகப்பனார் **ஸ்ரீ பாலசுப்பிரமணிய ஐயர்** அறிவிலும் பண்பிலும் சிறந்தவர். தாய் **ஸ்ரீமதி லட்சுமி அம்மாள்.** ஸ்ரீ ராஜமையருக்கு ஆரம்பசிட்சை **ஜலதரங்க வித்துவான் ஸ்ரீ கணபதி ஐயர்** அவர்களிடம்; பிறகு ஸ்ரீ ஐயங்காரிடம் குருகுல வாசம் தொடர்ந்து நீடித்தது.

இயற்கையாக அமைந்த ஞானம், சீரிய ஒழுக்கம், சிறந்த குரு பக்தி, நிறைந்த தெய்வ பக்தி, பெரியோரிடம் பணிவு, இடையறாத, வகையறிந்த சாதகம் ஆகிய அம்சங் களால் அவர் மளமளவென்று முன்னேறினார். அவருடைய ஞானமும் இசையும் புடமிட்ட பொன்னாயின. குருவுடன் சேர்ந்து கச்சேரிகளில் பாடினார்; ரசிகர்களின் கண்ணிலும் கருத்திலும் பதிவானார். குருவின் நல்லாசியுடன் 1942-இல் திருவையாறு ஸ்ரீ தியாகோற்சவத்தில் வெகு சிறப்பாகப் பாடினார்.

**1943**-இல் திருவிதாங்கூர்ச் சம்ஸ்தானத்திலிருந்து ஸ்ரீ ஐயங்காருக்கு வேண்டுகோள் ஒன்று வந்தது. "தங்கள் வழிச் சங்கீதம் எங்கள் குடும்பங்களில் பரவும்படி செய்ய வேண்டும்" என்று அரச குடும்பத்தினர் விண்ணப்பித்துக் கொண்டனர். ஸ்ரீ ஐயங்கார் ஸ்ரீ ராஜமையரை ஆசிகூறி அனுப்பி வைத்தார். அவர் நாலு ஆண்டுகள் அங்கே தங்கினார். அரச குடும்பத்தைச் சார்ந்தவர்களுக்குப்

பக்குவமாகக் கர்நாடக சங்கீதம் போதித்தார். சிறந்த வெகுமானங்களைப் பெற்ருர்.

1956-இல் சென்னையில் முதல் முதலாக இவருடைய கச்சேரி **எழும்பூர் ஜகந்நாத பக்த சபையில்** நடைபெற்றது. கர்நாடக சங்கீத வித்துவான்களில் பிற்காலத்தில் பிரமாதமான புகழைப் பெற்ற பலர் அந்தச் சபையில் முதலில் பாடியவர்கள்; பிறகும் அடிக்கடி அந்தச் சபை யால் ஆதரிக்கப்பெற்றவர்கள் என்பதை எண்ணும்போது அந்த 'ஆகிவந்த சபை' என்று கொண்டாடாமல் இருக்க முடியாது. அத்தகைய இடத்தில் ஸ்ரீ ராஜமையர் சிறப்பாகப் பாடி ரசிகர்களின் பாராட்டைப் பெற்றதே அவருடைய வருங்கால மேன்மையை அறிவிக்கும் சூசகமாக ஆயிற்று. அது முதல் சென்னையிலும் வெளியூர்களிலும் சபைக் கச்சேரிகளும், கல்யாணம் உற்சவம் முதலிய வைபவக் கச்சேரிகளும் அடிக்கடி செய்து வருகிருர். ரேடியோவிலும் சிறப்பாகப் பாடி வருகிருர்.

இவருடைய இளைய சகோதரர்களில் ஒருவரான **ஸ்ரீ கிருஷ்ணமூர்த்தி** இவரிடமே ஆரம்ப சிட்சை பெற்ருர். பிறகு சென்னை, கர்நாடக சங்கீதக் கல்லூரியில் சேர்ந்து வித்துவான் பட்டம் பெற்ருர். சில காலமாக இவரோடு கச்சேரிகளில் சேர்ந்து பாடி வருகிருர். 'ராஜமையர் சகோதரர்கள்' என்று ரசிகர்கள் குறிப்பிட்டுக் கூறக்கூடிய அளவுக்கு இவர்கள் கியாதி வளர்ந்து வருகிறது.

இவருக்கு அடுத்தபடியாக ஸ்ரீ ஐயங்காரிடம் குருகுல வாசத்தில் ஈடுபட்டவர் **ஸ்ரீமதி கே. எஸ். தனம்மாள்.** இவருடைய ஊர் கும்பகோணம். பிறப்பு **1914.** ஐந்து பிராயத்தில் **திருவிடைமருதூர்** நட்டுவஞர் **ஸ்ரீ சாமிநாத பிள்ளை** அவர்களிடம் பரத சிட்சை ஆரம்பம். ஸ்ரீ சாமிநாத பிள்ளை பிரபல பரதக் கலாசிரியர் **பந்தணைநல்லூர்**

**ஸ்ரீ சொக்கலிங்கம் பிள்ளை** அவர்களின் மாமன் மகன் ஆவார். ஆகவே நல்ல ஆசிரியப் பரம்பரை. அதனால் ஸ்ரீமதி தனம்மாள் அதிவிரைவிலேயே முன்னேற்றம் பெற்றார். பத்தாவது வயதில் அதாவது 1924-இல் அரங்கேற்றம் நடைபெற்றது.

பரத சிட்சை நடைபெறுகிறபோதே அவர் சங்கீத சிட்சையும் பெற்று வந்தார். **ஜலதரங்க வித்துவான் கண்டதேவி ஸ்ரீ கணபதி ஐயர் தாம்** அடிப்படைப் பாடங்களைப் போதித்தார். இவரைத் 'தங்கக் காப்புக் கணபதி ஐயர்' என்று குறிப்பிடுவதுண்டு. சுமார் மூன்று ஆண்டுகளுக்குப் பின் **நாச்சியார் கோயில் ஸ்ரீ கன்னையா பிள்ளை** அவர்களிடம் பயிற்சி பெற்றார். கீர்த்தனைகள், ராகங்கள் முதலியன இவரிடம் பாடம். இடையே அதாவது திருவிடைமருதூரில் இருந்தபோதே **திருபுவனத்தில்** வசித்து வந்த காஞ்சீபுரம் ஸ்ரீ நயினா பிள்ளை அவர்களின் சிஷ்யர் **ஸ்ரீ லட்சுமணசாமி செட்டியார்** அவர்களிடம் பல உருப்படிகள் பாடமாகி யிருந்தன.

1931-இல் ராமநாதபுரம் ஜில்லாவைச் சார்ந்த உப்பூர் தேவஸ்தானம் விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற உற்சவத்தில் இவர் நடனக் கச்சேரி செய்யப் போயிருந்தார். அப்போது **தேவகோட்டை ஜமீன் ஸ்ரீ சொக்கையா செட்டியார்** அவர்கள் மூலம் ஸ்ரீ ஐயங்காருக்கு அறிமுகம் ஆனார். "தங்கள் சிஷ்யையாக ஏற்று முன்னுக்குக் கொண்டு வர வேண்டும்" என்று ஸ்ரீ செட்டியார் வெகுவாக எடுத்துச் சொன்னார்.

அதன் பிறகு 1933 ஆகஸ்டில் மறு முறையாகச் சந்திக்க நேர்ந்தபோது ஸ்ரீ ஐயங்கார் ஸ்ரீமதி தனம்மாளுக்கு இரண்டு உருப்படிகளை எழுதிக் கொடுத்துப் பாடியும் காண்பித்தார். பிறகு சிவகங்கைச் சம்ஸ்தானத்தில் மூன்றும்

முறையாக அவர்கள் சந்திப்பு நேர்ந்தது. **ஸ்ரீ ஆர். எம். சுந்தரம்** அவர்கள் அங்கே அப்போது திவான் பதவியில் இருந்தார். ஸ்ரீ ஐயங்கார் ஆஸ்தான வித்துவானாகத் திகழ்ந்தார். நவராத்திரி வைபவத்தில் ஸ்ரீமதி தனம்மாள் அங்கே நடனக் கச்சேரி செய்யச் சென்றார். விஜயதசமி அன்று 'ஆபீசர்கள்' கண்டு களிக்க மட்டும் என்று மற்றும் ஒருமுறை ஸ்ரீமதி தனம்மாளின் பரதநாட்டியக் கச்சேரி நடைபெற்றது. நடனக் கச்சேரிக்குப்பின் ஸ்ரீ ஐயங்கார் சொன்னார்:

"என்னிடம் சங்கீதம் பயில வேண்டும் என்று நீ விரும்புகிறாய். உண்மையில் உனக்குச் சங்கீதத்தில், என்னிடம் சிட்சை பெறுவதில் ஆர்வம் இருந்தால் இன்றோடு நடனமாடுவதை விட்டுவிட வேண்டும். மன உறுதியுடன், ஒரே லட்சியத்துடன் வந்தால் என்னால் இயன்ற மட்டில் சிறப்பாகப் போதிக்கிறேன்."

ஸ்ரீமதி தனம்மாள் மறுத்து மறுவார்த்தை பேசவும் இல்லை; சற்றும் தியங்கவும் இல்லை. "இன்றோடு நடனத்தை விட்டேன்" என்றார். அன்றே, அப்பொழுதே ஸ்ரீ ஐயங்கார் ஸ்ரீமதி தனம்மாளின் முன்னேற்றத்தின் முழுப் பொறுப்பையும் மேற்கொண்டார்; அக்கறையோடு போதிக்கத் தொடங்கினார்.

ஸ்ரீமதி தனம்மாள் சங்கீத பரம்பரையில் கௌரவமான குடும்பத்தில் தோன்றியவர். தாய் **ஸ்ரீமதி சுந்தராம்பாள்**; தகப்பனார் **ஸ்ரீ ராமலிங்கம் பிள்ளை**. 'கஞ்சனூர் சுந்தராம்பாள்' என்று லலிதகலா ரஸிகர் உலகம் குறிப்பிட்டுப் புகழ்ந்து பேசக்கூடிய அளவுக்கு ஆட்டத்திலும் பாட்டிலும் சிறந்தவர் தாய். அவருக்கு **உமையாள்புரம் வித்துவான் ஸ்ரீ சாமிநாதையர்** அவர்களிடம் இசைப் பயிற்சி. பெரிய தாயும் பரத நாட்டியத்தில் தேர்ந்தவர்; இசை

ஞானத்தில் உயர்ந்தவர். இத்தகைய உயர்ந்த பரம்பரையில் வந்த ஸ்ரீமதி தனம்மாளுக்கு ஸ்ரீ ஐயங்காரின் மனப்பூர்வமான போதனையும் கூடினதால் அவர் வெகு சீக்கிரத்தில் இசையுலகில் பிரகாசிக்கத் தொடங்கிவிட்டார்.

இப்பொழுது ஸ்ரீமதி தனம்மாளின் கச்சேரி நடைபெறுத இடம் அநேகமாக இல்லை என்றே சொல்லலாம். சென்னை, பம்பாய், கல்கத்தா, பங்களூர், மைசூர், டில்லி முதலிய நகர்ப்புறங்களிலும்; தென்னிந்தியாவில் உள்ள பிரபலமான பல ஊர்களிலும் சபாக்கள், கல்யாணம் முதலிய வைபவங்கள் எல்லாவற்றிலும் ரேடியோவிலும் அவர் வெகு சிறப்பாகக் கச்சேரி செய்து வருகிறார்; ரசிகர்களின் அமோகமான பாராட்டைப் பெற்று வருகிறார்.

மூன்றாவதாகக் கூறக்கூடிய மாணாக்கர் **ஸ்ரீ கே. வி. நாராயணசாமி**. இவருடைய ஊர் **கொல்லங்கோடு**. தாய் **ஸ்ரீமதி முத்துலட்சுமி அம்மாள்** ஸ்ரீ நாராயணசாமியின் சிறுபோதிலேயே காலமாகிவிட்டார். தகப்பனார் **ஸ்ரீ விசுவநாதையர்** சிறந்த வயலின் வித்துவான். இந்தப் பரம்பரையே சிறந்த சங்கீத பரம்பரைதான்.

கிருஷ்ணனாட்டம் களி கொல்லங்கோடு **ஸ்ரீ விசுவம் பாகவதர்** என்றால் சுமார் எண்பது ஆண்டுகளுக்கு முன் மலையாளப் பிரதேசத்தில் மிகப் பிரசித்தம். அவர் கதகளி பதங்களும், அஷ்டபதி முதலிய பக்திரச கானங்களும் இனிய குரலில் மிக அற்புதமாகப் பாடுவாராம். அவருடைய தந்தை **ஸ்ரீ நாணு பாகவதரும்** அவருக்கு முன்னாலிருந்த பெரியோர்களும் சிறந்த சங்கீத வித்துவான்களாகத் திகழ்ந்திருக்கிறார்கள்.

ஸ்ரீ விசுவம் பாகவதர் ஒரு சமயம் திருவனந்தபுரம் ஸ்ரீ பத்மநாப சுவாமி சந்நிதியில் மிக உருக்கமாக அஷ்டபதிகளைப் பாடிக்கொண்டிருந்தார். அப்போது தரிசனத்

திற்காக அங்கே வந்த **ஸ்ரீ ஆயில்யம் திருநாள் மகாராஜா** அந்த அஷ்டபதிகளைக் கேட்டுப் புளகாங்கித முற்றார். மறுநாள் முதல் தாம் அங்கே தரிசனத்திற்கு வருகிற அந்த வேளையில் அவரை அஷ்டபதிகள் பாடவேண்டுமென்று கேட்டுக்கொண்டார். அதற்காக 'வர்ஷாசலம்' முதலியன அளித்துக் கௌரவித்தார்.

ஸ்ரீ விசுவம் பாகவதரின் குமாரர் **ஸ்ரீ நாராயண பாகவதர்,** அவருடைய குமாரர் ஸ்ரீ விசுவநாதையர் அனைவருமே வழி வழியாய்ச் சங்கீத மேதைகள். இத்தகைய பரம்பரையில் தோன்றிய ஸ்ரீ நாராயணசாமி ஐந்தாவது பிராய முதலே பாட்டனாரிடமும் தகப்பனாரிடமும் ஆரம்ப சிட்சைகளைப் பெற்றார். பின்னர் மிருதங்க வித்துவான் பாலக்காடு ஸ்ரீ மணி ஐயர், திருவனந்தபுரம் **சங்கீத பூஷணம் ஸ்ரீ ஸி. எஸ். கிருஷ்ணையர்,** வயலின் வித்துவான் பாப்பா ஸ்ரீ வேங்கடராமையா ஆகியோரிடம் தொடர்ந்து இசை பயின்று வந்து 1942-இல் ஸ்ரீ ஐயங்காரிடம் மாணவராகச் சேர்ந்தார். அன்று முதல் இன்றுவரை அவருடைய நிழல்போல உடனிருந்து குரு பக்தி செய்து வருகிறார்; அதற்குரிய நற்பயனையும் பெற்று வருகிறார்.

1940-இல் திருவையாற்று உற்சவத்தில் பாடினார். அதுமுதல் ரேடியோவிலும் பாடி வருகிறார். 1947-இல் **சென்னைச் சங்கீத வித்துவத் சபையில்** இளம் வித்துவான்கள் நிகழ்ச்சியில் பாடினார். 1948-இல் பாலக்காடு ஸ்ரீ மணி ஐயரின் ஒன்றுவிட்ட சகோதரிக்கும் இவருக்கும் கல்பாத்தியில் திருமணம் நிகழ்ந்தது. 1950-இல் தஞ்சாவூர் ஜங்க்ஷன் விநாயகர் உற்சவத்திலும் 1951-இல் **கல்கத்தா 'சௌத் இண்டியன் கிளப்'**பின் வெள்ளி விழா வைபவத்திலும் நடைபெற்ற இவர் கச்சேரிகள் குறிப்பிடத்

தக்கன. 1951-இல் தம் குருவுக்குப் பதிலாகச் சென்னைச் சங்கீத வித்துவத் சபையில் கச்சேரி செய்தார். 1956-இல் பாலக்காடு ஸ்ரீ மணி ஐயர் டில்லியில் ராஷ்டிரபதி அவர்களின் பரிசைப் பெற்ற காலத்தில் இவர் பாடி ஸ்ரீ மணி ஐயர் வாசித்ததும் குறிப்பிடத் தக்கது: வயலின் வித்துவான்களில் **திருவாலங்காடு ஸ்ரீ சுந்தரேசையர்**, பாப்பா ஸ்ரீ கே. எஸ். வேங்கடராமையா, **திருவனந்தபுரம் ஸ்ரீ கிருஷ்ணன்** முதலியோரும், மிருதங்க வித்துவான்களில் பாலக்காடு ஸ்ரீ மணி ஐயர், **பழனி ஸ்ரீ சுப்பிரமணிய பிள்ளை, கடவாத்திய வித்துவான் ஸ்ரீ வில்வாத்திரி ஐயர்** முதலிய பலரும் இவருக்கு வாசித்து ஆசி கூறிச் சிறப்பித்திருக்கிறார்கள்.

அடுத்துக் கூற வேண்டியவர் **ஸ்ரீ கிருஷ்ணன்**. இவர் தாம் ஸ்ரீ ஐயங்காரின் கடைக்குட்டி சிஷ்யர். பெற்றோருக்குக் கடைசிக் குழந்தை செல்வம்; குருவுக்கும் கடைசி மாணவன் செல்வந்தான். ஸ்ரீ பூச்சி ஐயங்காருக்கு ஸ்ரீ ராமாநுஜ ஐயங்கார்போல ஸ்ரீ ராமாநுஜ ஐயங்காருக்கு ஸ்ரீ கிருஷ்ணன். ஸ்ரீ பூச்சி ஐயங்காரும் ஸ்ரீ ராமாநுஜ ஐயங்காரும் உறவினர்; ஸ்ரீ கிருஷ்ணனும் உறவினர்தாம். ஸ்ரீ கிருஷ்ணனின் கொள்ளுப் பாட்டியார் **ஸ்ரீமதி ஸ்ரீரங்க நாயகி அம்மாள்** ஸ்ரீ பூச்சி ஐயங்காரின் அன்னையார் ஸ்ரீமதி முத்துலட்சுமி அம்மாளின் தங்கையாவார். இந்த உறவு முறையினாலும் ஸ்ரீ கிருஷ்ணன் ஸ்ரீ ஐயங்காரிடம் திரிகரண சுத்தியுடன் நடந்து கொள்ளும் வகையினாலும் அவருக்குக் கிருஷ்ணனிடம் அளவு கடந்த வாத்ஸல்யம் உண்டு.

ஸ்ரீ கிஷ்ணன் உயர்ந்த பரம்பரையில் தோன்றியவர். அவருடைய கொள்ளுப் பாட்டனார் **ஸ்ரீ சேஷாத்திரி ஐயங்கார்** ராமநாதபுரம் ஜில்லா பாப்பாங்குளத்தில் பிறந்து

வளர்ந்து படித்துப் பட்டம் பெற்று அதே ஜில்லாவில் **பள்ளிமடம்** தாலூகாவில் தாசில்தாராகப் பதவி வகித்தவர். அந்தநாளில் தாசில்தாருக்கு உரிய மதிப்பு மிகப் பெரியது!

ஸ்ரீ சேஷாத்திரி ஐயங்காரின் குமாரர் **ஸ்ரீ ஸ்ரீநிவாச ஐயங்கார்,** மெட்ரி குலேஷன் பாஸ் செய்தவர். சோதிடம், மாந்திரிகம் முதலியவற்றில் நிபுணத்துவம் பெற்றவர். ஆத்ம ஞானி. பின் நாட்களில் **ஸ்ரீ சுயம்பிரகாச சுவாமிகள்** என மறு பெயர் பெற்றவர். அவருடைய தர்ம பத்தினியார் **ஸ்ரீமதி லட்சுமி அம்மாள்.** பிறப்பிடம் மதுரை.

ஸ்ரீ ஸ்ரீநிவாச ஐயங்கார் குமாரர் **ஸ்ரீநாராயண ஐயங்கார்.** வேத சாத்திரங்களிலும் தமிழ், தெலுங்கு, ஆங்கிலம் முதலிய மொழிகளிலும் சிறந்த பாண்டித்தியம் உடையவர். இசைக் கலையில் தேர்ந்தவர். சத்கதா காலட்சேபம் செய்து கியாதி பெற்றவர். தகப்பனாரைப்போல் மந்திர சாத்திரம், சோதிடம் முதலிய துறைகளில் தெளிவான ஞானம் உடையவர். எப்போதும் நல்லதையே நினைப்பவர், சொல்பவர், செய்பவர். இவருடைய தர்ம பத்தினியார் **ஸ்ரீமதி பத்மாஸனி அம்மாள்.**

ஸ்ரீ நாராயண ஐயங்காரின் பிள்ளைகள் மூவருமே இசை பயின்றவர்கள்; மூவருமே தகப்பனார் சத்கதா காலட்சேபம் செய்கிறபோது அச்செயலில் இசை ஈடுபாடு உடையவர்கள். மூத்தவர் **ஸ்ரீ ஸ்ரீநிவாசன்** வயலின் **வித்துவான்.** இரண்டாமவர் **ஸ்ரீ திருவேங்கடம்** இசைத் துறையிலிருந்து விலகி உத்தியோகத் துறையில் ஈடுபட்டவர். மூன்றாமவர்தான் ஸ்ரீ கிருஷ்ணன்.

ஸ்ரீ நாராயண ஐயங்காரும் ஸ்ரீ ராமாநுஜ ஐயங்காரும் காரைக் குடியில் ஒரே தெருவில் வசித்துவந்த படியால் இரு குடும்பத்தினரிடையேயும் ஈடுபாடுகள் அதிகம். ஸ்ரீ ஐயங்கார் அவர்களின் தம்பி ஸ்ரீ ராகவ ஐயங்கார்தாம் தமையனு

ரிடம் வற்புறுத்தி ஸ்ரீ கிருஷ்ணனை மாணுக்கனுக ஏற்றுக் கொள்ளச் செய்தார்.

1945-இல் தேவகோட்டை சமீபம் உள்ள **கண்டதேவி** என்னும் ஊரில் வயலின் வித்துவான் **ஸ்ரீ அழகிரிசாமி** அவர்களின் பெண் குழந்தைக்கு ஆண்டு நிறை விழா நடை பெற்றது. அதில் ஸ்ரீ ஐயங்காரின் கச்சேரி. அன்றுதான் ஸ்ரீ கிருஷ்ணன் முதல் முதலாக ஸ்ரீ ஐயங்காருக்குப் பின் அமர்ந்து தம்பூரா மீட்டினுர்; அன்று முதல் இன்றளவும் குருவின் அத்தியந்த சிஷ்யராக விளங்கி வருகிருர்.

திருப்பதியில் ஸ்ரீ ஐயங்கார் ஆண்டுதோறும் சிறப்பாக நடத்திவரும் ஸ்ரீ தியாகோற்சவத்தில் அவருடைய அருளாசியுடன் 1950-இல் முதல் முதலாக மேடை ஏறினுர். **பாலக்காடு ஸ்ரீ ஸி. ஆர். மணி** அவர்கள் வயலின்; **வேலூர் ஸ்ரீ ராமபத்திரன்** அவர்கள் மிருதங்கம். அன்று முதல் சென்னை, பம்பாய், கல்கத்தா, டில்லி, நாக்பூர் முதலிய பல இடங்களில் தொடர்ந்து கச்சேரிகள் செய்து வருகிருர். 1952 முதல் ரேடியோவிலும் சிறப்பாகப் பாடி வருகிருர். இடையே சென்னைச் சங்கீதக் கல்லூரியில் சேர்ந்து இரண்டாண்டுகள் பயின்று வித்துவான் பட்டமும் பெற்ருர்.

மேலே குறிப்பிட்ட நால்வரிடமும் ஸ்ரீ ஐயங்காரின் உயர்தரமான சங்கீதத்தின் சாயலைக் கண்டுவரும் ரசிகர் உலகம், 'காலப் போக்கில் ஸ்ரீ ஐயங்காரின் உயர்தர சங்கீதத்தை இவர்களிடம் மேலும் மேலும் உயர்வாகக் கேட்க முடியும்' என்ற நம்பிக்கையை உறுதியாய்க் கொண்டிருக்கிறது. ஸ்ரீ ஐயங்காரின் அடிச்சுவட்டைப் பக்தியுடன் பின்பற்றி ரசிகர்களின் நம்பிக்கையை மெய்ப்பிக்கும் மகத்தான பொறுப்பு அவர்களுக்கு உரியதாகும்.

# 27. ‘சங்கீத ரத்னுகரம்’

**(1932)**

**வே**லூர் நகரம் அன்று களிப்பு வெள்ளத்திலே மிதந்து கொண்டிருந்தது. ஆங்கும், அந் நகரத்துக்கு வெளியேயும் எங்கும் வியாபித்திருந்த கர்நாடக சங்கீத உலகம், ரசிகர் உலகம் அனைத்துமே ஆனந்த உணர்ச்சியிலேதான் திளைத்துக் கொண்டிருந்தன. கலைஞர் ஒருவர் அறிஞர் குழாத்திஞல் பாராட்டப் பெறுகிறுர், அரிய பட்டம் சூட்டிக் கொண்டாடப் பெறுகிறுர் என்ருல் கலை உலகமும் ரசிகர் உலகமும் களிகொள்வது இயல்பே யன்ரே?

அரியக்குடி ஸ்ரீ ராமாநுஜ ஐயங்கார் கர்நாடக சங்கீத உலகத்துக்கு இடையருது செய்து வரும் அரிய சேவையைப் பாராட்டி, அவரிடம் சிறந்து பிரகாசிக்கும் இசைக் கலையின் மேன்மையைக் கொண்டாடி, எங்கும் சுடர்விட்டொளிரும் அவர்தம் உண்மைப் புகழை ஆமோதித்து அவரைக் கெளரவிக்க எண்ணிய அறிஞர்கள் பலர் ஒன்று கூடிஞர்கள். சிறந்த பட்டம் ஒன்றை அவருக்கு வழங்கத் தீர்மானித்தார்கள். அதை, பழுத்த அறிவாளியும் தமிழ், சம்ஸ்கிருதம், ஆங்கிலம், தெலுங்கு முதலிய பல மொழிகளில் பாண்டித்தியம் உடையவரும், சங்கீத மேதையுமான கீர்த்தனுசார்ய ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாச ஐயங்கார் அவர்கள் முன்னிலையிலே செய்யத் தீர்மானித்தார்கள்.

விழா ஏற்பாடுகள் எல்லாம் பிரமாதமாகச் செய்யப் பெற்றன. குறித்த நாளில் விழா மண்டபத்திலே உள்ளூர், வெளியூர் வாசிகள் பலர் வந்து கூடிஞர்கள். ஸ்ரீ ஸ்ரீநிவாச ஐயங்கார் அவர்களோடு மற்றும் அநேகம் அறிஞர்களும் வந்து நிறைந்தார்கள். இசையரங்கு விசேஷ அலங்காரத்துடன் அமைக்கப் பெற்றிருந்தது.

நிகழ்ச்சி நிரலில் கண்டபடி நிகழ்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்ருக நிறைவேறின. அவற்றில் ஸ்ரீ ஐயங்காரின் கச்சேரி நிகழ்ச்சி குறிப்பிடத்தக்க ஒன்று. அன்று அவருக்குப் பக்க வாத்தியங்களாக, மைசூர் ஸ்ரீ சௌடையா வயலின் வாசித்தார்; மதராஸ் ஸ்ரீ வேணு நாயக்கர் மிருதங்கமும், புதுக்கோட்டை ஸ்ரீ தட்சிணுமூர்த்தி பிள்ளை கஞ்சிராவும் வாசித்தார்கள். கச்சேரி கந்தர்வ கானமாக இருந்தது.

கீர்த்தனுசார்ய ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாசையங்கார் அவர்கள் முன்னிலையில் ஸ்ரீ ராமாநுஜ ஐயங்கார் அவர்களுக்கு, 'சங்கீத ரத்னுகரம்' (இசைக் கடல்)என்ற சிறப்புப் பட்டம் வழங்கப் பெற்றது. சங்கீத தேவதை புன்முறுவல் பூத்தது!

# 28. " இனி வேண்டாம் !"

(1932)

சென்னைக் கோகலே ஹாலில் 1932-ஆம் ஆண்டில் கச்சேரித் தொடர் ஒன்று நடைபெற்றது. கர்நாடக சங்கீத உலகில் மிகக் கியாதியுடன் விளங்கிய சங்கீத வித்துவான்கள் வரிசையாகப் பாடி வந்தனர்.

முன் வாரத்தில் காஞ்சீபுரம் ஸ்ரீ நயினு பிள்ளையின் கச்சேரி. மருங்காபுரி ஸ்ரீ கோபால கிருஷ்ணையர் வயலின், புதுக்கோட்டை ஸ்ரீ தட்சிணுமூர்த்தி பிள்ளை மிருதங்கம். கச்சேரி வழக்கம்போல் மிகவும் காம்பீரியமாகவும், விவகார பூர்வமாகவும் நடைபெற்றது. அன்று ஸ்ரீ நயினு பிள்ளை மாயாமாளவ கௌளையில் 'நீலாய தாட்சி' என்ற உருப்படியை வெகு சிறப்பாகப் பாடித் திஸ்ர நடையில் ஸ்வரம் பாடினுர்.

மறு வாரத்தில் அதே பக்கவாத்திய ஜமாவோடு ஸ்ரீ ஐயங்காரின் கச்சேரி நடைபெற்றது. ஸ்ரீ ஐயங்கார் அப்போதுதான், 'தினமணிவம்ச' என்ற பாடலைப் பிரபலப்படுத்தி வந்தார். அன்றும் அங்கே அதைப் பாடினார். வெகு அழகாகக் கீர்த்தனத்தைப் பாடி முடித்து ஸ்வரம் பாட ஆரம்பித்தார். நடைபேதம் செய்து திஸ்ர நடையிலே பாடலானார்.

ஸ்ரீ தட்சிணாமூர்த்தி பிள்ளை கேள்விக்குறி தோன்ற ஸ்ரீ ஐயங்காரைப் பார்த்தார். பெயரளவில் வாசித்தார். பிள்ளையவர்கள் சில சமயம் மிருதங்கம் வாசிக்காமல் ஸ்ரீ ஐயங்காரின் பாட்டை ரசிப்பதிலே ஈடுபட்டு விடுவதுண்டு. ஆனால் அப்பொழுது அப்படி இல்லை.

ஸ்வரம் பாடி முடித்து ஸ்ரீ ஐயங்கார் அடுத்து என்ன பாடலாம் என யோசிக்கிற இடைவெளியில் பிள்ளை அவர்கள் அவரிடம் தாழ்ந்த குரலில், "எதற்காக இப்படி நடைபேத ஸ்வரம் பாடினீர்கள்?" என்று கேட்டார்.

"பல வித்துவான்கள் பாடுகிறார்களே, பலர் கேட்டு ரசிக்கிறார்களே என்று நானும் பாடினேன். ஏன்? அதற்கென்ன?" என்றார் ஸ்ரீ ஐயங்கார்.

பிள்ளை அவர்கள், "அது தவறு. பிறர் செய்வதற்காக ஒன்றை நீங்களும் செய்வதா? இனி இப்படிப் பாட வேண்டாம். ஜனங்களின் ரசனைக்கு நீங்கள் ஆதரிச வழிகாட்டி ஆகவேண்டும்" என்றார்.

அதன் பிறகு ஸ்ரீ ஐயங்கார் அம்முறையில் பாடவே இல்லை.

# 29. தந்தையின் மறைவு

**(1932)**

ஸ்ரீ ஐயங்கார் அவர்களைப் பொறுத்தவரையில் 1932-ஆம் ஆண்டு மிக முக்கியமான ஆண்டு ஆகும். அவர் புகழுக்கு வாய்ப்பான பல அரிய சம்பவங்கள் அந்த ஆண்டிலே நிகழ்ந்தன. அவ்வளவுக்கும் ஈடாகத் துயர நிகழ்ச்சி ஒன்றும் அதே ஆண்டிலே சம்பவித்தது.

அவருடைய தகப்பனார் ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார் காலமானது அந்த ஆண்டிலேதான்!

வயோதிகம் காரணமாக உடல் நலிவுற்றுப் படுக்கையில் விழுந்த ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார் பிறகு எழுந்திருக்கவே இல்லை. இனிப் பிழைக்க மாட்டார் என்ற நிலை ஏற்பட்டதும் உற்றார் உறவினர் வந்து கூடினர். பெண்கள், பிள்ளைகள், மாப்பிள்ளைகள் முதலியோருக்கு இயன்ற மட்டில் நல்லுரைகளை வழங்கிய ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார் முடிவில் பரம நிம்மதியுடன், பகவத் தியானத்துடன் கண்ணை மூடினார்; எல்லாப் பந்தங்களையும் துறந்து இறைவனடி சேர்ந்தார்.

எழுபத்தெட்டு ஆண்டுகள் எல்லாருக்கும் இனியவராக வாழ்ந்த அவர் மறைவை எண்ணிக் கண்ணீர் விடாதவர் அந்தப் பிராந்தியத்திலே இல்லை. ஈமக்கிரியைகள் முறைப்படி, சிறப்பாக நடந்தேறின.

# 30. 'சங்கீத கலாநிதி'

**(1938)**

சென்னைச் சங்கீத வித்துவத் சபையின் 12-ஆவது சங்கீத மகாநாடு 1938-ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில்

வெகு சிறப்பாக நடைபெற்றது. மகாநாட்டை மைசூர் யுவராஜா அவர்கள் துவக்கிவைத்தார். ஸ்ரீ ராமாநுஜ ஐயங்கார் அவர்கள் தலைமை வகித்தார்.

அந்த வைபவத்தில் ஸ்ரீ ஐயங்காருக்கு, **'சங்கீத கலாநிதி'** என்ற சிறப்புப் பட்டம் அளிக்கப் பெற்றது. ஸ்ரீ ஐயங்கார் அக்கிராசனம் வகித்துக் கருத்துச் செறிந்த சொற்பொழிவு ஒன்று நிகழ்த்தினார். அது முன்னுக்கு வருகிற இசைக் கலைஞர்களுக்கு அரிய உபதேசமாகும்.

முதலில் நாதோபாசனைபற்றிச் சில வார்த்தைகள்:

"நாத ரூபியாயுள்ள பகவான் இவ்வுலகெங்கும் நாதமயமான சங்கீதத்தை உபாசிக்க வேண்டுமென்றும், அதுவே முக்திக்கு ஏதுவானது என்றும் அருளிச் செய்திருக்கிறார். பகவதம்சம் பொருந்தியதும் நீண்ட காலமாக மகா வித்துவன் மணிகளால் கையாளப்பட்டு வந்ததுமான இச் சங்கீதக் கலையானது பரம்பரையாய்த் தொன்று தொட்டு விருத்தியடைந்துகொண்டு வந்திருக்கிறதென்பதில் சந்தேகம் இல்லை. அது இப்போதும் அபிவிருத்தியாகிக்கொண்டு தான் வருகிறது."

அடுத்தபடியாக, கர்நாடக சங்கீதக் கலையின் மேன்மை பற்றிச் சிறு குறிப்பை வெளியிட்டார்.

"இந்தக் கலையில் ஒருவருக்கு உண்மையான பயிற்சி ஏற்பட வேண்டுமானால், அது நாதரூபியான பகவானுடைய கிருபையினாலும், சத்குருகுல வாசத்தினாலும், சாம்பிரதாயிகமான சங்கீதத்தை அநுஷ்டித்து வருவதனாலுமே சாத்தியம். இவ்வாறல்லாமல், சுயமாகவே தெரிந்து கொள்வதென்பது முடியாத காரியம். இது திண்ணம்."

சுருதி விஷயமாகக் குறிப்பிடுகையில், "தற்காலத்தில் கச்சேரி செய்யும் வித்துவான்களில் சிலர் தம்பூராவை

வைத்துக்கொண்டு பாடுவதென்பது வழக்கத்தில் இல்லை. முக்கியமாய் வாய்ப்பாட்டிற்குத் தம்பூராவின் சுருதி தவிர வேறு எதுவும் உபயோகப்படக்கூடியதில்லை" என்றார். தொடர்ந்து பேசுகையில், "சில வித்துவான்கள் தம்பூராவை வைத்துக்கொண்டு பாடும்பொழுது நடுவிலே சுருதி கலைந் தால் அதைக் கவனிப்பதென்பது வழக்கத்தில் இல்லை எனத் தெரிகிறது. இதைக் கவனிக்க வேண்டியது மிக அவசியம்" என்றார்.

"சில வித்துவான்கள் ஹார்மோனியத்தைச் சுருதியாக வைத்துக்கொண்டும் பாடுகிறார்கள். அப்போது ஒரு விஷ யத்தை முக்கியமாய்க் கவனிக்க வேண்டும். ஹார்மோனி யத்திலும், சுருதிப் பெட்டியிலும் துருத்தியைத் தள்ளும் பொழுது அதிகமான சப்தமும், அதை விடும்பொழுது குறைந்த சப்தமும் இருக்கும். இவ்வாறு இருப்பதனால், வாய்ப்பாட்டிற்கு மிகவும் இடைஞ்சல் ஏற்படுமென்பது திண்ணம். இதன் உண்மை தம்பூராவையும், ஹார்மோனி யத்தையும் சுருதி சேர்த்து வைத்துப் பார்த்தால் தெரியும்."

ஸ்ரீ ஐயங்கார் இவ்வாறு கூறியது 1938-இல். அவ ருடைய அறிவுரையின் பயன்தானோ என்னவோ; வர வர ஹார்மோனியச் சுருதியோடு பாடுகிறவர் எண்ணிக்கை குறைந்துகொண்டே வந்து இன்று அவ்வாறு பாடுபவரைக் காண்பதே அரிதாகிவிட்டது. இன்றுதான் முதல் முத லாக மேடை ஏறுகிற இளம் வித்துவானாயினும் சரி, அவர் களில் பொருள் வசதி சற்றும் அற்றவராயினும் சரி எப் பாடு பட்டாவது தங்களுக்கொரு தம்பூராவைத் தேடி அடையத் தவறுவதில்லை. இசைக்கலையின் நல்வளர்ச்சிக்கு இது ஓர் அறிகுறி என்றே சொல்ல வேண்டும்.

ஸ்ரீ ஐயங்கார் கர்நாடக சங்கீதக் கலையின் இன்றைய நிலைபற்றியும், கலையாற்றலில் சில அம்சங்களில் சிலரிடம்

காணப் பெறும் குறைகளைப்பற்றியும் சிறிது விளக்கிக் கர்நாடக சங்கீதத்தைக் கையாள வேண்டிய சரியான முறை பற்றியும் பின்வருமாறு கூறினர்.

"இப்போது சங்கீதக் கலை பலபடியாக மாறியிருக்கலாமோ என்று நினைப்பதற்குக் காரணங்கள் பல இருக்கின்றன. சில வித்துவான்கள் முன்னோர்கள் கையாண்டு வந்த பிராசீன சம்பிரதாயங்களை அநுசரித்துப் பாடுவதென்பது மிகக் குறைவாகவே காணப்படுகிறது. அதற்குக் காரணம் சங்கீதத்தை ரசிக்கிற ஜன சமூகங்களைத் திருப்தி செய்வதற்கேற்பப் பாட வேண்டும் என்கிற ஓர் அபிப்பிராயமே. ஆனால் கேட்கிறவர்களுக்குச் சுகம் பிறக்கும்படி பாடுவதோடு சம்பிரதாயத்தை அநுசரித்தும் பாட முடியும். அப்படிப் பாட வேண்டியது மிகவும் அவசியமாகும்.

"சிலர் ஒரு கீர்த்தனத்தைப் பாடி அதில் கல்பனை ஸ்வரம் பாடும்பொழுது ஸ்வரத்தை அரை ஆவர்த்தனமோ, கால் ஆவர்த்தனமோ பாடிக்கொண்டு, அதை அப்படியே நிறுத்திவிட்டு, ராகத்தைக் கொஞ்சம் பாடி மறுபடி ஸ்வரம் பாடுகிற வழக்கத்தை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். இது சம்பிரதாயத்தோடு இணங்கியதல்ல. மேலும், சிலர் ஸ்வரம் பாடுகிறபொழுது மிருதங்கத்தில் வாசிக்கும் ஜதிகளை அநுசரித்து ஸ்வரம் பாடத் தலைப்பட்டு விட்டார்கள். இந்த மாதிரி பாடுவதும் சம்பிரதாயத்தில் சேர்ந்ததல்ல என்று பெரியோர்கள் கூறுகிறார்கள்.

"முன்னுள்ள மகாவித்துவான்கள் ராகங்களைப் பாடுகிறபொழுது அவற்றிற்கு உச்சரிப்பு அட்சரங்களை 'அனந்தம்' என்று பாவித்து அனந்த சப்தத்திலேயே ராகங்களைப் பாடுவார்கள் என்பது அநேகமாக யாவரும் அறிந்த விஷயம். ராகங்களைச் சம்பிரதாயத்தை அநுசரித்தும், அநுபவத்தை ஒட்டியும், மகான்களுடைய கிருதிகளைப் பின்பற்றியும்

பாடவேண்டும் என்பது பெரியோர்களின் அபிப்பிராயம். மேலும் அனந்த சப்தத்தில் ராகம் பாடுகிற வழக்கத்தை அநுசரித்தே இப்போது 'தானம்' என்று வழங்கிவரும் சப்தத்தை விலக்கி, அதற்குப் பதில் அனந்த சப்தத்தைக் கைக் கொண்டு அனந்த சப்தத்தால் ராகத்தைப் பாடி அதற்கு மத்தியகாலம் என்று பெயர் வழங்கி வரவேண்டும். இம் முறையை அவசியம் அநுசரிக்க வேண்டும் என்பது பெரியோர்கள் அபிப்பிராயம்.

"கீர்த்தனங்கள் பாடும்பொழுது அவற்றின் சாகித்தியங்களைச் சுத்தமாகத் தெரிந்து பாவம் வெளியாகும்படி பாடவேண்டும். இது முக்கியமான கருத்து. பாவம் முதலியவற்றைத் தாமாகத் தெரிந்துகொள்வதற்கு முடியாமற் போனால், நன்கு தெரிந்தவர்களிடத்தில் கேட்டேனும் தெரிந்து கொள்ளுதல் வேண்டும். கச்சேரி செய்து வருகிற வித்துவான்கள் அனைவருக்குமே தெலுங்கிலும் சம்ஸ்கிருதத்திலும் போதுமான பாஷாஞானம் இருக்குமோ என்பது சந்தேகிக்கக் கூடிய விஷயம். ஆனால் சங்கீத வித்துவான்கள் அனைவருக்கும் இவ்விரண்டு பாஷைகளிலும் கொஞ்சமாவது பயிற்சி இருக்கவேண்டியது மிகவும் அவசியமாகும்.

"முன் காலத்தில் கச்சேரி செய்த பிரபல வித்துவான்கள் பல்லவி பாடிய பிறகு சில்லறை உருப்படிகள் பாடுவது என்பதைச் சம்பிரதாயத்தில் வைத்துக் கொள்ளவில்லை. சில்லறை உருப்படிகள் என்பன நவீனமாயுள்ள வர்ண மெட்டுக்களைக் கொண்டவையாகும். முன்னோர்கள் பாடி வந்த வழிகளை அநுசரித்து, கீதகோவிந்தம், • தரங்கம், க்ஷேத்திரக்ஞர் பதம், ஜாவளிகள், அருணாசலக் கவிராயர் செய்த ராம நாடகம், நந்தனர் சரித்திரம், முத்துத்தாண்டவர் பதம், வேதநாயகம் பிள்ளை கீர்த்தனம், கவி குஞ்சா

பாரதி கீர்த்தனை, தேவாரம், திருவாசகம், திருப்புகழ், திவ்வியப் பிரபந்தம், பட்டினத்தார் பாடல், தாயுமானவர் பாடல், திருவருட்பா முதலான சாகித்தியங்களைப் பாடுதல் நலம். இவை அபாரமாக இருக்கின்றன. தற்காலத்தில் கொஞ்சங் கொஞ்சமாய் மறையவும் தொடங்கி விட்டன. இவைகளைச் சங்கீத முறையில் பாதுகாக்க வேண்டியது மிகவும் அவசியம். இவ்விஷயத்தில் சம்பிரதாய முறைகளை அநுசரித்து வந்தவர்களில் முக்கியமாக, காலஞ்சென்ற **ஸ்ரீமதி தனம்மாள்** அவர்களை உதாரணமாகச் சொல்லலாம். அவர்கள் வீணை வாத்தியத்திலே மிகப் பிரசித்தி வாய்ந்தவர்கள். அவர்கள் நவீனத்தில் ஈடுபடாமல் முற்கூறிய பெரியோர்களால் செய்யப்பெற்ற சாகித்தியங்களையே கையாண்டு வந்து கச்சேரி செய்து ஜனங்களை ஆனந்தத்தில் மூழ்கும்படி செய்திருக்கிறார்கள்.

"சமீபத்தில் நம் நாட்டில் மிகவும் பிரக்கியாதி பெற்று விளங்கிய **ஸ்ரீமான் சுப்பிரமணிய பாரதியார்** அவர்கள் பக்தி முதலிய ரசங்கள் பெருக, உலக நன்மையை அநுசரித்துச் செய்திருக்கிற சுதேச கீதம் முதலிய வற்றையும் மேற்சொன்ன சாகித்தியங்களோடு பாடிப் பிரசாரம் செய்யவேண்டியது நம் கடமையாகும்."

இவ்வாறு இசை, மொழி, இசைக் கலைஞர்கள்—ஆகிய விஷயங்களைப்பற்றி விரிவாகப் பேசிய ஐயங்கார் அவர்கள் இறுதியுரையாகச் சங்கீத வித்துவத் சபையைப் பற்றியும் வித்துவான்கள் அதனோடு இயங்கி ஆற்ற வேண்டிய கடமைகள்பற்றியும் பின் வருமாறு கூறினார்.

"சென்னைமா நகரின் கண் இந்தச் சங்கீத வித்துவத் சபை ஆரம்பித்த வருஷம் முதல் நாளது வருஷம் வரையில் ஒவ்வொரு மகாநாட்டிலும் கலந்து கொண்ட மகா வித்துவான்களும், சங்கீதம் உணர்ந்த பெரியோர்களும், சங்கீதம்

பற்றிய பல விஷயங்களையும் பல ராகங்களையும் சர்ச்சை செய்து வந்திருக்கிறார்கள். அவைகளைப் பிரசாரத்திற்குக் கொண்டு வராததால் சங்கீதக் கலையின் அபிவிருத்திக்குத் தடை ஏற்பட்டிருக்கிறது. இதற்கு முக்கிய காரணம் வித்துவான்கள் எல்லோரும் மகாநாட்டில் கலந்து கொள்ளாததே யாகும்.

"இவ்வருஷத்துச் சங்கீத மகா நாட்டில், நடப்பில் பாடிக் கொண்டுவரும் ராகங்களையே பரிசீலனை செய்வதாய்த் தீர்மானித்திருக்கிற படியால் வித்துவான்கள் எல்லாரும் இம் மகா நாட்டிற்கு வந்து, சர்ச்சைகளில் கலந்து கொண்டு, சங்கீதக் கலையை அபிவிருத்தி பெறச் செய்வார்கள் என்று நம்புகிறேன். இங்கே நடக்கும் சர்ச்சையின் பயனாகச் சில தீர்மானங்களை நாம் செய்ய வேண்டியதாயிருக்கும். இத்தீர்மானங்களையும் முந்தைய மகாநாடுகளில் செய்திருக்கும் தீர்மானங்களையும் சங்கீத வித்துவான்கள் அநுஷ்டானத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்பது என்னுடைய வேண்டுகோள்.

" சென்னையில் சங்கீத வித்துவத் சபை பொதுவாய்ச் சங்கீத வித்துவான்களுடைய நன்மைக்காகவும் சங்கீதத்தில் அபிருசியும் அநுபவமும் உள்ளவர்களுடைய நன்மைக்காகவும் ஏற்பட்டிருக்கிறதென்பதை நாம் நன்றாக உணர வேண்டும். சங்கீத வித்துவான்களாக உள்ளவர்கள் இச்சபையைப் பாராட்டி, இதில் கலந்து கொண்டு ஒத்துழைத்து வரவேண்டும். வித்துவான்களாகிய நம்மவர்கள் ஒன்று சேர்ந்து ஒரு காரியத்திலும் பிரவேசிப்பதில்லை என்பது உலகமறிந்த விஷயம். ஆதலால் நம்மை ஒன்று கூட்டுவதற்கு இதுபோன்ற ஒரு சபை இருப்பது மிக அவசியமாகும். சங்கீத வித்துவான்களை ஒரே இடத்தில் ஒன்று சேர்த்து அவர்கள் நல்ல நிலையில்

இருக்க வேண்டுமென்று கருதிச் சென்னைச் சங்கீத வித்துவத் சபை, வித்துவத் பெரியோர்களாலும் நல்ல ஞானஸ்தர்களாலும் நடத்தப் பெற்று வருகிறது. சென்ற மூன்று நான்கு ஆண்டுகளாக **ராவ் பகதூர் ஸ்ரீ கே. வி. கிருஷ்ணஸ்வாமி ஐயர்** அவர்கள் தம்முடைய அபரிமிதமான அலுவல்களுக் கிடையில் இந்த வித்துவத் சபையை மிகவும் சிரத்தையுடன் ஆதரித்து வருகிறார். அவரோடு **ஸ்ரீ டி. வி. சுப்பராவ்** அவர்கள், **ஸ்ரீ டி. எல். வேங்கடராமையர்** அவர்கள், **ஸ்ரீ ஈ. கிருஷ்ணையர்** அவர்கள் முதலான பிரமுகர்களும் இத்தொண்டிலே ஈடுபட்டு ஒத்துழைத்து வருவது மிகவும் போற்றுதலுக்குரியது.''

இவ்வாறு தம் அக்கிராசனப் பிரசங்க உரையை முடித்தார் ஸ்ரீ ஐயங்கார்.

# 31. வடநாட்டு விஜயம்

**(1938)**

**ஸ்ரீ** ஐயங்காரின் புகழ் வளர வளர நாடெங்கும் பரவி வசித்து வரும் கர்நாடக சங்கீத ரசிகர்கள் அவரைக் காணவும் அவர் இசையைக் கேட்கவும் அவரோடு பழகவும் ஆவல் கொண்டனர். பம்பாயில் உள்ள ரசிகர்கள் தாங்கள் நடத்தி வரும் **'ஸௌத் இண்டியன் மியூசிக் சபா'**வில் ஸ்ரீ ஐயங்காரின் கச்சேரிக்கு ஏற்பாடு செய்தார்கள். அதே சமயத்தில் **டில்லியில்** உள்ள அன்பர்களும் அங்கே ஒரு கச்சேரிக்கு ஏற்பாடு செய்து ஸ்ரீ ஐயங்காருக்குத் தகவல் கொடுத்தார்கள். ஸ்ரீ ஐயங்கார் தக்க பக்க வாத்திய வித்துவான்களுடன் புறப்பட்டு வடக்கே சென்றார். பம்பாயிலும் டில்லியிலும் திட்டமிட்டபடி கச்சேரிகள் நடைபெற்றன. இடையே உள்ள பல ஊர்களில் வசிக்கும் ரசிகர்களும்

அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டனர்; பல கச்சேரிகள் நடந்தன. சுமார் ஒரு மாத காலம் சுற்றுப் பிரயாணம் செய்த ஸ்ரீ ஐயங்கார் சிறந்த புகழுடனும் நிறைந்த பொருளுடனும் ஊர் திரும்பினர்.

## 32. என்ன குறை?

(1939)

மலபாரைச் சார்ந்த **ஒற்றைப் பாலம்** என்ற இடத்தில் பெரிய தனிகர் ஒருவர் வீட்டில் திருமணம். வரதட்சிணை ஒரு லட்சம் ரூபாயும் ஒரு யானையும். அதற்கு ஏற்ற முறையில் மற்றச் சீர்வகைகளும் ஏனைய ஏற்பாடுகளும். அந்த வைபவத்தில் ஸ்ரீ ஐயங்காரின் கச்சேரிக்கு ஏற்பாடாகி யிருந்தது. பக்கவாத்தியங்கள்: **கும்பகோணம் ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளை** அவர்கள் வயலின்; பாலக்காடு ஸ்ரீ மணி ஐயர் அவர்கள் மிருதங்கம்.

சின்னப் பிராயத்திலேயே மேதை ஒளிவிட செயலாற்றத் தொடங்கினவர் ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளை. 1919-இல் முதல் முதலாக அவர் ஸ்ரீ ஐயங்காருக்கு வாசித்தார். சுருதி லய சுத்தமாக, தேவையான பிகு சுக நயமுடன், கர்நாடக சுத்தமாக, செவிக்கு இனிமையாக, பாட்டுக்கு அநுசரணையாக வாசித்த அவருடைய ஆற்றலில் ஸ்ரீ ஐயங்காருக்கு அப்பொழுதே நல்ல மதிப்பும் பிடிப்பும் ஏற்பட்டுவிட்டன. அதுமுதல் கச்சேரிகள் நேரும்போதெல்லாம் அவர் மனம் ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளையின் வாசிப்பையே மிகுதியாக அவாவுவது வழக்கமாகிவிட்டது.

இயற்கைக்குத் திடீரென்று அளவுகடந்த உற்சாகம் ஏற்பட்டுவிட்டது. இடைவிடாத மழை! எங்கும் ஒரே பிரளயம்! சிற்சில இடங்களில் பிரயாண மார்க்கங்கள் எல்லாங்கூடத் தடைப்பட்டுவிட்டன.

இதற்காக அந்தப் பிரபு திட்டமிட்ட கல்யாணத்தை நிறுத்தவில்லை; தேதியை ஒத்திப் போடவில்லை. முன் வைத்த காலைப் பின்னுக்கு வாங்கி அறியாத ஸ்ரீ ஐயங்காரும் கச்சேரியை முன்னிட்டு அங்கே செல்லத் தவறவில்லை. கல்யாணம் ஒற்றைப் பாலத்தில்; கச்சேரி செங்கன்னூர் என்னும் இடத்தில். ஒட்டாரக் கரை என்ற ரெயில்வே ஸ்டேஷனிலிருந்து முப்பத்தைந்து மைல் செல்லவேண்டும். ஸ்ரீ ஐயங்கார் காரைக்குடியிலிருந்து புறப்பட்டு எங்கெல்லாமோ சுற்றிக்கொண்டு குறிப்பிட்ட நாளில் அவ்விடம் போய்ச் சேர்ந்துவிட்டார். ஸ்ரீ மணி ஐயர் ஆலவாய் ஸ்டேஷனில் இறங்கிச் செங்கன்னூர் சென்றார். வயலின் வித்துவான் மட்டும் வந்து சேரவில்லை. கல்யாணத்தன்று கச்சேரி நடைபெறவில்லை. அங்கே உள்ளவர்களுக்கு அந்தக் கச்சேரியைக் கேட்கவேண்டும் என்று அளவற்ற ஆர்வம். அதனால் மறுநாள் காலையிலாவது கச்சேரியை நடத்தி விடுவது என்று தீர்மானித்தார்கள். அதற்குள் வயலின் வித்துவான் வந்து சேர்ந்துவிடமாட்டாரா என்கிற சபலம். ஆனால் மறுநாள் காலையிலும் அவர் வரவில்லை. வயலின் இல்லாமலே கச்சேரியை நடத்திவிடுவது என்று கல்யாணக்காரர்கள் தீர்மானித்தார்கள்; கலைஞர்களும் அதற்கு இணங்கினார்கள். ரசிக அன்பர்கள் சிலர் தாம், "வயலின் இல்லாத கச்சேரி என்ன கச்சேரி! அது சோபிக்குமா?" என்று முணுமுணுத்தார்கள்.

கச்சேரி தொடங்கிச் சிறிது நேரம் ஆனதுமே அவர்கள் அபிப்பிராயம் கரையத் தொடங்கிவிட்டது. முடிவுற்ற பின்னர், "ஆகா! வயலின் இல்லாத குறை சிறிதும் தெரியவே இல்லையே! ஐயங்கார் அவர்களும் மணி ஐயர் அவர்களும் மிகுந்த திறமை சாலிகள்!" என்று புகழ்ந்து கொண்டாடினார்கள்.

# 33. உறவுப் பின்னல்

**(1940)**

**ஸ்ரீ** ராமாநுஜ ஐயங்காரின் இளைய பெண் சௌபாக்கிய வதி லக்ஷ்மி மணப் பருவம் எய்தினுள். வீட்டிலே பெண் களுக்குள் நடமாடிய பேச்சு ஸ்ரீ ஐயங்காரின் செவிக்கு எட்டிற்று. நின்று பேச நேரமின்றிக் கச்சேரி மேடை களிலே ஓடிக்கொண்டிருந்தது அவர் காலம். அப்படிப் பட்டவர் உள்ளத்தை இளைய பெண்ணின் கல்யாணப் பேச்சுக் கவர்ந்திழுத்ததும் நீண்ட பெரு மூச்சு விட்டார். 'நிழலின் அருமை வெயிலில் தெரியும் என்பது எவ்வளவு மகத்தான உண்மையை உள்ளடக்கிய பழ மொழி!' என்று எண்ணமிட்டது அவர் உள்ளம்.

அப்பொழுது—1931-இல், முதற் பெண் ஜானகியின் திருமணத்தின் போது—தந்தை இருந்தார்; சிறு பொறுப் பைக்கூட இவர் கண்ணிலே காட்டாது காரியத்தை வெகு சிறப்பாக நடத்தி வைத்தார். வந்திருந்த விருந்தினரோடு இவரும் ஒரு விருந்தினர்போல், செல்லப் பிள்ளையாக அப்போது விளங்கினுர். இப்போது?

இப்போதும் என்ன? தந்தையின் ஸ்தானத்தை ஈடு செய்யக் குணக்குன்ருகிய தமையனுர் ஸ்ரீ கிருஷ்ணையங்கார் இருக்கிருர். ஆயினும் எடுத்த எடுப்பிலே ஸ்ரீ ராமாநுஜ ஐயங்கார் உள்ளம் தகப்பனுரை எண்ணத்தான் செய்தது. அதுவும் நியாயந்தானே? நல்ல காரியத்திலே ஈடுபடுகிற போது தெய்வ கதிபெற்ற தந்தையை நினைப்பது உத்தமம் தானே?

கல்யாணப் பிரஸ்தாபம் மெல்ல மெல்ல வலுப் பெற்றது. வரனை அங்கே இங்கே என்று தேடாமல் உறவுக்

குள்ளேயே பெரியவர்கள் தீர்மானித்தார்கள். அதுவும் எத்தகைய உறவு?

பார்த்திபனூர் ஸ்ரீ சுந்தரராஜ ஐயங்கார் ஸ்ரீ திருவேங்கடத்தையங்காருக்கு ஏற்கனவே உறவினர். அவருடைய பெண்ணை ஸ்ரீ ராமாநுஜ ஐயங்காருக்குக் கொடுத்ததன் மூலம் பழைய உறவு புதுமை பெற்றது. அவருடைய குமாரர் ஸ்ரீ ஸ்ரீநிவாச ஐயங்காருக்கு ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார் குமாரர் ஸ்ரீ கிருஷ்ணையங்காரின் பெண்ணைக் கொடுத்ததால் புதுமைபெற்ற பழைய உறவு வலிமையும் பெற்றது. அதில் மேலும் இனிமையை அதிகரிக்கச் செய்யும் வகையில் அந்த ஸ்ரீநிவாச ஐயங்கார் குமாரன் சிரஞ்சீவி **கோவிந்தராஜன்** என்ற வரனுக்கே ஸ்ரீ ராமாநுஜ ஐயங்காரின் இளைய பெண்ணை நிச்சயித்தனர்.

ஸ்ரீ ஸ்ரீநிவாச ஐயங்காரின் பூர்விகம் பார்த்திபனூரேயாயினும் பின்னாளில் காரைக்குடியிலே வந்து அவர் குடும்பம் தங்கிவிட்டதனால் அவரைக் காரைக்குடி ஸ்ரீநிவாசையங்கார் என்றே அழைக்கலாயினர். அவர் வசித்த பகுதியின் பெயரை ஒட்டி அவரை முத்துப்பட்டணம் ஸ்ரீநிவாச ஐயங்கார் எனக் குறிப்பிடுவோரும் உண்டு.

ஸ்ரீ ஸ்ரீநிவாசைங்கார் ஸ்ரீ ராமாநுஜ ஐயங்காரோடு ஸ்ரீ பூச்சி ஐயங்காரிடம் முறையாகவும் நெறியாகவும் குருகுல வாசம் செய்தவர். சிறந்த யோக்கியதை உடையவர். குரு பக்தியில் ஈடற்றவர்; குருவின் ஆசியை நிரம்பப் பெற்றவர். இன்று இந்திய அரசாங்கத்தின் உபகாரச் சம்மானம் பெறுபவர்.

அவருடைய குமாரன் சிரஞ்சீவி கோவிந்தராஜனுக்கும் ஸ்ரீ ராமாநுஜ ஐயங்கார் குமாரி சௌபாக்கியவதி லக்ஷ்மிக்கும் காரைக்குடி சமீபம் உள்ள **கோயிலூரில்** சுபமுகூர்த்தத்தில் சிறப்பாகத் திருமணம் நடந்தேறிற்று.

அந்த வைபவத்திற்கு அநேகம் சங்கீத வித்துவான்கள் விஜயம் செய்தனர். பல கச்சேரிகள் நடைபெற்றன.

**காயன கந்தர்வ, சங்கீத சம்ராட் செம்பை ஸ்ரீ வைத்தியநாத பாகவதர்** அவர்கள் ஸ்ரீ ஐயங்காரிடம் அளவுகடந்த அன்பும் மதிப்பும் உடையவர். அவற்றின் அறிகுறியே போல அபாரமாக அமைந்தது அவருடைய கச்சேரி. மைசூர் ஸ்ரீ சௌடையா வயலின்; பாலக்காடு ஸ்ரீ மணி ஐயர் மிருதங்கம்.

குறிப்பிடத்தக்க மற்றொரு சிறந்த கச்சேரி **சங்கீத பூபதி மகாராஜபுரம் ஸ்ரீ விசுவநாதையர்** அவர்களுடையது. அவருக்கு ஸ்ரீ பாப்பா வேங்கடராமையா வயலினும் **தஞ்சாவூர் ஸ்ரீ ராமதாசராவ்** அவர்கள் மிருதங்கமும் சிறப்பாக வாசித்தார்கள்.

மூன்றாவது கச்சேரி ஸ்ரீ சௌடையாவின் 'ஸோலோ.' அதற்கும் பாலக்காடு ஸ்ரீ மணி ஐயர் மிருதங்கம் வாசித்தார்.

நான்காவது **மன்னார்குடி ஸ்ரீ ராஜகோபால் பிள்ளை** அவர்களின் வாய்ப் பாட்டுக் கச்சேரி.

ஐந்தாவது, காலைச் கச்சேரி. மதராஸ் ஸ்ரீ பாலகிருஷ்ணையரின் 'ஸோலோ வயலின்.' அதற்குக் **காரைக்குடி ஸ்ரீ முத்துவையர்** அவர்கள் மிருதங்கம்.

'கற்கண்டிலே எந்தப் பகுதி ருசி அதிகம்?' என்ற கேள்விக்கு என்ன பதில் சொல்வது? அப்படித்தான் இருந்தது ஒவ்வொரு கச்சேரியும்!

## 34. 'காயக சிகாமணி'

(1946)

**பி**ரபல வயலின் வித்துவான் ஸ்ரீ சௌடையா அவர்களின் பிறப்பிடமாகிய **மைசூர்** நகரம் கலைஞர்களுக்குத்

தாயகம் போன்றது. கலைவிழாக் காலமாகிய தசராப் பண்டிகையின்போது கலைஞர்கள் அரண்மனையின் விருந்தினராகிக் கௌரவிக்கப் பெறுவர்; புகழும் பொருளும் பட்டமும் பெறுவர். சாதாரண காலங்களிலும் மைசூர் மகாராஜா கலைஞர்களை வரவழைத்துப் போற்றி ஆதரிப்பதுண்டு. இதனால் அரண்மனையைச் சார்ந்தவர்கள் அடிக்கடி சிறந்த கலைஞர்களின் திறமையைக் கண்டும் கேட்டும் அநுபவிக்க வாய்ப்பு உண்டு.

அரண்மனைக்கு வெளியே உள்ள நகரத்துப் பொது ஜனங்களுக்கும் அத்தகைய வாய்ப்புக் கிட்டுவதற்காகப் பிரத்தியேகமான சபைகள் உள்ளன. கலைஞர்களில் பலர் அரண்மனை அழைப்பைப் பெறாத காலத்திலேயே மைசூர் செல்லவும் தங்கள் திறமையை வெளிப்படுத்தவும் அரசாங்கத்தினரின் கவனத்தைக் கவரவும் அது முதற்படி ஆகும்.

மைசூர்ப் பிராந்தியத்திற்கும் சென்னைப் பிராந்தியத்திற்கும் பாலமாக அமைந்த ஸ்ரீ சௌடையா அவர்களுக்கு அரண்மனையிலும் வெளியேயும் நெருங்கிய தொடர்பும் செல்வாக்கும் உண்டு. அவர் பண்பு மிகுந்த தேனீ. சிறந்த ரசிகர். அன்பு உள்ளம் படைத்தவர்.

அவர் மைசூரில் பிறந்தார். கர்நாடக சங்கீதக் கலையைப் பயின்று சிறந்த வித்துவானாக ஆனதன் மூலம் பெரும்பாலும் சென்னைப் பிராந்தியத்தில் உள்ளவர்களோடேயே அதிகத் தொடர்பு உடையவர் ஆனார். அதனால் அவர் பெறுகிற நன்மை ஒருபுறம் இருக்க, சென்னைப் பிராந்தியத்தைச் சார்ந்தவர்கள் பெறும் நன்மை வரையறை அற்றது. ரசிகர்கள் அவருடைய வாசிப்பை மெய்ம் மறந்து அநுபவிக்கின்றனர்; கலைஞர்களில் பலர் மைசூரில் பிரகாசிக்கும் நலனைப் பெறுகின்றனர்.

'சங்கீத சபா' என்ற பெயரில் மைசூரில் மிகச் சிறந்த முறையில் நடைபெறுகிற சபையிலிருந்து ஸ்ரீ ஐயங்காருக்கு அழைப்பு வந்தது. போய்க் கச்சேரி செய்தார். கேட்ட அன்பர்கள் பாராட்டினார்கள். "இவர் நம் சமஸ்தானத் தின் ஆஸ்தான வித்துவானாக வரும் நாள் என்றோ?" என்று பேசிக்கொண்டார்கள். "வெகு சீக்கிரத்திலேயே அது நடைபெறும். அதற்கு இது முதற்படி" என்று உற்சாக மாக விடையிறுத்தார், சூத்திரதாரியாகிய ஸ்ரீ சௌடையா. அவர் வாக்கு விரைவிலேயே பலித்துவிட்டது.

பல காலமாகவே ஸ்ரீ ஐயங்காரின் இசைப் புலமையைப் பற்றிக் கேள்வியுற்று வந்த மைசூர் மகாராஜா 1943-ஆம் ஆண்டின் தசராப் பண்டிகையில் இசைக் கச்சேரி நிகழ்த்த ஸ்ரீ ஐயங்காரை அழைக்க ஏற்பாடு செய்தார். ஸ்ரீ ஐயங் கார் அழைப்பை ஏற்று, பூரித்த உள்ளத்துடன் மைசூர் சென்றார். உரிய காலத்தில் கச்சேரி செய்தார். ஸ்ரீ சௌடையா வயலின்; பாலக்காடு ஸ்ரீ மணி ஐயர் மிருதங்கம்.

மைசூர் மகாராஜாவின் சிறந்த ஞானத்தையும் உயர்ந்த ரசிகத்தன்மையையும்பற்றி ஸ்ரீ சௌடையா முதல் மற்றும் பலரிடமிருந்தும் முன்னரே கேட்டறிந்திருந்தார் ஸ்ரீ ஐயங் கார். அந்த நினைப்பு உள்ளத்திற்கு உற்சாகம் ஊட்ட, அன்றுவரையில் செய்த கச்சேரிகளுக்கெல்லாம் மேம்பட்ட முறையிலே வெகு பிரமாதமாகப் பாடினார் அவர். ஒவ் வொரு ராகமும் ஜீவகளை பிரதிபலிக்க உருப்பெற்று அவை யோர் முன் ஜொலித்தது. ஒவ்வொரு கீர்த்தனையும் கட்டுக் கோப்பும் சௌந்தரியம் மிக்க வேலைப்பாடும் உடைய மாளிகைபோல் உருவாகி அனைவரையும் மயங்கச் செய்தது ஸ்வரப் பிரஸ்தாரம் முதலிய அம்சங்கள் அவர் புலமைக்குக்

கட்டியங் கூறின. மகாராஜா என்றுமில்லாச் சந்தோஷத்தை அன்று பெற்ருர்.

அதன் பலனை அடுத்த ஆண்டில் அனைவரும் அறிந்தனர். 1944-ஆம் ஆண்டின் தசரா விழாவில் ஸ்ரீ ஐயங்கார் மைசூர்ச் சம்ஸ்தான வித்துவாஞகப் பதவி பெற்ருர்.

மைசூர்ச் சம்ஸ்தானத்தில் ஸ்ரீ ஐயங்காரின் யோகம் அம்மட்டில் நிற்கவில்லை. மேலும் இரண்டு ஆண்டுகளுக்குப் பின் அவரை மற்ெருரு சிறப்பும் வந்து அடைந்தது. 1946-ஆம் ஆண்டிலே மைசூர் மகாராஜா அவர்கள் ஸ்ரீ ராமாநுஜ ஐயங்கார் அவர்களுக்கு, 'காயக சிகாமணி' என்ற உயர்ந்த பட்டத்தைச் சூட்டிக் கலைக்குக் கௌரவம் அளித்து மகிழ்ந்தார்.

மைசூர்ச் சம்ஸ்தானத்திலே அதற்கு முன் இதே பட்டத்துடன் திகழ்ந்த பெரியார் அரிகேசநல்லூர் ஸ்ரீ முத்தையா பாகவதர் அவர்கள். சங்கீதக் கச்சேரி செய்வதிலும், சத்கதா காலட்சேபம் நிகழ்த்துவதிலும், பெரிய பெரிய ஜமீன்தார்கள், மகாராஜாக்கள் முதலியவர்களோடு சரிநிகராகப் பழகுவதிலும் நிகரற்ற மேதையாகப் பிரகாசித்த அவர் மைசூர்ச் சம்ஸ்தானத்திலே ஆஸ்தானத் தலைமை வித்துவாஞக விளங்கியவர்; திருவிதாங்கூர்ச் சம்ஸ்தானத்திலே அரிய கலா சேவைகள் பல புரிந்தவர்; ரத்தினங்களைப் போன்ற நவநவமான அநேகம் கிருதிகளை இயற்றியவர். இசைக் கலைஞர்களுள் எவருமே பெற்றறியாத 'டாக்டர்' பட்டம் பெற்றவர். அத்தகைய மகா மேதை அணிந்திருந்த 'காயக சிகாமணி' என்ற பட்டம் தமக்குக் கிடைத்தது தம்முடைய பெரும் பேறு எனக் கருதிய ஸ்ரீ ஐயங்கார் மெய்சிலிர்க்க உளம் சிலிர்க்க நாதப் பிரம்மத்தை நினைந்து அஞ்சலி செய்தார்.

## 35. 'சங்கீத கலா சிகாமணி'

**(1947)**

சென்னையில் உள்ள **'இண்டியன் பைன் ஆர்ட்ஸ் சொசைடி'** கலைக்காகப் பாடுபட்டு வரும் ஒரு சிறந்த ஸ்தாபனம். அது ஆண்டுதோறும் டிசம்பரில் கலைவிழாவை அதிவிமரிசையாக நடத்தி வருகிறது. ஆடரங்கு, பாடரங்கு எல்லாம் உண்டு. ஒவ்வோர் ஆண்டிலும் சிறந்த கலைஞர் ஒருவர் தலைமையில் அந்த விழா நடைபெறும்.

அந்த ஸ்தாபனத்தினரின் வேண்டுகோளுக்கிணங்க 1947-ஆம் ஆண்டின் கலை விழாவுக்கு ஸ்ரீ ஐயங்கார் தலைமை வகித்து, விழாவை வெகு சிறப்பாக நடத்தி வைத்தார்.

ஸ்தாபனத்தைச் சார்ந்தவர்களுக்கு ஸ்ரீ ஐயங்காரிடமும், அவருடைய உயர்ந்த சங்கீதத்தினிடமும் அளவற்ற அன்பும் மரியாதையும் உண்டு. அவற்றைச் செயல் மூலம் வெளிப்படுத்திக்கொள்ள அவர்கள் இந்த அருமையான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டனர். விழாவை ஒட்டி ஸ்ரீ ஐயங்காருக்கு விசேஷ மரியாதைகளைச் செய்து, **'சங்கீத கலா சிகாமணி'** என்ற சிறப்புப் பட்டத்தையும் வழங்கி உளம் களித்தனர். அப்போது சென்னை உயர்நீதி மன்றத்தின் பிரதம நீதிபதியாக விளங்கிய பேரறிஞர், சங்கீத கலாநிதி ஸ்ரீ டி. எல். வேங்கடராமையர் அவர்கள் தலைமை வகித்து அந்தப் பட்ட அளிப்பு விழாவைச் சிறப்புற நடத்தி வைத்தார்.

## 36. கலா ரசனை

**(1947—1948)**

இந்திய அரசாங்கத்தில் தற்போது தொழில் மந்திரியாகச் செயலாற்றி வரும் **ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாசாரியார்**

அவர்கள் இல்லத்தில் வைபவம் ஒன்று நிகழ்ந்தது. அவர் நுண்ணறிவு படைத்தவர். தொழிற்புலமை நிறைந்தவர். செயலாற்றுந் திறனில் தேர்ந்தவர். சிறந்த சங்கீத ரசிகர்.

வைபவத்திற்கு வந்திருந்தவர்களில் இசைக் கலைஞர்கள் பலர். ஸ்ரீ ஐயங்கார், செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீநிவாசையர் இவர்களிடம் ஸ்ரீ கிருஷ்ணமாசாரியாருக்கு விசேஷ அன்பு உண்டு. அவர்களும் வந்திருந்தார்கள்.

ஸ்ரீ கிருஷ்ணமாசாரியாருக்கு நல்ல இசையைக் கேட்பதிலே எத்தனை ருசியோ அதே அளவு இசையைப் பற்றிப் பேசுவதிலும் ருசி உண்டு. விழா நிறைவேறியபின் ஸ்ரீ கிருஷ்ணமாசாரியார், ஸ்ரீ ஐயங்கார், ஸ்ரீ ஸ்ரீநிவாச ஐயர் மூவரும் அமர்ந்து உல்லாசமாக அளவளாவினர்.

சிறிது நேரத்தில் பேச்சு இசையைப்பற்றித் தொடர்ந்தது; ஏதோ ஓர் அழகான 'உருப்படி'யைப்பற்றின பேச்சு. ஸ்ரீ ஐயங்கார் பேச்சினிடையே லேசாக அதைப் பாடினார். "ஆகா! ஆகா!" என்று மற்றவர்கள் ரசித்தார்கள். "நடக்கட்டும்; நன்றாகவே நடக்கட்டும்; மனம் விட்டு, வாய்விட்டு, தாராளமாகவே நடக்கட்டும்" என்றார் ஸ்ரீ கிருஷ்ணமாசாரியார்.

உற்சாகத்திற்கு உள்ள சக்தி வேறு எதற்கு உண்டு? ஸ்ரீ ஐயங்கார் வாய்விட்டு நன்றாகவே பாடினார். கீர்த்தனம் முடிவுறுகிற தறுவாயில் ஸ்ரீ கிருஷ்ணமாசாரியார், "அப்படியே இரண்டு ஆவர்த்தனம் ஸ்வரமும் நடக்கட்டுமே" என்றார். ஸ்ரீ ஐயங்கார் முறுவலித்தபடி ஸ்வரம் பாட ஆரம்பித்தார். இரண்டு ஆவர்த்தனம் பாடிவிட்டு அருகே இருந்த ஸ்ரீ ஸ்ரீநிவாசையர் அவர்கள் பக்கம் திரும்பி, "உம்" என்று கை காட்டினார். குறிப்பறிந்த அவர் 'வாங்கிப் பாட' ஆரம்பித்தார். உற்சாகம் அங்கே வெள்ளம் போல் பெருக்கெடுத்து விட்டது.

வயலின் இல்லை, மிருதங்கம் இல்லை, ஒன்றுமே இல்லை. பெரிய வித்துவான்கள் இருவர் பெரிய ரசிகரை முன்னிட்டுக்கொண்டு ஸ்வரப் பிரஸ்தாரம் செய்யலானார்கள். வந்தது வராமல் சுமார் ஒன்றரை மணி நேரம்!

★

**1948**-இல் ஸ்ரீ ஐயங்கார் திருவிதாங்கூர் மகாராஜா அவர்கள் அழைப்பின் பேரில் அங்கே கச்சேரி செய்யச் சென்றிருந்தார். சில தினங்கள் அரண்மனை விருந்தினராகத் தங்கியிருந்தார். செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீநிவாசையர் ஆஸ்தான வித்துவானாகவும் இசைக் கல்லூரித் தலைவராகவும் அங்கே இருந்து வருகிற சந்தர்ப்பமாகையால் ஸ்ரீ கிருஷ்ணமாசாரியார் இல்லத்திலே நிகழ்ந்தது போலவே அங்கும் மகாராஜா, மகாராணி, ஐயங்கார், ஸ்ரீநிவாசையர் ஆகியோரின் பிரத்தியேக உரையாடலும் பாடலும் நிகழ்ந்தன. அந் நிகழ்ச்சியிலே, பாடிய வித்துவான்களே பரவசமுற்றனர் என்றால் ரசித்த மகாராஜா, மகாராணி இவர்களின் பரவச நிலைபற்றி என்ன கூறுவது?

'ராஜ்ய சேவா நிரத', 'சங்கீத கலாநிதி' முதலிய சிறப்புப் பட்டங்களைப் பெற்றவர் ஸ்ரீ ஸ்ரீநிவாச ஐயர். கர்நாடக சங்கீதத்தாலும் பாரதி பாடல்களாலும் ரசிகர் உள்ளத்தில் உயர்ந்த ஸ்தானம் பெற்றவர். 'அரியக்குடி' நூலை உருவாக்க ஸ்ரீ ஐயங்கார் அவர்களைப்பற்றிய அபிப்பிராயம் கேட்க அவரிடம் சென்றபோது மேற்குறித்த நிகழ்ச்சிகளைத் தெரிவித்து மேலும் சொன்னார்:

"ஸ்ரீ ஐயங்கார் அவர்கள் மிகப் பெரியவர். தமிழுக்கு பாரதியைப் போலக் கர்நாடக சங்கீதத்துக்கு அவர். புத்தியைக் கொண்டு பிரகாசிப்பவர். சரீரமும் சாரீரமும் பகவான் அளித்தவை. எல்லாமே பகவானால் அளிக்கப் பெற்றவைதாம். புத்தியும் அப்படியேதான்.

ஆனாலும் அந்தப் புத்தியை உபயோகிக்கும் முறை மனிதனிடம்தான் இருக்கிறது. ஸ்ரீ ஐயங்கார் அவர்கள் புத்தியைச் சிறப்பாக ஆள்பவர்.

"சங்கீதத்தைக் கேட்கும்படி ஜனங்களைப் பழக்கினவர் அவர் என்றால் தவறு இல்லை. பிடித்தமானவற்றைக் கொடுத்துக் கடினமான உயர்ந்த விஷயங்களையும் ரஸிக்கச் செய்தவர் அவர்.

"முதுமைப் பிராயத்திலே இளமை மாறாத சங்கீதத்தை அளிப்பதென்பது லேசான செயல் அல்ல. நாற்பது, நாற்பத்தைந்து வயசுக்கு மேல், கேட்டு ரசிக்கும்படி பாடியவர்கள் இதற்குமுன் இருந்ததாகத் தெரியவில்லை. இந்தத் தலைமுறையிலோ சிலகாலம் ஜொலித்து மங்குபவரின் எண்ணிக்கை அதிகம். இந்நிலையில் ஐயங்கார் அவர்கள் அறுபத்தாறு பிராயத்திலே இத்தனை பிரமாதமாகப் பாடுவது சரித்திரத்திலே காணாத புதுமை.

"அவரிடம் சுறுசுறுப்பு அதிகம். சரளமாகப் பழகும் ஆற்றல் நிரம்ப. அவரோடு இருப்பவர்களைக் கவலை அண்டாது; அண்டினாலும் பாதிக்காது.

"குருகுலவாசம் செய்கிற காலத்திலே அடிக்கடி ஐயங்கார் அவர்களின் கச்சேரிகளை விரும்பி நிரம்பக் கேட்டிருக்கிறேன். அவருடைய கச்சேரி எங்கே நடைபெற்றாலும் அதிக ஆவலோடு விரைந்துசென்று கேட்பேன்.

"எனக்கு அவரிடம் நிறைந்த பக்தி உண்டு; அவர் சங்கீதத்தில் பிரேமை உண்டு. நேற்று—ரேடியோ சங்கீத சம்மேளனத்தில்—அவர் கச்சேரி. பிரயாண அலுப்புடன்தான் இருந்தேன். பாட்டைக் கேட்க வேண்டுமென்றால் ரேடியோ மூலம் கேட்டுவிடலாம். எனக்கு அவரைப் பார்க்கவேண்டும் என்று ஆசையாக இருந்தது. அதனால் அவர் கச்சேரி செய்கிற இடத்திற்குப் போனேன்;

அவரைப் பார்த்தேன்; அவர் சங்கீதத்தைக் கேட்டேன்; பின்னர் அளவளாவிக் கொண்டிருந்து விட்டுத் திரும்பினேன்.

" அவருடைய சங்கீதத்தைக் கேட்கும் வித்தியார்த்திகள் நல்ல பலனைப் பெறுவார்கள். எல்லோரும் அவசியம் கேட்டுப் பயன் பெறத் தக்கது அவர் சங்கீதம்.

" ஸ்ரீ கிருஷ்ணமாசாரியார் அவர்கள் இல்லத்திலும் திருவிதாங்கூர் மகாராஜா மகாராணி இவர்கள் முன்னிலையிலும் நடைபெற்ற நிகழ்ச்சிகள் மறக்க முடியாதவை. எனக்குக் கிடைத்த அந்தப் பேறு வேறு எவருக்குமே கிட்டியிராது என எண்ணுகிறேன். அவர் நீடூழி வாழ வேண்டும்."

## 37. கைங்கரியம்

(1948)

ஸ்ரீ தியாகப் பிரம்மத்தினிடம் அன்று முதல் இன்று வரை என்றுமே குன்றாத பக்தி உடையவர் ஸ்ரீ ஐயங்கார். 1918 முதல் தொடர்ந்து ஒவ்வோர் ஆண்டிலும் திருவையாற்றில் நடைபெறும் ஸ்ரீ தியாகோற்சவத்தில் தவறாமல் சங்கீதக் கைங்கரியம் செய்து வருபவர். சில வருஷகாலம் உற்சவப் பொறுப்பை ஏற்று அதி விமரிசையாக நடத்தியவர். பல கச்சேரிகள் செய்து நிதி வசூலித்து ஆராதனைக் கைங்கரியத்திற்கு அர்ப்பணித்தவர். பிறர் கச்சேரிகளை ஏற்பாடு செய்து அதன் மூலமும் நிதி சேர்த்து உதவியவர். இன்றும் உற்சவ காலத்தில் அங்கே சென்று சந்நிதியில் பாடத் தவறுவதில்லை.

இவ்வளவு இருந்தும் அவர் உள்ளத்திற்குத் திருப்தி இல்லை. நாட்டிலே தியாகப் பிரம்ம வழிபாடு நடைபெறாத

இடமே இருக்கக் கூடாது என்பது அவர் கருத்து. அந்த முறையிலே தாம் ஒரு தொண்டை மேற் கொள்ள வேண்டும் என எண்ணினர். திருப்பதித் திருத்தலத்தைத் தேர்ந் தெடுத்தார். 1948-இல் அங்கே ஸ்ரீ தியாகப் பிரம்ம விழாவைத் துவக்கினர்; வெகு சிறப்பாக நடத்தினர். அன்று முதல் இன்று வரை ஆண்டுதோறும் அவருடைய பெரு முயற்சியில் அங்கே ஸ்ரீ தியாகோற்சவம் நடைபெற்று வருகிறது. கலைஞர்கள், ரசிகர்கள் பலர் ஈடுபாடு கொண்டு ஸ்ரீ ஐயங்காரோடு ஒத்துழைத்து விழாவைச் சிறக்கச் செய்து வருகின்றனர்.

## 38. சங்கீத யாத்திரை

**(1950)**

கல்கத்தா வாசிகளில் சிலர் கூடிச் சிறப்பாக நடத்தி வரும் 'சௌத் இண்டியன் கிளப்' என்ற ஸ்தாபனத்தி லிருந்து ஸ்ரீ ஐயங்காருக்குக் கச்சேரி அழைப்பு வந்தது. வயலின் வித்துவான் திருவனந்தபுரம் ஸ்ரீ கிருஷ்ணன், மிருதங்க வித்துவான் பாலக்காடு ஸ்ரீ மணி ஐயர் இவர் களுடன் ஸ்ரீ ஐயங்கார் அவ்விடம் சென்றார்.

முன்பு ஒருமுறை—1938-இல்—வடநாட்டுப் பிரயா ணம் ஏற்பட்டபோது நடைபெற்றது போலவேதான் இப் பொழுதும். அப்போது பம்பாய், டில்லி இரு பிரதான நகரங்களை ஒட்டி மற்றும் பல இடங்களில் கச்சேரிகள் தொடர்ந்தன; இப்போதும் அப்படித்தான்.

முன்பு அவர் வயசு நாற்பத்தெட்டு. இப்பொழுதோ அறுபதாவது பிராயத்தை எட்டிவிட்டார்! அங்கங்கே உள்ள ரசிகர்களில் அவர் பிராயத்தை அறிந்தவர்கள் அவருடைய பாட்டைக் கேட்டுப் பிரமித்துப் போனர்கள்.

"அறுபது வயசில் இத்தனை மிடுக்கோடும் சுவை ததும்பு கிற முறையிலும் பாடியவர்களை இதற்குமுன் கண்டதே இல்லை" என்று பேசிக் கொண்டார்கள்.

அந்தப் பிரயாணத்தில் அந்தக் கோஷ்டியுடன் ஸ்ரீ ஐயங்கார் காசி வரையில் சென்று ஊர் திரும்பினார்.

# 39. அறுபதாம் ஆண்டு நிறை விழா

**(1950—1951)**

ஸ்ரீமான் ராமாநுஜ ஐயங்கார் அவர்களுக்கு 1951-ஆம் ஆண்டு மே மாதத்தில் அறுபது ஆண்டுகள் நிறைவுறுவதை எண்ணிய அன்பர்கள் கூடி அந்த வைபவத்தைச் சிறந்த முறையில் விழாவாகக் கொண்டாடத் தீர்மானித்தனர். வைதிக முறைப்படி உரிய காலத்திலே நடைபெறவேண்டிய செயல்கள் பின்னால் நடைபெற இருக்க, அன்பர்களுக் கெல்லாம் சௌகரியமான ஒரு சந்தர்ப்பத்தில் தங்கள் சந்தோஷத்தை வெளியிட்டுக்கொள்வதற்காக, ஸ்ரீ ஐயங் கார் அவர்களைக் கௌரவிப்பதற்காக, லௌகிக முறையில் விழாவுக்கு ஏற்பாடு செய்தனர். ஏராளமான அன்பர்கள் அதில் கலந்துகொண்டனர்.

தஞ்சைச் சரஸ்வதி மகாலில் அந்த விழா நடை பெற்றது. ஸ்ரீ ராமகிருஷ்ணராஜு அவர்கள் விழாவுக்குத் தலைமை தாங்கினார். கொடியாளம் ஸ்ரீ கே. வி. ஸ்ரீநிவாச ஐயங்கார் அவர்கள் ஸ்ரீ தியாகப் பிரம்மத்தின் உருவத்தைத் தங்கத்தில் அமைத்துத் தங்கச் சங்கிலியில் இணைத்து ஸ்ரீ ராமாநுஜ ஐயங்காருக்கு அணிவித்தார். வலக் கரத்திற்குத் தங்கத் தோடா ஒன்று செய்து அளித்தார். மற்றும் பல பிரமுகர்களும் ஏனைய அன்பர்களும் ஏராளமான பரிசுகளை

வழங்கினர். எல்லோரும் ஸ்ரீ ஐயங்கார் அவர்களை வாழ்த்தினர்; எல்லோரும் ஸ்ரீ ஐயங்கார் அவர்களின் ஆசியைப் பெற்றனர்.

ஈரோட்டில் பல அன்பர்கள்கூடி விழா ஒன்றை ஏற்பாடு செய்தனர். ஸ்ரீ ஐயங்கார் அவர்களிடம் ஆழ்ந்த அன்புடைய **ஸ்ரீநிவாசபுரம் ஸ்ரீ டி. ராகவாசாரி** அவர்களும் மற்றும் பல பிரமுகர்களும் அந்த விழாவில் பங்கு கொண்டு சிறப்புற நடத்தி வைத்தனர். அப்போது விழா நிர்வாகிகள் கூடி ஸ்ரீ ராமானுஜ ஐயங்கார் அவர்களுக்கு, **'காயக கண்டீரவ'** என்ற சிறப்புப் பட்டத்தை அளித்து மகிழ்ச்சி பெற்றனர். பிரபல வித்துவான்களின் இன்னிசைக் கச்சேரி, சுவை மிக்க விருந்து ஆகியவற்றுடன் விழா இனிது நிறைவேறிற்று. அதை, 'ஸ்ரீ ராமானுஜ ஐயங்கார் ஷஷ்டி அப்த பூர்த்தி வெள்ளி விழா' என அன்பர்கள் குதூகலத்தோடு குறிப்பிட்டார்கள்.

அதன் பிறகு 1951-ஆம் ஆண்டு மே மாதத்தில் (விகிருதி வருஷம் வைகாசி மீ ரோகிணி நட்சத்திரம் கூடிய சுபதினத்தில்) ஸ்ரீ ஐயங்கார் அவர்களின் ஷஷ்டி அப்த பூர்த்தி விழா உப்பிலியப்பன் சந்நிதியிலே வேதோக்த முறைப்படி நடைபெற்றது. உறவினர்கள், சிஷ்யர்கள், ரசிகர்கள், பிரமுகர்கள், மற்றும் உள்ள அநேகம் அன்பர்கள் எல்லோரும் அந்த வைபவத்திலே பக்தி சிரத்தையுடன் பங்கு கொண்டனர். சங்கீத வித்துவான்கள் பலர் விஜயம் செய்தனர்.

விழா ஐந்து நாள் கொண்டாடப் பெற்றது. பகவானுக்குத் திருமஞ்சனம், ததியாராதனை முதலிய விசேஷ ஆராதனைகள் நடைபெற்றன. ஏழை, எளியோருக்கு அன்னம் இடப்பெற்றது.

செம்மங்குடி ஸ்ரீ ஸ்ரீநிவாசையர் அவர்கள் கச்சேரி செய்தார். கும்பகோணம் ஸ்ரீ ராஜமாணிக்கம் பிள்ளை அவர்களும் பாலக்காடு ஸ்ரீ மணி ஐயர் அவர்களும் அவருக்குப் பக்கவாத்தியம் வாசித்துக் கச்சேரியைச் சிறப்பித்தனர். எம்பார் ஸ்ரீ விஜயராகவாசாரியார் அவர்களின் சத்கதா காலட்சேபமும், திருவிடைமருதூர் ஸ்ரீ வீருசாமி பிள்ளை அவர்களின் நாகஸ்வரக் கச்சேரியும் நடைபெற்றன. விழா இனிது நிறைவேறிற்று.

## 40. தீர்க்க தரிசனம்

**(1951)**

அந்த ஆண்டில் திருவையாற்றில் ஸ்ரீ தியாகப் பிரம்ம உற்சவம் அதிவிமரிசையாக நடைபெற்றது. கர்நாடக சங்கீதக் கலையில் கரைகண்டவர்கள் என்று கூறத்தக்க பெரிய பெரிய வித்துவான்கள் முதல், மேடையேறிப் பிரசித்திபெற்று வருகிற நடுத்தர வித்துவான்கள் உள்பட, குருகுல வாசத்தை முடித்த இளம் பாடகர்கள் வரையில் அனைவரும் தியாகப் பிரம்மத்தின் அருளைப் பெற அங்கே வந்திருந்தனர். அனைவருமே சங்கீதக் கைங்கரியத்திலே ஈடுபட்டனர்; பக்தி சிரத்தையோடு இசைத் தொண்டாற்றினர்.

அப்போது ஸ்ரீ ஜி. என். பாலசுப்பிரமணியம் அவர்கள் நடுத்தர அந்தஸ்திலிருந்து மேலும் உயர்வை எட்டிய தருணம். எங்கே பார்த்தாலும் அவருடைய கச்சேரிகள் அமோகமாக நடைபெற்று வந்த சமயம். திருவையாற்றிலே கச்சேரி செய்ய அவரும் வந்திருந்தார். முதிர்ந்த வித்துவான்களையும் மற்றோரையும் சந்தித்து மனம்விட்டுப் பேசி அளவளாவினர்.

உரிய நேரம் வந்ததும் ஸ்ரீ ஜி. என். பி. அவர்கள் பக்க வாத்திய ஜமாவுடன் கச்சேரி செய்ய அமர்ந்தார். சுருதியிலே இணைந்து இசைக்கத் தொடங்கினதும் தம்மை மறந்தார்; சூழலை மறந்தார்; உலகத்தையே மறந்தார்; இசையோடு கலந்தார்.

ரசிகர் கூட்டம் 'ஆகா, ஆகா' என்று ஆர்ப்பரித்துக் கரகோஷஞ் செய்ய அனைவருமே அபிப்பிராய பேதம் சிறிதும் இன்றி, 'அற்புதம்' என்று கொண்டாடத் தக்க முறையில் கச்சேரி செய்து முடித்தார் ஸ்ரீ ஜி. என். பி.

கச்சேரி முடிவடைந்து தனிமையில் இருந்தபோது அவர் இருந்த இடத்தை நோக்கி ஸ்ரீ ஐயங்கார் அவர்கள் வந்தார். அவர் வந்துகொண்டிருப்பதைக் கண்ணுற்ற ஸ்ரீ ஜி. என். பி. அவர்கள் இருக்கைவிட்டெழுந்து பவ்வியமாக நின்றார். அவர் உள்ளம் சிந்தனை வசப்பட்டது. 'இவரும் இவ்வளவு நேரம் இங்கே இருந்திருக்கிறார்; நம் பாட்டைக் கேட்டுக் கொண்டிருந்திருக்கிறார்; என்ன சொல்கிறாரோ!' என்றெல்லாம் ஓடிற்று எண்ணம்.

அவருடைய மதிப்பீட்டில் ஸ்ரீ ஐயங்கார் அவர்களின் சங்கீதத்துக்கு எத்தகைய உயர்ந்த பெறுமானம் உண்டோ அதைவிட ஒரு பிடி மேலான பெறுமானம் சங்கீத சம்பந்தமான ஐயங்கார் அவர்களின் அபிப்பிராயத்துக்கு உண்டு. கச்சேரி செய்ய அமருமுன் ஐயங்கார் அவர்களைப் பார்த்துப் பேசிக்கொண்டிருந்ததைக் கச்சேரி செய்கிறபோது மறந்திருந்தார். இப்போது அவரைப் பார்த்ததும் நினைவு வந்தது; சிந்தனை வளர்ந்தது.

நின்றுகொண்டிருந்த ஸ்ரீ ஜி. என். பி. அவர்கள் சட்டென்று சிந்தனையிலிருந்து தம்மை விடுவித்துக் கொண்டு எதிர் கொண்டு சென்று, "நமஸ்காரம். வாருங்கள், வாருங்கள்" என்று ஐயங்கார் அவர்களை வரவேற்றார்.

மந்தஹாசத்துடன் ஸ்ரீ ஜி. என். பி. அவர்களைச் சமீபித்த ஐயங்கார் அவர்கள் அன்பு ததும்பும் குரலில், "மணி, வெகு நன்றாகப் பாடினாய். இதுதான் பாட்டு" என்றார்.

ஸ்ரீ ஜி. என். பி. அவர்கள் உள்ளத்தில் கால் நூற்றாண்டுக்கு முன்—1926-இல்—ஸ்ரீ ஐயங்கார் அவர்கள் தம் இல்லத்திற்கு வந்தபோது தாம் பாடியதைக் கேட்டுத் தம் தகப்பனாரிடம் சொன்ன பொன்மொழிகள் நினைவில் வந்தன.

## 41. திருப்பாவை

(1952)

ஸ்ரீ ஐயங்கார் கர்நாடக சங்கீத உலகில் சாகித்தியத் தொண்டு என்ற பகுதியில் செய்திருக்கிற சேவை மிகவும் பாராட்டத் தக்கது. நல்ல பொருள் என்றால் அவருடைய நாட்டம் அதன் மீது விழத் தவறுவதில்லை. அத்தகைய பொருளை ஆள முன்வரும்போது அவர் அவசரப்பட்டுச் செயலாற்றுவதில்லை. அவருடைய இந்தச் சேவைக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல் ஆயிற்று, 1952-இல் அவர் ஆற்றிய ஒரு சிறந்த பணி.

திருப்பாவைக்கு வர்ண மெட்டுக்கள் அமைத்துப் பாடிப் பரவச்செய்ய வேண்டும் என்று அவர் எப்பொழுது எண்ணினாரோ; அந்தப் பொக்கிஷத்திலே அடங்கியிருந்த ரத்தினங்கள் அரங்கிலே ஜொலித்தது 1952-இல்தான. சென்னை திருவல்லிக்கேணி பார்த்தசாரதி சங்கீத சபாவில் 1952 ஜனவரியில் திருப்பாவை அரங்கேற்றம் நடைபெற்றது. இரண்டுநாள் நிகழ்ச்சி: முதல் நாள் 15, மறு நாள் 15. வயலின் வித்துவான் கண்டதேவி ஸ்ரீ அழகிரி

சாமி, மிருதங்க வித்துவான் பாலக்காடு ஸ்ரீ மணி ஐயர் இருவரும் அந்நிகழ்ச்சியிலே பங்கு கொண்டு சிறப்பித்தார்கள். ரசிகர்கள் திரளாக வந்திருந்து கேட்டு இன்புற்றனர்.

காலதேச வர்த்தமானங்களையும் அன்பர்களின் வற்புறுத்தலையும் உத்தேசித்து ஸ்ரீ ஐயங்கார் திருப்பாவை அரங்கேற்றத்தைச் சென்னையிலே நடத்திவிட்டாலும் அவர் உள்ளத்திலே ஸ்ரீ வில்லிபுத்தூர் சென்று பகவான் சந்நிதியிலே திருப்பாவைப் பாடல்களை மனமுருகப் பாட வேண்டும் என்ற ஆர்வம் கொந்தளித்தபடியே இருந்தது. உரிய காலத்தை எதிர்பார்த்திருந்தார்.

ஆடிப்பூர உற்சவம் எங்குமே சிறப்பாகத்தான் நடைபெறும்; ஸ்ரீ வில்லிபுத்தூரில் அது அதிகச் சிறப்புடன் நடை பெறுவதுண்டு. அந்தச் சமயத்திலே அங்கே தம் கைங்கரியத்தை நிறைவேற்ற எண்ணிய ஸ்ரீ ஐயங்கார் 1953 ஜூலையில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யலானார்.

சென்னை அரங்கேற்றத்தில் வாசித்த பக்கவாத்திய வித்துவான்களே அங்கும் வாசிக்க முன் வந்தார்கள். ஆடிப்பூர உற்சவத்தில் ஸ்ரீ ஐயங்காரின் திருப்பாவை அரங்கேற்றம் ஸ்ரீ வில்லிபுத்தூர் ஆலயத்திலே அதிவிமரிசையாய் நடந்தேறிற்று. அங்கும் இரண்டுநாள் நிகழ்ச்சி. ஸ்ரீ ஐயங்காரின் உள்ளம் நிறைவு பெற்றது.

## 42. மனோ திடம்

**(1952)**

பம்பாய் ஷண்முகானந்த சபையில் ஸ்ரீ ஐயங்காரின் கச்சேரிக்கு ஏற்பாடாகியிருந்தது. பாப்பா ஸ்ரீ டி. எஸ். வேங்கடராமையா வயலின், பாலக்காடு ஸ்ரீ ரகு அவர்கள் மிருதங்கம்.

கச்சேரி ஒப்புக் கொண்டபின் ஸ்ரீ ஐயங்காருக்கு லேசாக ஜலதோஷம் ஏற்பட்டது; வரவர அதன் ஆட்சி வலுத்தது. ஸ்ரீ ஐயங்கார் இயன்ற வரையில் பரிகாரங்களைச் செய்து கொண்டே வந்தார். குறிப்பிட்ட நாளில் பக்க வாத்திய வித்துவான்களுடன் பம்பாய் சென்றார்.

பம்பாயை அடைந்ததும் அவருக்குக் காய்ச்சலே கண்டுவிட்டது. நேரம் செல்லச் செல்லக் காய்ச்சலின் கொடுமை அதிகரிக்கவும் தொடங்கிவிட்டது. கச்சேரி யன்று காலையில் 102 டிகிரி!

சபையின் நிர்வாகிகள் செய்தியறிந்து ஸ்ரீ ஐயங்கார் தங்கியிருந்த இடத்திற்கு வந்தார்கள். நிலைமையை நேரில் கண்டார்கள். மனம் மிகக் கசிந்தார்கள். என்ன செய்யலாம் என்று யோசித்துக் குழம்பினார்கள்.

சபைக் கச்சேரிகளில் 'கேட் கலெக்ஷன்' ஒரு சோதனை. எதிர்பாராவகையில் ஒரு சமயம் அது மிகுந்த குதூகலத்தை உண்டுபண்ணும்; அதேமாதிரி சில சமயம் வருத்தத்தையும் அளிக்கும். ஒரே ஊரில் ஒரே சபாவில் ஒருவருடைய கச்சேரிக்கே ஒரு சமயம் பிரமாதமான வசூல் இருக்கும்; மற்றொரு சமயம் மிகக் குறைந்த வசூல் இருக்கும்.

ஸ்ரீ ஐயங்காரின் கச்சேரி இந்த விதிக்கு முற்றும் விலக்கானது. அவர் கச்சேரியிலே வசூல் குறைவு என்று வருந்திய சபாக்காரர்கள் யாரும் இல்லை என்றே சொல்லலாம். அவருடைய சங்கீதத்தில் மாறுதல் இருந்தால்தானே வசூலில் மாறுதல் ஏற்பட?

பம்பாய் ஷண்முகானந்த சபாவிலும் அன்று அப்படித்தான்; ஏராளமான டிக்கட்டுக்கள் விற்பனை ஆகியிருந்தன. அந்நிலையில் கச்சேரியை நிறுத்துவதோ, வேறு யாரை யாவது கச்சேரி செய்ய வைப்பதோ சாத்தியமாக இல்லை. ஸ்ரீ ஐயங்கார் கச்சேரி செய்வதும் இயலாத காரியமாகத்

தோற்றியது. சபாக்காரர்கள் குழம்பாமல் என்ன செய்ய முடியும்?

அவர்கள் நிலை கண்டு வேதனை கொண்ட ஸ்ரீ ஐயங்கார் சொன்னார்: "என்னிடமும் வஞ்சனை இல்லை; உங்களிடமும் வஞ்சனை இல்லை. இது கடவுளின் சோதனை. இன்னும் இரண்டு மணிநேரம் இருக்கிறதே; இடை விடாமல் என் குருநாதரைப் பிரார்த்திக்கிறேன்; நன்மை ஏற்படலாம். உரிய நேரத்தில் நீங்கள் காரை அனுப்பி வையுங்கள்."

பேசமுடியாத நிலையில் பேசியபடியால் சோர்வு மேலிட்டது. பேசி முடிந்ததும் கண்ணை மூடிக்கொண்டார்.

சபாக்காரர்கள் வேதனையுடன் சென்றார்கள். ஸ்ரீ ஐயங்கார் மூடிய கண்ணைத் திறக்கவே இல்லை. தாம் சொன்னபடி குருநாதரைத்தான் பிரார்த்தித்தாரோ; அல்லது நினைவு இன்றிப் படுத்துக் கிடந்தாரோ தெரியாது.

மணி நாலு அடித்தது. வாசலில் கார் வந்து நின்றது. ஸ்ரீ ஐயங்கார் படுக்கையில் எழுந்து உட்கார்ந்தார். சபைக் காரியதரிசி உள்ளே வந்தார். ஸ்ரீ ஐயங்கார் தம் குருநாதரை நினைந்து வணங்கினார். மெல்ல எழுந்து நின்றார். உடல் தள்ளாடிற்று. உடன் இருந்தவர்கள் தாங்கிக்கொண்டனர். உடம்பு மழுவாய்க் கொதித்தது. அவர் பிறர் கைத்தாங்கலில் காரை அடைந்து அமர்ந்தார்.

கார் சபா வாயிலை அடைந்து நின்றது. ஸ்ரீ ஐயங்கார் மேடைக்கும் பிறர் கைத் தாங்கலில்தான் சென்றார். அதைக் கண்ட ரசிகக் கூட்டத்தினிடையே கசமுசவென்ற பேச்சு எழுந்து பரவிற்று. சுருதி ஒலிக்கத் தொடங்கின பிறகு தான் பேச்சொலி அடங்கிற்று.

ஸ்ரீ ஐயங்கார் பாடினார். முதலில் வர்ணம்; அதிலேயே பறந்துவிட்டது அவர் உடல் ஜாட்டியம். அதற்குப் பிறகு வழக்கம் போல் மளமளவென்று பாடலானார். வழக்கத்தை

விட அதிக நேரம்; அதிகச் சோபிதம்—ஐந்து மணி நேரம் அபாரமான கச்சேரி!

அவர் முக பாவத்திலோ, பாட்டிலோ உடலில் உள்ள கோளாற்றின் குறிகள் அணுவளவும் பிரதிபலிக்கவே இல்லை. ஆரம்பமுதல் இறுதிவரை முகத்தில் சிரிப்பு வாட வில்லை; பாட்டில் 'டெம்போ' குறையவில்லை. குருநாதரின் அருளில் அவர் வைத்த நம்பிக்கையும், அதனால் அவரிடம் தோன்றிய மனோதிடமும் வீண்போகவில்லை.

## 43. இளைய தமையனார்

**(1952)**

சோதிடக் கலையில் வல்லவராகவும் தர்மசீலராகவும் வாழ்ந்த ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார் அவர்கள் இருந்த காலத்திலேயே அவருடைய மாற்றுருவாக விளங்கி வந்தார் ஸ்ரீ கிருஷ்ண ஐயங்கார் அவர்கள். இன்னும் சொல்வதானால் தகப்பனாரைவிட ஒரு பிடி மேலாகவே விளங்கினார் எனலாம்.

ஒரு சமயம் தேவகோட்டைப் பிரமுகர் ஒருவர் உடல் நலங்கெட்டுச் சிரம திசையில் இருந்தார். மணி, மந்திர, ஔஷதங்களினால் குணம் பெறும் வாய்ப்பு இனி இல்லை என்று வல்லவர்கள் பலர் பார்த்து முடிவு செய்துவிட்டனர். ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார் அவர்களும் அறிந்த விஷயம் இது. அந்நிலையில் ஸ்ரீ கிருஷ்ணையங்கார் அவர்கள் அந்தப் பிரமுகரின் ஜாதகத்தை எடுத்து வைத்துக் கிரக நிலைகளைப் பரிசீலனை செய்தார். அவருக்கு நம்பிக்கை ஏற்பட்டது. சம்பந்தப்பட்டவர்களிடம் சென்று சில சாந்தி, ஹோமம், தானம் முதலியவற்றைச் செய்யும்படிக் கூறினார். அவர்களும் அவர் வாக்கைத் தேவ வாக்காக

மதித்து அவர் சொன்ன பரிகாரங்களைச் செய்யலானார்கள். அதை அறிந்த தகப்பனார் பிள்ளையை அழைத்து, "அப்பா, நம்பிக்கைக்கே இடமில்லாத ஒரு விஷயத்திலே வைத்தியர் களும் சோதிடர்களும் தீவிரமாக யோசித்து ஈடுபட வேண்டும். இல்லையேல் வீண் அபக்கியாதிக்கு ஆளாக நேரும். அபக்கியாதி நேர்ந்தபின் வருந்துவதில் பயன் இல்லை. இதை ஏற்கனவே உனக்குப் பல முறை சொல்லி யிருக்கிறேன். இருந்தும் இந்த விஷயத்திலே தலையிட் டிருக்கிறாயே!" என்றார்.

"என் கண்களுக்குச் சிறிது நம்பிக்கை புலப்பட்ட தால்தான் அப்பா பிரவேசித்தேன். தீர யோசியாமல் ஈடுபட வில்லை. அந்தப் பிரபுவை இப்போது சூழ்ந்திருப்பது கால மிருத்தியு அல்ல; அபமிருத்தியுதான். முயன்றால் பிராண பயத்திலிருந்து மீளலாம். நீங்கள் நன்றாகப் பரிசீலனை செய்யவில்லை போலிருக்கிறது" என்று மிகவும் பவ்விய மாகப் பதில் சொன்னார் பிள்ளை.

தந்தை அதைப்பற்றி எண்ணமிட்டுக்கொண்டிருக்கிற போதே பிரமுகர் இல்லத்திலிருந்து செய்தி வந்தது, சிறிது குணம் என்று. தகப்பனார் வியப்பிலே மூழ்கினார்.

சில நாட்களில் அந்தப் பிரபு சுகம் பெற்றெழுந்தார்; பிறகு பல காலம் வாழ்ந்தார். அந்த நிகழ்ச்சி பற்றிப் பேசிப் புகழாதவர் அந்த வட்டாரத்திலேயே இல்லை.

இத்தகைய சிறந்த யோக்கியதை உடைய ஸ்ரீ கிருஷ்ண ஐயங்கார் அவர்கள் எழுபது ஆண்டுகள் சுகமாக வாழ்ந் தார். அவருக்கு ஐந்து பெண்களும், ஒரே பிள்ளையும். பெண்களில் மூத்தவரான ஸ்ரீமதி செல்லம்மாள்தான் காரைக்குடி ஸ்ரீ ஸ்ரீநிவாசையங்கார் அவர்களின் தர்மபத்தினி.

புண்ணியாத்துமாக்களானாலும் முற்பிறப்பின் பாவ சேஷத்தை அநுபவித்தே தீரவேண்டும் என்பதற்கு உதாரணம்போல ஸ்ரீ திருவேங்கடத்தையங்கார் அவர்கள் தமது மூத்த புதல்வரை இழந்து புத்திர சோகத்திற்கு ஆளானார் என்றால், அவருடைய இளைய குமாரர் ஸ்ரீ கிருஷ்ணையங்கார் அவர்களும் தம் ஒரே அருமைச் செல்வனை இழந்து துடிதுடிக்கும் விதி இருந்தது. பிள்ளைவழிப் பேரன் ஒரு சிறு மனச்சாந்தி.

காலமெல்லாம் தேவகோட்டையிலே கழித்த ஸ்ரீ கிருஷ்ண ஐயங்கார் அவர்கள் வயோதிகம் காரணமாக நோய்வாய்ப்பட்டார். 70-ஆவது வயதில் இறைவனடி சேர்ந்தார்.

தந்தைக்குப் பின் அந்த ஸ்தானத்தில் பூஜ்யராக இருந்து குடும்பத்தை அவர் கவனித்து வந்ததால் ஸ்ரீ ராமாநுஜ ஐயங்கார் கலை வாழ்க்கையிலே ஈடுபட்டுக் கவலை சிறிதுமின்றிப் பணியாற்றி வந்தார். இப்போது இளைய தமையனாரை இழந்து வருந்தலானார்.

## 44. அரசாங்கப் பரிசு

(1952)

இந்தியா சுதந்தர நாடாக ஆனதனால் மக்கள் வாழ்விலே தோன்றிய நலன்கள் ஒருபுறம் இருக்க, கலைகளைப் பொறுத்த வரையில் யோக காலம் என்றுதான் சொல்ல வேண்டும். இந்தியாவிலே உள்ள சமஸ்தானங்களும் ஜமீன்களும் மட்டுமே கலைகளை ஆதரித்துப் போற்றிவர, அவற்றைத் தன்னுள்கொண்ட இந்திய அரசாங்கத்தின் மேலிடம் கலைகளைக் கண்ணெடுத்தும் பாராமல் இருந்தது. இப்போது அந்த ராஜபீடமும் தக்க மரியாதை அளிக்கிற நிலை ஏற்பட்

டிருக்கிறது. கலைகளைப் பொறுத்த வரையில் யோக காலந் தானே?

கலைகள் எனுமிடத்தில் மற்றத் துறைகள் ஒருபுற மிருக்க, கர்நாடக சங்கீதக் கலையைப் பொறுத்த மட்டில் ஆண்டுதோறும் சில பரிசுகளை அளித்துக் கலைஞர்களைக் கௌரவிப்பது என்று இந்திய அரசாங்கம் திட்டமிட்டது. வாய்ப்பாட்டு, வாத்தியம், பரதம்—இப்படியாக ஒவ்வொரு துறையிலும் வல்லவர்களுக்கு வரிசையறிந்து அந்தப் பரிசை வழங்குவதெனத் தீர்மானித்தார்கள். தீர்மானம் அமலாகிச் செயலுக்கு வந்தது 1952-இல்தான்.

முதல் வருஷத்துப் பரிசு. அதைப் பெறத் தகுதி உடையவர்களைத் தேர்ந்தெடுப்பதென்பது கடினமான விஷயந்தான். ஏனெனில் கர்நாடக சங்கீதம் அமுதக் கடல் போன்றது. அக்கலையில் வல்லவர்கள் நாடெங்கும் இருக் கிறார்கள். வயசிலே முதிர்ந்தவர்களைத் தேர்ந்தெடுப்ப தென்பது சுலபம். யோக்கியதையிலே முதிர்ந்தவர்களைப் பொறுக்குவது அப்படி அல்ல. ஒவ்வொருவரிடம் ஒவ் வொரு வகையான யோக்கியதை மிகுதி. எப்படித் தீர்ப்புச் சொல்வது?

ஆனால் முதல் வருஷத்துப் பரிசுக்கு உரியவர்களைத் தேர்ந்தெடுத்தவர்களுக்கு மேற்கூறிய பிரச்னை சிறிதும் ஏற் படவே இல்லை. தெய்விக வாத்தியமான வீணை மூலம் காலமெல்லாம் நாதோபாசனை செய்து வரும் காரைக்குடி ஸ்ரீ சாம்பசிவையர் அவர்களையும், அபிப்பிராய பேதத் திற்கே இடமில்லாமல் நாற்பது ஆண்டுகளாய் இசைக் கலைக்குத் தொண்டாற்றி, முன்னேறி, வாய்ப் பாட்டுத் துறையில் உயர்ந்த ஸ்தானத்தை வகித்துவரும் அரியக்குடி ஸ்ரீ ராமாநுஜ ஐயங்கார் அவர்களையும் முதல் வருஷப் பரிசுக்கு உரியவர்களாய்த் தேர்ந்தெடுப்பதில்

சிரமம் என்ன? பரிசீலனைக்குழு அவர்களைப் பெருமையோடு சிபாரிசு செய்தது.

பரிசளிப்பு விழாவில் ஸ்ரீ ஐயங்கார் அவர்களின் கச்சேரி நடைபெற்றது. **ஸ்ரீ டி. கே. ஜயராமையர்** அவர்கள் வயலினும் **காரைக்குடி ஸ்ரீ முத்துவையர்** அவர்கள் மிருதங்கமும் வாசித்துச் சிறப்பித்தார்கள். **இந்திய ஜனாதிபதி டாக்டர் ராஜேந்திரபிரசாத்** அவர்கள் மகிழ்ச்சியோடு பரிசுகளை வழங்கிக் கலைக்கு மரியாதை செய்தார். சங்கீத உலகம் பெருமகிழ்ச்சி பெற்றது! ரசிகர் உலகம் ஸ்ரீ ஐயங்காரும் அவர் இசையும் நீடூழி வாழவேண்டும் என வாழ்த்திற்று.

# சங்கீதச் சிறப்பு

# சங்கீதச் சிறப்பு

கர்நாடக சங்கீத உலகில் இந்தத் தலை முறையில் வாய்ப் பாட்டுத் துறையில் எல்லாவகையாலும் இன்று முதன்மை ஸ்தானத்தில் உள்ளவர் சங்கீத ரத்னாகர, சங்கீத கலாநிதி, காயக சிகாமணி, காயக கண்டீரவ, சங்கீத கலா சிகாமணி என்றெல்லாம் சிறப்புப் பட்டங்கள் பல பெற்ற சங்கீத வித்துவான் அரியக்குடி ஸ்ரீ ராமாநுஜ ஐயங்கார் அவர்கள். அவருடைய சங்கீதம் அப்பழுக்கு அற்றது. பாமரர் முதல் பண்டிதர் வரையில் முழுக் கச்சேரியையும் கேட்டு ரசிக்கத் தக்கது. இன்றைய மேடைக் கச்சேரியின் உயர்ந்த பாணிக்கும் சிறந்த அமைப்புக்கும் காரணம் அவரே.

சுமார் அரை நூற்றாண்டுக்கு முன்பு வரையில் சங்கீதம் மிகத் தூய்மையான முறையிலே மகா வித்துவான்களால் ஆளப் பெற்றுவந்தது எனத் தெரிகிறது. ஆனால் மக்கள் பலரும் கேட்டு ரசித்து இன்புறத்தக்க ஓர் அமைப்பு அதிலே இருந்ததில்லை. அதாவது மேடைக் கச்சேரிக்கு என்று ஒரு முறை அப்போது அமையவில்லை. வித்துவான்கள் ராக ஆலாபனம் செய்ய ஆரம்பித்தால் கால வரையே இன்றி மணிக் கணக்கில் ஆலாபனம் செய்து கொண்டே இருப்பார்கள். தானம், ஸ்வரம் முதலியன பாட ஆரம்பித்தாலும் அப்படியே; வித்துவத் தன்மை முழுவதும் வெளிப்படுகிற வகையில் நீண்ட நேரம் பாடிய வண்ணம் இருந்து விடுவார்கள். அவர்கள் ஸ்வாநுபூதிகளாக இருந்ததே அதற்குக் காரணம். அவர்களுக்கு இணையான ஞானம் படைத்த ஒரு சிலர் மட்டுமே அந்தச் செயலை முழுவதும் ரசித்து லயிப்பர்; மற்றவர் ரசிப்பது

சிரமம்; அவர்களுக்குப் பெரும்பாலும் அலுப்புத் தட்டி விடும். ஈசுவரார்ப்பணம் என்ற ஒன்றையே கருதிய வித்து வான்கள், மக்கள் அனைவரும் கேட்டு ரசிப்பதைப்பற்றி எண்ணவில்லை. தவிர, அப்போதெல்லாம் நாதோபாசனை யில் சாகித்தியம் அவ்வளவு முக்கிய ஸ்தானம் பெறவில்லை; நாதம் ஒன்றே பிராதான்யம் பெற்றிருந்தது. அது ஈசுவர அர்ப்பணம் என்பதற்காக அங்கங்கே பகவந் நாமாக்களை மட்டும் உச்சரிப்பதுண்டு.

முந்தின தலைமுறையைச் சார்ந்த வித்துவான்களில் **ஸ்ரீ மகா வைத்தியநாதையர்** அவர்கள் பலரும் மரியாதை செய்யத்தக்க மகா வித்துவானாகத் திகழ்ந்தார். அவர் காலம் **1844—1893.** அந்தக் காலத்திலேதான் மேற் குறித்த நிலையிலே மாறுதல் ஏற்பட்டது என்பார்கள். 'கச்சேரி முறை' என்ற ஒன்றை அவர் தாம் உருவாக்கி ஞர் எனத் தெரிகிறது. அவர் காலத்தவர்களான சங்கீத மேதை **பட்டணம் ஸ்ரீ சுப்பிரமணிய ஐயர்** முதலிய பல பெரியோர்களும் அந்த நற்பணியிலே பங்கு கொண்டார் கள் என்றும் தெரிகிறது. அதுமுதல், முன்பு ஒரு சிலர் மட்டுமே நன்கு ரசிக்கக் கூடியதாக இருந்த சங்கீதம் பின் னர்ப் பலரும் கேட்டு ஓரளவாவது இன்புறத்தக்க வகை யில் ஒரு கட்டுப்பாட்டில் வந்தது; ஞானமும் பரவி வளர லாயிற்று.

ஸ்ரீ மகா வைத்தியநாதையர் காலத்திற்குப் பிறகு மேடைக் கச்சேரி முறையை வளர்க்கப் பாடுபட்டவர்கள் பலர். அவர்களுக்குள் அந்த முறையை நன்கு போஷித்துப் பண்படுத்திய முழுப் பெருமையும் ஸ்ரீ ராமாநுஜ ஐயங்கார் அவர்களைச் சாரும். அதிக ஞானம் இல்லாதவர்களையுங் கூட மூன்று மணி நேரம் அலுப்பே சிறிதும் தோன்றுமல் அமர்ந்து, இருந்து கச்சேரி கேட்கும்படி பழக்கியவர்

அவர். அத்தகைய ஆற்றல் அவருக்கு ஏற்படவென்றே அவரிடம் அமைந்த சாதனங்கள் பல. ஸுசுருதி, சுக சாரீரம், சுநாதம், சப்தந்தரும் ஞானம், அளவறிந்து அளிக்கும் ஆற்றல், ஞான விதரணை, சபை நிர்ணயம், இங்கிதம், நிச்சய புத்தி, உத்தம காயக லட்சணம், சம்பிரதாய வழி, சிறந்த பாணி, தெவிட்டாத நடை, பாடாந்தரம், 'ஒரிஜினுலிடி', லட்சண லட்சியம், கலையம்சம், 'டெம்போ' லயக் கணிசம்—இப்படிப் பல.

## 1. சுருதி

எல்லா இசைக் கலைஞர்களும் 'சுருதிர்மாதா லய: பிதா' என்ற வாக்கியத்தை அறிந்தவர்களே. சங்கீதத்திற்குச் சுருதி எவ்வளவு முக்கியத்துவம் உடையது என்பதை அவர்களுக்கு யாரும் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை.

ஒரு வித்துவான் மற்றக் கலையம்சங்களில் எவ்வளவு மேம்பட்டவராயினும் அவருடைய இசை சுருதியை விட்டு விலகி ஒலித்ததானுல் அவரிடம் உள்ள வித்துவத்து வீணே. அவர் ராகம் பாடுவதிலும், கீர்த்தனங்களின் சாகித்தியங்களைப் பாவமறிந்து உச்சரிப்பதிலும், மற்றும் நிரவல், தானம், ஸ்வரப் பிரஸ்தாரம் முதலிய அம்சங்களிலும் சிரத்தை மிகக் காட்டி, ரத்த வேர்வை வேர்க்க உழைப்பதில் பயன் அணுவளவும் இல்லை.

சுருதியோடு ஒன்றி இழையும் இசை தேவார்ப்பணமானது. அதுவே ஆறறிவு படைத்த மனித சமூகத்தையும் ஐந்தறிவு படைத்த ஏனைய ஜீவராசிகளையும் மெய்ம் மறந்து லயிக்கச் செய்வது.

ஸ்ரீ ஐயங்கார் சுருதியினின்றும் பிறழ்கிற நிலையையே அறியாதவர். ஸுசுருதியோடு கூடிய அவருடைய சங்கீ

தத்தை, 'மிகப் பிரமாதம்!' என்று உலகம் கொண்டாடுவதற்குரிய முக்கிய காரணங்கள் பலவற்றுள் இது முதன்மையானதாகும்.

## 2. சாரீரம்

இரண்டாவது அம்சமாகக் குறிப்பிட வேண்டியது அவருடைய சாரீரத்தின் மேன்மை. அது வேறு எவரிடத்தும் காண முடியாத தனிப்பட்ட ஓர் 'இன்ப ஜீவா'வைப் பெற்றது. அதைப் பெறுவதற்காக ஆயுட்காலமெல்லாம் அசுர ஸாதகம் செய்தவர்கள் பலர். ஓரளவு வெற்றி பெற்றவர்களும் உண்டு. அத்தகைய அசுர ஸாதகத்தின் பயனாக நயம் பெற்ற செயற்கைச் சாரீரத்தைவிட ஸ்ரீ ஐயங்காரின் இயற்கைச் சாரீரம் மிகமிக உயர்ந்ததாகும். தம்பூரா 'மீட்'டின் ஓசையிலே மட்டுமே கேட்கக்கூடிய நய சுகம் உடைய கார்வை அவருடைய சாரீரத்தில் இயற்கையாக அமைந்திருக்கிறது. மேடையிலே தோன்றிய நாள் முதல் இன்றுவரையில் அந்தச் சாரீரத்திலே ரசிகர்களுக்கு வேண்டிய சுக பாவத்திற்குக் குறைவு ஏற்பட்டதே இல்லை. அதைக் காப்பாற்றுவதற்கென்று அவர் விசேஷ அக்கறை எதுவும் எடுத்துக் கொள்வதில்லை. தோன்றியபடியெல்லாம் கச்சேரிகளை ஒத்துக்கொண்டு அந்தச் சாரீரத்தைப் போட்டு அலட்டாமல் இருப்பது ஒன்றே அவர் அதற்கு அளிக்கும் பெரிய போஷணை.

சாரீரம் பல வகைப்பட்டது. கனம் மாத்திரம் உடையது, நயம் மாத்திரம் உடையது, அழுத்தம் மட்டும் உடையது—இப்படிப் பல. இவற்றில் எந்த ஒரு வகைச் சாரீரத்தைக் கொண்டும் ரசிகர்களை நெடுநேரம், நெடுங்காலம் திருப்திப்படுத்த முடியாது. எந்த ஒன்றும் எளிதில் அலுப்புத் தட்டிவிடும்.

ஸ்ரீ ஐயங்காரின் சாரீரம் அத்தகையது அன்று. அவர் தமக்கெனக் கச்சேரிப் பாணி ஒன்றை எப்படிச் சிறந்த முறையிலே வகுத்துக் கொண்டாரோ, அதே மாதிரியாகத் தான் சாரீரத்தையும் பக்குவப்படுத்தி வைத்துக்கொண்டிருக்கிறார். ஓசையை வெளிப்படுத்துகிற விதத்திலேதான் இருக்கிறது அந்தப் பக்குவம். ஓசை வெளிப்படுகிற போது வாயைத் திறப்பதிலும் மூடுவதிலும் எத்தனையோ நுணுக்கங்கள் அடங்கியிருக்கின்றன. அகலத் திறந்தாலும், அதிகம் மூடினாலும், முடக்கி ஒடுக்கினாலும் நாதத்தின் இனிமைக்குப் பங்கம் நேரும். இந்த நுணுக்கங்கள் எல்லாம் நன்றாகத் தெரிந்தவர்கள் உண்டு ; ஆனால் அநுஷ்டானத்தில் ஆள முடிவதில்லை. உணரலாம், பேசலாம், எழுதலாம், உபதேசிக்கலாம் ; செயலில் கொணர்வது சிரமம்.

ஸ்ரீ ஐயங்கார் செயலில் வெற்றி கண்டவர். சாரீரம் கெடாமல் போஷிப்பது ஒன்று ; உள்ள சாரீரத்தைப் பரிமளமாக உபயோகிப்பது மற்றொன்று. அவர் இரண்டிலுமே வல்லவர். சாரீரம் அவர் சங்கீதத்தை ஆளவில்லை; அவர் தாம் சாரீரத்தை ஆள்கிறார்; அதன் மூலமாகச் சங்கீதத்தையும் சேர்த்து ஆள்கிறார். மேல் ஸ்தாயியிலே சஞ்சரித்தாலும் சரி; மந்தர ஸ்தாயியிலே நின்று ஜாலங்கள் புரிந்தாலும் சரி; மத்திய ஸ்தாயியிலே உலவினாலும் சரி; அவருடைய ஒவ்வோர் அம்சத்தையும் ரசிகர்கள் பரவச நிலையில் அநுபவிக்கிறார்கள். காரணம் எந்த ஸ்தாயியிலே அவர் சஞ்சரித்தாலும் அவ்வப்போது அது அதற்கு ஏற்ற நிலையில் அந்தச் சாரீரத்தில் சுநாதமான கனம் தொடர்ந்து கொண்டே இருப்பதுதான். அதனால் ராக லட்சணத்துக்குப் பொருத்தமான வல்லின மெல்லினங்கள் அந்த அந்த இடத்திலே வெகு அழகாக அமைந்து ஜீவனை அளிக்கின்றன.

உயர்ந்த தங்கத்திலே பொருத்தமாக அமைக்கப்பெற்ற ரத்தினங்களைப் போல!

ஸ்ரீ ஐயங்காரின் சாரீர மேன்மைபற்றி எவ்வளவு கூறினாலும் தகும். மனிதனுக்கு உணவு, உறக்கம், உடற் செலவு முதலியவற்றின் மிதம், ஆயுளைக் கூட்டுவதுபோல அவர் பாடுகிறபோது அளவறிந்து ஒலியைக் கொடுக்கிற வகையில் வாய், தொண்டை, மூக்கு, நாபீ கமலம் முதலிய வற்றை உசிதமான அளவிலே ஈடுபடுத்துகிறார்; அதனால் ரக்தி சப்தத்தை அழகாக வெளியிடுகிறார்; சாரீரத்தைக் கெடுக்காமல் பாதுகாக்கிறார் ; ரசிகர்களின் பாராட்டுக்கு நிரந்தரமாக உரியவர் ஆகிறார். சப்தந்தருகிற ஞானத்தில் அவரே முதல்வர்.

ஸ்ரீ ஐயங்காரின் சாரீரத்தில் உள்ள உதவிகள் யாவும் நிஜமானவை; அதாவது அவர் சாரீரம் நிஜ சாரீரம்! பாடிப் பாடி ரீங்காரம் பெற்றுச் சுயமாக மெருகேறியது. தப்பித் தவறிக்கூட எந்த இடத்திலும் கேட்பவருக்குச் சிறிதும் வெறுப்பு உணர்ச்சியை அளிக்காதது. சுகானுபவத்தில் ஊஞ்சலின் மெல்லிய அசைவினுடைய இன்பத்தைத் தரு வது. காம்போஜி போன்ற ராகங்களில் அமைந்த சிறந்த கிருதிகளில் மேல் இடங்களிலே நின்று அவர் சஞ்சரித்துச் சங்கதிகளைப் பூமாரிபோல் பொழிகிறபோது, கேட்கிறவர் கள் பரவசம் ஆகாமல் இருக்கவே முடியாது. உதாரணங்கள்: **'ஸ்ரீ சுப்ரஹ்மண்யாய நமஸ்தே'** என்கிற கிருதியிலே **'வாஸவாதி'** என்னும் இடமும், **'எவரிமாட'** என்கிற கீர்த்தனையிலே **'அவனிலோ'** என்ற இடமும்.

கனமும் நயமும் சுகமும் அழுத்தமும் ஒருங்குகூடி அற்புதமாக ஒலித்துப் பக்க வாத்தியங்களைக் கட்டி நின்று ஆட்சி புரிகிற உயர்ந்த சாரீரம் ஸ்ரீ ஐயங்காருடையது.

சரீரத்தைத் தாயகமாகக் கொண்டது சாரீரம். சரீரத்தின் சம நிலையில் மாறுதல் ஏற்பட்டால் சாரீரத்தை அது பாதிக்காமல் விடாது; அந்த முறையிலே ஸ்ரீ ஐயங்காரின் சுக சாரீரத்திற்கும் சில சமயம் கோளாறு ஏற்படுவது உண்டு. ஆனால் அந்தக் கோளாற்றின் பரிமாணத்தைப் பிறர் அறிய வாய்ப்பே இராது. அவர் அதை அப்படி மூடிக்கொண்டு போய் விடுவார். சாரீரம் பேசக்கூட முடியாதபடி எவ்வளவுதான் கட்டியிருந்தாலும், கச்சேரி ஆரம்பித்து நேரம் செல்லச் செல்ல—நிமிஷத்திற்கு நிமிஷம் என்றுகூடச் சொல்லலாம்—சாரீரம் படிப்படியாகப் பக்குவமாகிக் கொண்டே வரும். சுமார் ஒரு மணி நேரம் ஆவதற்குள் ஓரளவு இயற்கைச் சாரீரத்தை ஒலிக்கச் செய்து விடுவார். அதற்கு ஏற்ற முறையில் அந்தச் சாரீரத்தை மிகவும் நெளிவு சுளிவுகளுடன் ஓட்டி, நிலைக்குக் கொண்டு வருவதில் அவர் நிபுணர்.

"ஸ்ரீமான் ஐயங்கார் அவர்களின் பாட்டைக் கேட்கக் கேட்க எனக்குத் தோன்றும் அபிப்பிராயத்தை இங்கே வெளியிட விரும்புகிறேன். அதாவது மிகவும் அசௌகரியமான சாரீரமாயிருந்தால்கூட, உண்மையான நேர் பாதையில் வழி தவறாதபடி தக்க அளவுடன் 'சிறிசு, பெரிசு' கொடுத்துப் பாடி வந்தால் நிச்சயமாக எந்தச் சாரீரமும் பக்குவப்பட்டுவிடும். அத்துடன் காலப் பழக்கம் ஆக ஆக உண்மையான பாதையில் பாடுகிறவர்களுக்குச் சாரீரம் மிக நன்றாகிக் கொண்டு வரும் என்பது அவர் சங்கீதத்தைக் கேட்டு நான் தெரிந்து கொண்ட உண்மை. என்னைப் பொறுத்தவரையில் 'சங்கீதம்' என்று சொன்னால் ஸ்ரீ ஐயங்கார் அவர்களின் உருவம் என் மனக் கண்முன் வந்து விடும்" என்கிறார் மிருதங்க வித்துவான் பாலக்காடு ஸ்ரீ மணி ஐயர் அவர்கள்.

ஸ்ரீ ஐயங்கார் எப்பொழுதாவது தம் சாரீரம் அசௌக்கியமுற்றிருந்தால் அதைப்பற்றிப் பேசவே மாட்டார். மிகவும் நெருங்கிப் பழகி அவர் பாட்டை அதிகமாகக் கேட்டவர்களிடம் மட்டும் தனிமையிலே, தமக்கு அன்று வழக்கம்போல் சாரீர வசதி இல்லை என்றும், எல்லாம் பகவான் நடத்தி வைத்தார் என்றும் சொல்வார். சுகமான சாரீரத்தைப் பெற்ற அவர் அதை ஆள்வதிலே மட்டுமல்லாமல், அதைப்பற்றிப் பேசுவதிலேகூட மிகுந்த பக்குவம் உடையவர்.

### 3. களை கட்டுதல்

கச்சேரியிலே 'களை கட்டுவது' என்ற ஒன்றை வித்துவான்கள், ரசிகர்கள் எல்லாருமே ஆவலோடு எதிர்பார்ப்பது உண்டு. சிலருடைய கச்சேரிகளில் எடுத்த எடுப்பிலேயே களை கட்டும்; சிலவற்றில் சிறிது நேரம் சென்ற பின் களை கட்டும்; இன்னும் சில கச்சேரிகளில் வெகு நேரத்திற்குப்பின் களை கட்டுவதும் உண்டு. நேரம் செல்லச் செல்ல, 'இன்னும் களை கட்டவில்லையே!' என வித்துவானும், அவரிடமோ அல்லது அவர் சங்கீதத்தினிடமோ அபிமானம் உடைய ரசிகர்களும் கவலைப்படுவார்கள். பொறுமை இல்லாதவர்கள் எழுந்து போய்விடுவார்கள். மங்களம் பாடுகிற சமயத்திலே கட்டுகிற களை யாருக்குப் பிரீதி ? சிலர் விஷயத்திலே சில சமயங்களிலே கச்சேரி முழுவதுமே களை கட்டாத துர்ப்பாக்கிய நிலைகூட ஏற்படுவதும் உண்டு.

களை கட்டுவது என்பதுதான் என்ன ? அதற்கு உருவம் ஏதாவது உண்டா ? கண்ணெதிரே தோற்றம் அளிக்கக்கூடியதா? அதற்கு ஸ்தூல உருவம் எதுவும் இல்லைதான்; ஆனால் சூட்சும உருவம் உண்டு. அதாவது 'லட்சணம்' உண்டு. பாடுகிறவர், அவருடைய பாட்டுக்கு உதவியாக

வாத்தியங்களை இசைக்கிறவர்கள், இவர்களின் உள்ளமும் செயலும் ஒன்றுபட்டுப் பிரித்து உணர முடியாதபடி இழையத் தொடங்குகிறபோது, அந்நிலை ரசிகர்களின் உள்ளத்தைத் தொட்டுத் தட்டி எழுப்பும். இப்படி இன்ப உணர்ச்சிக்கு உள்ளாகிவிட்ட ரசிகர் உள்ளம் விரைந்து மேடை நிகழ்ச்சியிலே ஒன்றும். அத்தகைய நிலையைத் தான் களை கட்டுதல் என்ற பெயரால் அழைக்கிறோம். அந்நிலை ஏற்படுமுன் சபை அழுது வடியும்; ரசிகர்கள் உணர்ச்சியற்ற பொம்மைக் கொலுவாகக் காட்சியளிப் பார்கள்; களை கட்டிய பின் சபையிலே ஒரு கிளுகிளுப்புத் தோன்றிப் பரவும்.

மற்றவர்கள் கச்சேரிகளில் களை கட்டுதல் என்பது தானாக அமைந்தால் உண்டு; ஸ்ரீ ஐயங்காரின் கச்சேரி களில் அப்படி அல்ல. களை கட்டுகிற நேரத்தை அவர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கமாட்டார்; அவரே அதைச் செய்து விடுவார். அதாவது, அவர் கச்சேரியைத் தொடங்குகிறபோதே அது களை கட்டித்தான் இருக்கும்.

அவருடைய கச்சேரி தரம் குறையாமல் இருப்பதை யும், அதன் ஆரம்பத்திலேயே களை கட்டி இருப்பதையும் சுமாரான ஞானமுடையவர்களும் எளிதில் உணர்ந்து கொண்டுவிடலாம்.

கவலையற்ற ஒரு மனிதன் உரிய நேரத்தில் சுவை மிக்க உணவை அளவோடு உண்டு, சிறந்த முறையிலே தாம்பூலம் தரித்து, தென்றல் வீசும் இடத்திலே அமர்ந்து, மனசுக் குப் பிடித்தவரோடு, ரசமான விஷயத்தைப்பற்றி உல்லாச மாக உரையாடுகிறபோது, அவன் உள்ளத்திலும் உடலி லும் எத்தகை ஜிலுஜிலுப்பு உணர்ச்சி பரவி நிற்குமோ, அத்தகைய ஓர் அபூர்வ உணர்வை ஸ்ரீ ஐயங்காரின் கச்சேரி ஆரம்பம் ஆகிச் சுமார் கால் மணி அல்லது

அரை மணி நேரத்திலேயே சபையில் உள்ள ஒவ்வொரு வரும் அநுபவிக்க முடியும். அந்தச் சுகாநுபவமே கச்சேரி களை கட்டிவிட்டது என்பதற்கு அத்தாட்சி;— ஸ்ரீ ஐயங்கார் களை கட்டச் செய்துவிட்டார் என்பதற்கு அத்தாட்சி! ஆக, அது அவர் வசப்பட்டதே தவிர, அவர் அதன் வசப்பட்டவர் அல்லர். இதனுல்தான் அவருடைய கச்சேரிகள் அநேகமாய்ச் சோடை போனதே இல்லே.

## 4. காயக லட்சணங்கள்

உத்தம காயக லட்சணங்களில் ஒன்று காயகன் சதா இசைத்துக் கொண்டே இருப்பதாகும். அவனுடைய மூச்சுக் காற்றே இசையாகத்தான் இருக்கவேண்டும். அப்படிப் பட்டவன்தான் கலைஞன்; அவ்வாறு இல்லாத வன் தொழிலாளி. ஸ்ரீ ஐயங்கார் இசையை மறந்து இருக்கும் நேரம் வெகு அபூர்வம். அவர் சிறந்த கலைஞர்! இசைத்தொழிலை முறை பிறழாது செய்பவர்; அவர் சிறந்த தொழிலாளி. இரண்டு அம்சங்களிலும் ஒருவர் சிறப்பெய்துவது கடினம். நீண்டகாலம் அதிகச் சிறப்புடன் மிளிர்வது இன்னும் கடினம். ஸ்ரீ ஐயங்கார் அவ்வாறு மிளிர்கிருர். இது இளம் வித்துவான்கள் அறியத் தக்கது; அநுஷ்டிக்க வேண்டியது.

உத்தம காயக லட்சணங்களில் அங்க சேஷ்டைகள் கண்டனம் பெறுகின்றன. உயர்ந்த சங்கீதத்தை அளிக்கும் சிறந்த காயகன் அவையோர் முன் அவலட்சணங் களைத் தோற்றுவித்தல் கூடாது. ஸ்ரீ ஐயங்காரிடம் அத்தகைய குறை இல்லே. அவரிடம் சுருதி நிர்ணயமும் சாரீர சௌக்கியமும் வெகு பக்குவம். அத்துடன் தன்னைத்தான் அறிவதிலும் அவர் சமர்த்தர். கச்சேரி சமயத்தில் இருக்கிற தம்முடைய சாரீர நிலேயை நன்கு

உணர்ந்து அதற்கு ஏற்ற முறையிலே சுருதியை நிர்ணயித்துக் கொள்வார். அவர் எந்தச் சுருதியிலே பாடினாலும் ரசிகர்களுக்குக் குறை தோன்றாது. அவர் சாரீரத்திலே அமைந்துள்ள நாதக்கட்டு அத்தகையது. குறைந்த சுருதியாயினும் கச்சேரி ரஞ்சகமாகவே இருக்கும். வழக்கமான சுருதி என்ற ஒன்றையே கெட்டியாகப் பிடித்துக் கொண்டு சாரீரத்தோடு மல்லுக்கு நிற்கமாட்டார். அவ்வாறு செய்து பலமுறை அவல நிலைக்கு உள்ளாகி ரசிகர்களின் வெறுப்பைத் தேடிக் கொள்ள மாட்டார். தாம் படுகிற பிரயாசை மூலம் ரசிகர்களின் அநுதாப பூர்வமான பாராட்டைப் பெறவும் எண்ண மாட்டார். குறைந்த சுருதியைக் கொண்டே கச்சேரியைச் சோபிக்கச் செய்ய முடியும் என்கிற நிச்சயபுத்தி உடையவராதலால், அதிகச் சுருதியை அமைத்துக் கொண்டு சாரீரம் சரீரம் இரண்டையும் அலட்டிக் கொள்ள மாட்டார். அதனால் அவரிடம் அங்க சேஷ்டைகளுக்குத் துளியும் இடமே இல்லாது போகிறது. முறுவலும் பாவமும் முகத்திற்கு அழகு செய்ய, அவர் பாடுவதைக் **கேட்பதோடு பார்க்கவும்** ரசிகர்கள் விரும்புவதுண்டு.

இளம் வித்துவான்கள் மேடை ஏறுகிறபோது முக்கியமாக அறிந்து அநுஷ்டிக்க வேண்டிய உயர்ந்த அம்சம் இது; ஸ்ரீ ஜி. என். பி., மதுரை ஸ்ரீ மணி ஐயர் போன்றவர்கள் கண்டு கேட்டு அநுபவித்த அம்சம்; அநுஷ்டிக்க ஆசைப்படும் அம்சம்.

### 5. சபை நிர்ணயம்

**மே**டையிலே வந்து அமர்ந்ததுமே ஸ்ரீ ஐயங்கார் சபையை ஒரு கண்ணோட்டம் விடுவார். இந்தச் சபைக்குக் கச்சேரி எந்த முறையிலே இருக்க வேண்டும்; இப்பொழுது

இங்கே கூடியிருக்கிற ரசிகர்களுக்கு எந்த வகையிலே பாட வேண்டும் என்பவற்றை யெல்லாம் ஒரே பார்வையிலே, ஒரே நொடியிலே, தீர்மானித்துக் கொண்டு விடுவார். சபையினர் அவருடைய நிர்ணயத்திலிருந்து தவறவே மாட்டார்கள்.

பாமர - பண்டித ரஞ்சகமாகப் பாடுவதிலே அவர் இணையற்றவர். மேடைக்கு வருமுன் 'புரோகிராம்' தயாரித்துக்கொண்டு வருகிற வழக்கம் அவரிடம் இல்லை என்றே சொல்லலாம். சபைக்குத் தகுந்தாற்போல, பக்க வாத்தியங்களுக்குத் தகுந்தாற்போல, அவ்வப்போது உள்ள சரீர நிலை சாரீர நிலை ஆகியவற்றுக்குத் தகுந்தாற்போல ராகங்கள், உருப்படிகள், சில்லறைகள் முதலியவற்றைத் தேர்ந்தெடுத்து, திட்டமிட்டுச் செய்யும் செயலுக்கிணையான பரிமளத்தோடு, 'ஒரிஜினலிடி'க்குப் பங்கம் வராமல், 'டெம்போ' விஷயத்தில் நல்ல நிகாவோடு கச்சேரி செய்து முழுவெற்றி காண்பவர் அவர்.

கலைஞனுக்கும் ரசிகனுக்கும் இடையே உள்ள தொடர்பு ஒன்றே ஒன்றுதான்: கலைஞன் ரசிக்க வைப்பவன்; ரசிகன் ரசிப்பவன். ஆனால் கலைஞனும் ஸஹ்ருதயனும் ஒன்றிய நிலையிலேதான் கலை பரிபூரணம் அடைகிறது. அதற்குச் சபை நிர்ணயம் உதவி செய்கிறது; நிர்ணயத்திலே இங்கிதம் பெரும் பங்கு பெறுகிறது.

சபை நிர்ணயத்தில் தேர்ந்த ஸ்ரீ ஐயங்கார் இங்கிதத்திலும் மிகத் தேர்ந்தவர். அவருடைய அந்த ஆற்றலைப் பற்றிச் சென்னை மயிலாப்பூர் விவேகானந்தர் கல்லூரியின் நிர்வாகியும் சிறந்த அறிஞருமாகிய **ஸ்ரீ ராமாநுஜாசாரியார்** அவர்கள் கூறுகிறார்:

"......'எனக்குச் சங்கீதம் தெரியுமோ தெரியாதோ, ஓரளவு இங்கிதம் தெரியும்' என்று ஸ்ரீ ஐயங்கார் சொல்வ

துண்டு. அவருடைய கச்சேரிகளில் காணப்பெறும் தனிச் சிறப்புக்களை ஆய்ந்தறிந்து ஒவ்வொன்றாய்க் கூறுவதெனின் விரியும். கச்சேரி ஆரம்பித்தது முதல் அது முடிவுறுகிற வரையில் அவர் பாட்டிலோ, அந்தப் பாட்டை அநுசரித்துச் செல்லும் பக்க வாத்தியங்களிலோ எந்த ஓர் அம்சத்திலும் அநாவசியமான ஒரு 'சங்கதி'யையோ, சாஸ்திர விருத்தமான 'அபசப்த'த்தையோ, 'அதிகம்' என்று எண்ணக்கூடிய ஏதாவது ஒரு விஷயத்தையோ காணவே முடியாதபடி அவர் கொண்டு செலுத்துகிற உயர்வு ஒன்றையே நாளெல்லாம் புகழலாம். சிறப்பாக ஓர் அம்சத்தை, அல்லது ஒரு சில அம்சங்களை மட்டும் நன்கு பயின்று அந்த ஓர் அம்சம், அல்லது ஒரு சில அம்சங்களில் மட்டும் 'ஸ்பெஷலிஸ்'டாக விளங்கவில்லை அவர். மேடைக் கச்சேரி எனும் முழு அம்சத்திற்குமே அவர் 'ஸ்பெஷலிஸ்ட்!' அதற்குக் காரணம் கலைசம்பந்தமாக அவரிடம் நிறைந்துள்ள பலவிதமான உயர்ந்த யோக்கியதாம்சங்கள் தாம் என்றாலும் அவற்றிற்கெல்லாம் சிகரமாக அமைந்துள்ள, 'சபை நிர்ணயம்', 'இங்கிதம்' எனும் அம்சங்கள் சிறப்பித்துக் கூறத்தக்கன என்பது என் அபிப்பிராயம். எந்த இடத்திலே எப்படி நடந்து கொள்ளவேண்டும்; கலையம்சங்களில் எது எதை எந்த எந்தச் சந்தர்ப்பங்களிலே எந்த அளவிலே எந்த முறையிலே கையாண்டால் சிறப்பெய்தலாம் என்பவற்றை அவர் வெகு நன்றாக உணர்ந்தவர். அதன்படி நடந்துகொண்டு எந்த இடத்திலும் மக்களின் ஆதரவை அள்ளிக்கொண்டு போய்விடுகிறவர். சந்தர்ப்பத்திற்கேற்ப அவர் சுருதி, உருப்படிகள், ராகங்கள் முதலியவற்றிலே ஆளும் மாறுபாடுகள் சாமான்ய ரசிகர்களின் மனத்திலே படா; பட்ட சிலருக்கும் அவை நிலைத்திரா. செயலாற்றுவதிலே அத்தனை சமயோசித புத்தியும் இங்கித

மும் உடையவர் அவர். அதனால் ரசிகர் உலகத்தில் மாறாத இடம் பெற்றவர்."

### 6. சம்பிரதாயம்

ஸ்ரீ ஐயங்கார் பிராசீன சம்பிரதாய வழிகளைப் பக்தியுடன் போற்றிப் பாதுகாப்பதை மிக முக்கியமாகக் கருதுபவர். கீழ்க் கிளையினர் அம் முறையைப் பின்பற்றினால் தாங்களும் புகழ் எய்தலாம்; கலைக்கும் சிறந்த சேவை செய்யலாம் என்பது அவர் கருத்து.

பிராசீன சம்பிரதாயம் என்ற போதில் ரமிக்காத ஓர் அமைப்புத்தான் எந்த விஷயத்திலும் எவருக்கும் தோன்றும். அது தவறு என்பதை நிரூபித்தவர் ஸ்ரீ ஐயங்கார். புராதன சம்பிரதாய முறைகளை அவர் ஆளும் முறையே தனி.

பழமை, புதுமை என்பன அநேகமாக எல்லா விஷயங்களிலுமே உண்டு; கலைகளிலும் உண்டு. கால மாறுபாடுகளிலே எந்த ஒன்றும் தனியே நின்று ஆட்சி புரிந்து வெற்றி காண முடியாது. இசையைப் பொறுத்தமட்டில் பழமை ஒரு சிலரைத் திருப்தி செய்யலாம்; வெகு ஜன ஆதரவு இராது. மாறாக, புதுமை வெகு ஜன ஆதரவைக் கால எல்லையில் பெறலாம்; சாஸ்திர சம்மதமற்ற நவீனம் சிரஞ்சீவித் தன்மை பெறாது. பழமையும் புதுமையும் கலந்த ஒரு நிலை, சம்பிரதாயத்தை ஒட்டிய முறை; அதுதான் என்றும் எங்கும் வெற்றி பெறும்; நிலைத்து நிற்கும்.

இதை ஸ்ரீ ஐயங்கார் நன்கு உணர்ந்தவர். அதனால் அவர் தம் சங்கீதத்தில் பழமை, புதுமை இரண்டையும் அளவோடு இணைத்து இடம், பொருள், ஏவல் முதலியவற்றை அநுசரித்து எது எதை எந்த எந்த அளவிலே

சேர்க்கவேண்டுமோ, அந்த அளவிலே சேர்த்துக் குழைத்துச் சுவை ததும்பும் கனிரசமாக அளிக்கிறார்.

பக்தி, சிருங்காரம், வித்துவத்து, சரளம், நவீனம் முதலிய எந்த அம்சத்திற்கும் அவர் சங்கீதத்தில் குறைவு இல்லை. சிருங்காரம் என்றால் அது தரத்திலே உயர்ந்ததாக, சாஸ்திர சம்மதம் உடையதாகத்தான் இருக்கும்; எல்லையோடு இருக்கும். அதே மாதிரி வித்துவத்து எனும்போது அது மேதைகள் மட்டுமே ரசிக்கத் தக்கதாக, சாமான்யர்களுக்கு எட்டாத விஷயமாக இராது. சரளம்—சட்டதிட்டங்களுக்கு உட்பட்டதாகவும் எளிமையோடு பின்னிய காம்பீர்யம் கொண்டதாகவுமே விளங்கும். நவீனம்: வெல்லத்துள் பொதிந்த அருமருந்தைப் போன்றது. இவற்றின் அளவு தங்கத்தை எடை போட்டது போல! ' இவ்வளவும் வழிவழி வந்த புராதன சம்பிரதாயத்தின் அடிப்படையிலே. அந்த முறை, கர்நாடக சங்கீதத்தைச் சுகமாக ரசிக்க விரும்புகிறவர்களுக்கும், முன்னுக்கு வந்து கொண்டிருக்கிற வித்துவான்களுக்கும் நல்ல வழிகாட்டியாகும். அதைச் சம்பிரதாய சங்கீதத்தில் நாகரிகத்தின் சிகரம் எனலாம்.

கச்சேரியிலே பாடுகிற போது மட்டுந்தான் அவர் அந்த முறையைக் கையாள்வார் என்பதில்லை. சங்கீத சகாக்களோடு பொழுது போக்காகப் பாடுகிற போதும் சரி; தனிமையிலே உல்லாசமாகப் பாடிக்கொண்டிருக்கிற போதும் சரி; சம்பிரதாய விரோதமான முறையிலே அவர் மறந்தும் பாடமாட்டார். எப்பொழுதும் எந்த இடத்திலும் சம்பிரதாய சுத்தமாகத்தான் பாடுவார்.

1936-இல் நாகப்பட்டணத்தில் ஒரு கச்சேரி. ஸ்ரீ ஐயங்கார் ஸ்வாநுபூதியாய், சுவை மிகுந்த கீர்த்தனங்களை

நீண்டநேரமாகப் பாடிக்கொண்டிருந்தார். நேரத்தை அவர் கவனிக்கவில்லை; அவருடைய நண்பரும் சிறந்த ரசிகசிரோமணியுமாகிய **வழக்கறிஞர் தஞ்சாவூர் ஸ்ரீ டி. எஸ். குப்புஸ்வாமி ஐயர்** அவர்கள் கவனித்தார். மற்ற லௌகிக நிகழ்ச்சிகளை அநுசரித்தும், ஸ்ரீ ஐயங்கார் அதிகம் சிரமப்படலாகாது என்பதை எண்ணியும், "சில்லறை பாடிக் கச்சேரியை முடித்துவிடலாம்" என்றார். ஸ்ரீ ஐயங்கார் அதை ஏற்கவில்லை. மேலும் ஒரு மணி அவகாசம் எடுத்துக்கொண்டு வெகு கச்சிதமாக ராகம், தானம், பல்லவி, ராகமாலிகை இவற்றுடன் தில்லானா, ஜாவளி முதலியவையும் பாடிக் கச்சேரியைச் சபாரஞ்சகமாக முடித்தார். பிறகு தனிமையிலே ஸ்ரீ குப்புசாமி ஐயரிடம், "கச்சேரிச் சம்பிரதாயம் என்று ஒன்று இருக்கிறபோது, அவசரப்பட்டுக் குறுக்கு வழியிலே போய்ச் சம்பிரதாயத்தைக் குலைப்பானேன்?" என்று சிரித்துக்கொண்டே சொன்னார்.

1955 நவம்பரில் நடைபெற்ற **ரேடியோ சங்கீத சம்மேளன** விழாவில் சென்னை நிலையத்தில் முதற் கச்சேரி ஸ்ரீ ஐயங்காருடையது. வெகு காலமாக ரேடியோவில் பாடாமல் பிடிவாதமாக இருந்தவர் பாடுகிறார் என்றதும் ரசிகர்களுக்குக் குதூகலம்.

மேடைக் கச்சேரி நேரத்தில் மூன்றில் ஒரு பாகமான குறுகிய நேர ரேடியோ நிகழ்ச்சியிலும் அவர் பிராசீன பத்ததியைக் கைவிடவில்லை. வர்ணம், கீர்த்தனைகள், ராகம், தானம், பல்லவி, சில்லறை, ராகமாலிகை, எல்லாம் பாடினார்.

கச்சேரி நடுவே அவர் தோடி பாட ஆரம்பித்ததும் அநேகமாக அதுதான் கச்சேரியின் பிரதான ராகமாக இருக்கும் என்று ஊகித்த மதுரை ஸ்ரீ மணி ஐயர் கைக் கடிகாரத்தைப் பார்த்தார். பல்லவி முடிந்ததும் மறுபடி

பார்த்தார். சரியாக முப்பத்தைந்து நிமிஷம். அதற்குள் ராகம், தானம், பல்லவி! நேரந்தான் குறைவாகத் தோன்றியதேயன்றி அவர் பாடியது நிறைவாகவே தோற்றிற்று. அப்போது ஸ்ரீ மணி ஐயர் சொன்னார்:

"என்னால் இப்படி முடியாது. நான் ராகம் பாட ஆரம்பித்ததும் அதிலே லயித்துவிடுவேன்; சுழன்று கொண்டே இருப்பேன். நேரம் ஓடியே போய்விடும். ஸ்ரீ ஐயங்கார் அவர்கள் லயிக்காமல் பாடுகிறார் என்று சொல்ல முடியாது; நன்றாக லயித்துத்தான் பாடுகிறார். அவர் நிலை தாமரை இலைத் தண்ணீர் போல ஒட்டியும் ஒட்டாத நிலை. தாம் லயித்துப் பாடி, கேட்பவரை லயிக்க வைத்து, பிறகு, தாம் விலகி இருந்து செயலாற்றிச் செல்பவர். அதனால் தான் மிகக் குறுகிய கால அளவுக்குள் இத்தனை பங்கீடாகப் பாட முடிந்தது. ரேடியோக் கச்சேரியானாலும் சம்பிரதாயத்தைக் கைவிடாத அவர் போக்கே அதற்குக் காரணம்."

அதுமட்டுமா? ரேடியோவிலே யார் மங்களம் பாடுகிறார்கள்? ஸ்ரீ ஐயங்கார் அந்தச் சம்பிரதாயத்திலும் குறை வைக்கவில்லை. கடைசியாக, **'ஸ்ரீ ராமசந்த்ர ச்ரித பாரிஜாத:'** என்ற சுலோகத்தை ஆரம்பித்து ராகமாலிகையாகப் பாடி, **'நிரந்தரம் மங்களம் மாதநோது'** என்று முடித்தார். அவரல்லவா சங்கீத சம்பிரதாய சீலர்! அதனால் தான் அவர் சங்கீதம் அந்த நாள் முதல் இந்த நாள் வரை மூன்று தலைமுறைகளிலும் ஒரு முகமான பாராட்டுக்கு உரித்தானதாகப் பிரகாசிக்கிறது, நிலையான சத்தியத்திற்கு எங்கும் எக்காலத்தும் எவரிடத்தும் வெற்றி போல!

மனிதருடைய சாதாரண வாழ்க்கையைப்பற்றிக் குறிப்பிடுகிறபோது, 'முப்பது வருஷம் வாழ்ந்தாரும் இல்லை;

முப்பது வருஷம் கெட்டாரும் இல்லை' என்று சொல்வதுண்டு. ஸ்ரீ ஐயங்கார் கலை வாழ்க்கையில் மேற்குறித்த எல்லைக் கோட்டைத் தாண்டியவர்; ஒன்றரை மடங்குக் கால எல்லையில் புகழின் உச்சியிலே வாழ்ந்து காட்டுபவர்! அவருடைய கலை வாழ்க்கை சம்பந்தப்பட்டவரையில் அந்தப் பழமொழி பொய்த்துவிட்டது! அதற்குக் காரணம் பழமையும் புதுமையும் கலந்த அவருடைய சம்பிரதாய சங்கீதந்தான்!

## 7. பாணி

கலையின் சிறப்பம்சங்கள் பல. தனித்தனியே சிறப்புடைய நல்லம்சங்களை ஒன்றுக்கொன்று ஏற்றத் தாழ்வின்றி, சம எடையில் வைத்து, பாகுபாடு செய்து, அழகுற அளிப்பது எளிதன்று. அதிலேதான் இருக்கிறது கலைஞனின் திறமையெல்லாம்.

சமையலுக்கு உப்பு முதல் அரிசி வரையில் எல்லாப் பொருள்களும் இன்றியமையாதன. ஏதாவது ஒன்று இல்லாவிட்டால் குறை பளிச்சென்று தெரியும். ஆனால் அந்த ஒன்றே அதிகமாகிவிட்டால் அதுவும் குறைதானே?

கலைஞன் வெறும் கலைஞனாக மட்டுமே இருந்தால் போதாது. கலை ஞானத்தோடு ஏனைத் துறைகளிலும் ஓரளவாவது ஞானம் வேண்டும். சபாரஞ்சகமாகப் பாடுவது இசைக்கலை ஞானத்தோடு ஒட்டிய லௌகிக ஞானம் ஆகும். அதிலே அவரவர் ஆற்றலுக்கு ஏற்ப உருவெடுக்கும் அமைப்பையே 'பாணி' என்கிறோம். அவ்வாறு ஒவ்வொரு வித்துவானிடமும் உருவாகும் பாணி ரசிகர்களிடையே எத்தகைய செல்வாக்கைப் பெறுகிறது என்பது வேறு விஷயம். ஆக அந்த ஞானம் சங்கீத வித்துவானுக்கு நிரம்ப வேண்டும்.

எழுத்துத் துறைமுதல் அநேகமாக எல்லாத் துறைகளிலுமே முன் வந்தது பின் வராமல் கண்காணிப்பது மிக முக்கியம். இது இசைக் கலையிலும் முக்கியமானது. அவ்வாறு கண்காணிக்காவிட்டால் விரைவில் அலுப்புத் தட்டிவிடும்.

ஸ்ரீ ஐயங்கார் மேற் கூறிய விஷயங்களை நன்கு உணர்ந்தவர். தமக்கென ஒரு சிறந்த பாணியை உருவாக்கிக் கொண்டவர். 'அரியக்குடி பாணி', 'ஐயங்கார் பாணி' என்பன பிரசித்தம். அவர், முன் வந்தது பின் வராதபடி கச்சேரி 'பிளா'னை மிகச் சுவையுடையதாக அமைக்கிறார்.

முதலில் வர்ணம்; அடுத்தாற்போல ஒன்று அல்லது இரண்டு மத்திமகால உருப்படிகள்; பிறகு சுருக்கமான ராக ஆலாபனமும் அந்த ராகத்திலே கீர்த்தனமும்; அப்புறம் ஆலாபலனமற்ற கீர்த்தனை; அதற்கு ஸ்வரம்; அடுத்தது விஸ்தாரமான ராக ஆலாபனம்:—இப்படி மாற்றி மாற்றிப் பாடுவார். ராகம் பாடுகிற உருப்படிக்கு ஸ்வரம் இல்லாமலும், ஸ்வரம் பாடப் போகிற உருப்படிக்கு ராக ஆலாபனம் இல்லாமலும் கவனித்துக் கொள்வார். நிரவல் விஷயமும் அப்படியேதான். அதாவது ஓர் உருப்படிக்கு ஏதாவது ஓர் அம்சத்தை மட்டுமேதான் துணைப் படுத்துவார். வெறும் உருப்படிகளாகவே சில பாடினாலும் பாடுவாரே தவிர விளம்ப காலக் கீர்த்தனை ஒன்றை நடுநாயகமாகக் கொண்டு, அந்த ஒன்றுக்கே நீண்ட நேரம் ஆலாபனம், நிரவல், ஸ்வரப் பிரஸ்தாரம் என்றெல்லாம் வைத்துக் கொள்ளவே மாட்டார். இந்த விதத்தில் தம்முடைய வித்துவத்தைச் சபையினருக்குக் காட்டிக் கொள்வதிலோ, தம் உடம்பையும், சாரீரத்தையும், மூளையையும் அலட்டிக் கொள்வதிலோ, அல்லது பக்கவாத்திய வித்து

வான்களுக்கும் மிகுந்த தொல்லையைக் கொடுத்து, சபையோரின் பொறுமையையும் சோதிப்பதிலோ அவருக்கு நம்பிக்கை இல்லை. இதனால் பக்கவாத்திய வித்துவான்களுக்கெல்லாம் அவருக்கு வாசிப்பதென்றால் மிகவும் உற்சாகம்; ரசிகர்களுக்கும் அவர் கச்சேரி கேட்பதிலே நிறைவு; கச்சேரியிலும் ஓட்டம் குறையவே குறையாது.

இத்தகைய ஒரு சிறந்த பாணி அவரிடம் நிலைத்து நிற்பதற்கு அடிப்படை என்ன? அவருக்கு முந்தின பெரியோர்களின் சங்கீதத்தைப் பக்தியோடும் சிரத்தையோடும் கேட்டுக் கேட்டு, அதிலேயே நன்றாக ஊறித் திளைத்து, ஞானத்தை அவர் நன்றாக விருத்தி செய்து கொண்டிருக்கிறார். அப்படி வளர்ந்த ஞானத்தைத் தம்முடைய மேதையைக் கொண்டு நன்கு விதரணைப் படுத்தியிருக்கிறார். அந்த விதரணையிலே பூத்த மணமிகுந்த மலர்தான் அவருடைய ஒப்புயர்வற்ற சிறந்த பாணி; கேட்கக் கேட்கத் தெவிட்டாத தேன் போன்ற இனிய நடை; உள்ளத்தைத் தொடுகிற உயர்தரமான சங்கீதம்!

## 8. பாடாந்தரம்

'சங்கீதத்தை அநுபவிக்கச் சாகித்தியம் முக்கியமா, இல்லையா?' என்பது ஒரு விநோதமான பிரச்னை. இதை அடுத்தே, 'சாகித்தியம் எம்மொழியில் இருத்தல் நலம்?' என்ற ஒரு விவாதம். இந்தப் பிரச்னைகளும் வாதங்களும் தோன்றுவதற்கு முன்னாலும், தோன்றிப் புயலாக வீசிய போதும், வீசி மறைந்த பின்னரும் ஸ்ரீ ஐயங்காரைப் பொறுத்த வரையில் ஒரே நிலைதான். அவை அவரைப் பாதிக்கவே வகை இல்லை. 'கண்டு கழித்ததைக் கொண்டு குலவுகிற' முறையிலே இவை வெகு காலத்திற்கு முன்னதாகவே மனத்தளவிலே தோன்றி ஒரு நிலையை எய்தி

முடிவு பெற்ற விவகாரம் அவருக்கு. சாகித்தியப் பிரச்னையும் மொழி விவாதமும் அவரை ஏன் பாதிக்கின்றன?

உருப்படிகளின் பாடாந்தரத்துக்கு அவரிடம் கணக்கு வழக்கே இல்லை. சங்கீதத்துக்குச் சாகித்தியம் அவசியந்தான் என்ற கொள்கை அவருடையது. அதே போல அர்த்த கர்ப்பமானதும், பக்தி பூர்வமானதும், தெய்வ வழிபாட்டுக்கோ, நாட்டின் நலனுக்கோ, சமூக முன்னேற்றத்துக்கோ, கலை வளர்ச்சிக்கோ, வேறு எந்த ஒரு நல்ல அம்சத்திற்காகிலும் சரி; நலம் பயக்கக்கூடியதும், செவிக்கும் உள்ளத்துக்கும் சுகம் அளிக்கக் கூடியதுமான சாகித்தியம் எம்மொழியிலே இருப்பினும் அதைத் தேடிப் பிடித்துப் பாடிப் பரவச் செய்யவேண்டும் என்பது அவர் வாதம். மொழித் துவேஷங்கொண்டு ஒன்றை ஏற்று இன்னொன்றைப் புறக்கணித்தால் எம்மொழியும் வளர்ச்சியின்றிக் குன்றிப்போம் என்கிற அபிப்பிராயம் அவருடையது. 'நல்ல பாட்டாக இருக்கிறது; மொழி தெரிந்தால் இன்னும் நன்றாக ரசிக்கலாமே' என்று அங்கலாய்ப்பவர்கள் பிற மொழிகளையும் பயிலலாமே என்பது அவர் கட்சி. இதை யெல்லாம் அவர் வாய்விட்டுப் பேசுவதில்லை; செயலில் அமல் நடத்துகிறவர். அதற்கு அத்தாட்சி அவருடைய பாடாந்தரப் பட்டியல்!

தமிழ், தெலுங்கு, சம்ஸ்கிருதம், கன்னடம் முதலிய மொழிகளில் அமைந்த ஏராளமான பாடல்கள் இன்றும் அவரிடம் 'ஸ்டாக்'கில் உள்ளன.—ஏட்டுச் சுரைக்காய்களாக அல்ல; கொடியிலிருந்தபடியே பசுமையாகக் காட்சி தருகிற, கறிக்கு உதவுகிற சுரைக்காய்களாக!

தமிழ் தாய்மொழி; தெலுங்கு குருவினிடம் பெற்றது; சம்ஸ்கிருதம் பால்யத்திலே பயின்றது; கன்னடம் பழக்கத்திலே அறிந்தது. பேசுகிற அளவுக்குப் பரிசயம்

உள்ள மொழிகள் இவை. பாவம் உணர்ந்து பாட அவ்வளவு ஞானம் போதாதா?

சங்கீத மும்மூர்த்திகள் எனப்பெறும் ஸ்ரீ தியாகையர் அவர்கள், ஸ்ரீ தீட்சிதர் அவர்கள், ஸ்ரீ சாஸ்திரிகள் அவர்கள் ஆகியோரின் கிருதிகளில் பல அவருக்குப் பாடம். ஸ்ரீ தியாகராஜ பஞ்சரத்தினக் கிருதிகளை அவர் ஜீவகளை ததும்ப மெருகிட்டுப் பாடும் உயர்வே தனி. இந்தத் தலைமுறை ரசிகர்களில் அவரிடம் உள்ள இந்த உயர்வான அம்சத்தை அறியாதவர் இல்லை.

அவருடைய குரு ஸ்ரீ பூச்சி ஐயங்கார் அவர்களின் கிருதிகள், பதம், ஜாவளி, தில்லாணு முதலியன; பட்டணம் ஸ்ரீ சுப்பிரமணிய ஐயர் அவர்கள் கீர்த்தனைகளில் பல; இவை அடிநாளைய பாடங்கள். பின்னர், மேற்குறித்த கீர்த்தனுசாரியர்களின் கிருதிகளில் புழக்கத்திலே இல்லாத அநேகம் கிருதிகளை ஸ்வரப்படுத்தி அரங்கேற்றினர். திருப்பாவை, திருவெம்பாவை முதலியவற்றுக்கு வர்ண மெட்டுக்கள் அமைத்திருக்கிறர். இந்த வகையில் அவர் கர்நாடக சங்கீதத்துக்குச் செய்துள்ள சேவை மகத்தானது; அனைவரும் கொண்டாடத் தக்கது.

1938-இல் அவர் சென்னைச் சங்கீத வித்துவத் சபையின் மகாநாட்டுக்குத் தலைமை வகித்த போது, 'சங்கீத வித்துவான்கள் தெலுங்கு, சம்ஸ்கிருதம் இரு மொழிகளிலும் ஓரளவேனும் பயிற்சி பெற்று, உருப்படிகளின் சாகித்தியங்களைப் பாவமறிந்து நன்ருக உச்சரித்துப் பாட வேண்டும்' என்ருர். 'புராதனமாக இருந்து வருகிற பாடல்களைப் புது மெருகிட்டுப் பாட வேண்டும்' என்ருர்.

'பிறருக்கு வாத்தியார்' என்ற முறையில் அவர் அப்படிச் சொல்லவில்லை. தாம் நடைமுறையிலே செய்து வருகிற பணியையே மற்றவர்களையும் செய்யுமாறு கேட்டுக்

கொண்டார். நாட்டில் அந்தத் துறையிலே கிளர்ச்சி ஏதும் இல்லாத போதே, யாரும் கோராமல் தாமாகவே அந்தப் பணியில் தம்மை அர்ப்பணித்துக் கொண்டவர் அவர். மேற் கொண்ட பணியைப் பிறருக்காக அல்லாமல் ஆத்மார்த்த முறையிலேயே வெற்றிகரமாகச் செய்தவர்.

அவரிடம் மிகுந்துள்ள மற்றும் ஒரு சிறப்பு என்ன வெனில், இலக்கணங்கள் மிகச் செறிந்த உருப்படிகளைத் தேடிப் பிடித்துப் பிரகடனம் செய்வதில் அவர் சமர்த்தர். இன்று இன்னும் பலர் அச்செயலில் ஈடுபட்டிருக்கலாம்; அன்று அப்படி அல்ல. கச்சேரி என்றால் ஒரு சில வர்ணங்கள், தியாகராஜர், தீட்சிதர், சியாமா சாஸ்திரிகள் முதலிய கீர்த்தனுசார்யர்களின் கிருதிகளில் ஒரு சில, இரண்டொரு ஜாவளிகள், தில்லானுக்கள்—இவையே திரும்பத் திரும்ப இடம் பெறும். எந்த வித்துவானின் கச்சேரியிலேயானுலும் இந்த ஒரு சிலவே தான். புதிதாக யாருமே பாடல்கள் இயற்ருதது ஒருபுறம் இருக்க, மேற் குறித்த கீர்த்தனுசார்யர்களும் மற்றும் சிலரும் பார்த்த உருப்படிகள் ஏராளமாக இருந்துங்கூட அவற்றிலே மேலும் சிலவற்றை எடுத்து ஆளக்கூட யாரும் முன் வரவில்லை. அத்தகைய சந்தர்ப்பத்திலே ஐயங்கார் அவர்கள் அநேகம் உருப்படிகளை மளமளவென்று வெளிக் கொணர்ந்து ஒரு சிறந்த சேவையைச் செய்தார். அப் பொழுதெல்லாம் மொழிப் பிரச்னை இத்தகைய தீவிர நிலையிலே இல்லை; அவ்வாறிருந்தும் ஐயங்காரவர்கள் தமிழிலே மணம் மிகுந்த பல பாடல்களை அறிமுகம் செய்து வைத்தார். அப்போது எங்கே பார்த்தாலும் 'அரியக்குடி பாணி', 'ஐயங்கார் பாடியவை' என்ற முழக் கந்தான். இளம் வித்துவான்கள் அவருடைய பாணியிலே பாட ஆசைப் பட்டார்கள்; அவரால் அறிமுகம் செய்யப்

பெற்ற உருப்படிகளைச் சிரத்தையோடு பாடம் செய்தார்கள்; அவருடைய பாணியைப் பின்பற்ற முயன்றார்கள். இளம் வித்துவான்கள் மட்டும் என்ன; பெரிய வித்துவான்களில் சிலருங்கூடத்தான் முயன்றார்கள்.

அதன் பிறகு மற்றும் சிலர் புதிய கிருதிகளை அறிமுகம் செய்யும் பணியை மேற்கொண்டார்கள்; இன்று அந்தக் காரியத்திலே யார்தான் ஈடுபடலாம் என்கிற வரையறையே இல்லாமற்கூடப் போய்விட்டது. ஆனால் மற்றோருடைய முயற்சிகள் எவ்வாறு இருப்பினும் ஐயங்கார் அவர்களால் அரங்கேற்றப் பெற்ற உருப்படிகளைப் பொறுத்தவரையில் அவை அன்று முதல் இன்றளவும் சரியாகப் பட்டை தீட்டப் பெற்ற உயர்ந்த ஜாதி வைரக் கற்களைப் போலத்தான் சுடர்விட்டுப் பிரகாசித்து வருகின்றன. காரணம் என்ன?

ஸ்ரீ ஐயங்கார் அவர்கள் சங்கீத சம்பந்தமான எந்தக் காரியத்திலும் நிதானம் உடையவர்; எதையும் முறையோடு செய்கிறவர். கீர்த்தனங்களை உருப்படுத்துகிற செயலிலும் அப்படித்தான். ஒரு கிருதியை எடுத்துக்கொண்டால் இரண்டொரு நாளில் அதை வகைப்படுத்தி உடனே சபையிலே கொண்டு வந்து பாடிவிடமாட்டார். கஜகர்ப்பம் போல அது அவருடைய உள்ளத்திலும் உதட்டிலுமாக நீண்டகாலம் வாழ்ந்துகொண்டிருக்கும்; வளர்ந்துகொண்டிருக்கும். எந்த எந்த வகையிலெல்லாம் அதற்கு மெருகு கொடுக்க முடியுமோ அந்த வகையிலெல்லாம் மெருகு கொடுத்து, தனியே பலமுறை பாடிப் பார்த்து, பாடப் பாடத் தோன்றுகிற மாறுதல்களையெல்லாம் செய்து, 'இனி இதிலே செய்வதற்கு ஒன்றும் இல்லை' என்கிற நிலை ஏற்பட்ட பிறகே அதை அவைக்குக் கொண்டு வருவார். நாள்பட்ட உழைப்பின் உரத்தினால் அவர் முதல் முறையாகச் சபையிலே பாடுகிற

புதிய கீர்த்தனை, பலகாலமாய்ப் பலரால் பல தடவை பாடப்பெற்றுப் பழகிப்போன ஓர் உருப்படிபோல ரசிகர்களுக்குத் தோற்றும். மறுநாள் முதல் சுமார் ஒரு மாச காலத்திற்குள் அந்த உருப்படி எங்கே பார்த்தாலும் ஒலிக்கும்!

ஒரு சமயம் **அறிஞர் ஸ்ரீ கி. சந்திரசேகரன்** அவர்கள் ஐயங்கார் அவர்களின் கச்சேரி ஒன்றிலே தோடி ராகத்தில் அமைந்த தமிழ்க் கிருதி ஒன்றைக் கேட்க நேர்ந்தது. **'கார்த்திகேய காங்கேய கௌரி தனய'** என்பதுதான் பாடலின் ஆரம்பம். இந்த அடியிலோ, இதன்பின் அடிகளிலோ விசேஷமாகச் சிலாகித்துச் சொல்லக்கூடிய நுட்பமான சொல் அமைப்புகள் எதுவும் இல்லை. ஆனால் ஐயங்கார் அவர்கள் அதைப் பாடிக் கேட்டபோது ஸ்ரீ சந்திரசேகரன் அவர்கள் நன்கு ரசித்து அநுபவித்தார். யாரோ பார்த்த பழைய பாடல் என்றுதான் எண்ணினார். அருகே இருந்த அன்பர் ஒருவர், "**இது பாபநாசம் ஸ்ரீ சிவன்** அவர்களின் உருப்படி" என்றார். அதைக் கேட்ட ஸ்ரீ சந்திரசேகரன் அவர்கள் இரு வகை வியப்புக்கு உள்ளானார்.

பாபநாசம் சிவன் அவர்கள் அப்போதெல்லாம் பஜனைகளில் தீவிரமான ஈடுபாடு உடையவராக இருந்தார். அது ஸ்ரீ சந்திரசேகரன் அவர்களுக்குத் தெரியும். அவர் கீர்த்தனைகள் இயற்றுவார் என்பதும் தெரியாது; இயற்றியிருக்கிறார் என்பதும் தெரியாது. வியப்புகளில் அது ஒன்று. அவர் வெகு சமீபத்திலே இயற்றிய ஒரு சாதாரண உருப்படியை ஐயங்கார் அவர்கள் இத்தனை சிறப்புடையதாக ஆக்கிப் பாடிவிட்டாரே என்பது வியப்பின் மற்றோர் அம்சம். 'ஐயங்கார் அவர்களிடம் எத்தகைய பாடலும் புதுமை

அழகுடன் சோபிக்கும் என்பதில் ஐயம் இல்லை' என எண்ணிக்கொண்டார் ஸ்ரீ சந்திரசேகரன் அவர்கள்.

இன்னொரு சமயம் திருக்கோயிலூரில் நடைபெற்ற திருமணம் ஒன்றிலே ஐயங்கார் அவர்களும் சந்திரசேகரன் அவர்களும் சந்தித்துச் சல்லாபிக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. திருமணத்தன்று காலை ஊஞ்சல் வைபவம் நடைபெற்ற போது யார் யாரோ பெண்கள் பாடினார்கள். ஒரு பெண், **'கமலாம்பிகாயை'** என்ற காம்போஜி ராகக் கிருதியைச் சிறப்பாகப் பாடினாள்.

"கேட்டீர்களா? திவ்வியமான கிருதி" என்றார் ஸ்ரீ ஐயங்கார்.

"கேட்டேன். நீங்கள் கச்சேரிகளில் அடிக்கடி காம்போஜியில், **'ஸ்ரீ சுப்ரஹ்மண்யாய நமஸ்தே'** என்ற உருப்படியைப் பாடுகிறீர்களே; இதைப் பாடலாமே" என்றார் ஸ்ரீ சந்திரசேகரன் அவர்கள்.

"நெடுநாளாக என் மனசிலும் அந்த எண்ணம் உண்டு. ஆனால் சட்டென்று அதைச் செய்துவிடமுடியுமா?" என்றார் ஸ்ரீ ஐயங்கார்.

இவ்வளவிருந்தும் அவருடைய உள்ளம் இன்னமும் அந்தத் தொண்டை மேலும் மேலும் அவாவி நிற்கிறது. ரஞ்சகமானவையும், பக்தி உணர்ச்சி ததும்புபவையுமான கீர்த்தனைகளும் பாடல்களும் தவிர, கர்நாடகப் பிராசீன பல்லவிகளில் சின்னவை, பெரியவை, சரளமானவை, நெருடானவை இப்படிப் பல அவருக்கு உள்ளங்கை நெல்லிக் கனி போல. சுருங்கச் சொன்னால் ஸ்ரீ ஐயங்கார் ஒரு 'சங்கீத லைப்ரரி.' விருப்பம் உள்ளவர்கள் நாடிப் பயன் பெறத் தக்க இலவசச் சங்கீத நூல் நிலையம்!

## 9. லட்சண—லட்சியம்

நாடகக் கலையின் லட்சணத்தை நன்ருக அறிந்தவர்கள் நடத்தும் நாடகத்திலே ஏதாவது ஒரு ரஸந்தான் பிராதான்யம் வகிக்கும். ஏனைய ரஸங்கள் அந்தப் பிரதான ரஸத்தை எடுத்துக் காட்டிச் சிறக்கச் செய்ய உதவுகிற முறையிலே அதற்கு அங்கங்களாகவும் உப அங்கங்களாகவும் விரவி இடம்பெறும். எல்லா ரஸங்களுமே முக்கிய ஸ்தானம் பெறுகிற முறையிலே தலைதூக்கி நின்று ஒன்றை ஒன்று அமுக்குகிற நிலையில் தலை விரித்து ஆடா. அப்படிப் போட்டுக் கொட்டிக் குழப்புகிறவர்கள் நாடக லட்சணங்களை அறிந்தவர்கள் ஆகமாட்டார்கள்.

அதேமாதிரி ஓவியக் கலையிலே மேதையாகத் திகழ்பவன் படத்திலே வரையக் குறிக்கோளாக ஒன்றை எடுத்துக் கொண்டானுனல், அந்த ஒன்றுக்குத்தான் முக்கியத்துவம் அளிப்பான். அதற்கு உபசாதனங்களாக அமையத் தக்கவற்றைப் பட்டும் படாமலும் லேசாகக் காண்பிப்பான். அப்போதுதான் ஓவியத்தைப் பார்ப்பவரின் முழுக் கவனமும் பிரதான அம்சத்தைத் தழுவி நிற்கும். இல்லாவிடில் கண்ணும் கருத்தும் சிதறிவிடும். அழகுடைய மங்கையின் செளந்தரியத்தைத் தீட்ட வந்தவன் அவளுடைய ஆடை அணிகளைப் பிரமாதமான முறையிலே சித்திரித்தானுனல் பார்ப்பவர் கண்ணும் கருத்தும் மங்கையின் செளந்தரியத்திலே நிலைக்குமா? அப்படி ஓவியம் வரைதல் அந்தச் சாத்திர முறைக்கு உவந்ததல்ல; அப்படி வரைபவன் சிறந்த ஓவியனும் அல்லன்.

ஐயங்கார் அவர்களின் கச்சேரிகளிலே மேற்குறித்த லட்சண லட்சியத்தை நன்கு காணலாம். அவர் ஸ்வரம் பாடுகிறபொழுது, பொறுக்கிய அழகு வாய்ந்த இரண்டு மூன்று ஆவர்த்தனம், ராகத்தையே உரித்துக்கொண்டு வெளிவரும்.

சபா ரஞ்சகமாக இருப்பதற்காக அவர் உருப்படிகள் முதலியவற்றைத் தராசு போட்டு நிறுத்து வைத்தாற்போல, திட்டமிட்டு வகுத்துப் பாடினாலும், ஒவ்வொரு கச்சேரியிலும் அவற்றுள் ஏதாவது ஓரம்சம் முக்கிய ஸ்தானத்தைப் பெற்று விளங்கும். கச்சேரிக்குப் பின் நாளடைவில் ரசிகர்கள் அவர் பாடியவைகளை ஒவ்வொன்றாய் மறந்து கொண்டே வந்தாலும், அந்த ஒரே ஓர் அம்சம் மட்டும் உள்ளத்திலே நெடுநாள் ஒலித்துக்கொண்டிருக்கும். இப்படி ஒவ்வொரு கச்சேரியிலும் ஏதாவது ஓர் அம்சத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து ரசிகர் உள்ளத்திலே நிலையான இடம் தேடிக்கொண்டவர் அவர்.

## 10. நடை

ஸ்ரீ ஐயங்காரின் கச்சேரிகளில் 'டெம்போ' எனும் அம்சம் குறையாமல் இருப்பதற்கும், பெரும்பாலும் கச்சேரிகள் சோடை போகாமல் இருப்பதற்கும் முக்கியமான காரணம் அவர் ஆளும் மத்திம கால நடைதான். அவர் சற்றேனும் அலுப்புறாமல் அடிக்கடி கச்சேரி செய்வதற்குக் காரணமும், ரசிகர்கள் விரும்பி அவர் கச்சேரிகளைக் கேட்பதற்குக் காரணமும் அந்த நடைதான். அந்த நடையின் இயல்பால், அவர் அதை ஆளும் திறத்தால், அவர் சௌககால உருப்படிகளைப் பாடினாலும் அவற்றில் போதிய விறுவிறுப்புக் காணப் பெறும்.

சிலர் ஏராளமான பொருளைச் செலவிட்டுக் கல்யாணம் போன்ற வைபவத்தை நடத்துவர்; சோபிக்காது; செலவுதான் மிச்சம். சிலர் திட்டமிட்டுச் செலவு செய்வர்; பிரமாதமாகச் சோபிக்கும். காரணம் விதரணைதான்.

அதேபோல மத்திமகால உருப்படிகளாகவே கச்சேரி முழுவதிலும் பாடினாலும் சிலர் கச்சேரி சற்றும் நிறக்காமல், விறுவிறுப்பே சிறிதும் இல்லாமல், தொய்ந்து

போய் விடுவதும் உண்டு; ஐயங்கார் அவர்கள் முழுக்க முழுக்கச் சௌக கால உருப்படிகளையே பாடினாலும் விறு விறுப்பு நிறைந்து கச்சேரி பூரணப் பொலிவுடன் விளங்கும். இரண்டுக்கும் காரணம் நடைதான்; அந்த நடையை ஆளும் திறம்தான்.

"இந்த வகையிலே நான் கூடுமான வரையில் அவரைப் பின்பற்றுபவன் தான். அதில் வெற்றி இருந் தால் அதற்குரிய பெருமை முற்றும் அவருக்கே. குறை இருந்தால் என்னைச் சார்ந்தது" என்கிறார் ஸ்ரீ. ஜி. என். பி. அவர்கள்.

"சங்கீதத்துக்கு உயிரா யிருப்பது மத்திம காலம். அது ஸ்ரீ ஐயங்கார் அவர்கள் சாரீரத்தில் அமைந்திருப்பதை என்னவென்று சொல்வது? அதன் அழகைச் சொல்வதற்கு வார்த்தையே இல்லை. இப்படி மத்திம காலம் அமைந் திருக்கும் பொழுது, நாற்பத்தைந்து ஆண்டுகள் இல்லை; ஆயுள் உள்ள வரையில் நிகரில்லாமல் அவர் கச்சேரி செய் வார் என்பதில் சந்தேகம் இல்லை. என்னைப் பொறுத்த வரையில் ஸ்ரீ ஐயங்கார் அவர்களுடைய சங்கீதத்தைச் சமாதி சுகமாக நான் கருதுகிறேன்" என்கிறார் பாலக்காடு ஸ்ரீ மணி ஐயர் அவர்கள்.

### 11. பல்லவி—ஸ்வரம்

'சிசுர் வேத்தி பசுர் வேத்தி வேத்திகான ரஸம் பணீ' என்பது வடமொழி வாக்கியம். 'குழந்தை முதல் பசு உள்பட சர்ப்பம் வரையில் கான ரசத்தைப் பருகு கின்றன' என்பதே இதன் பொருள். ஐந்தறிவு நிலையி லுள்ள ஜீவராசிகளே லயிக்கிற இசையை ஆறறிவும் நிறைந்த மனிதன் ரசிப்பது வியப்பல்ல. ஆனால் அந்த ரசனையில் எத்தனையோ வகை.

ஒரு நல்ல கச்சேரியை வரிசையறிந்து ரசிப்பதற்குத் தெளிவான ஞானமும் வேண்டும்; அதிலே விதரணையும் வேண்டும். அத்தகைய உயர்ந்த ஞானம் நிறைந்த ரசிகர்களுக்கு அளிக்கப் பெறும் சங்கீதத்திலே வெறும் இசை மட்டுமே இருந்தால் போதாது. அது செவிப்புலனை மட்டுந்தான் திருப்தி செய்விக்கும். கண்ணும் காதும் ரசனையிலே ஈடுபடுகிற போது மூளைக்கும் தக்க அளவிலே வேலை இருந்தால் அந்த ரசனையின் தரமே வேறுதான். அதையெல்லாம் எண்ணித்தான் கச்சேரி ஒன்றில் வெறும் பாட்டுக்களை மட்டுமே பாடித் தீர்ப்பது என்று அமைக்காமல் ராகம் பாடுவது, அதில் மனோதர்மத்தைச் செலவிடுவது, ஸ்வரப் பிரஸ்தாரம் செய்வது, விவகாரங்களை உள்ளடக்கிய பல்லவிகளைப் பாடுவது—என்பன போன்ற திட்டங்களைச் செய்திருக்கிறார்கள், இனிப்பு மிக்க சர்க்கரைப் பொங்கல் தெவிட்டாமல் இருக்க இடையிடையே மிளகாய்ச் சட்டினியை ஊறுகாயாக உபயோகிப்பது போல. ஆனால்....

உண்கலத்தின் நடுவே பனங்காயளவு மிளகாய்ச் சட்டினியை வைத்துவிட்டு இலையின் ஒரு மூலையிலே கொட்டைப் பாக்களவு சர்க்கரைப் பொங்கலை வைத்தால் சுவைக்குமா?

கச்சேரியிலே பல்லவி—ஸ்வரப் பிரஸ்தாரத்தின் நிலை மேற்குறித்த இரு முறைகளில் முன்னதாக இருக்க வேண்டுமே தவிரப் பின்னதாக இருக்கவே கூடாது.

சங்கீதம் மன அமைதிக்கு; ஆனந்த உணர்ச்சிக்கு. அதில் விவகாரம் எதற்கு? இதை உணராத கலைஞர்களும் ரசிகர்களும் வெகு அபூர்வமாகத்தான் இருப்பார்கள். உணர்ந்தும் அச்செயலைத் தவிர்க்காதவர்களும் உண்டு. இத்தகைய ஒரு சிலர் எல்லாக் காலங்களிலுமே இருந்திருக்

கிறார்கள். அவர்களால் கலையம்சங்களின் எந்த ஒரு நற் பகுதிக்கும் விசேஷ லாபம் இல்லை.

செல்வர் ஒருவரின் மாளிகையிலே அணியும் தங்கப் பணியும் பட்டுத் துணியும் மரகத மணியும் நிரம்ப இருக்கும். அவற்றைப் பாதுகாக்கக் காவலன் அவசியந் தான். வாசலில் உள்ள 'கூர்க்கா' இரவும் பகலும் இடை யறாது காவல் புரிகிறான். அவனுடைய தோற்றம், பார்வை, உடைவாள் முதலியவற்றை எண்ணிப் பார்க்கிற போதே திருடன் அத் திக்கிலே வர அஞ்சுவான். கூர்க்கா வினால்தான் மாளிகையும் அதில் உள்ளவையும் பாதுகாக்கப் படுகின்றன. அதற்காக அவனை எவ்வளவு கொண்டாட முடியும்? மாளிகையில் நிகழும் வைபவங்களில் அரியா சனத்திலே அமர்ந்திருக்கும் செல்வரை இறக்கி விட்டு அந்த இடத்திலே கூர்க்காவை விசேஷ உடை உடுத்தி அமர்த்திப் போற்றுவதா?

மாளிகையின் பாதுகாப்புக்குக் கூர்க்காவைப் போலச் சங்கீதத்தின் பாதுகாப்புக்கு லயம்; வழி பிறழாது, எல்லைக் கோட்டைத் தாண்டாது செல்வதற்கு இன்றியமை யாத அருந்துணை. அதைப் பக்கபலமாகக் கொள்ளவேண் டுமேயல்லாது அதையே பிராதான்யப் படுத்தி விவகாரங் களில் ஈடுபட்டால் இசைச்சுவை மங்கும், லயச்சுவை ஓங்கும். கச்சேரி இனிமையற்றுப் போம். அமைதி அங்கே தலைகாட்டாது. 'சிசுர்வேத்தி....' என்ற வாக்கியம் அமைதி நிரம்பிய இசையை எண்ணிப் பிறந்ததே ஒழிய, விவகார இசையை ஒட்டிப் பிறந்ததல்ல. விவகார ரகளை யைக் கண்டால் சிசு லயிக்காது—அலறும்; பசு தன்னை மறக்காது—மருளும்; சர்ப்பம் மயங்காது—சீறும். ஆக, சங்கீதத்தில் சுருதி, லயம் முதலிய எல்லா அம்சங்களும்

தேவைதான். ஆனால் லயம் தனி ஆட்சி புரிவது விரும்பத் தக்கதல்ல.—இது ஸ்ரீ ஐயங்காரின் அபிப்பிராயம்.

அளவறிந்து அளிக்கும் ஆற்றலில் தேர்ந்தவரான ஸ்ரீ ஐயங்காரிடம் மற்றச் சிறப்புக்களோடு இந்தச் சிறப்பும் கூடியிருப்பது ரசிகர்களின் பாக்கியந்தான். அவருடைய கச்சேரிகளில் ராக சஞ்சாரம், கீர்த்தனையில் ராக ஸ்வரூபம், ஸ்வரப் பிரஸ்தாரம் இவை தனித்தனிக் கூறுகளாக இரா. ஒரே ராகத்திலே எத்தனையோ கிருதிகள். அவர் ராகம் பாடுகிறபோதே இன்ன கிருதியைப் பாடப் போகிறார் என்று சாமான்யர்களும் சொல்லி விடலாம். அதேபோல ஸ்வரம் பாடுகிறபோது அசப்பிலே கவனித்தால் ராகம் பாடுவது போலவே இருக்கும். கல்பனை ஸ்வரங்களின் கோவை அத்தனை பொருத்தமாக இருக்கும். நிரவல் மிகவும் பரிசுத்த முடையது. அவர் ராக பாவமாக ஸ்வரம் பாடுவதனால் சாமான்ய ரசிகர்களும் சலிப்பே அறியாது ரசிக்க முடிகிறது.

கீர்த்தனைக்குக் கல்பனை ஸ்வரம் பாடும்போது சொற்ப ஞானம் உடைய ரசிகர்களைக் கொடிய சோதனைக்கு ஸ்ரீ ஐயங்கார் என்றுமே ஆளாக்குவதில்லை. சின்னவை, பெரியவை, சுலபமானவை, நிரடானவை, தாளவாத்திய வித்துவான்களைத் திகைக்க வைப்பவை—இப்படி எவ்வளவோ பல்லவிகள் அவருக்குத் தெரியும். சபையின் நிலைக்கேற்றவாறு அவற்றிலே சிலவற்றை அவ்வப்போது அவர் பாடுவதும் உண்டு. ஆனால் அவர் அவற்றை ஆளும் அழகை என்னவென்று சொல்வது? எவ்வளவு இடக்கான பல்லவியாயிருந்தாலும், எவ்வளவு பட்ட வர்த்தனமான பல்லவியாயிருந்தாலும் அவர் பாடும்பொழுது பரம லளிதப்படுத்திப் பாடுவார். துளிக்கூட ராக பாவத்தில் குறைவே இருக்காது. அநேகவிதமான, பிரமை தட்டும்படி

யான லய விந்நியாசங்கள்;—அவை தனித்தனியே, ஒட்டாமல் நின்று அவலச் சுவையை உண்டுபண்ண மாட்டா. தவிர சாதாரணமாய் லயவிஷயமான பல்லவி ஸ்வரம் பாடுகிறபொழுது அடி, உதைப்பு, தடிப்பு முதலிய முரட்டுத் தனங்கள் தோன்றுவது சகஜம். ஆனால் ஐயங்கார் அவர்கள் இந்த மாதிரிச் செயல்களை ஆற்றும் பொழுது வெகு சாதாரண விஷயங்களைச் செய்வதுபோல மிகச் சரளமாகச் செய்வார். மேலும், அவர் ஸ்வரம் பாடிக்கொண்டு வருகிறபொழுது கண்டம், மிசிரம், ஸங்கீர்ணம் முதலிய ஜதிகள் எந்தப் பொருத்தம் கொடுத்து எடுப்பதற்கும் தயாராக அவருக்குக் காத்திருக்கும். பல்லவி—ஸ்வரம் பாடுகிற முறையில் அவரிடம் அமைந்துள்ள சரளமும் லாகவமும் கலைச் சிறப்பும் கொண்டாடத் தக்கன.

## 12. சில்லறை

கச்சேரியின் பிற்பகுதியிலே சில்லறை, பதம், ஜாவளி, தில்லானு முதலியன பாடப் பெறுவது சுவை மிகுந்த விருந்தின் அங்கமான மணம் கமழும் சந்தனம், தாம்பூலம், அந்தத் தாம்பூலத்தின் உப அங்கங்களான லவங்கம், ஏலக்காய், வால்மிளகு முதலிய உல்லாச உணர்ச்சிப் பொருள்களைப் போல. அந்த வழக்கத்தை உயர்ந்த முறையிலே அறிமுகம் செய்ததே ஸ்ரீ ஐயங்கார்தாம் என்பர்.

முன் தலைமுறையைச் சார்ந்த சங்கீத மேதைகள், கச்சேரிகளில் சில்லறை பாடுவதென்பது பாமர ரஞ்சகமான செயல் என்ற ஓர் அபிப்பிராயத்தால் அதைச் செய்வதில்லை; யாராவது செய்தாலும் ரசிப்பதில்லை. அதை, குறைவுடைய செயல் என்று கூடக் கருதினார்கள்.

அத்தகைய சந்தர்ப்பத்தில் ஸ்ரீ ஐயங்கார் துணிந்து பல தமிழ் உருப்படிகளையும் சில்லறைகளையும் பாடி வந்தார்; பெரிய வித்துவான்களையும் ரசிக்கச் செய்தார்.

வயலின் வித்துவான் மலைக்கோட்டை ஸ்ரீ கோவிந்த சாமி பிள்ளைக்குச் சில்லறை உருப்படிகளை வாசிப்பதிலும் பாடிக் கேட்பதிலும் மிக ஆனந்தம். உற்சாகத்தோடு வாசித்து அந்தச் செயலில் ஸ்ரீ ஐயங்காருக்குத் தூண்டு கோலாக இருந்து வந்தார். ஸ்ரீ ஐயங்காரின் அறிமுகத் தால் கச்சேரிகளில் சில்லறை பாடுகிற அம்சம் பரவிற்று, வளர்ந்தது, உயர்ந்தது, நிலைத்தது.

## 13. திருப்புகழ்.

தெய்வத் திருப்புகழைப் பாடும் வாயும் மணம் பெறும் என்று பெரியோர்கள் சொல்வார்கள். அத்தகைய பக்திப் பாடலை இசை நயம், பொருள் நயம், லயச் சிறப்புத் தோன்றப் பாடினால் கேட்பவர்களுக்கு எத்தகைய ஆனந்த உணர்ச்சி!

மிருதங்க வித்துவான் புதுக்கோட்டை ஸ்ரீ தட்சிணு மூர்த்தி பிள்ளை அவர்களிடம் மிருதங்க வாசிப்பை விட, கஞ்சிரா வாசிப்பு மிக உயர்வு என்பர் சிலர். மிருதங்க வித்து வான் **பழனி ஸ்ரீ சுப்பிரமணிய பிள்ளை** அவர்கள் தகப் பனார் **பழனி ஸ்ரீ முத்தையா பிள்ளை** அவர்கள் போன்ற பெரியோர்கள் அது தவறான அபிப்பிராயம் என்பர். "ஸ்ரீ தட்சிணுமூர்த்தி பிள்ளை அவர்களின் மிருதங்க வாசிப்பிலே சிறப்பைக் காண வேண்டுமானால் ஐயங்கார் அவர்களின் கச்சேரிக்கு அவர் வாசிக்கிற போது கேட்க வேண்டும். மிருதங்கத்தின் சிறப்புப் பரிமளிக்கிற வகை யிலே கணகண வென்று இசை முழக்கம் செய்பவர் அவர்" என்பார்கள். "பிள்ளை அவர்களின் மிருதங்க வாசிப்பை ஐயங்கார் அவர்களின் பாட்டிலேதான் நிர்ணயிக்கலாம்" என்று சொல்வார்கள். "என் தகப்பனார் என் ஒன்பதா வது வயதில் இவ்வாறு கூறியது இன்னும் பசுமையாக

என் நினைவிலே இருக்கிறது" என்கிறார் **பழனி ஸ்ரீ சுப்பிர மணிய பிள்ளை** யவர்கள்.

ஸ்ரீ தட்சிணாமூர்த்தி பிள்ளை அவர்கள் வாசித்த காலத்தில் ஸ்ரீ ஐயங்கார் அவர்கள் கச்சேரிகளில் திருப்புகழ் கேட்டவர்கள் பாக்கியசாலிகள். இரண்டு இரண்டு அடிகளாக ஐயங்கார் அவர்கள் பாடி வருகிறபோது, பிள்ளையவர்கள் அந்த அந்தச் சந்தத்திற்கு ஏற்ப, தத்தகார முறையிலே சொல் அமைத்து வாசித்துக் கொண்டே வருவார். கடைசி இரண்டடிகளை அவர் பாடுகிறபோது பிள்ளை அவர்கள் வேறு சொற்களை அமைத்துக் கெடுபிடியாக வாசித்துக் கொண்டே போவார். பாடலின் முடிவாகிய 'பெருமாளே' என்கிற இடத்தை எட்டுகிறபோது பிள்ளை அவர்களின் மொகரா வெகு அழகாகத் தொடங்கி இணங்கிச் சென்று அவர் பெருமாளே என்று முடிக்கிற இடத்திலே இவர் முத்தாய்ப்பு அமையும். சபையினர் பரவச முற்றுக் கர கோஷமிடுவர்.

மாறி மாறிப் பேசும் மிருதங்கச் சொல்லடுக்குகள் பாடுகிறவரைச் சுலபமாக இடறிவிட்டுவிட இடம் உண்டு. ஐயங்கார் அவர்கள் விழிப்புடன் அந்தச் செயலை அநாயாசமாகச் செய்து முடிப்பது ஓர் அழகு; பிள்ளையவர்கள் திருப்புகழுக்கென்று சிறப்புற வாசிப்பது ஓர் அழகு. இரண்டு அம்சமும் கூடுகிறபோது பரவச நிலை ஏற்படக் கேட்பானேன்? பிள்ளை அவர்களுக்குப் பின் அந் நிலை இல்லை.

## 14. லயம்

**லய** ஞானம் 'சங்கீத விவகாரி' களுக்குப் பொக்கிஷம் போல. விவகாரத்தில் ஆசையுடைய **வித்துவான்கள்,** ரசிகர்கள் ஆகியோரின் எண்ணிக்கை குறைவு. பாட்டு

வயலின், மிருதங்கம் மூன்றும் சாரையும் சர்ப்பமும்போல இழைந்து ஒன்றுபட்டு ஒலிக்கிற இன்ப நாதம்தான் மனத்தை ரமிக்கச் செய்யும் உயர்ந்த சங்கீதம். அத்தகைய சங்கீதத்திலே லயம் மயிரிழையும் பிசகாது பூமாலையிலே ஓடும் பொற் சரிகை இழைபோல அங்கங்கே அளவோடு தன்னைக் காட்டிக் கொண்டு செல்லும். அதை அநுபவிக்கிறபோது உள்ளம் பரவச முறும்.

ஸ்ரீ ஐயங்காரின் சங்கீதம் இத்தகையது. சுருதி, லயம் இவற்றின் அரவணைப்போடு பரிமளிக்கும் இசையினால் அவர் கச்சேரிகளிலே எப்போதுமே ஓர் இன்ப அமைதி நிலவிக் கொண்டிருக்கும்.

அவருக்கு வாசிப்பதென்றால் பக்க வாத்திய வித்துவான்களுக்கு அளவுகடந்த உற்சாகம். காரணம் அவருடைய சிறந்த காலப் பிரமாணந்தான். அது அவரிடம் வெகு சுத்தம்—கப்பலுக்கு நங்கூரம் இட்டதுபோல.

பக்க வாத்தியங்களின் தராதரத்தைப் பற்றி அவர் எப்போதுமே சிறிதும் மன வேறுபாடு கொள்வதில்லை. எந்தப் பக்க வாத்தியமானாலும் மிக்க அநுசரிப்பாக நடந்து கொண்டு கச்சேரியைக் கண்ணியப் படுத்துவார். சுமார் என்றால் அதிக அக்கறை கொண்டு உழைப்பார். தட்டிக் கொடுத்து உற்சாக மூட்டுவார்.

தனி வாசிக்கிறபோது தாள வாத்திய வித்துவான்கள் லய சம்பந்தமான நுணுக்க வேலைப்பாடுகளில் அவர் தாளத்தை நம்பித் தியங்காமல் தாராளமாக ஈடுபடலாம்.

லய சுத்தமான அவர் சங்கீதத்தைச் சிமிட்டியினால் அமைக்கப் பெற்ற வலுவான 'கான்கிரீட்' ரஸ்தாவுக்கு ஒப்பிடலாம். கான்கிரீட் ரஸ்தாவிலே எத்தகைய பார வண்டியும் நிர்ப்பயமாக ஓடலாம்; எவ்வளவு துடிப்பாக வேண்டுமானாலும் ஓடலாம்—ஆனால் ரஸ்தாவின் விளிம்பை

மட்டும் தாண்டக்கூடாது. அப்படி எல்லைக் கோட்டைத் தாண்டாமல் ஓடுவதனால் வண்டி, அதில் உள்ள பொருள், வண்டியோட்டி, ரஸ்தா உள்பட யாருக்கும், எதற்கும் கேடு இல்லை. அதே போலப் பக்க வாத்தியங்களின் ஓட்டம் அல்லது இழுப்பு இவற்றைச் சமாளித்து நிதானம் தவறாமல் இருப்பது ஐயங்கார் அவர்களின் சங்கீதம். அவர் பாட்டை அநுசரிக்கும் மிருதங்கம் லய சுத்தம் பெறும்.— ஓடவும் முடியாது; இழுக்கவும் முடியாது.

வயலின் வாத்தியத்திலும் அவர் கச்சேரியில் அசந்து மறந்துங்கூட அநுசிதமான சங்கதிகள் வாரா. அந்த அளவுக்குத் திட்டமிட்டுச் செப்பனிட்டுத் தருவார் அவர். இம்மாதிரியான காரணங்களினால் அவருடைய கச்சேரி களில் 'டெம்போ' எனப்படுவது குறைவதே இல்லை. அது நூற்றுக்கு நூறு தான்!

"ஸ்ரீ ஐயங்கார் அவர்கள் கச்சேரியில் வர்ணம் பாட ஆரம்பித்து நாலைந்து ஆவர்த்தனம் ஆவதற்குள்ளேயே எனக்குக் 'குஷி' கிளம்பிவிடும். காரணம் என்னவென்றால் துளிக்கூட ஓட்டம், இழுப்பு இல்லாத பரிசுத்தமான அவருடைய லய சுத்தம்தான். நிரவல், ஸ்வரம் பாட ஆரம்பித்தால் கற்பனை புங்காநுபுங்கமாய்ப் பொங்கி வரும். அவ்வளவு கற்பனையிலும் துளிக்கூட அநாவசியம் இராது.

"ஸ்ரீ ஐயங்கார் அவர்களிடம் நான் கண்ட மற்றொரு சிறப்பு அவர் கச்சேரிகளில் அநாவசியமாகப் பொழுது போகாது. தாம் பாடுகிறபோது எப்படி ஒரு நிமிஷத்தைக் கூட வீணடிக்காமல் பாடுகிறாரோ, அது போலவே பக்க வாத்திய வித்துவான்களையும் வீண் பொழுது போக்கவிட மாட்டார். உதாரணமாக, மிருதங்கம் வாசிப்பவர்கள் தனி ஆவர்த்தனத்தை விஷயமில்லாமல் நீண்ட நேரம் வளர்த்திக் கொண்டு போனால், சின்ன மொகரா அல்லது

ஏதாவது ஜதிகள் வாசித்து எடுப்பு எடுக்கும் சந்தர்ப்பத்தில் ஸ்ரீ ஐயங்கார் அவர்கள் தனி ஆவர்த்தனம் வாசித்து முடித்து விட்டதாகப் பாவனை பண்ணிப் பல்லவி எடுப்பை எடுத்து மேலே பாட ஆரம்பித்து விடுவார். ஸ்ரீ ஐயங்கார் அவர்களின் சமயோசிதச் செயல்கள் லய விஷயத்திலுங் கூடத் தங்கள் ஆட்சியைச் செலுத்தத் தவறுவதில்லை" என்கிறார் பாலக்காடு ஸ்ரீ மணி ஐயர் அவர்கள்.

**15. சீசன்**

'சீசன்' என்ற ஒன்று எல்லாத் துறையினருக்குமே உண்டு. தோன்றிச் சிறிது காலம் வரையில் சுமாராகவோ, பிரமாதமாகவோ ஜொலித்துவிட்டு இருந்த இடம் தெரியாமல் மறைந்து போவதைத்தான் 'சீசன்' எனக் குறிப்பிடுவது. சங்கீத வித்துவான்களைப் பொறுத்த வரையில் இந்தக் காலத்தில் அந்தச் 'சீசன்' எனப் பெறுவது மிகக் குறுகிய காலவரையை உடையதாக இருக்கிறது. அந்தத் துர்ப்பாக்கியத்தை நினைந்து யாரும் வருந்தாமல் இருக்கவே முடியாது. ஆனால்....

"ஸ்ரீ ராமாநுஜ ஐயங்கார் அவர்களுக்கு மட்டும் 'சீசன்' என்பதே இல்லை. கர்நாடக சங்கீத உலகம் செய்த பாக்கியத்தினால் அவருடைய சங்கீதம் மார்க்கண்டனின் ஆயுளைப்போல விளங்கி வருகிறது!" என்று மகிழ்ச்சி பொங்கத் தெரிவிக்கிறார் அறிஞர் ஸ்ரீ கி. சந்திரசேகரன் அவர்கள்.

**16. "சங்கீத பூரணர்!"**

ஸ்ரீ ஐயங்கார் அவர்கள் கர்நாடக சங்கீத உலகில் நாற்பது ஆண்டுகளுக்கு அதிகமாகவே உழைத்து வருபவர். இடையே அநேகம் வித்துவான்கள் தோன்றினார்கள். ஒவ்வொருவர் ஒவ்வோர் அம்சத்திலே சிறப்புடன் திகழலானார்

கள். என்றுமே புதுமையை விரும்பி வரவேற்கும் இயல்புடைய ரசிகர் உலகம் அவர்களுக்கு அமோக ஆதரவு அளித்து வந்தது. ஆனால் அந்நிலையிலும் ஸ்ரீ ஐயங்காருக்கு இருந்த அபரிமிதமான ஆதரவு குறைவுபடவே இல்லை.

அவர் தமக்கு முந்திய தலைமுறையினரின் சங்கீதத்தில் காணப்பெற்ற சிறந்த அம்சங்களைக் கடைப்பிடித்துத் தமதாக்கிக் கொண்டது மட்டுமன்றி, தமக்குப் பின்னர்ப் பிரகாசிக்கத் தொடங்கிய வித்துவான்களின் கலையம்சங்களையும் தமதாக்கிக்கொண்டு விடுகிறார். மற்றவர்களின் நிறைவம்சங்கள் அவருடைய கலையம்சங்களின் இணைந்து போன பகுதிகளாய்விடும். ஆனால் அவருடைய சிறப்பம்சங்களை மற்றவர்கள் கையாளத் தொடங்கினால் அதில் அவருடைய முத்திரை பளிச்சென்று தெரிந்துவிடும்.

பல உபநிஷத்துக்களின் சாரசங்கிரகம் எனப் பெறுவது கீதை. கர்நாடக சங்கீதத்திலே, சங்கீத சாஸ்திரத்திலே, பிராசீன சம்பிரதாயங்களிலே உள்ள உயர்ந்த சாராம்சங்களையெல்லாம் திரட்டி, சாஸ்திர வழியை ஒட்டிய நவீன முறையிலே எடுத்தாளும் ஸ்ரீ ஐயங்காரின் சங்கீதத்தை, 'சங்கீத கீதை' எனலாம். இதனால் அவருடைய சங்கீதம் நித்திய வளர்ச்சியும் நிறை ஜீவனும் கொண்டு அவரை என்றும் 'அப்-டு-டேட்' வித்துவானாக்கிவிடுகிறது. 'பேக் நம்பர்' என்ற பெயருக்கு அவர் ஒருநாளும் உரியவர் அல்லர். மேலும் அவர் பிறரின் உயர்வம்சங்களைக் கையாளும் போது அந்த வழிகளால் தம் சொந்த வழி எந்த வகையிலும் பாதிக்கப் பெறாதவாறு காப்பாற்றிப் போஷித்து நிலைநிறுத்திக் கொண்டவர்; ரஸ்தாவிலே வேலைப் பாடமைந்த அநேக வண்டிகள் ஓடிய பிறகும் சலனம் சிறிதும் இன்றி நிலைத்து நிற்கும் மைல் கல்லைப் போல!

"இந்தப் பிராயத்திலே இத்தனை சிறப்பாக, பலரும் கேட்டு நன்கு ரசிக்கும்படி பாடியவர்கள் இதற்கு முன் யாரும் இருந்து நான் பார்த்ததில்லை; பிறர் சொல்லிக் கேள்விப்பட்டதும் இல்லை. அதற்குக் காரணம் கலையை அவர் கிரகித்து ஆளும் முறைதான்" என்கிறார் மிருதங்க வித்துவான் பழனி ஸ்ரீ சுப்பிரமணிய பிள்ளை.

"அந்தப் பெருமையை உணர்ந்து பாராட்டுகிற முறையிலேதான் அவருக்குத் தலைமைப் பதவி" என்கிறார் சங்கீத வித்துவான் ஸ்ரீ ஜி. என். பாலசுப்பிரமணியம்.

"எல்லாம் தெரிந்துவிட்டது என்கிற நிலையில் அவர் ஒருபோதும் நடந்துகொண்டதில்லை. மிகமிகப் பிராபல்யம் அடைந்துவிட்ட பிறகும், ஏன், இன்றைக்குங்கூட, மேலும் மேலும் இசைக் கலையை அபிவிருத்தி செய்வதிலே அவருக்கு மிகக் கருத்து; அளவற்ற ஆர்வம். அறுபத்தாறு பிராயத்திலே பதினாறு வயசுடைய இளைஞனின் துடிதுடிப்பும் பரபரப்பும் கலை ஆர்வமும் சுறுசுறுப்பும் நகை முகமும் உடைய ஒருவரை இவருக்கு முன் நான் பார்த்ததே இல்லை. ஒரு கலையில் எல்லா நல்லம்சங்களும் ஒருவரிடம் பூரணமாக அமைந்து மிளிர்வது வெகு துர்லபம். இந்தத் தலைமுறையில் அத்தகைய ஒரு மேதையைக் காணவும் அவர் கலையை அநுபவிக்கவும் நாம் பாக்கியம் செய்திருக்கிறோம்; ஸ்ரீ ஐயங்கார் அவர்களிடம் கர்நாடக சங்கீதக் கலையின் எல்லா நல்லம்சங்களும் பரிபூரணமாக அமைந்து பிரகாசிக்கின்றன. அவர் **சங்கீத பூரணர்!**" என்கிறார் வயலின் வித்துவான் ஸ்ரீ பாப்பா வேங்கடராமையா.

★

# குணச் சிறப்பு

## குணச் சிறப்பு

### 1. ஆசிரயம்

ஸ்ரீ ஐயங்கார் அவர்களிடம் சங்கீதம் மட்டுமே சிறப்புடையதாக இல்லை; அவருடைய தன்மையும் மிகமிக உயர்ந்தது; பாராட்டத் தக்கது.

தம் கலை வாழ்வின் நல்வழிக்கு ஒளிகாட்டிய குருமார்கள், முன் தலைமுறையைச் சார்ந்த சங்கீத மேதைகள் முதலிய அனைவரிடமும் அவர் மிகுந்த ஆசிரய புத்தியோடு நடந்துகொண்டு அவர்களின் பரிபூரண நல்லாசிகளைப் பெற்றிருக்கிறார். கலைத் துறையில் பல பல நன்மைகளை அடைந்திருக்கிறார்.

சங்கீத மேதை வீணை ஸ்ரீமதி தனம்மாள் அவர்கள் யாரையும் சுலபத்தில் நெருங்கிப் பழக அநுமதிப்பதில்லை. அப்படி நெருங்கிப் பழகிய வெகு சிலருள்ளும் அம்மாள் அவர்களின் அபூர்வமான வழிகளை அறிந்தவர்கள் மிகமிக அபூர்வம்; ஸ்ரீ ஐயங்கார் அந்த அபூர்வமானவர்களில் ஒருவர். தமக்குக் கிட்டிய அந்த வாய்ப்பைப்பற்றி அவர் மிகுந்த பக்தியோடும் நிறைந்த பெருமையோடும் சொல்லிக் கொள்கிறார்:

"குருகுல வாச காலத்திலேயே எனக்கு அந்தப் பேறு கிட்டிற்று. என் குருநாதரும் அம்மாள் அவர்களும் பாஸ்பரம் ஒருவரை ஒருவர் நன்கு உணர்ந்து, மதித்துப் பழகி வந்தார்கள். அப்போதெல்லாம் அடிக்கடி அம்மாள் அவர்களைப் பார்த்திருக்கிறேன்; சொற்பம் பழகியும் இருக்கிறேன். ஆனல் பின் ஒரு சந்தர்ப்பத்திலேதான் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிட்டிற்று. அதை உண்டு பண்ணி

வைத்தவர் வயலின் வித்துவான் மலைக்கோட்டை ஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளை அவர்களே.

"சென்னை ஜார்ஜ் டவுனில் உள்ள ராமகிருஷ்ணன் தெருவில் அப்போது அம்மாள் அவர்கள் வசித்து வந்தார்கள். 1923-இல் ஸ்ரீ கோவிந்தசாமி பிள்ளை அவர்கள் என்னை அங்கே கூட்டிச் சென்றார். சிறிய தெரு. நாகரிகத்தின் வாடை படாதது. அம்மாள் வசித்த வீடும் சாமான்யமானதே. ஆனால் வீட்டினுள்ளே சென்றதும், அம்மாள் அவர்களைக் கண்டதும் தெரு, வீடு முதலியவற்றின் எளிய தோற்றமெல்லாம் நினைவினின்றும் அகன்றது. முறுவல் பூத்த முகத்துடன் அம்மாள் அவர்கள் பிள்ளை அவர்களை வரவேற்றார். ஆசனம் அளித்து அமரச் சொன்னார். நான் வணக்கம் கூறினேன். பிள்ளை அவர்கள் ,என்னைப்பற்றிக் கூறினார்.

" 'ஓ! பார்த்திருக்கிறேனே. ராமநாதபுரம் ஐயங்கார் அவர்களோடு பல முறை பார்த்திருக்கிறேன். நன்றாகப் பாடுவதாகவும் கேள்வி' என்றார்கள் அம்மாள்.

" 'அதனால்தான் இங்கே அழைத்து வந்தேன், உங்கள் வாசிப்பை இவர் கேட்கவேண்டும் என்று.'

" 'அதற்கென்ன? தாராளமாக வாசிக்கிறேன். நன்றாகக் கேட்கட்டும். மேலும் மேலும் விருத்திக்கு வரட்டும். ராமநாதபுரம் ஐயங்கார் அவர்கள் புகழைப் பாதுகாக்கட்டும்.'

"அவர்கள் பேச்சு என் குருநாதரைப்பற்றி வளர்ந்தது; இன்னும் சில பெரிய வித்துவான்களைப்பற்றியும் பேசிக்கொண்டார்கள். பிறகு அம்மாள் வீணையைக்கொண்டு வந்து வைத்துக்கொண்டு வாசித்தார்கள். அந்த வாசிப்பை இப்பொழுது நினைத்தாலும் உள்ளம் சிலிர்க்கிறது!

" பிறகு அடிக்கடி நான் அம்மாள் அவர்களைக் காண வேண்டி அவர்கள் வீட்டுக்குச் சென்று வந்தேன். கேள்விப் பட்டது போல் அன்றி அம்மாள் அவர்கள் என் வரையில் மிகுந்த வாத்ஸல்யத்தோடு தான் பழகினார்கள். மிகுதி யான அளவுக்கு அவர்கள் வாசிப்பைக் கேட்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டி வந்தது. சென்னையிலே நடைபெறுகிற என்னுடைய கச்சேரிகளைக் கேட்க வரவேண்டும் என்று அடிக்கடி நான் அழைப்பதுண்டு. எழும்பூர், மயிலாப்பூர், திருவல்லிக்கேணி முதலிய இடங்களுக்கு என் கச்சேரி கேட்கவென்று, தள்ளாத நிலை ஏற்பட்ட பிறகுங்கூட அவர்கள் சிறிதும் சிரமம் பாராட்டாது வந்து இருந்து கச்சேரி முழுவதும் கேட்டுவிட்டு என்னை ஆசீர்வதித்ததை என் உள்ளம் என்றுமே மறவாது."

## 2. அடக்கம்

" கடந்த முப்பது வருஷத்துப் பழக்கத்தில் நான் அறிந்த வரையிலே ஸ்ரீ ஐயங்கார் அவர்கள் யாரையும் நிந்தனை செய்ததில்லை. அவரிடம் அடக்கம் அதிகம். தாம் அநுஷ்டிப்பதோடு பிறரும் அதை அநுஷ்டிக்க வேண்டும் என்று விரும்பும் சுபாவம் உடையவர். தமக்கு முன்னோர் களான சங்கீத மேதைகளைப்பற்றி அவர் அடிக்கடி பேசு வதுண்டு. அவர்களின் சங்கீத மேன்மை, குணாதிசயங்கள் அவர்கள் பெற்ற பெருஞ் சிறப்புகள் முதலிய உயர்வம்சங் களைப்பற்றிக் குறிப்பிடுவார். அவ்வாறு பேசுகிற சந்தர்ப்பம் நேருகிறபோது மிகுந்த பயபக்தியுடன் பேசுவார். பிரஸ் தாபத்திற்குரிய மேதை எதிரே இருப்பது போன்ற பாவனை யில் அவர் உடல் கூசிக் குறுகும்; கரம் குவியும்; சொல் தழுதழுக்கும்; குரல் மெலினமடையும்; பதப் பிரயோகங் கள் மிக ஜாக்கிரதை பெறும் - இதை நான் பலமுறை நேரில்

பார்த்திருக்கிறேன்" என்றுகிர் சங்கீத வித்துவான் ஸ்ரீ ஜி. என். பி. அவர்கள்.

அவர் மேலும் சொல்கிறார்:

" ஒரு சமயம் ஒரு மகா வித்துவானைப்பற்றிய பேச்சு எழுந்தது. நான் கேட்டேன், 'அவர் சங்கீதம் நாகஸ்வர பாணியை அநுசரித்ததாக இருக்குமாமே? உண்மைதானு?' என்று.

"உடனே அவர் உடலைக் கூசிக்கொண்டார். இரு செவிகளையும் பொத்திக்கொண்டார். பின்னர்க் கரங் குவித்தபடி மிகுந்த பரபரப்புடன், 'ராம ராம! அப்படி யெல்லாம் பேசலாகாது அப்பா. யாராவது ஏதாவது சொன்னுல் காதில் வாங்காதே. இன்றைக்கு நாம் எல்லா ரும் பாடி வருகிற ஸ்ரீ ரஞ்சனி, ரீதிகௌளை, ஷண் முகப்ரியா, கரகரப்ரியா போன்ற ராகங்கள் எல்லாம் அந்த மகான் நமக்கு அளித்த பிச்சை என்று சொல்லவேண்டும். அந்த வகையில் அந்த நாளில் அவர் மகத்தான முறையிலே உழைத்து உழைத்து அரும்பாடுபட்டு அவற்றிற்கு உருவ மும் ஜீவனும் அளித்துச் சென்றிருக்கிறார். அதையெல்லாம் மறந்து அபசாரமாகப் பேசிச் சிரேயஸ் குறைவைத் தேடிக் கொள்ளலாமா?' என்றார். ஒரு நாழிகை ஆயிற்று எனக்கு அவர் செயலால் ஏற்பட்ட பிரமை தெளிய."

"கற்றது கைம் மண்ணளவு, கல்லாதது கடலளவு என்ற நிலையில் உள்ளவர் ஸ்ரீ ஐயங்கார் அவர்கள். இவ்வள வெல்லாம் அவரிடம் யோக்கியதாம்சங்கள் இருந்தும், உலகம் இவ்வளவு பிரமாதமாக அவர் கலையைப் புகழ்ந்தும், தம்மிடம் உள்ள கலையின் சிறப்புக்காக அவரிடம் அகங்கார மமகாரம் என்பன அணுவளவும் இல்லை. அன்றும் இல்லை, இன்றும் இல்லை, இனி என்றும் எதிர்பார்ப்பதற்கும்

இல்லை" என்கிறார் மிருதங்க வித்துவான் பழனி ஸ்ரீ சுப்பிரமணிய பிள்ளையவர்கள்.

"முப்பது வருஷகாலமாக ஸ்ரீ ஐயங்கார் அவர்களுடன் பழகினதில் நான் அவரிடம் கண்ட சிறப்பம்சங்களில் முக்கியமான ஒன்றை இங்கே குறிப்பிடுகிறேன். அவரோடு அநேகம் ஊர்களுக்குச் செல்லும் வாய்ப்பு அடிக்கடி எனக்கு ஏற்படுவதுண்டு. பிரயாண காலத்திலோ, போய்த் தங்கியிருக்கும் இடங்களிலோ, வேறு எங்கோ, எப்பொழுதோ பேச்சு என்பது அதிகமாகச் சங்கீதத்தைப் பற்றியதாகத்தான் இருக்கும். அவ்வளவு பேச்சிலும் அவர் நடை முறையிலும் கிஞ்சிற்றுவது, எப்பொழுதாவது ஒரு சந்தர்ப்பத்திலேகூட அவரிடம் கர்வ உணர்ச்சியை நான் கண்டதே இல்லை" என்கிறார் மிருதங்க வித்துவான் பாலக்காடு ஸ்ரீ மணி ஐயர் அவர்கள்.

'அவரிடம் கர்வம் இல்லை, அவர் முன் தலைமுறையின் சங்கீத மேதைகளை எந்நேரமும் பக்தி பூர்வமாக நினைக்கிறார்' என்ற செய்திகளைப் பலரிடம் கேட்டேன்; ஒருமுறை நானே நேரிலும் கண்டேன்.

இந்நூல் சம்பந்தமாக அடிக்கடி அவரைச் சந்திக்கும் பேறு எனக்கு வாய்த்தது. ஒரு சமயம் பேசிக்கொண்டிருக்கையில் வயலின் மகாவித்துவான் திருக்கோடிகாவல் ஸ்ரீ கிருஷ்ணையர் அவர்கள் பேச்சு வந்தது. "அவர் உங்களுக்கு எத்தனை முறை வாசித்திருப்பார்?" என்று பேச்சின் நடுவே கேட்டேன். அவரும் பேச்சோடு பேச்சாகவே, "அதிகம் இல்லை. இரண்டொரு முறைதான் வாசித்தாக ஞாபகம்" என்றார்.

நான் அடுத்த கேள்வியை எடுத்தேன். அதற்குள் அவர் மிகப் பரபரப்புடன், "என்ன சொன்னேன்?" என்றபடி திகைத்தாற் போல் என்னைப் பார்த்தார். ஊஞ்சலில்

அமர்ந்து காலைத் தொங்கவிட்டுத் தரையை உந்தி லேசாக ஆடிக்கொண்டிருந்த அவர் கால்கள் சட்டென்று மேலுக்கு வந்தன. சம்பரங்கொட்டி அமர்ந்து கரங்குவித்தார். "அபசாரம்! அபசாரம்! அந்த மகான் எனக்குப் பக்க வாத்தியம் வாசித்தாராவது! அவர் வாசிக்கிற போது அடியேனும் சேர்ந்து சிறிது பாடினேன்" என்றார்.

அதன் பிறகு அவர் சரியாக, நிதானம் பெற்றுப் பேசச் சிறிது நேரம் ஆயிற்று.

### 3. மரியாதை

சம காலத்து வித்துவான்களைப்பற்றிப் பேசுகிற போதும் ஸ்ரீ ஐயங்கார், அவர்களிடம் உள்ள சிறப்புக்களை மட்டும் பாராட்டுவாரேயன்றிக் குறைகள் இருந்தால் அவற்றைப் பெரிதாக்கிப் பேசவே மாட்டார். மிகமிகச் சாமான்யர் விஷயத்திலும் சிறப்பு எங்காவது இருக்கிறதா என்று ஆராய்ந்து அதையே தான் புகழ்ந்து உற்சாகம் ஊட்டுவார். நிச்சயமாகக் குறைகளைச் சுட்டிக் காட்டித் தூற்றவே மாட்டார். சம காலத்தவர்களான வாய்ப் பாட்டு வித்துவான்கள், வாத்திய வித்துவான்கள் அனைவரையுமே அவர் கொண்டாடுவதைத் தான் அனைவரும் கண்டிருக்கிறார்கள். வெறுப்பு, துவேஷம் முதலிய தன்மைகளுக்கும் அவருக்கும் வெகு தூரம்.

சிறந்த பக்திமானும் சங்கீத சாகித்திய வித்துவானுமான பாபநாசம் ஸ்ரீ சிவன் அவர்கள் கூறுகிறார்:

"கும்பகோணத்தில் வாழ்ந்துவந்த சத்கதாகாலட்சேப விற்பன்னரான திருப் பழனம் ஸ்ரீ பஞ்சாபகேச சாஸ்திரிகள் நடத்திவந்த ஸ்ரீ ராம நவமி உற்சவத்தில் (1914-இல்) ஸ்ரீ ஐயங்கார் அவர்களை முதல் முதலில் சந்தித்தேன். அன்று முதல் இன்று வரையில் அவர் சங்கீதம்

ஒரே நிலையிலே தான் இருக்கிறது. ஒருநாளும் உயர்ந்ததாக இருந்ததில்லை."—

இப்படி அவர் கூறினதும் நான் திடுக்கிட்டேன்; அவர் சிரித்தார். தொடர்ந்து சொன்னார்:

"....என்றுவது அவர் சங்கீதம் மட்டமாக இருந்தால் தானே உயர்வையும் தாழ்வையும் எண்ணிப் பார்க்க? எப்போதுமே உயர்ந்ததுதான். அலுப்பின்றி, அலட்டல் இன்றி ராகம், கீர்த்தனம், பல்லவி முதலியவற்றைப் பாடுகிறவர். அவர் கச்சேரி அமைப்பிலே பங்கீட்டின் விதரணை மிக உயர்வு—தென்னிந்தியர்களின் சாப்பாட்டு முறை போல! சர்வஜன ரஞ்சகமாகப் பாடுகிறவர். வித்துவான்களும் ஒப்புக்கொள்ளக் கூடியவர். மகா ரசிகர். அவரிடம் எல்லா அம்சங்களையும்விட ஓரே ஓர் அம்சம் குறிப்பிடத் தகுந்தது. அவர் யாரையும் தோஷம் சொல்லமாட்டார். துவேஷத்திற்கு அவர் வர்ஜம்; இது பிரமாணம்!"

## 4. அன்பு

'இவனுக்கு என்ன தெரியும்? நம் எதிரில் இவன் எம்மாத்திரம்?' என்பன போன்ற நினைவுகளோடு ஸ்ரீ ஐயங்கார் எந்த இளம் வித்துவானையும் எடுத்தெறிந்து பேசுவதில்லை. தட்டிக்கொடுத்து உற்சாக மூட்டிப் பேசி வாழ்த்துவதுதான் அவருடைய இயல்பு.

"அவருடைய குணச் சிறப்புகள் கொண்டாடத் தக்கன. கோபமே தெரியாது. யாரையும் குறை கூறுவது கிடையாது. வசவு, திட்டு என்பன ஒரு போதும் அவர் வாயில் வாரா. வாழ்த்துரைகளும் ஆசிமொழிகளும்தான் எப்போதும் வாயில் நிறைந்திருக்கும். மறந்துங்கூட மட்டமான சொற்களை அவர் உச்சரித்து நான் கேட்டதில்லை. இளம் வித்துவான்களிடம் அவர் காண்பிக்கும் பரிவும்

அன்பும் ஆதரவும் மறக்க முடியாதவை. அதனால் அவர்களுக்கு அவரிடம் அளவு கடந்த பக்தி. எனக்கு அவரிடம் என்றுமே குன்றாத பக்தி உண்டு" என்கிறார் கான கலாதர மதுரை ஸ்ரீ மணி ஐயர் அவர்கள்.

"தேவகோட்டையிலே **ஸ்ரீ முத்து க.ரு. வே. அளகப்ப செட்டியார்** அவர்கள் வீட்டுக் கல்யாணத்திலேதான் ஸ்ரீ ஐயங்கார் அவர்களுக்கு முதல் முதலாக வாசிக்கும் பாக்கியம் எனக்குக் கிட்டியது. அப்போது என் வயசு பத்து. அடுத்தபடியாகப் **புல்லாங்குழல் வித்துவான் பல்லடம் ஸ்ரீ சஞ்சீவி ராவ்** அவர்கள் வீட்டுக் கல்யாணத்தில் அவருக்கு வாசித்தேன்

"முதல் முதலில் வாசிக்க உட்காருகிறபோது மிகுந்த பயத்துடன்தான் உட்கார்ந்தேன். ஆனால் கச்சேரி ஆரம்பித்ததும் ஸ்ரீ ஐயங்கார் அவர்கள் என் வாசிப்புக்கு, 'பலே! பேஷ்!' என்று சொல்லித் தூக்கிவிட்டதால் என் பயம் உற்சாகமாக மாறி விட்டது. அன்று அவர் தோடி ராகத்தில் '**ஜேஸின தெல்ல மரசிதிவோ**' என்ற உருப்படி பாடி, '**நன்னலகி**' என்ற இடத்தில் நிரவல், ஸ்வரம் பாடியது இன்றும் என் செவியிலே ஒலித்துக் கொண்டிருக்கிறது. அதிலிருந்து கடந்த முப்பத்து மூன்று ஆண்டுகளில் அவர் செய்த கச்சேரிகளில் பாதி அளவுக்கு மேற்பட்ட கச்சேரிகளுக்கு நானே வாசித்து வந்திருக்கிறேன் என்பதை நினைத்துப் பார்க்கும் பொழுது, நான் அளவு கடந்த பெருமையும் சந்தோஷமும் அடைகிறேன். இவ்வளவுக்கும் காரணம் அவருடைய அன்பும் ஆசியுந்தான்" என்கிறார் பாலக்காடு ஸ்ரீ மணி ஐயர்.

"முற்காலத்தவர், தற்காலத்தவர், பிற்காலத்தவர் ஆக முக்காலத்தவரிடமும் கனிந்த உள்ளத்தோடு ஆசிரயம், அடக்கம், மரியாதை, அன்பு ஆகிய முறைகளில் நடந்து

கொண்டு அனைவரின் போற்றுதலுக்கும் பாத்திரமானவர் அவர். கலையகம்பாவம் என்பது சிறிதும் இல்லாத ஒரே வித்துவான் அவர்; இதை யாருமே மறுக்க மாட்டார்கள்" என்று உணர்ச்சி வேகத்தோடு கூறுகிறார் ஸ்ரீ ஜி. என். பி. அவர்கள்.

## 5. நட்பு

கர்நாடக சங்கீத ரசிகர் உலகில் இந்தத் தலைமுறையின் ஜாம்பவான்கள் என்று சொல்லத் தக்கவர்களில் ஸ்ரீ டி. எஸ். குப்புசாமி ஐயர் அவர்கள் ஒருவர். ஸ்ரீ ஐயங்கார் அவர்களின் நட்புயர்வைப் பற்றி அவர் பின் வருமாறு கூறுகிறார்.

"சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு அதிகமாக ஸ்ரீ ஐயங்கார் அவர்களோடு எனக்கு மிக நெருக்கமான பழக்கம் உண்டு. நான் அமைக்கும் அவருடைய கச்சேரிகளுக்கு எவ்வளவு தொகை கொடுக்க இயலும் என்று முன்னதாக அவருக்கு நான் அறிவிப்பதில்லை. இதற்கு மாறாக ஒரு சமயம் அவருடைய கச்சேரியை ஓர் இடத்தில் ஏற்பாடு செய்கிறபோது மட்டும் அவருக்கு எவ்வளவு பணம் வேண்டும் என்று கடிதம் எழுதிக் கேட்டேன். அதற்கு அவர் பதில் எழுதினார்: 'கச்சேரிக்குப் பணம் எவ்வளவு தரவேண்டும் என்று தாங்கள் இது வரையில் கேட்டதில்லை; நானும் சொன்னதில்லை. இப்பொழுது மட்டும் பணத்தைப் பற்றி எழுதியிருக்கிறீர்களே! தங்களுக்கு என்மேல் ஏதாவது வருத்தமா? தங்களுக்கு வருத்தம் ஏற்படும்படி எனக்குத் தெரிந்து நான் நடந்து கொண்டதில்லை: கச்சேரிக்கு வந்து சேருகிறேன்.'—இப்படி அவர் எடுத்துக் காட்டி எழுதிய பிறகுதான் என் பிழை எனக்குப் புலனாயிற்று."

"ஸ்ரீ ஐயங்கார் அவர்களுடைய நட்பின் உயர்வு மெச்சத்தக்கது. மிகச் சரளமான போக்கு உடையவர். கேட்டதைப் பாடிச் சந்தோஷிக்கச் செய்பவர். அதனாலும் மற்ற தன்மைகளினாலும் ஜனக் கட்டைப் பெற்றவர். அவருடைய பிரகாசத்திற்குரிய முக்கிய காரணங்களில் ஒன்று, அவரிடம் நிறைந்துள்ள அதி விநய சம்பத்து. அவர் எனக்கு ஆப்த மித்திரர். சில சமயங்களில் சில உதவிகளை நான் கோரி மறுக்காமல் அவர் செய்திருக்கிறார்"—என்று புகழ்கிறார் சங்கீத கலாநிதி முடிகொண்டான் ஸ்ரீ வேங்கடராமையர் அவர்கள்.

நட்பைப் பெறுவதிலும் அதைப் போஷித்து வளர்ப்பதிலும் அவருடைய ஆற்றல் தனித் தன்மை உடையது. கனிந்த உள்ளத்தோடு, சிரித்த முகத்தோடு இனிய மொழிகளைப் பேசி எல்லாருடைய உள்ளங்களையும் வெகு எளிதில் கவர்ந்து விடுவார். நாட்டின் பல பகுதிகளிலும் அவரிடம் மெய்யன்புடைய ஆப்த மித்திரர்கள் பலர் பரவி வாழ்ந்து வருகிறார்கள். அவரிடம் பரிசயங் கொண்ட எவரும் அவருடைய அன்பிலிருந்து விலகியதே இல்லை. நேரிய பார்வையுடைய உருவப் படத்தை எத்தனைபேர் எத்தனை திசைகளிலிருந்து ஒரே சமயத்தில் நோக்கினாலும் ஒவ்வொருவருக்கும் அந்தப் படத்தில் உள்ள உருவத்தின் பார்வை தம்மையே நோக்கி யிருப்பதுபோல் தோற்றும். அதே மாதிரி தம்மோடு பழகுபவர் ஒவ்வொருவரும், 'ஸ்ரீ ஐயங்கார் அவர்கள் தம்மிடமே மிக அந்தரங்க நட்பு உடையவர் என்று எண்ணத் தக்கவாறு பழகும் ஆற்றல் உள்ளவர் அவர். நட்புயர்வில் அவருக்கு இணை அவரே தான்!

# பேச்சுச் சிறப்பு

## பேச்சுச் சிறப்பு

அவ்வப்போது உள்ள நிலைமையை ஒட்டி, ஹாஸ்யமாகவும் சிலேடையாகவும் பேசி எல்லாரையும் வசப்படுத்துவதில் ஸ்ரீ ஐயங்கார் வெகு சமர்த்தர். அவருடைய ஹாஸ்யம் என்றுமே வற்றாத இன்ப ஊற்று. அவர் சங்கீதத்தைவிட ஒரு மாற்று அதிக இன்பத்தை அளிக்கக் கூடியது அவருடைய ஹாஸ்யம் என்றால் கூடத் தவறு இல்லை.

**1. வெற்றிலை, பாக்கு, சுண்ணும்பு! (1938)**

பிரபு ஒருவர் வீட்டிலே திருமண வைபவம். பல நாள் முன் கூட்டியே திட்டங்கள் இடப்பெற்றன. அவருக்கு ஸ்ரீ ஐயங்காரிடம் நட்பு உண்டு. தம் வீட்டுக் கல்யாணத்திலே ஸ்ரீ ஐயங்காரின் கச்சேரி நடைபெற வேண்டும் என்று பிரபு விரும்பினார். சங்கீதச் சிறப்புக்காக அன்று; நட்பு முறையில் பணச் செலவின்றிக் கச்சேரியை அமைக்கலாம் என்றுதான். ஆனால் ஸ்ரீ ஐயங்கார் அதே தேதியில் தவிர்க்க முடியாத வேறோர் இடத்தில் முன்னதாகவே கச்சேரிக்கு ஒப்புக்கொண்டிருந்தார்.

பிரபுவுக்கு ஆயாசந்தான். ஆயினும் மனத்தைச் சமாதானம் செய்துகொண்டார். ஸ்ரீ ஐயங்கார் அவர்களைக் கொண்டே வேறு ஒருவரின் கச்சேரிக்கு ஏற்பாடு செய்ய எண்ணினார். ஸ்ரீ ஐயங்கார் ஒவ்வொரு வித்துவானின் பேராகப் பிரேரேபித்துக் கொண்டே வந்தார். பிரபு ஒவ்வொன்றாக நிராகரித்துக்கொண்டே வந்தார். ஸ்ரீ ஐயங்காருக்கு அலுப்புத் தட்டிவிட்டது. சற்று நேரம் பேசாமல் இருந்தார். பெருமூச்சுக்குப் பின் பிரபு சொன்னார்: "அதிகச் செலவில்லாமல் சிறந்த கச்சேரியை ஏற்பாடு செய்ய

வேண்டும். பிரச்னை யெல்லாம் பாடகரைப்பற்றித்தான். நல்ல பாடகராகத் திட்டமாகிவிட்டால் பிடிலும் மிருதங்கமும் யாரையாவது ஏற்பாடு செய்து கொள்ளலாம்."

ஸ்ரீ ஐயங்கார் உடனே பளிச்சென்று சொன்னார்: "நீங்கள் சொல்வது ஆயிரத்தில் ஒரு வார்த்தை! வெற்றிலை கிடைத்தால் பாக்கும் சுண்ணும்பும் யாரிடமாவது வாங்கிக் கொள்ளலாம்!"

**2. "பாடு பட்டம்மாள்!"**

சிறந்த சங்கீத விதுஷி **ஸ்ரீமதி டி. கே. பட்டம்மாள்** அவர்களின் இன்னிசைக் கச்சேரி எழும்பூர் ஜகந்நாத பக்த சபையில் நடைபெற்றது. கச்சேரியின் இறுதியில் ஸ்ரீ ஐயங்கார் அவர்களைச் சில வார்த்தைகள் பேசும்படி கேட்டுக்கொண்டார்கள்.

ஸ்ரீ ஐயங்கார் அவர்கள் ஸ்ரீமதி பட்டம்மாள் அவர்களின் சிறந்த சங்கீதப் புலமையை வெகுவாகப் புகழ்ந்து: பாராட்டிப் பேசினார்.

"ஸ்ரீமதி பட்டம்மாள் வெறும் பட்டம்மாள் அல்ல. பாடு பட்டம்மாள்; பாடும் பட்டம்மாள்; பாட்டுக்காகப் பாடு பட்ட அம்மாள். அதனால்தான் அவர் சங்கீதத்தில் இத்தனை சிறப்பு........"

சபையில் படபட வென்ற கரகோஷம்; ஏகப்பட்ட ஆரவாரம்!

**3. "இதுவா சிரமம்?"** (1942)

**பா**லக்காட்டில் உள்ள ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தில் நிதிக் கச்சேரிகள் தொடர்ந்து நடைபெற்றன. பிரசித்தமான பெரிய வித்துவான்கள் பலர் கச்சேரி செய்தார்கள். ஸ்ரீ ஐயங்கார் அவர்களின் கச்சேரியும் நடைபெற்றது. அக் கச்சேரி முடிவில் பிரமுகர் ஒருவர் ஐயங்கார் அவர்கள்

கச்சேரி செய்து உதவியதைப் பாராட்டிப் பேசினார். "ஐயங்கார் அவர்களுக்கு மிகுந்த சிரமம் கொடுத்துவிட்டோம்" என்று கூறினார்.

ஸ்ரீ ஐயங்கார் அவர்கள் முறுவலுடன் பதில் அளித்தார்: "இது ஆசிரமம்; எனக்கு இதுவா சிரமம்? இந்த ஆசிரமத்திலே யாருக்கும் சிரமமே இல்லையே" என்றார். ஒருபுறம் மடத்தைச் சார்ந்த துறவிகள்; மற்றொரு புறம் கிருஹஸ்தாசிரமத்தில் உள்ளவர்கள். பேச்சின் பாவத்தோடு அவர் சந்நியாச ஆசிரமம், கிருஹஸ்தாசிரமம், ராமகிஷ்ண ஆசிரமம் மூன்றையுமே சுட்டி இப்படிச் சுருக்கமாகக் குறிப்பிட்ட சிறப்பு சிந்திக்கற்பாலது.

## 4. ஆளுக்கு ஐந்நூறு! (1952)

மயிலாப்பூர் ரசிக ரஞ்சனி சபையில் ஸ்ரீ ஐயங்காரின் கச்சேரி. அது முடிந்தபின் ரசிகர் கூட்டம் கலைந்தது. பக்க வாத்திய வித்துவான்களும் சென்று விட்டனர். ஸ்ரீ ஜி. என். பி. முதலிய நாலைந்து அன்பர்களுடன் உரையாடியபடி ஸ்ரீ ஐயங்கார் சபைக் கட்டிடத்திலிருந்து தெருவை நோக்கி வந்து கொண்டிருந்தார். சென்னைச் சங்கீத வித்துவத் சபையின் காரியதரிசியும் சிறந்த வழக்கறிஞருமாகிய **பாபு** என்கிற **ஸ்ரீ ஸி. கே. வேங்கட நரசிம்மன்** அவர்கள் யாருடனோ பேசிக் கொண்டே சற்றுப் பின்னால் வந்து கொண்டிருந்தார். அவரும் ஸ்ரீ ஜி. என். பி. யும் நெருங்கிய நண்பர்கள். கச்சேரிகளுக்கு அவர்கள் சேர்ந்து சென்று ரசிப்பது வழக்கம்.

திடீரென்று ஸ்ரீ வேங்கட நரசிம்மன் அவர்கள் குரல் இரைந்து ஒலித்தது. ஸ்ரீ ஐயங்கார் சட்டென்று நின்றார். அருகே வந்து கொண்டிருந்த ஸ்ரீ. ஜி. என். பியிடம், "என்ன மணி? என்ன இரைச்சல்?" என்று கேட்டார்.

ஸ்ரீ ஜி. என். பி. லேசாகச் சிரித்துக் கொண்டே, "ஒன்றும் இல்லை. நம் பாபுதான் யாருடனோ பேசிக் கொண்டு வருகிறார்" என்றார்.

ஸ்ரீ ஐயங்கார் பின்புறம் திரும்பிப் பார்த்தார். இதற்குள் ஸ்ரீ வேங்கட நரசிம்மனும் அவரோடு பேசிக் கொண்டு வருபவரும் பின்னாலிருந்து வந்து சேர்ந்தார்கள்.

"என்ன பாபு சத்தம்?" என்றார் ஸ்ரீ ஐயங்கார்.

"ஒன்றும் இல்லை" என்றார் ஸ்ரீ வேங்கட நரசிம்மன்

"விஷயம் என்ன சொல்லேன்" என்று வற்புறுத்திக் கேட்டார் ஸ்ரீ ஐயங்கார்.

"நீங்கள் அதை யெல்லாம் கேட்கக் கூடாது. எங்களுக்குள் ஆயிரம்...." என்றார் ஸ்ரீ வேங்கட நரசிம்மன்.

உடனே ஸ்ரீ ஐயங்கார், "அட கஷ்டமே! இதற்காகவா இத்தனை இரைச்சல்? ஆளுக்கு ஐந்நூறு எடுத்துக் கொண்டு விடுங்களேன்!" என்றார்.

**5. "அறி(ரி)யக்கூ(கு)டியவன்" (1955)**

பம்பாயில் உள்ள பாரதீய மியூஸிக் அண்டு ஆர்ட் அகாடமியில் **1955** மார்ச்சில் கான கலாதர மதுரை ஸ்ரீ மணி ஐயர் அவர்களின் சங்கீதக் கச்சேரி நடைபெற்றது. லால்குடி ஸ்ரீ ஜயராமன் அவர்கள் வயலின்; பாலக்காடு ஸ்ரீ மணி ஐயர் அவர்கள் மிருதங்கம். கச்சேரி முடிவில் ஸ்ரீ ஐயங்கார் அவர்கள் அகாடமியாரின் சார்பில் வந்தனோபசாரம் கூறினார்.

".......மதுரை ஸ்ரீ மணி ஐயர் அவர்களின் சங்கீதம் மிகவும் உயர்ந்தது. மதுரை மணி ஐயர் சங்கீதத்தை அரி(றி)யக்கு(கூ)டியவன் நான் என்ற முறையிலே பேசுகிறேன்........"

படபட வென்ற கரகோஷம் அகாடமியை அதிர வைத்தது.

6. வெற்றிக்குறி—V (1955)

அரியக்குடி என்ற இந்நூலுக்கு அடியிட்டது 1955 ஜனவரி 2-இல். 1956 ஆகஸ்ட்டில்தான் நூல் உருவாகிறது. இடைக்காலத்தில் பல முறை ஸ்ரீ ஐயங்கார் அவர்களைச் சந்தித்துச் சல்லாபிக்கும் பெரும் பேறு அடியேனுக்குக் கிட்டி வந்தது.

1955 நவம்பரில் ஒரு நாள் காலையில் சென்னை மயிலாப்பூர் நடுத்தெருவில் 16-ஆம் எண் உள்ள ஸ்ரீ ஐயங்கார் அவர்களின் இல்லத்திற்குச் சென்று அவரைக் கண்டேன். ஸ்ரீ ஐயங்கார் அவர்கள் கூடத்தின் நடுவே கிழக்கு மேற்கு நீள வாட்டத்தில் தொங்கிக் கொண்டிருந்த ஊஞ்சலிலே கிழக்கு முகமாக அமர்ந்திருந்தார். அருகே சிறிது தூரத்தில் சிறந்த வயலின் வித்துவான் திருவனந்தபுரம் ஸ்ரீ கிருஷ்ணன் அவர்கள் அமர்ந்திருந்தார். இருவரும் எதைப் பற்றியோ சம்பாஷித்துக் கொண்டிருந்தனர்.

தாழ்வாரத்தை அடைந்து நான் ஸ்ரீ ஐயங்கார் அவர்களை நோக்கிக் கரங்கூப்பிச் சிரந்தாழ்த்தினேன், "நமஸ்காரம்" என்றேன். ஸ்ரீ ஐயங்கார் அவர்கள் முகத்திலே முறுவல் விகசித்தது. குரலில் உற்சாகந் தொனித்தது. "வருக, வருக! எல்லார்வி அவர்களே வருக! எங்கள் எல்லாருக்கும் வெற்றி தேடித் தருபவரே வருக!" என்று கூறி வரவேற்றார்.

நான் மிகுந்த அடக்கத்துடன், "பெரியவர்கள் இப்படி யெல்லாம் பேசுவது...." என்று இழுத்து நிறுத்தினேன்.

ஸ்ரீ ஐயங்கார் அவர்கள், "ஏன்? இதில் என்ன? தவறாக நான் எதுவும் சொல்லி விடவில்லையே! V என்கிற ஆங்கில எழுத்தை வெற்றிக்குறி என்பர். நீங்கள் எல்லார்வி; எல்லாருடைய வெற்றிக்கும் காரணமாகிறவர். சங்கீதக்

காரர்களாகிய எங்கள் எல்லாருக்கும் வெற்றியைத் தேடித் தருகிறவர். அதைத்தான் நான் சொன்னேன்"— என்றார்.

"அடேயப்பா! எவ்வளவு பெரிய வார்த்தை. உலகம் புகழும் மேதைகளுக்குப் புதிதாக நான் வெற்றி தேடி...."

"சங்கீதக் கலை நாதமயம்; காற்றிலே உடனடியாக மறைவது. நீங்கள் எழுதும் எங்கள் வரலாறுகள் அப்படி இல்லையே! மேலும் மேலும் பல பதிப்புகளால் நிலைத்திருக் கக் கூடியவை யல்லவா?"

**7. "என் (N) ராமையர்" (1956)**

ரசிக ரஞ்சனி சபையைச் சார்ந்த கோட்டூர் ஸ்ரீ ராதா கிருஷ்ணையர் அவர்கள் ஸ்ரீ ஐயங்கார் அவர்களிடம் பேசிக் கொண்டிருந்தார். சில தினங்களில் ஓர் இடத்தில் நடை பெற இருக்கும் கச்சேரி சம்பந்தமான பேச்சு. சம்பா ஷணையை முடித்துக் கொண்டு ஸ்ரீ ராதா கிருஷ்ணையர் அவர்கள் புறப்படுகிற சமயத்தில் சொன்னார்: "பணம் பெரிதல்ல; நட்புத்தான் பெரிது. ராமையர் அவர்கள் தம்மை உங்கள் மனிதராகப் பாவிக்கும்படி சொல்லச் சொன்னார்" என்றார்

உடனே ஸ்ரீ ஐயங்கார் அவர்கள் முகத்திலே பாவம் தோன்ற, "பாவிப்பதாவது? அவர் **என்** ராமையர் அல்லவா?" என்றார்.

பிறகு விசாரித்ததில் அந்த ராமையர் அவர்களின் விலாசக் குறிப் பெழுத்து (இனிஷியல்) ஆங்கில என் (N) என்பது தெரிந்தது.

**8. பட்டம்! (1956)**

ஒருநாள் 'அரியக்குடி கையெழுத்துப் படித்துக் காட்டிக் கொண்டிருந்தேன். அங்கங்கே அவர் தந்த

திருத்தங்களைச் செய்து கொண்டிருந்தேன். வயலின் வித்துவான் திருவனந்தபுரம் ஸ்ரீ ஹரிஹர ஐயர் அவர்களும் ஸ்ரீ ஜி நடராஜன் அவர்களும் கூடவே இருந்தார்கள்.

"பட்டங்கள் அளிக்கப்பெற்ற இடம், காலம் முதலிய விவரம் யாவும் சரிதானே?" என்று கேட்டேன்.

"எல்லாம் சரிதான்" என்றார் ஐயங்கார் அவர்கள்.

இடையே ஸ்ரீ நடராஜன், "இவை தவிர இன்னும் ஏதாவது பட்டம் இருக்கிறதோ?" என்று கேட்டார்.

"இன்னும் ஒரு பட்டம் உண்டு. இதுவரையில் அது எனக்குக் கிடைக்கவில்லை. அதைப் பெறுமலே காலத்தை ஓட்டிவிட வேண்டும் என்பது என் ஆசை" என்றார் ஸ்ரீ ஐயங்கார்.

நாங்கள் விழித்தோம். "அது என்ன பட்டம்?" என்று சிறு குழந்தைகளைப் போல் ஏக காலத்தில் கேட்டோம்.

ஐயங்கார் அவர்கள், "இளிச்ச வாய்ப் பட்டம்" என்றார்.

சிரிக்காமல் எப்படி இருக்க முடியும்?

## 9. "ஸா—பா"

**வே**ணுகானக் கலையில் தெய்வப் புலமை பெற்ற வித்துவான் **ஸ்ரீ டி. ஆர். மகாலிங்கம்** அவர்கள் ஒரு சமயம் ஸ்ரீ ஐயங்கார் அவர்களை விருந்துக்கு அழைத்தார். ஸ்ரீ ஐயங்கார் அவர்களுக்கு அலுவல்கள் நிரம்ப இருந்ததால் இன்னொரு தடவை ஆகட்டும் என்றார். ஸ்ரீ மகாலிங்கம் அவர்கள் அதை ஏற்காமல் வற்புறுத்தினர்.

ஸ்ரீ ஐயங்கார் அவர்கள் செல்வமாக, "மாஸி!" என்றழைத்தார். "நம்மைப் படைத்த கடவுள் நம் தலையிலே சங்

கிதத்தைத் தொழிலாக எழுதிவிட்டான். அம்படி இருக்க ஸாப்பாட்டுக்கு வற்புறுத்தல் வேறு? எப்பொழுது பார்த் தாலும் ஸா பா தானே?" என்ருர். ஸ்ரீ மாலி இடி இடி என்று சிரித்தார்.

**10. காலேஜு**

சென்னை அடையாற்றில் உள்ள கர்நாடக சங்கீத மத்தியக் கல்லூரியில் இசைச் கச்சேரி நிகழ்ந்தது. "தாங்கள் சில வார்த்தைகள் பேசி இந்தக் காலேஜு வளர்ச்சி அடையுமாறு ஆசி கூற வேண்டும்" என்று கல்லூரி அத்தியக்ஷர் சங்கீத கலாநிதி முசிரி ஸ்ரீ சுப்பிரமணிய ஐயர் அவர்கள் ஸ்ரீ ஐயங்கார் அவர்களைக் கேட்டுக் கொண்டார். ஸ்ரீ ஐயங்கார் அவர்கள் பேசினர்:

"....இந்தக் காலேஜு நன்கு வளர்ச்சி பெறவேண்டும் என்று எல்லாருமே விரும்புகிருர்கள்: வாழ்த்துகிருர்கள். இதன் வளர்ச்சியில் எனக்குப் பூரண நம்பிக்கை இருக்கிறது. சமீபத்தில் ஆரம்பிக்கப் பெற்ற காலேஜு தானே? வளர்ச்சிக்கு இன்னும் இடம் இருக்கிறது. காலேஜு வளர முக்காலேஜு பாக்கி இருக்கிறதே. அமோகமாக வளரும்; சந்தேகமே இல்லை."

சபையில் பெருத்த கரகோஷம். சில காலம் வரையில் 'காலேஜு: கால் - ஏஜு', முக்காலேஜு: முக்கால் - ஏஜு' என்ற சொற்கள் நடமாடியபடி இருந்தன.

**11. "காலில் விருச்சிகம்!"**

பிரபல சோதிடர் ஒருவர் ஸ்ரீ ஐயங்காரின் நண்பர். ஒரு சமயம் ஸ்ரீ ஐயங்கார் சோதிடரைக் காணச் சென்ருர். அப்போது சோதிடர் யாரோ ஒருவருக்கு ஜாதகம் பார்த் துச் சோதிடம் சொல்லிக் கொண்டிருந்தார். ஸ்ரீ ஐயங் காரைக் கண்டதும் வரவேற்று உட்காரச் சொன்னர்.

எதிரெதிராக இரண்டு பெஞ்சுகள். ஒன்றில் சோதிடரும் மற்றொன்றில் சோதிடம் பார்க்க வந்தவரும் அமர்ந்திருந் தார்கள். ஸ்ரீ ஐயங்கார் சோதிடம் பார்க்க வந்தவர் அருகில் அமர்ந்துகொண்டார். சோதிடர் தம் சோதிடத்தைத் தொடர்ந்தார்.

"....விசாகத்துக்கு முக்கால் துலாம்...." என்று சோதிடர் கூறிவருகையில் ஸ்ரீ ஐயங்கார் சட்டென்று, "காலில் விருச்சிகம்!" என்றார்.

சோதிடர் உடனே தொங்கவிட்டுக் கொண்டிருந்த தம் கால்களைச் சட்டென்று மேலுக்கு எடுத்துக்கொண்டார் மருண்டபடி குனிந்து தரையை நோக்கினார். பிறகு, ஸ்ரீ ஐயங்காரை நோக்கி, "எங்கே விருச்சிகம்?" என்று கேட்டார்.

"எங்கேயா? விசாகத்துக்கு முக்கால் துலாம் போனால் பாக்கி காலில் விருச்சிக ராசிதானே?" என்றார் ஸ்ரீ ஐயங்கார். சோதிடம் பார்க்க வந்த அன்பர் இடிஇடி என்று சிரித்தார்.

## 12. திண்டாட்டம்!

ஸ்ரீ ஐயங்காரைக் காண வந்த நண்பர்கள் சங்கீத சம்பந்தமாக அவரோடு நீண்ட நேரம் பேசிக்கொண்டிருந் தனர். இடையே நண்பர் ஒருவர் கேட்டார்.

"உத்தம காயக லட்சணங்களில் அங்க சேஷ்டை கள் கண்டனம் பெறுகின்றன என்கிறார்கள். ஆனால் அங்க சேஷ்டைகள் இல்லாமல் பாடுகிற வித்து வான்கள் வெகு அபூர்வம். வரவர, பெண்கள்கூட நிலை யாக இருந்து பாடப் பழகமாட்டார்கள் என்று தோன்று கிறது. இது சரிதானா"?

"இதற்கெல்லாம் கவலைப்பட இது காலமில்லை. ஆண்களைவிடப் பெண்கள் அந்த விஷயத்தில் மிக அக்கறை கொள்ள வேண்டியது அவசியந்தான். அவர்கள் ஆடாமல் அசையாமல் அமர்ந்து பாடினால் நன்றாகத்தான் இருக்கும். சேஷ்டைகள் வேறு செய்தால்....பெண்களின் ஆட்டம் ஒரு சில ரசிகர்களுக்குக் கொண்டாட்டம்; கலைக்குத் திண்டாட்டம்!" என்றார் ஸ்ரீ ஐயங்கார்.

**13. சந்தோஷம்!**

"நல்ல ஞானமும் தெய்விகப் புலமையும் பொதுஜன ஆதரவும் உடைய இளம் வித்துவான்கள் சம்பிரதாய வழிகளைவிட்டு விலகி, கர்நாடக சங்கீதத்தைச் சோதிக்கிறார்களே, அது தோஷம் இல்லையா?" என்று ஒரு சிறந்த ரசிகர் ஸ்ரீ ஐயங்காரிடம் கேட்டார்.

"கலையில் தோஷம், பாவம் முதலியவற்றுக்குப் பயந்து செயல் புரிந்த காலம் எப்போதோ போய்விட்டது. இந்தக் காலத்தவர்களுக்குத் தோஷமெல்லாம் சந்தோஷமாக இருக்கிறது!" என்றார் ஸ்ரீ ஐயங்கார்.

**14. "ராம் ராம்!"**

ஓர் இடத்தில் ஹரிகதா காலட்சேபம் நடைபெற்றது. ஸ்ரீ ஐயங்கார் அவர்களைச் சில வார்த்தைகள் பேசச் சொன்னார்கள்.

"முன் காலத்தில் எங்கும் ஆஸ்திகம் நிறைந்திருந்தது. எங்கே பார்த்தாலும் தெய்வ வழிபாடுகள் மிகுந்திருந்தன, இந்தக் காலத்தில் பல காரணங்களால் அந்நிலை மாறியிருக்கிறது. மனிதர்கள் மாறினாலும் தெய்வத்தின் அருளில் ஒரு போதும் மாறுபாடு இல்லை. எந்த வகையாலாவது பகவான் மனிதர்களைத் தன் நினைவுகொள்ளச் செய்து, தன் நாமாவைச் சொல்ல வைத்து மனிதர்களிடம் புண்ணி

யத்தைச் சேர்த்து அருள் பாலிக்கிறன். உணராமலே பல நற்செயல்களை மனிதர்கள் செய்கிறர்கள். உணர்ந்து, முறையோடு செய்யப் பழகினுல் பலன் பலமடங்காகப் பெருகும். உதாரணமாக, தாரக மந்திரமான ஸ்ரீ ராம நாமத்தை நாம் ஒரு நாளில் பலமுறை நம்மை அறியாமலே சொல்கிறேம்.

"ராமசாமி தம் பெண்ணின் கல்யாணத்தை நிச்சயித்து விட்டாராம். ஏராளமாகப் பணச்செலவு செய்கிறராம். கல்யாணத்தை இந்த ஊரிலேயே நடத்தப் போகிறராம். அதில் அரியக்குடி கச்சேரி செய்யப் போகிறராம். அவருக்குச் சௌடையா வயலின் வாசிக்கிறராம். மணி ஐயர் மிருதங்கம் வாசிக்கிறராம்.

"எத்தனை ராம சப்தம் ஆயிற்று? ஆகவே...."

ஸ்ரீ ஐயங்கார் மேலே தொடர்ந்து என்ன பேசினர் என்பதைக் கூடியிருந்த ரசிகர்களின் கரகோஷமும் சந்தோஷ ஆரவாரமும் கேட்கவிடவில்லை.

இப்படி ஒரு நாளில் ஒரு நூற்றுக்கு மேற்பட்ட ஹாஸ்யங்களையும் சிலேடைகளையும் பொழிந்து தள்ளுபவர் ஸ்ரீ ஐயங்கார். அன்றுமுதல் இன்றுவரை அவர் பேசிய ஹாஸ்யப் பேச்சுக்களைத் தொகுத்தால் அதுவே ஒரு பெரிய நூல் ஆகும்.

ராமநாதபுரம் மகாராஜா அவர்களுக்கு ஸ்ரீ ஐயங்காரின் பேச்சிலே சுவை அதிகம். நல்ல இசையைக் கேட்கவென்று எப்படி விழா ஒன்றைத் திட்டம் இடுவாரோ அதேபோல ஐயங்காருடைய பேச்சுக்கு அவர் கச்சேரி ஒரு காரணமாக அமையும். கச்சேரி பெரும்பாலும் மாலையில்தான். ஆனுல் ஸ்ரீ ஐயங்கார் காலையிலிருந்தே மகாராஜாவுடன் இருப்பார்; ஹாஸ்யந் ததும்பப் பேசிக்கொண்டே இருப்பார். பொழுது போய்க்கொண்டே இருக்கும். சபை கூடிவிட்டது; பிரமுகர்

கள், மற்ற வித்துவான்கள் எல்லாரும் காத்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற செய்தி வந்த பிறகே அந்நிலை மாறும்.

வீணை ஸ்ரீமதி தனம்மாள் அவர்களுக்கும் ஸ்ரீ ஐயங்காரின் பேச்சில் லயிப்பு உண்டு. ஸ்ரீ ஐயங்கார், அம்மாளின் வீணை வாசிப்பைக் கேட்கத் துடிப்பாக இருந்தால், ஐயங்கார் இன்னும் சிறிது பேசமாட்டாரா என்று அம்மாள் உன்னிப்பாக இருப்பார்.

ஸ்ரீ பூச்சி ஐயங்கார் அவர்களே சில சந்தர்ப்பங்களில் தம் மாணாக்கரின் ஹாஸ்யப் பேச்சைத் தற்செயலாகக் கேட்டு நகைத்திருக்கிறார்; வியந்திருக்கிறார். தம் அருகே இருப்பவர் எவராயினும் அவர்களை 'உம்மணா மூஞ்சி'களாக இருக்க ஸ்ரீ ஐயங்கார் விடவே மாட்டார்.

மேலே கண்டவை ஒரு சில உதாரணங்கள். இன்னும் நாம் நேரிலேயே கேட்டு ரசித்து நகைக்கும்படி எவ்வளவோ பேசுகிறார் ஸ்ரீ ஐயங்கார்.

# ஏனைய சிறப்புகள்

'ராசி', 'ஆகி வருவது' ஆகிய எண்ணங்களை மூட நம்பிக்கை என வாதிப்பவர் உண்டு. ஆனாலும் அந்த நம்பிக்கை நாட்டிலே வாழ்ந்து கொண்டுதான் வருகிறது.

ஸ்ரீ ஐயங்கார் அவர்கள் 'ஆகிவந்த மனிதர்', அவருடைய சங்கீதம் 'ராசி உடையது' எனப் பலர் கூறுவதுண்டு. ஒருவர் வீட்டிலே ஒரு கல்யாணத்திலே அவர் கச்சேரி நடந்தால் அடுத்தடுத்து அந்த வீட்டிலே சுப நிகழ்ச்சிகள் தொடரும். அந் நிகழ்ச்சிகளில் தொடர்ந்து கச்சேரி செய்ய ஸ்ரீ ஐயங்காரையே விரும்பி அழைப்பார்கள். ஒரே குடும்பத்திலே மூன்று தலை முறைக் கல்யாணங்களிலே தொடர்ந்து கச்சேரி செய்கிற உரிமை பெற்றவர் ஸ்ரீ ஐயங்கார் என்று பலர் சொல்வதுண்டு.

ஸ்ரீ ஐயங்காரின் சங்கீத மேன்மையை ரசிகர் உலகம் ஒரு முகமாகக் கொண்டாடுவதை அறிந்த **ஓடியோன் கம்பெனியார்** அவருடைய இசையைப் பதிவு செய்ய முன் வந்தனர். ஒன்று இரண்டு அல்ல; அடுத்தடுத்துப் பல.

பைரவி ராகம் ஆதி தாளத்தில் அமைந்த **'நீ பாதமுலே கதியனி'**, அசாவேரி, ஆதியில் உள்ள **'ரார மா இண்டி தாக'**, அடாணா, கண்டசாபுவில் அமைந்த **'அநுபம குணம்புதி'**, மத்தியமாவதி, ரூபகத்தில் உள்ள **'அல கலல்லலாடககனி'**, கல்யாணி, ஆதியில் அமைந்த **'கம லாம்பாம் பஜரே'**, காஹரப்ரிய, ஆதியில் **'ராம நீயெட'**, உசேனி, ஆதியில் **'ராமா நின்னே'**, காம்போஜி, ஆதியில் உள்ள **'எவரி மாட'**—இப்படியாகப் பதினைந்திற்கு மேற்

பட்ட இசைத் தட்டுகள். இவற்றில் பெரும்பாலும் ஸ்ரீ தியாகராஜ கிருதிகள். இவை தவிர **சுதேசமித்திரன்** பத்திரிகையின் பொன்விழா வெளியீடாக, **'சுந்தரமான சுதேசமித்திரன்'** என்ற பாடல் ஒன்றையும் ஸ்ரீ ஐயங்கார் இசைத்தட்டில் பதிவு செய்திருக்கிறூர். ஆனல்....

இன்று கர்நாடக சங்கீதக் கலையில் வாய்ப் பாட்டுத் துறையில் சிறந்த ஆதரிச புருஷராக விளங்கும் ஸ்ரீ ஐயங்காரின் கலைச் சிறப்பையும் இசைப் புலமையையும் தெள்ளத் தெளிய விளக்கிக் காட்ட இவைமட்டுமே போதுமானவை என்று சொல்ல முடியாது. வருங்காலத்தவர் அவருடைய சங்கீதத்தின் மேன்மையை உள்ளபடி அறிந்து பயன் பெற இன்னும் பல முயற்சிகள் நடைபெற வேண்டும். கலைச் சிறப்பின் உயர்ந்த பகுதிகள் மளமளவென்று பதிவு செய்யப் பெற வேண்டும். இந்த விஞ்ஞான யுகத்திலே அதற்கு வழி இல்லை எனில் இனி எந்த யுகத்திலுமே அத்தகைய நற்செயல்கள் இல்லைதான். முன்பு அவருடைய இசைத்தட்டுகள் வந்தபோதெல்லாம் இசையில் முன்னேறும் ஆர்வமுடையவர்களில் பலர் அந்த இசைத்தட்டுகளை நன்கு பயன் படுத்திக் கொண்டனர். என்றென்றும் பின் சந்ததியார் அவ்வாறு பயன் படுத்திக் கொள்ள ஸ்ரீ ஐயங்கார் அவர்களின் சிறந்த இசைப் பகுதிகள் விரைவில் பதிவாக வேண்டும். அந்தச் செயல் மூலம் ஸ்ரீ ஐயங்கார் அவர்களின் இசை நீடூழி வாழவேண்டும்.

ஸ்ரீ ஐயங்கார் அவர்கள் தன்னம்பிக்கை மிகுந்தவர். எதிலும் தோல்வி காணுதவர். மிகுந்த அதிருஷ்டசாலி. அதிகமாகச் சிரமப்படாமல் முன்னுக்கு வந்த சங்கீத வித்துவான். மனத்திண்மை மிக்கவர். பொய் விநயம் இல்லாதவர். அவருடைய சாரீர வீணை தெய்விக அமைப்பை உடையது. கச்சேரிகளில் பாடுகிறபோதும்,

வாழ்க்கையில் மற்றச் செயல்களிலும் பிறர் உதவியை எதிர் பார்க்கும் பழக்கம் அற்றவர். மரியாதை இல்லாத புகழையோ, வருவாயையோ ஏற்காதவர். அன்புக்கு அடிமையாகும் இயல்பினர். நட்பை உத்தேசித்து இலவசக் கச்சேரிகள் பல செய்வார்; 'ரேட்டு' என்கிற போது கத்தி முனையாக இருப்பார்.

அவருக்கு ராம பக்தி மிக அதிகம். தியாகப் பிரம்மத்தினிடம் சிறந்த பக்தி உண்டு. குருவினிடம் குன்றாத பக்தி. முன் தலைமுறையைச் சார்ந்த சங்கீத மேதைகளிடம் விசேஷ மரியாதை உண்டு.

அவருக்கு மிகப் பிடித்தவை: வெறும் அன்னம், சுண்டைக்காய் வற்றல், மரத் தக்காளிக்காய் வற்றல், வெண்டைக்காய், மிளகாய், தயிர், வேர்க்கடலை, கொத்து மல்லி, இங்கிலீஷ் காய்கறிகள், உல்லாசப் பேச்சு, ஊஞ்சல் ஆட்டம் முதலியன.

இன்றைய கர்நாடக சங்கீத நிலைபற்றிய ஸ்ரீ ஐயங்காரின் அபிப்பிராயம்:

"முறையை—பிராசீன சம்பிரதாய முறையை—விட்டுக் கர்நாடக சங்கீதம் மெல்ல மெல்ல விலகிக் கொண்டிருப்பதாகத்தான் எனக்குத் தோன்றுகிறது. இதே ரீதியில் போய்க் கொண்டிருந்தால் கர்நாடக சங்கீதம் வெகு சீக்கிரத்திலேயே ஒடுங்கிவிடக் கூடும். சரியான முறையைப் புழக்கத்தில் கொணர்ந்து, பழைய வழிகளைப் பின்பற்றி அக்கறையோடு பாடுபட்டால் அந்த ஆபத்திலிருந்து கர்நாடக சங்கீதத்தைக் காப்பாற்றலாம்."

சினிமா அவருக்குப் பிடித்தமில்லாத ஒன்று. சினிமாச் சங்கீதத்தால் கர்நாடக சங்கீதம் பாதிக்கப் பெறுகிறது என்பது அவருடைய அபிப்பிராயம்.

ரேடியோ : நல்ல சங்கீதம் தருகிறபோது மட்டும் பிடிக்கும்.

வடநாட்டுச் சங்கீதம் : உயர்தரமாக இருந்தால் பிடிக்கும்.

வாத்தியங்களில் பிடித்தவை : வீணை, வயலின், கிளாரினெட்; பிடிக்காத ஒன்று ஹார்மோனியம்.

ஆத்திக நாத்திகம், மதம்: இவற்றைப்பற்றிப் பேசுவதே பிடிக்காது. மதங்களை வேறுபடுத்திச் செய்யப் பெறும் விவாதங்கள் வீணே என்பதும், மனிதர்கள் தெய்வத்தை வழிபட வேண்டும்; முன்னோர் சென்ற வழிகளைப் பின்பற்ற வேண்டும் என்பதும் அவர் கொள்கை.

பக்க வாத்தியங்கள் : தம்மோடு ஒத்துழைத்துக் கச்சேரிகளைச் சிறப்பிக்காத பக்க வாத்திய வித்துவான்கள் அநேகமாக யாருமே இல்லை என்கிறார்.

இளம் வித்துவான்கள் நுனிப்புல் மேயக் கூடாது என்கிறார். குருபக்தி, அடக்கம், ஆர்வம், உழைப்பு முதலிய அம்சங்களில் குறைவே கூடாது என்கிறார்.

நண்பர்கள் : இந்தியாவில் எங்கும் உள்ளனர்.

அவருடைய இளைய சகோதரர் ஸ்ரீ ராகவ ஐயங்கார் அவர்கள் காரைக்குடியில் தம் குடும்பம், தமையனார் சொத்து முதலியவற்றைப் பரிபாலனம் செய்துகொண்டும் வர்த்தகத் துறையில் ஓரளவு ஈடுபாடுகளுடனும் சுகமாக இருக்கிறார். மற்றும் அவருடைய தரும பத்தினியார், சகோதரிகள், பெண்கள் முதலிய உறவினர்கள் அனைவரும் அங்கங்கே சுகமாகவே இருந்து வருகின்றனர்.

ஸ்ரீ ஐயங்கார் அவர்கள் பூரண உடல் நலத்துடனும் மன உல்லாசத்துடனும் கர்நாடக சங்கீத உலகின் இத்தலை முறையின் தூண்டா விளக்காகச் சுடர் விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருக்கிறார். அவர் வாழ்க !